*...இன்றைய தினம்*
*உங்களுக்காக*
*உங்கள் மார்க்கத்தை*
*பரிபூரணமாக்கி விட்டேன் ;*
*மேலும் நான் உங்கள் மீது*
*என் அருட்கொடையைப்*
*பூர்த்தியாக்கி விட்டேன்.*
*இன்னும் உங்களுக்காக*
*நான் இஸ்லாம் மார்க்கத்தையே*
*(இசைவானதாகத்)*
*தேர்ந்தெடுத்துள்ளேன்...*
*(குர்ஆன் 5:3)*

*என்னைப் படைத்துப் பாதுகாத்துப் பரிபாலித்து*
*எனது செயல்கள் அனைத்தையும் கண்காணிக்கின்ற*
*வல்லமை பொருந்திய அல்லாஹ்வே!*
*என்னுடைய இந்த சிறிய எளிய முற்சியை*
*ஏற்றுக் கொள்ளுமாறு உன்னிடம் மன்றாடுகிறேன்.*
*மனமிரங்கி வேண்டுகிறேன்.*
*இந்நூலைப் படிக்கின்ற வாசகர்கள் வழிகாட்டும்*
*ஒளியினைப் பெறுவதற்கு நீ உதவி புரிவாயாக!*
*இறுதித் தீர்ப்பு நாளின் போது எனக்கு*
*மன்னிப்பு வழங்குவாயாக! உன்னுடைய*
*கருணையும், அருளும் மட்டுமே*
*அப்போது எனக்கு உதவிகரமாக இருக்கும்.*
*ஆமீன்.*

# இஸ்லாம்

## ஓர் அறிமுகம்

ஆசிரியர்
சையத் ஹமீத் மோஹ்சின்

தமிழாக்கம்
சேயன் இப்ராஹிம்

வெளியீடு

SALAAM Centre

சலாம் சென்டர்
அமைதியையும் சகோதரத்துவத்தையும் ஊக்குவிக்கிறது
www.islamforyou.in   www.salaamcentre.in

ISLAM, Oor Arimugam
ISLAM, An Introduction(English)
Copyright © 2013 SYED HAMID MOHSIN.
ISBN: 978-81-928089-8-7

All rights reserved. No part of this book may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, including photocopy, recording, or any information storage and retrieval system, without permission in writing from the author, except for the situation below which is permitted.

For Reprinting
Reprinting or reproducing this book on the condition that absolutely no change, addition, or omission is introduced is permitted free of charge. To make high quality reprints, you may contact the author / Salaam Centre to obtain free copies of the soft copy or printing files of this book.

The Web Site of this book :
This e-book is available on the Web, world wide at:
www.islamforyou.in , www.salaamcentre.in
Price: 150/-

Printed and Published by :
SALAAM CENTRE
#65, Ist main, S.R.K. Garden, Jayanagar, Bangalore – 560 041
Contact: +91 99011 29956 / +91 99451 77477 / 080-2663 9007
Email: salaamcentrebangalore@gmail.com

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | இஸ்லாம் | 1 |
| 2 | ஓரிறைவன் | 5 |
| ✯ | அல்லாஹ் | 11 |
| ✯ | தௌஹீது | 15 |
| ✯ | மனித வாழ்க்கையில் தௌஹீதின் தாக்கம் | 18 |
| 3 | ரிஸாலா (நபித்துவம்) | 23 |
| 4 | வானவர்கள் | 27 |
| 5 | இறப்புக்குப் பின் வாழ்க்கை | 31 |
| 6 | அருளப்பட்ட புத்தகங்கள் | 43 |
| ✯ | குர்ஆன் இறைவனின் சக்திமிக்க பேச்சு | 46 |
| ✯ | குர்ஆனின் தாக்கம் | 58 |
| ✯ | இறை வெளிப்பாடு | 59 |
| ✯ | குர்ஆனைத் தொகுத்தல் | 60 |
| ✯ | சீறா | 63 |
| ✯ | ஹதீஸ்கள் | 64 |
| ✯ | சுன்னாஹ் | 66 |
| 7 | நம்பிக்கையை நடைமுறைப்படுத்துதல் | 67 |
| ✯ | இஸ்லாத்தின் ஐந்து தூண்கள் | 70 |
| ✯ | ஷஹாதத் அல்லது நம்பிக்கை உறுதிமொழி | 70 |
| ✯ | சமய நடைமுறைகளும் பக்தி வாழ்க்கையும் | 72 |
| ✯ | பள்ளிவாசல் | 74 |
| ✯ | பாங்கு தொழுகை அழைப்பு | 78 |
| ✯ | ஒலுச் செய்தல் | 80 |
| ✯ | தொழுகை | 83 |
| ✯ | தொழுகையை நிறைவேற்றுவது எப்படி? | 86 |

| | | |
|---|---|---|
| ✭ | தொழுகையின் முக்கியத்துவம் | 93 |
| ✭ | ரமலானும் நோன்பும் | 95 |
| ✭ | ஜகாத் (மக்களின் உரிமை) | 100 |
| ✭ | ஜகாத்தின் பாரதூரமான விளைவுகள் | 102 |
| ✭ | ஹஜ் அல்லது புனிதப் பயணம் | 105 |
| ✭ | உலக சகோதரத்துவம் | 108 |
| 8 | இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகள் | 111 |
| ✭ | வாழ்க்கை பற்றிய கொள்கை | 111 |
| ✭ | பாவம் பற்றிய கொள்கை | 114 |
| ✭ | தவாஃப் பற்றிய கொள்கை | 117 |
| ✭ | ஈமான் பற்றிய கொள்கை | 119 |
| ✭ | இயற்கை பற்றிய கொள்கை | 121 |
| ✭ | கலீபா -பொறுப்பாளர் பற்றிய கொள்கை | 123 |
| ✭ | நற்செயல்கள் பற்றிய கொள்கை | 125 |
| ✭ | சம நீதி பற்றிய கொள்கை | 126 |
| ✭ | சேவை பற்றிய கொள்கை | 129 |
| ✭ | சுதந்திரம் பற்றிய கொள்கை | 131 |
| ✭ | சமத்துவம் பற்றிய கொள்கை | 134 |
| ✭ | சகோதரத்துவம் பற்றிய கொள்கை | 137 |
| ✭ | நீதி பற்றிய கொள்கை | 139 |
| ✭ | இல்ம் - அறிவு பற்றிய கொள்கை | 141 |
| ✭ | அமைதி பற்றிய கொள்கை | 142 |
| ✭ | நல்லொழுக்கம் பற்றிய கொள்கை | 143 |
| ✭ | ஜிகாத் பற்றிய கொள்கை | 147 |
| ✭ | ஷரி அத் - இஸ்லாமியச் சட்டங்கள் | 148 |
| ✭ | ஷரி அத்தின் நோக்கம் | 150 |
| ✭ | இஸ்லாமிய சட்டவியல் பற்றிய கொள்கை | 151 |

| | | |
|---|---|---|
| ✯ | மாற்றம் பற்றிய கொள்கை | 153 |
| ✯ | ஆலோசனை பற்றிய கொள்கை | 154 |
| ✯ | ஹலால் - ஹராம் பற்றிய கொள்கை | 156 |
| ✯ | இஸ்லாமிய குடும்ப வாழ்க்கை | 159 |
| ✯ | பெற்றோர் | 160 |
| ✯ | பெண்கள் | 163 |
| ✯ | தகப்பனார் | 171 |
| ✯ | குழந்தைகள் | 172 |
| ✯ | உறவினர்கள் | 173 |
| 10 | இஸ்லாத்தில் சமூக வாழ்க்கை | 175 |
| ✯ | அண்டை வீட்டார்கள் | 175 |
| ✯ | ஏழைகள் | 178 |
| ✯ | அடிமைகள் - வேலையாட்கள் | 179 |
| ✯ | ஊனமுற்றோர் | 179 |
| ✯ | அநாதைகள் | 180 |
| ✯ | நோயாளிகள் | 181 |
| ✯ | விலங்குகளும் - பறவைகளும் | 182 |
| ✯ | பசுமை பூமி | 186 |
| ✯ | இயற்கை வளங்கள் | 187 |
| 11 | தனிப்பட்ட வாழ்கை | 189 |
| ✯ | ஆளுமையை வளர்த்தல் | 189 |
| ✯ | புறங்கூறல் | 193 |
| ✯ | சந்தேகம் | 193 |
| ✯ | பொய்யுரைத்தல் | 194 |
| ✯ | யூகங்கள் பாவமேயாகும் | 195 |
| ✯ | பாவம் - ஆடம்பரம் - செருக்கு | 196 |
| ✯ | ஆசைகள் - பொறாமை - இகழ்ச்சி | 197 |

☆ தவறான முறையில் சம்பாதித்த செல்வங்கள் 198
☆ ஏமாற்றுதல் - மோசடி - பேராசை 199
☆ மது - சூதாட்டம் 201
☆ ரிபா அல்லது வட்டி 202
☆ கருக்கலைப்பும் வறுமை பற்றிய அச்சமும் 203
☆ இன வெறி 205
12 நற்குணமும் - நற்பண்புகளும் 207
☆ அடக்கம் - நம்பிக்கை 207
☆ தர்மம் 208
☆ அன்பு - உண்மையான அன்பு 209
☆ ஒத்துழைப்பு 210
☆ நேர்மை - வாய்மை 210
☆ இதயத்தின் ஜிகாத் - நம்பிக்கை - நீதி 211
☆ மரியாதை - மென்மையான பேச்சு 212
☆ சுத்தம் - சகோதரத்துவம் 214
☆ ஒடுக்கப்பட்டவர்களின் நண்பனாக இரு 214
☆ கற்றலும் அறிவும் 215
13 வாழ்க்கையின் சில முக்கிய அம்சங்கள் 217
☆ உணவும் பானங்களும் 217
☆ ஆல்கஹால் கலந்த பானங்கள் ஹராமாகும் 219
☆ உடை 220
☆ பெருநாட்கள் 222
☆ வெள்ளிக்கிழமை தொழுகை 224
☆ முஸ்லிம் உலகம் 226
☆ நன்றி 229
☆ மேற்கோள் நூல்களின் பட்டியல் 230

# மொழிபெயர்ப்பாளரின் உரை

"Islam, an Introduction" என்ற இந்த ஆங்கில நூலை மொழி பெயர்க்கின்ற வாய்ப்பினை எனக்கு வழங்கிய நூலாசிரியர் பெங்களூரு ஸலாம் சென்டரின் தலைவர் ஜனாப் ஸையத் ஹமீது மோஹ்ஸின் அவர்கட்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலை மிகச் சிறந்த முறையில் கணினி அச்சுச் செய்து தந்த கடையநல்லூர் மூன் ஆப்செட் உரிமையாளர் சகோதரர் எம்.எஸ்.ஜாஹிர் ஹுஸைன் அவர்கட்கும், இதை முழுவதும் படித்துச் சரி பார்த்த கடையநல்லூர் மசூது தைக்கா மேல்நிலைப் பள்ளியின் ஓய்வு பெற்ற தமிழ் ஆசிரியர் ஹுஸைன் சார் அவர்கட்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பணியினை மேற்கொள்ள எனக்கு ஞானத்தை வழங்கிய எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே புகழனைத்தும் உரித்தாகும்.

சேயன் இப்றாகிம்
(சே.அ.முஹம்மது இப்ராகிம்)
கடையநல்லூர்

நவம்பர், 2014

# I

# இஸ்லாம்

இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு சமயமும் அதனை நிறுவியவரின் பெயராலோ, அல்லது ஒரு சமூகத்தின் பெயராலோ அல்லது அது தோன்றிய நாட்டின் பெயராலோ அழைக்கப்பட்டு வருகின்றது. உதாரணமாக கிறிஸ்துவ சமயம் அதனை நிறுவிய இயேசுகிறிஸ்துவின் பெயரைக் கொண்டுள்ளது. புத்தசமயம், அதன் நிறுவனர் கௌதம புத்தர் பெயரால் அழைக்கப்படுகிறது. அதைப் போலவே ஜோராஸ்டிரா சமயம் அதன் நிறுவனர் ஜொராஸ்ட்ரா பெயராலும், யூத சமயம் அதனைப் பின்பற்றும் யூதர்களின் பெயராலும் வழங்கப்படுகின்றது. ஆனால் இஸ்லாத்திற்கு மட்டும் தனித்தன்மை உள்ளது. அது எந்த ஒரு தனிமனித ருடனோ, நாட்டுடனோ, அல்லது சமுதாயத்துடனோ தொடர்பு படுத்தி அழைக்கப்படவில்லை. அது எந்த ஒரு மனிதனின் மூளையிலும் உற்பத்தியான பொருளல்ல. இஸ்லாத்தின் உண்மையான நிறுவனர் இறைவனே தவிர வேறு யாருமில்லை. அதன் தொடக்கம் இஸ்லாத்தின் முதல் தீர்க்கதரிசியான நபி ஆதம்(அலை) அவர்களின் காலத் திலிருந்து ஆரம்பிக்கின்றது.

"இஸ்லாம்" என்பது ஒரு அரபு வார்த்தையாகும். அதன் பொருள் பணிவு மற்றும் கீழ்படிதல். பணிவு என்பதற்கு இறைவனின் கட்டளைகளுக்குப் பணிவதாகும். "கீழ்படிதல்" என்பது இறைவனின் கட்டளைகளை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதாகும். அல்லாஹ்வுக்குப் பணிவதும்,

கீழ்ப்படிவதும் அமைதியைக் கொண்டுவருகிறது. அதனால்தான் இஸ்லாம் என்பதற்கு அமைதி என்றும் பொருள் கொள்ளப்படுகின்றது. இஸ்லாமிய வழிமுறையிலான வாழ்க்கையை ஏற்றுக் கொண்டு, அதன்படி வாழ்பவனே முஸ்லிமாவான்.

இறைவனுடைய கட்டளைகளுக்குப் பணிந்தும் அவனுடைய நன்மை பயக்கும் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்தும் வாழ்வது அமைதியையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த உதவுகிறது. இது ஒருபுறம், மனிதர்கள் தங்களுக்கும், பிற மனிதர்களுக்கிடையிலும் இன்னொரு புறம் மனித சமூகத்திற்கும் இறைவனுக்குமிடையிலும் அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்தத் துணை புரிகின்றது. இயற்கைப் பொருட்களுக்கிடையேயும் இணக்கத்தை ஏற்படுத்த உதவுகிறது. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், உயர்ந்த மலைகள், பெருங்கடல்கள் என இவையனைத்தும் இறைவனின் கட்டளைக்குக் கீழ்படிந்து செயல்படுவதை நாம் பார்க்கிறோம். இவற்றில் எந்தவிதமான ஒழுங்கின் மையையோ அல்லது குழப்பத்தையோ நம்மால் காண முடியவில்லை. இறைவன் படைத்துள்ள இந்த இயற்கையின் அமைப்பு முறையில் முழுமையான ஒழுங்கையும் இணக்கத்தையும் பார்க்கிறோம். சூரியன் கிழக்கே உதித்து மேற்கே மறைகின்றது. இந்த விதிமுறையில் எந்த மாற்றமும் இல்லை. சந்திரனும் நட்சத்திரங்களும் இரவில் பிரகாசிக்கின்றன. இரவு போகிறது. பகல் வருகிறது. இந்த செயல்முறை இப்படியே போய்க்கொண்டிருக்கிறது. பூக்கள் பூக்கின்றன. வசந்த காலத்தில் மரங்களில் பச்சை இலைகள் துளிர்க்கின்றன. இஸ்லாத்தின்படி இந்த உலகில் உள்ள ஒவ்வொரு பொருளும், மனிதனைத் தவிர்த்த ஒவ்வொரு உணரக்கூடிய பொருளும் இறைவனின் சட்டங்களின்படியே நிர்வகிக்கப்படுகின்றன. முழு பௌதீக உலகமும் இறை வனுக்குக் கீழ்ப்படிந்து அவனது சட்டங்களுக்குப் பணிந்து நடக்கின்றது. பௌதீக உலகம் தானே சுயமாகச் செயல்பட முடியாது. அது பின்பற்றத்தக்க சுயமான வழிமுறைகள் ஏதும் இல்லை. தன்னைப் படைத்தவனின் சட்டத்திற்கு அல்லது இஸ்லாத்தின் சட்டத்திற்கு அல்லது பணிதலுக்குக் கீழ்ப்படிவதைத்தவிர அதற்கு வேறு வழி இல்லை.

*ஒவ்வொரு பொருளுக்கும் மீற முடியாத நிர்ணயிக் கப்பட்ட ஒரு நிலை உள்ளது. இந்த இயற்கைப் பொருள்கள் இறைவனின் சட்டத்தை மீறிச் செயல்படுவதை நீங்கள் எப்போதாவது பார்த்துள்ளீர்களா? இல்லை, ஒரு போதும் இல்லை. ஏன்? ஏனெனில் அவை இறைவனுக்குக் கீழ்படியும் முறையிலேயே படைக்கப்பட்டுள்ளன. கீழ்ப்படிவதைத் தவிர அவற்றுக்கு வேறு வழி இல்லை. இதனாலேயே இயற்கை அமைப்பில் நாம் நீடித்த நிலைத்த அமைதியையும், ஒழுங்கையும் காண முடிகிறது.*

*ஆனால் மனிதர்களாகிய நாம் வித்தியாசமானவர்கள். நல்லவற்றையும், தீயவற்றையும் பகுத்துப்பார்த்திட இறைவன் நமக்கு அறிவையும், புத்தியையும், திறமையையும் வழங்கியுள்ளான். ஒருவேளை இதனை நாம் மறந்து விட்டாலும் அவன் நபிமார்களையும், வேதங்களையும் அனுப்பி நமக்கு தொடர்ந்து நினைவூட்டிக் கொண்டே இருக்கிறான். நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு முன்னர் இவ்வுலகில் தோன்றிய நபிமார்கள் அனைவரையும் எந்த விதமான வேறுபாடுமின்றி ஒரு முஸ்லிம் ஏற்றுக் கொள்கிறான். இறைவனின் அந்தத் தூதர்கள் அனைவரும் அவர்களை விசுவாசமாகப் பின்பற்றியவர்களும் முஸ்லிம்களே. இறைவனின் உண்மையான மார்க்கமான இஸ்லாம்தான் அவர்களின் சமயம் என்றும் ஒரு முஸ்லிம் நம்புகிறான். (குர்ஆன் வசனங்கள் 2:128-140, 3:78-85, 17:42-44, 31:22, 42:13 ஆகியவற்றைப் பார்க்க) இறைவனின் இறுதித் தூதர் முஹம்மது(ஸல்) அவர்களே. இறைவனின் வழிகாட்டும் இறுதி வேதம் குர்ஆன் ஆகும்.*

*தனக்குக் கீழ்ப்படியுமாறு இறைவன் நம்மை வற்புறுத்த வில்லை. கீழ்ப்படிவதா, வேண்டாமா என்பதை நம்முடைய முடிவிற்கு விட்டுவிட்டான். ஏனெனில் அவன் நம்மைப் பரிசோதிக்க விரும்புகிறான். இந்தப் பரிசோத னைக்குப் பிறகு வெகுமதிகளும் தண்டனைகளும் தரும் ஒரு நாள் வரும். அது தான் இறுதித் தீர்ப்பு நாளாகும். இந்தத் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு பெருமகிழ்ச்சியும் அமைதியும் நிறைந்த சொர்க்கம் கிடைக்கும், தோல்வி யுற்றவர்கள், நரகத்தில் கொடுமையான வேதனையை அனுபவிப்பார்கள். இறைவனை வணங்குவதன் மூலமும், அவனுக்குக்*

கீழ்ப்படிவதன் மூலமும் நாம் அவனது அருட் கொடைகளைப் பெற்று அவனது தண்டனையிலிருந்து தப்ப முடியும்.

இயற்கையாகவே, மனிதர்கள் அனைவரும் நல்ல விஷயங்களையே விரும்புகின்றார்கள். கெட்ட விஷயங்களை வெறுக்கிறார்கள். உதாரணமாக, நாம் அனைவரும் "உண்மை" யை விரும்புகிறோம். பொய்யை வெறுக்கிறோம். ஒரு பொய்யன் கூட தான் "பொய்யன்" என்று அழைக்கப்படுவதை விரும்புவதில்லை. ஏனெனில் பொய்யுரைப்பது ஒரு தீய செயல் என நாம் மனமார எண்ணுகிறோம். இதே முறையில் அடுத்தவருக்கு உதவுதல், அன்பு செலுத்துதல் பணிவுடன் நடத்தல், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது மரியாதை செலுத்துதல், நேர்மை இது போன்ற அனைத்து நற்செயல்களும் அனைவராலும் விரும்பப்பட்டு பாராட்டப்படுகிறது. ஆனால் முரட்டுத் தன்மை, கொடூரம், பொய், அடுத்தவரைப் புண்படுத்துதல் பெற்றோருக்கும் ஆசிரியர்கட்கும் கீழ்ப்படியாதிருத்தல் கெட்டபெயர் சொல்லி அழைத்தல் மற்றும் இது போன்ற தீய பண்புகளை அனைவரும் வெறுக்கின்றார்கள். ஆகவே, நல்லவற்றை விரும்புவதும் தீயவற்றை வெறுப்பதும் மனித இயற்கை என எடுத்துக் கொள்ளலாம். நற்செயல்கள் மரூப்ஃ என்றும் தீயசெயல்கள் "முன்கார்" என்றும் குர்ஆனின் மொழியான அரபியில் அழைக்கப்படுகின்றன.

அமைதியை விரும்புவதும், ஒழுங்கின்மையை வெறுப்பதும் மனித சுபாவமே. இறைவனின் சட்டத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலம் அமைதி கிடைக்கிறது. அதே நேரத்தில் கீழ்ப்படிதலின்மையே ஒழுங்கீனத்திற்குக் காரணமாக அமைகின்றது. மனித சுபாவத்தின் ஒரு அம்சமாக இருக்கின்ற அமைதியை இஸ்லாம் நிலைநிறுத்தியுள்ளது. எனவே இஸ்லாம் "இயற்கைச் சமயம்" அரபியில் தீன்-உல் பித்ராஹ்" என அழைக்கப்படுகிறது.

## 2

# ஓரிறைவன்

## இஸ்லாமிய நம்பிக்கையின் அடிப்படை

*இறுதி நபியான நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் இறைவன் குறித்து கேட்கப்பட்டபோது, அதற்கான பதில் இறைவனிடமிருந்தே நேரடியாக வந்தது.*

> *கூறுவீராக! அவன் அல்லாஹ் ஏகன். அல்லாஹ் (எவரிடத்தும்) எந்தத்தேவையுமில்லாதவன். அனைவரும் அவனிடத்தில் தேவையுடையவர்களே. அவன் யாருடைய சந்ததியும் இல்லை. அவனுக்கு எவரும் சந்ததி இல்லை. மேலும் அவனுக்கு நிகரானவர் எவருமே இலர் (குர்ஆன் 112:1-4)*

*எந்த விதமான குழப்பமும் இல்லாமல் இறைவன் தன்னைப் பற்றிக் கூறியுள்ள ஒரு தெளிவான அறிக்கையே இது. இறைவன் ஒருவன். அவன் அனைத்துப் பொருட்களை விடவும் உயர்ந்தவன். அவன் படைக்கின்றான். அனைத்துப் பொருட்களின் மீதும் வல்லமை செலுத்தும் ஆற்றல் பெற்றவனாக அவன் இருக்கின்றான்.*

> *அல்லாஹ் நித்திய ஜீவன் (பேரண்டம் அனைத்தையும்) நன்கு நிர்வகிப்பவன். அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் தூங்குவதுமில்லை. மேலும் சிற்றுறக்கமும் அவனைப் பிடிப்பதில்லை. வானங்களிலும், பூமியிலுமுள்ள அனைத்தும் அவனுடை*

> யவையே! அவனுடைய அனுமதியின்றி அவனது திருமுன் எவர் தான் பேச முடியும்? அவர்களுக்கு முன்னாலிருப்பவற்றையும், அவர்களுக்குப் பின்னால் (மறைவாக) இருப்பவற்றையும் அவன் நன்கறிவான். அவன் (அறிவித்துக் கொடுக்க) நாடுவதைத் தவிர அவன் ஞானத்திலிருந்து வேறெதையும் எவரும் புரிந்து கொள்ள முடியாது. அவனுடைய அரசாட்சி வானங்கள், பூமி அனைத்திலும் பரந்து நிற்கின்றது. அவற்றைப் பாதுகாப்பது அவனைச் சோர்வுறச் செய்வதில்லை. மேலும் அவன் மிக உயர்ந்தவனும் மகத்துவம் மிக்கவனுமாய் இருக்கின்றான். (குர்ஆன் 2:255; அல்லாஹ்வைப் புகழும் இந்த வசனங்கள் ஆயத்துல் குர்ஸி என அழைக்கப்படுகின்றன)

சமயம், அது எந்த சமயமாக இருந்தாலும் நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகளின் தொகுப்பேயாகும். இறைக் கோட்பாடே அதன் மையப் புள்ளியாக இருக்கின்றது. இந்த முக்கிய அம்சம் தெளிவற்றுப் போனால் முழு அமைப்பும் கீழே சரிந்து விழுந்து விடும். நபிகள் நாயகம்(ஸல்) அவர்களாலும் அவர்களுக்கு முன்பிருந்த தீர்க்கதரிசிகளாலும் போதிக்கப்பட்ட இஸ்லாத்தின் அடிப்படையான தத்துவம் "அல்லாஹ் ஒருவனைத்தவிர வேறு இறைவன் இல்லை" என்பதேயாகும் . அவனே அனைத்துப் பொருட்களையும் படைத்துப் பரிபாலித்துக் காப்பவன். அவன் சர்வ வல்லமையுள்ளவன். அனைத்தையும் அறிந்தவன். அவனுக்கு இணையானவர்கள் யாருமில்லை.

> அவனுக்கும் அவனது படைப்புகளுக்குமிடையே இடைத்தரகர்கள் யாருமில்லை. இதன் செய்தி என்ன வென்றால் இஸ்லாம் ஓரிறைக் கொள்கை கொண்டது: அது முழுமையானது. பூரணமானது; இதில் சமரசத்திற்கு இட மில்லை; அவனுக்கும் அவனது படைப்புகளுக்குமிடையில் அவை உயிருள்ளவையாக இருந்தாலும் சரி உயிரற் றவையாக இருந்தாலும் சரி எந்த ஒரு மனித னுக்கும் மத்தியஸ்தம் செய்வதற்கு அனுமதி

> யில்லை. அவன் எங்கும் நிலை பெற்றிருக்கின்றான். அவனே இறுதியான மெய்ப்பொருளாக இருக்கின்றான். அல்லாஹ்வைத் தவிர வேறு எந்தக் கடவுளையும் அழைக்க வேண்டாம். அவனைத் தவிர வேறு இறைவன் யாருமில்லை. அவனைத் தவிர ஒவ்வொரு பொருளும் அழிந்து போகக்கூடியதாகும்(குர்ஆன் 28:88)

"அல்லாஹ்" என்ற அரபு வார்த்தையானது அல்-இலாஹ் என்ற வார்த்தையின் குறுகிய வடிவமாகும். அவன் இறைவன்; அவன் ஒருவன் மட்டுமே இறைவன். அவனே படைப்பவன்; பரிபாலிப்பவன்; அழிப்பவன்; பிரபஞ்சத்தை மீண்டும் உயிர்த்தெழச் செய்பவன். அவன் கருணையாளன். மிகுந்த இரக்கமுடையவன். புனிதமானவன்; சர்வ வல்லமை பெற்றவன்; அனைத்தையும் அறிந்தவன்; சர்வ சுதந்திரமுள்ளவன்; நீதிமான்; மன்னிப்பவன்; அன்பு பாராட்டுபவன். அந்த இறைவனே முதலும் முடிவுமானவன். நிரந்தரமானவன். மறைவானவன். வெளிப்படையானவன். அவன் தான் இறைவன். அவன் தான் உண்மையானவன். இறுதி மெய்ப்பொருள் அவனே. அவன் இறைவன். அவன் ஒருவன் மட்டுமே இறைவன். அவனைப் போல் வேறு யாருமில்லை.

# "ஒரு இறைவன், ஒரு மனித சமுதாயம்"

*(நபியே!) என்னுடைய அடிமைகள் என்னைக் குறித்து உம்மிடம் கேட்பார்களானால், நிச்சயமாக நான் (அவர்களுக்கு) அருகிலேயே இருக்கின்றேன். என்னை எவரேனும் அழைத்தால் அவ்வாறு அழைப்பவனுடைய அழைப்புக்கு மறு மொழி சொல்கின்றேன் (என்பதைத் தெரிவித்து விடுங்கள்) எனவே அவர்கள் என்னுடைய அழைப்பை விரைந்து ஏற்றுக் கொள்ளட்டும். என் மீது நம்பிக்கை கொள்ளட்டும். அதனால் அவர்கள் நேர்வழி அடைந்திட முடியும். (குர்ஆன் 2:186)*

மீண்டும் இறைவன் குர்ஆனில் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்.

அவனது உள்ளத்தில் எழுகின்ற ஊசலாட்டங்களைக் கூட நாம் அறிவோம். அவனது பிடரி நரம்பை விடவும் அதிகமாக நாம் அவனிடம் நெருக்கமாக இருக்கின்றோம் (குர் ஆன் 50:16)

இவ்வாறாக, குர்ஆன் எந்த விதமான ஆன்மீக அல்லது மனித சக்திகளின் மத்தியஸ்தம் இல்லாமல் மனிதன் இறைவனை நேருக்கு நேர் சந்திக்குமாறு செய்துள்ளது. மனிதனுக்கும் இறைவனுக்குமிடையில் குறுக்கிடுகின்ற எந்த ஒரு புரோகிதத் தனத்தையும் இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை என்பதே அதன் சிறப்பு அம்சமாகும்.

## இறைவனின் அதிகாரமும் இறையாண்மையும் பிரிக்க முடியாதது

ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு தலைவர் இருக்கின்றார். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் ஒரு தலைமையாசிரியர் அல்லது ஒரு முதல்வர் இருக்கின்றார். ஒவ்வொரு நாட்டிலும் ஒரு ஜனாதிபதி அல்லது பிரதமர் தலைமைப் பொறுப்பில் இருக்கின்றார். ஒவ்வொரு நகரத்திற்கும் ஒரு மேயர் அல்லது நிர்வாகி இருக்கின்றார். அதனைப் போலவே ஒவ்வொரு

பொருளுக்குப் பின்னால் அதனை உற்பத்தி செய்தவர் இருக்கின்றார். அதே ரீதியில் இந்த மிகப் பெரிய பிரபஞ்சம் நமக்கு மேலே தெரிகின்ற குறையற்ற வான வெளி, பூமியில் முளைவிட்டு நிலைத்து நிற்கின்ற மலைகள், பொங்கி வரும் அலைகளைக் கொண்ட கடல்கள், நமது கண்களுக்குப் பசுமையாகத் தெரிகின்ற காடுகள், பூமியின் வழியாக ஓடுகின்ற ஆறுகள், முடிவு பெறாத கிரகங்களின் சுழற்சி, அதன் காரணமாக ஏற்படுகின்ற இரவு-பகல்கள், பருவகால மாற்றங்கள், கடல்களிலிருந்து ஆவியாகிச் சென்ற நீர் மழை யாகப் பொழிந்து பயிர்களுக்கு பயன்படும் விதம், உணவு, சக்தி வளங்களுக்கும் அவ்வப்போது புத்துயிர் ஊட்டி அதன் மூலம் ஒட்டு மொத்த மனித குலமும், பிற படைப்பினங்களும் பெறுகின்ற பயன்கள் ஆகிய இவையனைத்தும் இவற்றிக்குப் பின்னணியில் ஒரு மாபெரும் எஜமான் இருக்கின்றான் என்பதையும் அவனது ஆணையின் பேரிலேயே இந்த முழு அமைப்புக்களும் முறையான வழியில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதையும் நாம் அறிந்து கொள்கிறோம்.

எனவே இவையனைத்தையும் ஒழுங்கான முறையில் இயங்கிடச் செய்ய வல்ல ஒரு சக்தி இருக்கின்றது என்ற தர்க்கரீதியான முடிவிற்கே நாம் வர இயலும். இந்த வனப்பு மிக்க இயற்கையின் பின்னணியில் ஒரு மிகப் பெரிய கலைஞன் இருக்க வேண்டும் அவனே இந்தப் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு துண்டையும் அதற்குரிய அளவில் திட்டமிட்டு உருவாக்கி சில நோக்கங்களுக்காக அவற்றை பராமரித்து வருகின்றான். அவனது கலைஞானமும், படைப்பாக்கமும் அனைத்தையும் விட உயர்ந்த நிலையில் உள்ளன. உண்மையான நம்பிக்கையாளர்கள் இந்த கலைஞனை அங்கீகரித்து அவனையே அல்லாஹ் அல்லது இறைவன் என்று அழைக்கின்றனர். ஏனெனில் அவனே படைத்தவன். அவனே இந்த உலகத்தின் தலைமைக் காரணகர்த்தா. வாழ்க்கையை வழங்கியவன். உயிர் வாழ அனைத்துப் பொருட்களையும் அளித்தவன்; அவன் மனிதனல்ல. ஏனெனில் எந்த ஒரு மனிதனாலும் இன்னொரு மனிதனைப் படைக்க முடியாது. அவன் ஒரு விலங்குமல்ல. ஒரு தாவரமுமல்ல. அவன் ஒரு விக்கிரகமுமல்ல, சந்திரனுமல்ல அல்லது நட்சத்திரமுமல்ல.

ஏனெனில் இந்தப் பொருட்கள் அனைத்தும் வேறொருவனின் உத்தரவுகளுக்கு கட்டுப்பட்டவைகளாகும். அவன் இந்தப் பொருட்கள் அனைத்திற்கும் மேலானவன். ஏனெனில் அவனே இவற்றை உருவாக்கியவன். இவை அனைத்தையும் பராமரித்துக் கொண்டிருப்பவன்.

எந்த ஒரு பொருளையும் படைத்தவன் ஒரு வித்தியாசமான வனாகவும் அவன் எந்தப் பொருளைப் படைத்தானோ அதனை விட உயர்ந்தவனாகவும் இருக்க வேண்டும். எந்த ஒரு உயிரும் தானாக உருவாகாது என்பதையும் இந்த வியப்பூட்டும் உலகம் தன்னைத்தானே படைத்துக் கொள்ள வில்லை என்பதையும் ஒரு விபத்தால் அது ஏற்பட்டதல்ல என்பதையும் நாம் நன்கறிவோம். உலகில் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்ற மாற்றங்கள் அது படைக்கப்பட்டது என்பதையும் எந்தப் பொருளாக இருந்தாலும் அது ஒருவனால் படைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதையும் நமக்கு உணர்த்துகின்றன.

இறைவனுடைய அதிகாரமும் இறையாண்மையும் பிரிக்க முடியாதவை. அவன் சர்வ வல்லமை பொருந்தியவன். அவனது படைப்பும் படைப்பினங்களும் அவனது முழுக்கட்டுப்பாட்டில் உள்ளன. அவன் தன்னுடைய அதிகாரங்களை யாருக்கும் பகிர்ந்தளிக்கவில்லை. அல்லது பிரபஞ்சத்தின் செயற்பாடுகளை அவன் யாருக்கும் பிரித்துக் கொடுக்கவில்லை. சந்திரனையும் சூரியனையும் இயங்கச் செய்திட ஒருவரையும் படைப்பினங்களின் விவகாரங்களைக் கவனித்திட வேறொருவரையும் அவன் நியமித்திடவில்லை. இப்படி அவன் தனது அதிகாரத்தையும், சக்தியையும் பிரித்துக் கொடுத்திருந்தால் பிரபஞ்சத்தில் பெரும் குழப்பமும் ஒழுங்கின்மையும் ஏற்பட்டு இப்போதுள்ள சிறந்த ஒழுங்கு முறை இல்லாமல் போய்விட்டிருக்கும்.

இந்த உலகத்தை உருவாக்கி நிலைபெறச் செய்திருப்பவன் மனிதனைப்படைத்து அவனுக்கு உணவளிப்பவன்; செயல் திறனும், வல்லமையும் கொண்டவன்; இவை அனைத்தும் அல்லாஹ் அல்லது இறைவன் என்று அழைக்கப்படும் ஒருவனையே குறிக்கின்றது. இது ரகசியங்கள் அனைத்திற்கும் ரகசியமானது. எல்லா உயிரினங்களை விடவும் மிகவும் உயர்வானது.

# "அல்லாஹ்"

## அவனது பெயரின் பொருளே அன்பு தான்

முஸ்லிம்கள் அனைவராலும் புரிந்து கொள்ளப் பட்டுள்ளவாறு அல்லாஹ். ஒருவன் மட்டும் வணங்குவதற்குரியவன் அவனையே அனைவரும் பணிகின்றனர். அனைத்திற்கும் மேலாக அவனே புகழப்பட்டு வணங்கப்படுகிறான். இதுவே இறைவழிபாட்டிற்கான இஸ்லாமிய அணுகுமுறையாகும்.

இஸ்லாத்தில் வணக்கமென்பது வாரம் ஒரு முறை செய்ய வேண்டிய ஒரு கடமையோ அல்லது வழக்கமாக நடைபெறுகின்ற ஒரு நிகழ்வோ அல்ல அது நம்மை படைத்துப் பரிபாலிக்கின்ற இறைவனின்பால் நம்முடைய ஆழ்ந்த அன்பையும் புகழ்ச்சியையும் வெளிப்படுத்துகின்ற ஒரு தொடர் நிகழ்ச்சியாகும். அது மரியாதை, பயபக்தியின்பால் தலையைத் தாழ்த்தி அவனை வணங்குவது மட்டுமல்ல. அவனது கட்டளைகளுக்குக் கீழ்ப் படிவதுமாகும். நாம் யாரிடம் அன்பு காட்ட வேண்டுமோ அந்த இறைவனால் இந்தக் கட்டளைகள் குர்ஆன் மூலம் நமக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களாகும். அவன் நம் மீது அன்பு செலுத்துவதால் வெற்றிக்கும் பெருமைக்கும் மகிழ்ச்சிக்கும் நமக்கு வழிகாட்டுதல் கிடைக்கின்றது. அது நம்பிக்கையின்மை, பேராபத்து மற்றும் தவறான வழிகாட்டல் ஆகியவற்றி லிருந்தும் நம்மைப் பாதுகாக்கிறது. பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்கு சில ஒழுக்க நெறிமுறைகளை உருவாக்கித் தந்துள்ளனர். இவை குழந்தைகளை ஒடுக்குவதற்காகவோ அல்லது அவர்களுக்குத் தொல்லை கொடுப்பதற்காகவோ உருவாக்கப்பட்ட விதிமுறைகள் அல்ல. மாறாக அவர்களைப் பாதுகாப்பதற்காக, பலப்படுத்துவதற்காக, இறுதியில் அவர்களை வெற்றியின் பாதையில் அழைத்துச் செல்வதற்காக உருவாக்கப்பட்டவைகளாகும். அதுபோல்தான் இறைவன் தனது சட்டங்களையும் விதிமுறைகளையும் வகுத்தளித்துத் தந்துள்ளான்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம், தோழர்கள் அல்லாஹ்வைப் பற்றிக் கேட்டபோது, அல்லாஹ்வே அதற்கு கீழ்க்கண்ட இறை வசனம் மூலமாக அழகாகப் பதிலளித்துள்ளான்.

> மேலும் (நபியே) என்னுடைய அடிமைகள் என்னைக் குறித்து உம்மிடம் கேட்பார்களானால் நிச்சயமாக நான் (அவர்களுக்கு) அருகிலேயே இருக்கின்றேன். என்னை எவரேனும் அழைத்தால் அவ்வாறு அழைப்பவனுடைய அழைப்புக்கு மறுமொழி சொல்கின்றேன் (என்பதைத் தெரிவித்துவிடுங்கள்). எனவே அவர்கள் என்னுடைய அழைப்பை விரைந்து ஏற்றுக் கொள்ளட்டும். என் மீது நம்பிக்கை கொள்ளட்டும். அதனால் அவர்கள் நேர்வழி அடைந்திட முடியும் (குர்ஆன் 2:186)

தன் மீது அன்பு செலுத்துகின்ற, தனக்கு நன்மை செய்கின்றவற்றின் பால் அன்பு செலுத்துகின்ற ஒரு இறைவனிடம் பழகிக் கொண்டிருக்கிறோம் என்பதை ஒரு முஸ்லிம் அறிந்திருக்கின்றான். உண்மையில் அன்பின் உச்சபட்ச வெளிப்பாடு கருணையும், மன்னிக்கும் பண்புமே யாகும். தன்பால் நம்பிக்கை கொண்டு சரியான பாதையில் செல்பவர்கட்கு இவற்றை அளிப்பதாக இறைவன் வாக்குறுதி அளித்துள்ளான்.

தன்னுடைய பக்தர்களுக்கும் தன்னை வணங்குப வர்களுக்கும் மன்னிப்பு அளிப்பதோடு மட்டுமின்றி அவர்களது இதயங்களை அன்பால் நிரப்புவதாகவும் இறைவன் வாக்குறுதி அளித்துள்ளான். இதோ குர்ஆனில் அவன் கூறுகின்றான்.

> எவர்கள் நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் புரிந்து கொண்டிருக்கின்றார்களோ, அவர்களுக்காக விரைவில் கருணைமிக்க இறைவன் (மக்களின் உள்ளங்களில்) அன்பைத் தோற்றுவிப்பான் (குர்ஆன் 19:96)

முஸ்லிம்கள் எந்த ஒரு செயலையும் "அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய எல்லாம்

வல்ல இறைவனின் திருப்பெயரால்" என்று கூறித் தான் தொடங்குகிறார்கள். இது அல்லாஹ்ஹின் கருணையும், அன்பும், அருளும் அனைத்துப் பொருட்களிலும் ஊடுருவியிருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்வதற்கான ஒரு நினைவூட்டலே யாகும். இறைவனுக்காகவே இந்தச் செயலைச் செய்கின்றோம் என்று தாங்கள் செய்கின்ற செயலின் நேரிய தன்மையை வெளிப்படுத்துவதற்காகவும், புனிதப் படுத்தி ஆசி பெறுவதற்காகவும் முஸ்லிம்கள் இந்த வார்த்தைகளைச் சொல்கிறார்கள். அன்பையும், கருணையையும், தங்களது அனைத்துச் செயல்பாடுகளிலும் மனிதர்களோடு மட்டுமின்றி விலங்குகள் மற்றும் சுற்றுப்புறச் சூழல் சார்ந்த விஷயங்களிலும் வெளிப்படுத்துமாறு முஸ்லிம்களுக்கு இறைவன் கட்டளையிட்டுள்ளான். அன்பும், கருணையும் இஸ்லாத்தின் புனித நூல்களான குர்ஆனிலும், ஹதீஸிலும் (நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் போதனைகள்) பொதுவாகக் காணப்படுகின்ற முக்கியச் செய்திகளாகும்.

ஒரு தாய் தனது குழந்தையிடம் செலுத்துகின்ற அன்பு தான் மிகப்பெரிய அன்பாகும் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வர். தன்னைப் பணிந்து வணங்குகின்றவர்கள் மீது அல்லாஹ் இத்தகைய அன்பைத் தான் செலுத்துகின்றான் என நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஒரு முறை தமது தோழர்களிடம் கூறினார்கள்.

காணாமல் போல தனது குழந்தையை ஒரு பெண்மணி தீவிமாகத் தேடிக் கொண்டிருப்பதை நபிகளார் ஒரு முறை கண்ணுற்றார்கள். குழந்தையை கண்டுபிடித்த அந்தத் தாய் அதனை தனது வயிற்றில் இறுகப் பற்றிக் கொண்டு பாலூட்டினாள். இறவனின் தூதர் அப்போது அங்கு குழுமியிருந்த தமது தோழர்களிடம் "இந்தத்தாய் தனது குழந்தையை எரியும் தீக்குழியில் விசி எறிந்து விடுவாள் என நீங்கள் கற்பனை செய்ய முடியுமா? என வினவியபோது அதற்குத் தோழர்கள் "இல்லை" என்று கூறினர். பின்னர் நபிகளார் இந்தத் தாய் தனது குழந்தையிடம் காட்டும் கருணையைவிட இறைவன் தனது பணியார்களிடம் மிக அதிகமாக கருணை காட்டுவான்" என்று கூறினார்கள்.

அல்லாஹ் தன்னுடைய பல்வேறு குணநலன்களுக்கும், பண்புகளுக்கும் ஏற்றவாறு 100 வித்தியாசமான பெயர்களால்

தன்னை அழைத்துக் கொள்கின்றான். அல்லாஹ் மிகவும் விரும்புகின்ற இரண்டு பெயர்கள் அல் ரஹ்மான், அல் ரஹீம் என்பதாகும். குர்ஆனின் முதல் வசனம், "அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையயோனுமாகிய எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திருநாமத்தால்" என்பதேயாகும்.

"அல்லாஹ்வின் கருணை" குர்ஆனின் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. தன்னை மிகுந்த கருணையாளன் (அல் ரஹ்மான்) என்று அல்லாஹ் குர்ஆனில் 50க்கும் மேற்பட்ட இடங்களில் குறிப்பிடுகின்றான். இன்னும் 40 இடங்களில் அவன் தனது கருணையைப் பற்றிக் குறிப்பிடுகின்றான். 55 இடங்களில் அவன் தன்னை நிகரற்ற அன்பும், கருணையும் உடையவன் (அல்ரஹீம்) என்று குறிப்பிடுகின்றான். இவ்வாறாக அல்லாஹ்வின் கருணைபற்றி குர்ஆனில் 150க்கும் மேற்பட்ட இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

19 தடவைகள் மட்டுமே அல்லாஹ் குர்ஆனில் தனது கடும் கோபத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளான் என்பதை இதனுடன் ஒப்பு நோக்குங்கள். கோபத்தை வெளிப்படுத்தும் எந்த ஒரு பெயரையும் அல்லாஹ் தனக்குச் சூட்டிக் கொள்ள வில்லை என்ற உண்மையையம் நினைவு கூறுங்கள். மேலதிகமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் அல்லாஹ் தன்னை மிகவும் மன்னிப்பாளன்" என்று கிட்டத்தட்ட 100 தடவைகள் குர்ஆனில் குறிப்பிட்டுள்ளான்.

# தௌஹீது

"அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை" என்ற பிரகடனம் தௌஹீது என அழைக்கப்படுகின்றது. வாழ்க்கை, பிரபஞ்சம், மற்றும் அனைத்துப் பொருட்கள் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டத்தை தௌஹீது பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. முஸ்லிம்களின் உலகளாவிய கருத்தும் இதுதான்.

நாம் அனைவரும் இறைவனால் படைக்கப் பட்டிருப்பதால், அவன் முன்பு நாம் அனைவரும் சமமே. ஒரு இனத்தைச் சார்ந்த மக்களுக்கும், இன்னொரு இனத்தைச் சார்ந்த மக்களுக்குமிடையில், பணக்காரனுக்கும் ஏழைக்கு மிடையில், வல்லவனுக்கும் எளியவனுக்கு மிடையில், ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் எந்தவிதமான வித்தியாசமுமில்லை.

மேலும், அனைத்துப் பொருட்களும் இறைவனுக்கே சொந்தமாக இருப்பதால் யாருக்கும் எந்தவிதமான பிரத்தியேக உரிமையும் அவற்றின்மீது இல்லை. பிரபஞ்சத்திலுள்ள இயற்கை வளங்கள், நிலம், மூலதனம் ஆகிய அனைத்தும் முழு மனித இனத்திற்குச் சொந்தமானது. எனவே மனிதர்கள் அனைவர்கட்கும் அவற்றில் சமமான பங்கும் உரிமையும் உண்டு. இதில் அதிகப் பங்கினைக் கோருவதற்கு யாருக்கும் உரிமை இல்லை. ஏனெனில் அவனோ/அவளோ சுயமாக இயற்கை வளங்களைப் படைக்கவோ, உற்பத்தி செய்யவோ முடியாது.

## தௌஹீதின் பால் நம்பிக்கை

ஓரிறைவன் மீது நம்பிக்கை கொள்வது ஈமானின் (நம்பிக்கையின்) மிக முக்கிய அம்சமாகும். இது பற்றிக் குர்ஆனில் கூறப்பட்டிருப்பதாவது:-

அவன் அல்லாஹ் ஏகன். அல்லாஹ் (எவரிடத்தும்) எத்தேவையுமில்லாதவன். அனைவரும் அவனிடத்தில் தேவையுடையவர்களே! அவன் யாருடைய சந்ததியும் இல்லை. அவன் யாருக்கும் சந்ததி இல்லை. மேலும் அவனுக்கு நிகரானவர் எவருமே இலர் (குர்ஆன் 112)

இறைவன் அனைத்தையும் அறிந்தவன்; சர்வ வல்லமை படைத்தவன்; மிகப்பெரும் அறிவுடையோன் என்பது இதன் பொருளாகும். அவன் கருணைமிக்கவன்; அன்பானவன் மிகவும் பிரியமானவன். அவன் எப்போதும் நம்முடனே இருக்கின்றான். அவன் நம்மைப் பார்க்கிறான். ஆனால் நாம் அவனைப் பார்ப்பதில்லை. அவன் இருந்தான்; இருக்கின்றான்; எப்போதும் இருப்பான். அவனே முதலானவன்; முடிவானவன்; அவனுக்கு இணை / துணை இல்லை; மகனோ மகளோ இல்லை. அவன் யாருக்கும் பிறக்கவில்லை. அவன் நமக்கு உயிர் கொடுக்கின்றான். அவனே அதனை திரும்ப எடுத்துக் கொள்கிறான். இறப்பிற்குப் பின்னர் நாம் அனைவரும் அவனிடமே திரும்பிச் செல்ல வேண்டும்.

இந்த பூமியிலுள்ள அனைத்துப் பொருட்களும் அவனால் படைக்கப்பட்டவைகளே. ஒவ்வொரு படைப்பிற்குமுரிய தேவையை அவனே கவனித்துக் கொள்கின்றான். பரிபாலிக் கின்றான். நமக்கு வழிகாட்டும் ஒரே வழி அவன்தான்.

நம்பிக்கையை வெளிப்படுத்துவதே ஒரு முஸ்லிமின் முதல் கடமையாகும்.

"லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதர் ரசூலுல்லாஹ்" அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை; முஹம்மது அல்லாஹ்வின் தூதராவார்"

என்ற இந்தப் பிரகடனத்தை அவன் வார்த்தைகளில் வெளிப்படுத்த வேண்டும். இதயப் பூர்வமாக நம்ப வேண்டும்.

இதனை ஒரு உதாரணத்துடன் விளக்குவோம் நமக்கு ஒரு நிலம் இருக்கின்றது. அதில் களைகளும் புதர்களும் மண்டிக் கிடக்கின்றன. நாம் அந்த நிலத்தில் கோதுமை பயிரிட

வேண்டுமென்றால் முதலில் அதிலுள்ள களைகளையும், புதர்களையும் நீக்கி சுத்தம் செய்த பிறகுதானே கோதுமை விதையை விதைக்க முடியும்? அப்படிச் செய்தால் தானே கோதுமை நன்றாக வளரும்? களைகளையும், புதர்களையும் நீக்கி விட்டு நிலத்தைப் பண்படுத்திய பிறகு கோதுமையை விதைத்தால் தானே நாம் நல்ல மகசூலை எதிர்பார்க்க முடியும்?

நிலத்தை மனித இதயத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்போம். பொய்யான கடவுள்களைப் பற்றிய நம்பிக்கையால் நம் இதயம் நிறைந்திருந்தால் அதில் தௌஹீது என்ற ஓரிறைக் கொள்கை வேர்விட வாய்ப்பில்லை. ஆகவே வேறு இறைவன் அல்லது பொருட்களைப் பற்றிய நம்பிக்கையை நமது இதயத்திலிருந்து முதலில் வெளியேற்றிட வேண்டும். அதன் பின்னர்தான் ஓரிறைக் கொள்கை நமது இதயத்தில் வேர்விட்டு நம்பிக்கையின் ஒளி பிரகாசிக்கும்.

## மனித வாழ்க்கையில் தௌஹீதின் தாக்கம்

"லாயிலாஹா இல்லல்லாஹு" அல்லது தௌஹீது அல்லது அல்லாஹ்வைத் தவிர இறைவன் வேறு யாருமில்லை என்ற இந்த நம்பிக்கை நம்முடைய வாழ்வில் பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

ஓரிறைக் கொள்கையின் பால் நம்பிக்கை கொண்ட ஒருவர் (தௌஹீது) இறைவனுடைய கட்டளைக்கு முற்றிலும் சரணடைந்து அவனது உண்மையான பணியாளராகவும், அவனுக்குக் கீழ்ப்படிந்தவராகவும் ஆகிவிடுகிறார். மனித சமுதாயத்திற்குப் பயன்படும் வகையிலேயே, இறைவன், பூமியிலும் வானத்திலுமுள்ள அனைத்தையும் படைத்துள்ளான். ஒருவன் இறைவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப் படிகின்ற போது இறைவன் படைப்புகள்அனைத்தையும் தனது நன்மைக் காகவே படைத்துள்ளான் என்பதைப் புரிந்து கொள்கிறான். குர்ஆன் இதனை உறுதி செய்கின்றது.

> நீங்கள் பார்க்கவில்லையா, அல்லாஹ் பூமியிலுள்ள அனைத்தையும் உங்களுக்காக வசப்படுத்தி வைத்துள்ளான். (குர்ஆன்: 22:65)

> நீங்கள் பார்க்கவில்லையா, வானங்களிலும் பூமியிலும் உள்ளவற்றை அல்லாஹ் உங்களுக்கு வசப்படுத்தித் தந்துள்ளான். மேலும், வெளிப்படையான மற்றும் மறைவான தன்னுடைய அருட்கொடைகளை உங்களுக்கு அவன் நிறைவாக்கித் தந்துள்ளான். (குர்ஆன் 31:20)

மேற்கண்ட இரு வசனங்களும் வானத்திலும் பூமியிலு முள்ள அனைத்தையும் மனிதர்களின் வசதிக்காகவே இறைவன் படைத்துள்ளான் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. பிற பொருட்களும் படைப்பினங்களும் நமக்கு வழங்குகின்ற அருட்கொடைகளை ஓரிறைவனை நம்பி அதன்படி வாழ்வதன்

மூலமே அறிந்து கொள்ள முடியும். இதன் பொருள் நாம் முற்றிலும் இறைவனுக்குக் கீழ்படிய வேண்டும் என்பதேயாகும்.

1. இது நம்பிக்கையாளருக்கு சுயமரியாதையையும் நம்பிக்கையையும், திருப்தியையும் ஏற்படுத்துகின்றது. அவன் தன்னுடைய தேவைகளுக்கு இறைவனை மட்டுமே சார்ந்திருக்க வேண்டும். வேறு யாரையுமல்ல என்பதை அறிகின்றான். இறைவன் ஒருவன் மட்டுமே தனது தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்கிறான் என்பதையும் வேறு யாரும் அவனுக்கு நன்மையோ அல்லது தீமையோ செய்து விட முடியாது என்பதையும் உறுதியாக நம்புகிறான்.

2. எப்போது ஒரு நம்பிக்கையாளருக்கு நம்பிக்கை ஏற்பட்டு தனது சுயமரியாதையை வளர்த்துக் கொள்கிறார்? "என்னுடைய தேவைகளுக்கு இறைவனை மட்டுமே சார்ந்துள்ளேன். வேறு யாரையுமல்ல" என்று உணரும் போது மட்டுமே அவனால் அப்படி இருக்க முடியும்.

3. அவன் கவலையடைவது இல்லை. ஏனெனில் உண்மையாகவே இறைவனுக்குக் கீழ்படிந்து நடந்தால் அவன் தன்னுடைய தேவைகள் அனைத்தையும் கவனித்துக் கொள்வான் என்பதை அறிந்திருக்கிறான்.

4. இந்த நம்பிக்கை ஒரு நம்பிக்கையாளனைப் பணிவுள்ளவனாக மாற்றுகிறது. அவன் ஒரு போதும் முரட்டுத் தனமாகவோ அல்லது கர்வம் கொண்டவனாகவோ நடந்து கொள்வதில்லை. இந்தப் பூமியிலுள்ள அனைத்துப் பொருட்களும் இறைவனுக்கே சொந்தமானது என்பதையும், இறைவனின் அடிமையாக இருப்பதன் மூலமாக மட்டுமே அவனது பிற படைப்புகளின் மீது தான் கட்டுப்பாட்டினைச் செலுத்த முடியும் என்பதையும் அவன் உணர்ந்தே இருக்கின்றான்.

அவனிடம் என்னென்ன உள்ளனவோ அவையனைத்தும் இறைவனிடமிருந்து வந்தவை என்பதையும் அவன் நன்றாக உணர்ந்துள்ளான். எனவே அவன் கர்வம் கொள்ளவோ, அகந்தை கொள்ளவோ எந்த விதமான காரணமும் இல்லை.

5. ஓரிறையின் பால் (தௌஹீது) நம்பிக்கை கொள்வது, ஒரு நம்பிக்கையாளனை கடமை யுணர்வும் நேர்வழியும் கொண்டவனாக மாற்றுகிறது. இந்த உலக வாழ்க்கையிலும், மறுமை வாழ்விலும் வெற்றி பெற வேண்டு மானால் படைத்தவனின் கட்டளைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதை அவன் உணர்ந் திருக்கிறான். இந்த விழிப்புணர்வு அவனை தனது கடமைகளைப் புறக்கணிப்பதினின்றும், பாவங்கள் புரிவதினின்றும் தடுக்கின்றது.

6. ஓரிறையின் பால் நம்பிக்கை கொள்வது, ஒரு மனிதனை தைரியமிக்கவனாகவும், துணிவு கொண்டவனாகவும் மாற்றுகிறது, அவனது உள்ளத்திலிருந்து இறப்பு பற்றிய அச்சத்தையும், பாதுகாப்பு பற்றிய கவலையையும் அது நீக்குகின்றது. இறைவன் ஒருவன் மட்டுமே நிச்சயிக்கப்பட்ட நேரத்தில் தனக்கு இறப்பைக் கொடுக்க முடியும். அவன் ஒருவன் மட்டுமே தனது பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்க முடியும் என்பதையும் ஒரு நம்பிக்கையாளன் நன்கு உணர்ந்தே இருக்கிறான். ஆகையால் இறைவனுக்குக் கீழ்ப்படிந்தால் அவன் கவலைப்பட ஒன்றுமில்லை. அவன் எந்த விதமான அச்சமுமின்றி தனது கடமைகளைச் செய்து வரலாம்.

7. ஓரிறையின் பால் நம்பிக்கை கொண்டவன், (தௌஹீது) தான் இந்த முழு பிரபஞ்சத்தில் தானும் ஒரு அங்கமே என்பதை உணர்ந்து கொள்கிறான். இந்த பிரபஞ்சத்தின் பேராற்றல்

பெற்ற எஜமானனாகிய இறைவனின் படைப்புகளிலேயே சிறந்த படைப்பு மனிதன் தான். இந்த நம்பிக்கை அவனது முகடுகளை அகலப்படுத்தி அவனது கண்ணோட்டத்தை விரிவாக்குகிறது. ஓரிறையின் பால் நம்பிக்கை கொள்வது, நம்பிக்கையாளனின் உள்ளத்தில் உறுதியையும், பொறுமையையும், விடாமுயற்சியையும் ஏற்படுத்துகின்றது. நம்பிக்கையாளன் ஒரு மனப்பட்டு படைத்தவனை மகிழ்ச்சியுறச் செய்யும் வகையில் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறான்.

8."லாயிலாஹ இல்லல்லாஹ¬" என்ற நம்பிக்கையின் முக்கியத்துவம் என்னவெனில் அது ஒரு மனிதனை இறைவனின் கட்டளைகளுக்குக் கீழ்படியச் செய்கின்றது. ஓரிறையில் நம்பிக்கை கொண்டவன் இறைவன் அனைத்தையும் அறிந்தவன். அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறான். அவனது கண்காணிக்கும் கண்களிலிருந்து எப்போதும் எதுவும் தப்ப முடியாது என்பதை நிச்சயமாக அறிந்திருக்கிறான். "உண்மையில்" அவனது பிடரி நரம்பை விடவும் அதிகமாக நாம் அவனிடம் நெருக்கமாக இருக்கின்றோம்" என இறைவன் கூறுகின்றான் (குர்ஆன் 50:16)

9. ஓரிறையின் பால் நம்பிக்கை கொண்டவன், தனது நம்பிக்கையை செயல்கள் மூலம் வெளிப்படுத்தி இறைவனின் மகிழ்ச்சியை நாடுகின்றான். செயல்முறைக்கு வராத நம்பிக்கைக்கு இஸ்லாத்தில் இடமில்லை.

# 3

# ரிஸாலா (நபித்துவம்)

ஒரு வானவர் (மலக்கு) இறைவனின் செய்தியை தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மனிதரிடம் தெரியப்படுத்துகிறார். அந்த மனிதர் அச் செய்தியினை மக்களுக்குத் தெரிவித்திடும் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார். குர்ஆனின் வார்த்தையில் இறைச் செய்தியினைத் தெரிவித்திடும் மனித முகவர் நபி (தீர்க்கதரிசி) என்றும், ரசூல் (செய்தி கொண்டுவருபவர்) என்றும், முர்சல் (தூதர்) என்றும், பஷீர் (அறிவிப்பாளர்) என்றும் அழைக்கப் படுகின்றார்.

மிகுந்த இறைப்பற்றும், ஆன்மீகத்திலும் உலக வாழ்க்கையிலும் சமுதாய விஷயங்களிலும் முன்மாதிரியான நன் நடத்தை கொண்டவர்களே தீர்க்கதரிசிகள் ஆவர். அற்புதங்கள் நிகழ்த்த வேண்டிய தேவை எதுவும் அவர்களுக்கு இல்லை. (தீர்க்கதரிசிகள் அனைவரும் அற்புதங்கள் நிகழ்த்தியதாக வரலாற்றுச் செய்திகள் தெரிவிக்கின்றன, எனினும் அவர்கள் அவற்றை தாங்கள் நிகழ்த்திடவில்லை; இறைவனே நிகழ்த்திட்டான் என்று குறிப்பிடுகின்றார்கள்.) போதனைகள் மட்டுமே அவர்களின் மெய்த்தன்மைக்குச் சான்றாகத் திகழ்கின்றன.

குர்ஆனின் கூற்றுப்படி சில நபிமார்களுக்கு மட்டும் வேதங்கள் இறக்கியருளப்பட்டன. மற்றவர்கட்கு வேதங்கள் எதுவும் அருளப்படாமல் முந்திய நபிமார்களுக்கு அருளப்பட்ட வேதங்களையே பின்பற்றுமாறு அறிவுறுத்தப் பட்டனர். ஓரிறைக் கோட்பாடு, நற்செயல்கள் புரிதல், தீய செயல்களைத் தவிர்த்தல் ஆகிய அடிப்படையான விஷயங்

களில் நபிமார்கள் கொண்டு வந்த இறைச் செய்தி களிடையே எந்த விதமான வித்தியாசமுமில்லை. சில நபிமார்களுக்கு ஒரு தனி வீட்டின் உறுப்பினர்களை (குலம், இனம்) அல்லது தனி இனத்தினை அல்லது ஒரு தனி நாட்டினைச் சீர்திருத்துகின்ற தெய்வீகப் பணி வழங்கப் பட்டது. வேறு சில நபிமார்களுக்கு அனைத்துக் காலங்களிலும் வாழ்ந்து வரக்கூடிய முழு மனித சமுதாயத்தையும் சீர்திருத்துகின்ற ஆன்மீகப் பணி வழங்கப்பட்டது.

நபித்துவம் (ரிஸாலா) என்பது இறைவனுக்கும் மனிதனுக்கு மிடையேயுள்ள ஒரு செய்தித் தொடர்பு வழியாகும். சரியான வழியில் நடந்து இந்த உலக வாழ்க்கை அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் அமைந்திட மிகக் கருணையாளனான அல்லாஹ் தனது வழி காட்டுதலை அளித்துள்ளான். அவனது வழிகாட்டுதலைப் பின்பற்றி யோருக்கு இறப்பிற்குப் பின்னர் வரும் மறு வாழ்க்கையில் பெரும் அருட்கொடைகள் கிடைக்கும்.

படைப்பு தொடங்கியதிலிருந்தே, தேர்ந்தெடுக்கப்பட்ட தனது தூதர்கள் மூலமாக அல்லாஹ் தனது வழிகாட்டுதலை அனுப்பியருளியிருக்கின்றான். அத்தூதர்கள் தாங்கள் வாழ்ந்த காலத்தில் இருந்த மக்களை அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே கீழ்ப்படியுமாறும் அவனை மட்டுமே வணங்குமாறும் கேட்டுக் கொண்டனர். அல்லாஹ்வின் பாதையைப் பின்பற்றுமாறு மக்களுக்கு உபதேசம் புரிந்ததோடு அவர்கட்கு வழிகாட்டிப் பயிற்சியும் அளித்தனர்.

நபிமார்கள் மனிதர்களே. இறைவனின் மகன்கள் என்று ஒரு போதும் அவர்களை அழைக்கக் கூடாது. இறைவன் ஒருவன். அவனுக்குப் பங்காளியோ, மகனோ, மகளோ இல்லை. இறைவனுக்கு மகன் அல்லது மகள் அல்லது பங்காளி உண்டு என்று கூறுவது பெரும் பாவமாகும்.

"ஒரே ஒரு இறைவனை மட்டுமே வணங்குங்கள், அனைத்துப் பொய்க் கடவுள்களையும் நிராகரியுங்கள்". என்பதே நபிமார்கள் அனைவரும் வழங்கிய ஒரே செய்தியாகும். திண்ணமாக, நாம் நூஹை அவருடைய சமூகத்தாரிடம் அனுப்பினோம். அவர் கூறினார். "என்னுடைய சமுதாயத்தவரே! அல்லாஹ்வுக்கு அடி பணியுங்கள். அவனைத்

தவிர வேறு இறைவன் உங்களுக்கில்லை. மகத்தானதொரு நாளில் வேதனை உங்கள் மீது வந்துவிடுமோ என்று நான் அஞ்சுகின்றேன்". (குர்ஆன் 7:59) வேறு வார்த்தைகளில் கூற வேண்டுமானால் அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்பதே அனைத்து நபிமார்களும் போதித்த செய்தியாகும்.

எல்லாம் வல்ல அல்லாஹ்விடமிருந்து ஏன் நாம் வழிகாட்டுதல்களைப் பெற வேண்டும் என்று நீங்கள் கேட்கலாம். இதற்கான பதில் எளிதானது. மனிதர்களாகிய நாம் பலவீனமானவர்களாகவும், மென்மையானவர்களாகவும் இருக்கின்றோம். எதிர் காலத்தைப் பற்றிய அறிவு நமக்கில்லை. நமக்கிருக்கின்ற அறிவும் வரையறைக்குட்பட்ட ஒன்று தான். மேலும் நாம் முழுமை பெற்றவர்களாக இல்லை. இத்தகைய பலவீனங்களுடன் அனைத்துக் காலங்களிலும் அனைத்துச் சூழ்நிலைகளிலும் நமக்கு நாமே வழிகாட்டிக் கொள்ள முடியாதவர்களாக நாம் இருக்கின்றோம். இதன் காரணமாக அல்லாஹ் தன்னுடைய தூதர்கள் மூலமாக நமக்கு வழிகாட்டியுள்ளான்.

## இறைவனின் நபிமார்கள்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் ஒரு ஹதீஸின் படி நபிமார்களின் எண்ணிக்கை 1லட்சத்து 24ஆயிரம் ஆகும். முஸ்லிம்களாகிய நாம் இறைவனின் தூதர்கள், நபிமார்கள் அனைவரின் மீதும் நம்பிக்கை வைக்க வேண்டும். (குர்ஆன் 2:285). மனித சமுதாயத்திற்கு அல்லாஹ்வின் வழிகாட்டுதல் நபி ஆதம் (அலை) அவர்களிடமிருந்து தொடங்கி முஹம்மது நபி(ஸல்) அவர்களுடன் முடிவுற்றது.

குர்ஆனில் முக்கியமான 25 நபிமார்களின் பெயர்களே குறிப்பிடப்பட்டுள்ளன. அவர்கள் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1. | ஆதம் | (ஆதம்) |
| 2. | இத்ரீஸ் | (ஈனோக்) |
| 3. | நூஹ் | (நோவா) |

| | | |
|---|---|---|
| 4. | ஹூத் | |
| 5. | சாலிஹ் | |
| 6. | இப்ராஹிம் | (ஆப்ரஹாம்) |
| 7. | இஸ்மாயில் | (இஸ்மேல்) |
| 8. | இஸ்ஹாக் | (ஐசக்) |
| 9. | லூத் | (லோத்) |
| 10. | யாகூப் | (ஜாக்கப்) |
| 11. | யூஸுப் | (ஜோசப்) |
| 12. | சுஐப் | |
| 13. | அய்யூப் | (ஜாப்) |
| 14. | மூஸா | (மோஸஸ்) |
| 15. | ஹாரூன் | (ஆரூன்) |
| 16. | துல்கிஃப்ல் | (இசேகில்) |
| 17. | தாவூது | (டேவிட்) |
| 18. | சுலைமான் | (சாலமன்) |
| 19. | இல்யாஸ் | (எலியாஸ்) |
| 20. | அல்யாசா | (எலிஷா) |
| 21. | யூனுஸ் | (ஜோனாஹ்) |
| 22. | ஜக்கரிய்யா | (ஜக்கரியா) |
| 23. | யஹ்யா | (ஜான்) |
| 24. | ஈஸா | (ஜீசஸ்) |
| 25. | முஹம்மது | |

# 4
# வானவர்கள்
## (மலக்குமார்கள்)

*வானவர்கள் என்பவர்கள் யார்?*
*அவர்கள் என்ன செய்கின்றார்கள் ?*
*நாம் அவர்களைப் பார்க்க முடியுமா?*
*மனிதர்களிடமிருந்து அவர்கள் எங்ஙனம்*
*மாறு பட்டவர்கள்?*

வானவர்கள் அல்லாஹ்வின் சிறப்புப் படைப்பாளர்கள். சில குறிப்பிட்ட பணிகளை ஆற்றுவதற்காக அவர்கள் தெய்வீக ஒளியிலிருந்து படைக்கப்பட்டவர்கள். முதல் மனிதரான ஆதம் நபி(அலை) மண்ணிலிருந்து படைக்கப்பட்டார். வானவர்கள் ஆன்மீகத்தன்மை கொண்ட அற்புதப் படைப்பினமாகும். அவர்கட்கு உணவோ, பானமோ தேவையில்லை. அவர்கள் தூங்குவதுமில்லை. அவர்கட்கு உடல் ரீதியான எந்த ஆசைகளும் இல்லை. அவர்கட்கு எந்தப்பொருளும் தேவையில்லை. அல்லாஹ்வுக்கு பணிவிடைசெய்வதிலேயே தங்களது முழுநேரத்தையும் அவர்கள் செலவு செய்கின்றனர். பல மலக்குகள் உள்ளனர். ஒவ்வொருவருக்கும் சில குறிப்பிட்ட பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அல்லாஹ்வைப் புகழ்வதும் மேன்மைப்படுத்துவமே அவர்களின் கடமையாகும். அவர்கள் ஒருபோதும் சோர்வடை வதில்லை. எப்போதும் இறைவனுக்குக் கீழ்ப்படிய அவர்கள் தயாராக இருக்கின்றனர். வெறுங்கண்களால் அவர்களை

நம்மால் பார்க்க முடியாது என்பதாலேயே அவர்கள் இருப்பதை நாம் மறுத்திடக் கூடாது. நமது கண்களுக்குத் தெரியாத நமது உணர்வுகளுக்குப் புலப்படாத பல பொருட்கள் உலகத்தில் உள்ளன. எனினும் அவை இருப்பதை நாம் நம்புகின்றோம். காற்று, ஒலி போன்றவற்றை நாம் ஒருபோதும் நமது கண்களால் பார்த்ததில்லை. முகர்ந்த தில்லை தொட்டதில்லை. ருசி பார்த்ததில்லை. கேட்டது மில்லை எனினும் அவை இருப்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

தங்களது பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான பண்புகளும், ஆற்றலும் வானவர்கட்குக் கொடுக்கப் பட்டுள்ளன. அவர்கள் எப்போதும் அல்லாஹ்வுக்கு கீழ்ப்படி கின்றார்கள். ஒரு போதும் கீழ்ப்படிய மறுப்பதில்லை. அதே நேரத்தில் மனிதனுக்கு நற்செயல்களையும், தீய செயல் களையும் பகுத்தறிந்து தேர்ந்தெடுக்கின்ற சுதந்திரமும் வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளன. இதன் காரணமாகவே இறுதித் தீர்ப்பு நாளின் போது மனிதன் தனது செயல்களுக்குக் கணக்குக் காட்டிட வேண்டிய நிலையிலிருக்கிறான்.

அல்லாஹ் என்ன செய்ய வேண்டுமென்று கட்டளை யிடுகின்றானோ அதனையே வானவர்கள் செய்கின்றனர். அவர்கள் இறைவனின் விருப்பத்திற்கேற்ப செயல்படும் பாவமற்ற பணியாளர்கள். மனிதர்கள் தங்கள் விருப்பப்படி செய்ய அவர்கள் துணை புரிகிறார்கள். என்ன செய்ய வேண்டு மென்பதை மனிதன் முடிவு செய்கிறான். அந்த முடிவினைச் செயல்படுத்திட அவனுக்கு வானவர்கள் உதவுகின்றனர்.

மனித உருவில் வந்தாலொழிய வானவர்களை நாம் பார்க்க இயலாது. வானவர் ஜிப்ரில் ஒரு முறை மனித உருவில் நபி(ஸல்) அவர்களின் தோழர்கள் முன்பு தோன்றினார். ஜிப்ரில் அவர்களுக்குப் போதனை செய்திட வந்தார். ஆனால் வந்தவர் ஜிப்ரில் தான் என்பது நபிகளாருக்கு மட்டுமே தெரியும். தங்களது கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தகுந்த உருவத்தினை வானவர்களால் எடுக்க முடியும்.

அல்லாஹ்வின் சன்னிதானத்தில் ஏராளமான வானவர்கள் இருக்கின்றார்கள். முக்கியமானவர்களில் சிலர்:- ஜிப்ரீல் அல்லது ஜிப்ரில்(கபேரியல்) மிகைல் அல்லது மிகல்

(மைக்கேல்) இஸ்ராயில் (மலக்குல் மௌத் - அஸ்ரைல்) இஸ்ராஃபில்

வானவர் ஜிப்ரீல் தான் இறைவனின் வெளிப்பாடுகளை (செய்திகளை) நபிகள் நாயகம்(ஸல்) அவர்கட்கும், பிற அனைத்து இறை தூதர்கட்கும் கொண்டு வந்தார்.

இஸ்ராயில் இறப்பின் வானவர் என அழைக்கப்படுகிறார். (மலக்குல் மௌத்) நமது இறப்பிற்கு இவரே பொறுப்பானவர்.

இஸ்ராஃபில், உலகம் முடிவுக்கு வருகின்ற நேரத்திலும் இறுதித் தீர்ப்பு நாளின் போதும் கொம்பு ஊதுகின்றார்.

சில வானவர்கள் நமது செயல்கள் அனைத்தையும் பதிவு செய்கின்ற பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் மதிப்புறு பதிவாளர்கள் (கிரமன் கத்திபின்) என அழைக்கப்படுகின்றனர். நாம் கூறுகின்ற எந்த ஒரு வார்த்தையும் பதிவு செய்யப்படாமல் இருப்பதில்லை (குர்ஆன் வசனங்கள் 50:18 ஐப் பார்க்கவும்)

அல்லாஹ் தனது அரசாங்கத்தை மிகச் சிறந்த முறையில் நிர்வகிக்கின்றான். வானவர்கள் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் பணியாளர்கள். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு எப்பேதும் கீழ்ப்படிந்து வாழ்ந்தவர்களை வானவர்கள் சொர்க்கத்தில் வரவேற்பார்கள். தவறிழைத்தவர்களை நரகத்தில் எறிவார்கள். (குர்ஆன் வசனங்கள் 39:71-74ஐப் பார்க்கவும்)

# 5

# இறப்புக்குப்பின் மறுமை

## மறுமையும் இறுதித் தீர்ப்பும்

மறுமை வாழ்க்கையில் நம்பிக்கை கொள்வது இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்களில் ஒன்றாகும். குர்ஆனில் முதல் அத்தியாயத்தில், "அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ் கூறுகின்றான்" நானே இறுதித் தீர்ப்பு நாளின் அதிபதி" (குர்ஆன் 1:3) அடுத்த அத்தியாயத்தின் மூன்றாவது வசனத்தில் நம்பிக்கையாளர்கள் எத்தகையவர்களெனில் அவர்கள் மறைவானவற்றை நம்புகிறார்கள். (குர்ஆன் 2:3) என்று கூறுகின்றான்.

"மறைவான" என்ற இந்தக் கருத்துருவாக்கம், இறப்பிற்குப் பின்னர் எழுப்பப்படுதல், உயிர்த்தெழும் நாள், சொர்க்கம், நரகம் மற்றும் மறுமையுடன் தொடர்புடைய அனைத்து விஷயங்களையும் உள்ளடக்கியதாகும். உண்மையில் குர்ஆனின் அல் பகறா அத்தியாயத்தின் நான்காவது வசனத்தில் "இறுதித் தீர்ப்பு நாளின் மீதும் உறுதியாக நம்பிக்கை கொள்கிறார்கள்" என்று கூறப் பட்டுள்ளது. இதன் மூலம் மறுமையின் முக்கியத்துவம்

மீண்டும் ஒருமுறை வலியுறுத்தப்பட்டுள்ளது. இறுதித்தீர்ப்பு நாளில் நடக்கவிருக்கின்ற நிகழ்வுகள் பற்றி தெளிவாக அச்ச மூட்டி எச்சரிக்கும் மொழியில் குர்ஆனின் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. தக்கதருணம் என்று இறைவன் கருதுகின்ற நேரத்தில் (அவனுக்கு மட்டுமே இது தெரியும்) இந்த உலகம் ஒரு முடிவிற்கு வந்துவிடும். அது கற்பனைக்கு எட்டாத ஒரு பயங்கரமான நிகழ்வாக இருக்கும். இறுதித் தீர்ப்பு நாளின் போது இறந்தவர்கள் புதை குழிகளிலிருந்து எழுப்பப்பட்டு அவர்கட்கு உயிர் கொடுக்கப்படும். பூமியில் உயிரோடு இருப்பவர்களும் அந்த நேரத்தில் மரணிக்கச் செய்யப்பட்டு அவர்களும் இந்த மாபெரும் மனிதக் கூட்டத்தில் சேர்ந்து கொள்வார்கள். மனிதர்கள் அனைவரின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் அல்லாஹ்வின் முன்நிற்கும். ஒவ்வொருவரும் உலகிற்கு எப்படி வந்தார்களோ அப்படியே முற்றிலும் தனித்தனியே உதவியற்றவர்களாக நின்று கொண்டு, தங்களின் கணக்கைச் சமர்ப்பிப்பார்கள். கணக்கெடுக்கும் இந்த நாளில் இறைவன் பால் ஒருவன் கொண்டிருந்த நம்பிக்கை, அவன் புரிந்திட்ட நற்செயல்கள், சக மனிதர்களுடனும் பிற உயிர்களுடனும் அவன் கொண்டிருந்த நியாயமான செயற் பாடுகள் ஆகியனவே அவனுக்குத் துணை நிற்கும்.

இறைவனின் பால் நம்பிக்கை கொண்டவர்கள், அவனுக்குக் கீழ்படிந்து அவனது மகிழ்ச்சிக்காக வாழ்ந்தவர்கள், சரணாகதி நிலையில் அவனுக்காகத் தங்களது வாழ்க்கையை ஒப்படைத்துவிட்டவர்கள் ஆகியோருக்கு கற்பனை செய்ய முடியாத அளவிற்கு திருப்தியும், மகிழ்ச்சியும் கொண்ட வாழ்க்கை காத்திருக்கும்.

இறைவனை மறுத்தவர்கள், அவனது வழிகாட்டுதலை நிராகரித்தவர்கள் அவனைத் தவிர வேறு கடவுள்களை வணங்கியவர்கள், தீய செயல்களைச் செய்தவர்கள் ஆகியோர் அச்சம் நிறைந்த ஒரு பயங்கரமான இடத்திற்கு அனுப்பப் படுவார்கள். அங்கு இவர்களைப் போல் இறைவனிடமிருந்து தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டவர்கள் இவர்களின் தோழர்களாக இருப்பார்கள். அவர்கள் பொறுக்க இயலாத கடும் வேதனையிலும், துன்பத்திலும் உழல்வார்கள். மீண்டும் இந்த உலகத்திற்குத் திரும்பி வந்து தற்போது பெற்றுள்ள அறிவு ஞானத்தின் அடிப்படையில் வித்தியாசமான முறையில்

வாழ்கின்ற இன்னொரு வாய்ப்புத் தருமாறு அவர்கள் இறைவனை வேண்டுவார்கள். ஆனால் அந்த வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்காது. ஏனெனில் அது ஒரு மிக தாமதமான ஒரு கோரிக்கையாகும்.

சொர்க்கம் வெகுமதியாகவும், நரகம் தண்டனையாகவும் இருக்கின்றது. ஆனால் விளக்க உரைகள் நமக்கு உணர்த்துவது என்னவெனில் இவ்வுலகில் உள்ள விஷயங்கள் அனைத்தும் நமது கருத்துக்கள் அனைத்திற்கும் அப்பாற்பட்டதாகவே உள்ளது என்பதேயாகும்.

> தாங்கள் புரிந்திட்ட நற்செயல்களுக்கு வெகுமதியாக என்ன மறைத்து வைக்கப்பட்டுள்ளது என்பது எந்த ஆன்மாவும் அறிந்து கொள்ள வில்லை. எந்தக் கண்ணும் இதுவரை பார்த்திராத எந்தக் காதும் இதுவரை கேட்டிராத, எந்த உள்ளமும் இதுவரை சிந்தித்திராத பொருட்கள் சொர்க்கத்தில் காணக்கிடக்கின்றன. (ஹதீஸ்)

மறுமை வாழ்க்கை (மறுமை-சொர்க்கம் பற்றிய கொள்கை அல்லது உலக வரலாற்றின் அல்லது மனித சமுதாயத்தின் இறுதி நிகழ்ச்சிகள் பற்றிய சமய சாஸ்திரக் கொள்கை) பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டத்தைக் கீழ்க்கண்டபடி வரிசைப்படுத்தலாம். இறுதிநாள், உயிர்த்தெழச் செய்தல், இறுதித் தீர்ப்பு நாள், நீடித்த மகிழ்ச்சி அல்லது தண்டனை. கீழ்க்கண்ட இறை வசனங்கள் அந்த நிகழ்வுகள் பற்றி விளக்குகின்றன.

> வானம் வெடித்து விடும்போது; மேலும் தாரகைகள் உதிர்ந்து விடும்போது; மேலும் கடல்கள் பிளக்கப்டும் போது; மேலும் அடக்கஸ்தலங்கள் திறந்து விடப்படும்போது; ஒவ்வொரு மனிதனும் தான் முன்பும், பின்பும் செய்த செயல்கள் அனைத்தையும் அப்போது நன்கு அறிந்து கொள்வான். மனிதனே அருட்கொடையாளனாகிய உன் இறைவனைக் குறித்து உன்னை ஏமாற்றத்தில் வீழ்த்தியது எது? (குர்ஆன் 82:1-7)
>
> சூரியன் சுருட்டப்பட்டு விடும் போது; மேலும்

*தாரகைகள் உதிர்ந்து விடும்போது; மேலும் மலைகள் நடத்திச் செல்லப்படும்போது; மேலும் பத்துமாத நிறை கர்ப்ப ஒட்டகங்கள் அப்படியே விட்டுவிடப்படும் போது; மேலும் வன விலங்குகள் ஒன்று திரட்டப்படும்போது; மேலும் கடல்கள் கொளுத்தப்படும்போது; மேலும் உயிர்கள் ஒன்றிணைக் கப்படும்போது (குர்ஆன் 81:1-7)*

*இறுதியில் காதைச் செவிடாக்கும் அந்தப் பேரோசை முழங்கும்போது; அந்த நாளில் மனிதன் விரண்டோடுவான். தன் சகோதரனை விட்டும், தாயையும், தந்தையையும் விட்டும், தன்னுடைய மனைவியையும், குழந்தைகளையும் விட்டும்; அந்நாளில் அவர்களில் ஒவ்வொரு வருக்கும் தன்னைத் தவிர வேறொவரைப் பற்றியும் கவனம் செலுத்த முடியாத நிலை வந்தேதீரும் (குர்ஆன் 80:33-37)*

*எக்காளம் ஊதப்படும் நாளில் நீங்கள் கூட்டம் கூட்டமாகக்(கிளம்பி) வருவீர்கள் (குர்ஆன் 78:18)*

*பிறகு நட்சத்திரங்கள் ஒளியிழந்து போகும் பொழுது; வானம் பிளக்கப்படும் பொழுது; மலைகள் தூள் தூளாக்கப் படும்பொழுது (குர்ஆன் 77:8-10)*

*நீங்கள் அனைவரும் அவனிடமே திரும்பிச் செல்ல வேண்டியதுள்ளது. இதுவே அல்லாஹ்வின் உறுதியான வாக்குறுதியாகும். நிச்சயமாகப் படைப்புகளை முதன் முறையாக அவனே படைக்கின்றான். பின்னர் மறுமுறையும் அவனே அவற்றைப் படைக்கின்றான். ஏனெனில் இறை நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிவோருக்கு நீதியுடன் கூலி வழங்க வேண்டும் என்பதற்காக; மேலும் எவர்கள் இறை நிராகரிப்புப் போக்கை மேற்கொண்டார்களோ அவர்கள் (சத்தியத்தை) நிராகரித்துக் கொண்டிருந்த காரணத்தால் கொதிக்கும் நீரைக்குடிப்பார்கள். துன்புறுத்தும்*

*தண்டனையை அனுபவிப்பார்கள். (குர்ஆன் 10:4)*

*வானங்களையும், பூமியையும் எவன் படைத்தானோ அவன் அவர்களைப் போன்றவர்களைப் படைப்பதற்கு ஆற்றல் பெற்றவனல்லவா? ஏன் இல்லை. நன்கு அறிந்த மாபெரும் படைப்பாளன் அவனே(குர்ஆன் 36:81)*

*இது தீர்ப்பளிக்கும் நாளாகும். நான் உங்களையும், உங்களுக்கு முன் சென்றவர்களையும் ஒன்று திரட்டியுள்ளோம் (குர்ஆன் 77:38)*

"மேலும் வினைச் சுவடிகள் விரிக்கப்படும்போது" (குர்ஆன் 81:10) "மேலும் உயிருடன் புதைக்கப்பட்ட சிறுமியிடம் எக்குற்றத்திற்காகக் கொல்லப்பட்டாள் என்று கேட்கப்படும் போது" (குர்ஆன் 81:8-9) அந்த நேரத்தில் ஒவ்வொரு மனிதனும் எதனைக் கொண்டுவந்துள்ளான் என்பதை அறிந்து கொள்வான் (குர்ஆன் 81:14) பிறகு எவன் அணுவளவு நன்மை செய்திருந்தானோ அவன் அதனைக்கண்டு கொள்வான். மேலும் எவன் அணுவளவு தீமை புரிந்திருந்தானோ அவனும் அதனைக் கண்டு கொள்வான் (குர்ஆன் 99:7-8)

*இன்று எவர்மீதும் இம்மியளவும் அநீதி இழைக்கப்படமாட்டாது. நீங்கள் எத்தகைய செயல்கள் புரிந்து கொண்டு இருந்தீர்களோ, அதற்குத் தகுந்தாற்போல் கூலி கிடைக்கும் (குர்ஆன் 36:54)*

# நம்புவதும், நம்பாமலிருப்பதும்

எல்லாம் வல்ல அல்லாஹ் குர்ஆனில் கூறுகின்றான்:-

> மேலும், வானங்கள் மற்றும் பூமியின் மறைவான உண்மைகளைப்பற்றிய அறிவு அல்லாஹ்விடமே இருக்கின்றது. மேலும் இறுதி நாள் நிகழ்வதற்கு அதிக நேரம் தேவையில்லை. கண் சிமிட்டும் நேரம். ஏன் அதை விடவும் குறைந்த நேரம் போதுமானதாகும். உண்மையாதெனில் அல்லாஹ் அனைத்தையும் செய்வதற்குப் பேராற்றல் கொண்டவனாக இருக்கின்றான்(குர்ஆன் 16:77)

உலகிலுள்ள அனைத்து சமயங்களும், நவீன விஞ்ஞானமும் இந்த உலகம் முடிவுக்கு வந்து விடும் என்று நம்புகிறார்கள். ஆனால் எப்படி என்ற கேள்வி எழுகின்றது. நட்சத்திரங்கள் நிறைந்து காணப்படும் இந்தப் பரந்த வானத்தைப் பார்க்கின்ற போது "முடிவில் இவற்றிற் கெல்லாம் என்ன நிகழும்" என்ற கேள்வி நம்முன் எழுகின்றது. நாமும் கூட நம்முடைய வாழ்க்கையைப் பற்றிக் கவலை கொண்டவர்களாவே இருக்கின்றோம். நம்பிக்கையாளர்களும், நாத்தீகர்களும் இதே சிந்தனையுடனேயே இருக்கின்றனர். இறப்பு தான் நமது வாழ்க்கையின் இறுதிப்பகுதியா? அதற்கும் அப்பால் ஏதேனும் உண்டா?

இறப்பிற்குப் பின்னர் உள்ள வாழ்வு பற்றிக் கவலைப் படாதவர்களும் இருக்கின்றனர். சிலர் அதனை நம்புவதே இல்லை.

நம்பிக்கையற்றவர்கள், இறப்பிற்குப் பின்னர் உள்ள வாழ்க்கை குறித்து சந்தேகம் எழுப்புகிறார்கள். எப்படி இறைவன் ஆண்களையும், பெண்களையும் இறந்த பின்பு

எழுப்புவான் என்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால், இறைவன் மனிதர்களை "ஒன்றுமில்லாத சூன்யத்"திலிருந்து படைக்க முடியும். எனவே இறப்பிற்குப்பிறகு அவர்களை எழுப்புவது அவனுக்குக் கடினமானதல்ல. (குர்ஆன் வசனங்கள் 22:57, 36:77–79 ஆகியவற்றைப் பார்க்கவும்)

அல்லாஹ் மேலும் குறிப்பிடுகின்றான்...

> "அவனுடைய எலும்புகளை நம்மால் ஒன்று திரட்ட முடியாது என்று அவன் கருதிக் கொண்டிருக்கிறானா? ஏன் முடியாது? நாமோ அவனது விரல்களின் நுனியைக் கூட மிகத் துல்லியமாக அமைப்பதற்கு ஆற்றல் பெற்றுள்ளோம்" (குர்ஆன், 75:3–4)

இன்னும் பலர், இறப்பிற்குப் பின்னர் உள்ள வாழ்க்கை பற்றியும், மீண்டும் உயிர்ப்பித்தல் பற்றியும் நம்ப மறுக்கின்றனர். அவர்களைப் பொறுத்த அளவில் இவ்வுலக வாழ்க்கைக்குப்பிறகு ஒன்றுமில்லை என்பதேயாகும். இத்தயைக நம்பிக்கை கொண்டோர் பொது அறிவு மற்றும் விஞ்ஞானத்தின் அடிப்படையில் தங்களது கருத்தை நியாயப் படுத்துகின்றனர். இந்த விஷயத்தில் அவர்கள் தங்களை முற்போக்கானவர்கள் என்றும், எதிர்க்கருத்துக் கொண்டவர்களை பழமைவாதிகள் என்றும் கருதுகின்றனர். நம்பிக்கையின்மையைப் போலவே நம்பிக்கையும் மிகப் பழமையானது என்பதை அவர்கள் ஒருபோதும் உணர்வதில்லை. குர்ஆனை இறக்கியருளப்பட்ட போதும் கூட மக்காவிலுள்ள குறைஷியர்கள் மறுமை வாழ்வை நம்ப மறுத்தனர். இன்றைய முற்போக்கு எண்ணம் கொண்டோரின் கருத்துக்களிலிருந்து குறைஷியர்களின் கருத்துக்கள் மாறுபட்டிருக்கவில்லை.

குர்ஆனில் எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகின்றான்...

> மேலும் அவருடைய சமூகத்தில் எந்தத் தலைவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தார்களோ; இன்னும் இறுதி நாளின் சந்திப்பைப் பொய் யென்று வாதாடினார்களோ... நம்முடைய இந்த உலக வாழ்க்கையைத் தவிர வேறு ஒரு வாழ்க்கை

இல்லை. நாம் இறக்கப் போவதும் உயிர் வாழ்வதும் இங்கு தான் ..... நாம் ஒரு போதும் எழுப்பப்படமாட்டோம். (குர்ஆன் 23:33-37)

சுரண்டும் வர்க்கங்கள் கொண்ட இந்த சமூக அமைப்பில் மறுமை பற்றி நம்பிக்கை கொள்ளாமலிருப்பது கூட ஒரு நாகரீகச் செயலாகக் கருதப்படுவதாகக் குர்ஆன் கூறுகின்றது. அவர்கள் இறைவன் பால் அச்சம் கொள்வதில்லை. பிறர் நேரான வழியில் செல்வதையும் அவர்கள் விரும்புவதில்லை. எந்த விதமான ஆதாரமுமின்றி அவர்கள் தங்களது அறியாமையை வலியுறுத்திக் கூறி மற்றவர்களும் தங்களது இருட்டு வழியைப் பின்பற்ற வேண்டுமென விரும்புகிறார்கள்.

மறுமை வாழ்க்கை தவிர்க்க முடியாத ஒன்று என குர்ஆன் மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறது. உண்மையில் ஓரிறைக் கொள்கை மறுமை வாழ்க்கையின் பால் நம்பிக்கை கொள்வதையும் உள்ளடக்கியதுதான். கணக்குக் கேட்கும் அதிகாரம் இல்லாவிட்டால் இறைவன் ஒரு காட்சிப் பொருளாக ஆகிவிடுவான். அந்த இறைவன் ஒரு மாறுபட்ட இறைவனாக இருப்பான். மனிதனைப் படைத்துவிட்டு அவனது விதியைப்பற்றிக் கவலைப்படாதவனாக இருப்பான். இந்தப் பூமியில் வாழுகின்ற மனிதர்களின் இருப்பையே அத்தகைய நிலை தகர்த்து விடும்.

இந்த உலக வாழ்க்கை, மறுமை வாழ்வுக்கான ஒரு பரிசோதனைக்களமே என குர்ஆன் நமக்குப் போதிக்கின்றது. ஒரு நாள் வரும், அந்த நாளில் இந்த முழு பிரபஞ்சமும் அழிக்கப்படும். அவன் நாடினால் புதிய படைப்பைக் கொண்டுவருவான். இறந்தவர்கள் எழுப்பப்பட்டு இறைவனின் முன்பு நியாயத் தீர்ப்புக்காக நிறுத்தப் படுவார்கள். (குர்ஆன் வசனங்கள் 14:19-20 ஐப் பார்க்கவும்)

மீண்டும் உயிர்ப்பிக்கப்படும் நாள் ஒரு புதிய வாழ்வின் துவக்கமாக இருக்கும். அந்த வாழ்வு நீடித்திருக்கும். ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் புரிந்திட்ட நற் செயல்களுக்காகவும், தீய செயல்களுக்காகவும் தக்க அளவில் இறைவன் ஈடு செய்திடுவான். இறுதித் தீர்ப்பு நாள் ஒன்று வரும், அந்நாளில் ஏழையாயினும் சரி, பணக்காரனாயினும் சரி வல்லவன் ஆயினும் சரி பலவீனமானவன் ஆயினும் சரி, நல்ல

வனாயினும் சரி, கெட்டவனாயினும் சரி அனைருக்கும் நியாயம் வழங்கப்படும். அது உயிர்த்தெழும் நாளாக இருக்கும்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் "இறுதித் தீர்ப்பு நாளின் போது ரத்தம் சிந்துதல் (மனிதர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல்) பற்றி முதலில் முடிவு செய்யப்படும் என்று கூறினார்கள்.

இந்த மிகப்பெரிய நீதி விசாரணையின் போது தகுந்த நடை முறைகள் பின்பற்றப்படும். நியாயமான விசாரணைக்கான அனைத்து வழிமுறைகளும் பின்பற்றப்படும். ஆவணங்கள் தாக்கல் செய்யப்படும். சாட்சிகள் அழைக்கப்படுவார்கள்.

நம்முடைய கண்களும், காதுகளும், தோலும் கூட சாட்சியமளிக்கும்.

> அந்த நேரத்தை நினைவு கூருங்கள், அப்போது அல்லாஹ்வின் இந்தப் பகைவர்கள் நரகின் பக்கம் கொண்டு செல்வதற்காக ஒன்று திரட்டப்படுவார்கள். அவர்களின் முன்னோர்கள் பின்னோர்கள் வரும் வரை நிறுத்தி வைக்கப்படுவார்கள். இறுதியில் அனைவரும் அங்கு சென்றடையும் போது அவர்களின் காதுகளும், அவர்களின் கண்களும் அவர்களுடைய உடம்பின் தோல்களும் உலகில் அவை என்னென்ன செய்து கொண்டிருந்தன என்று அவர்களுக்கு எதிராகச் சாட்சி கூறும். அவர்கள் தங்களது தோல்களைப் பார்த்துக் கேட்பார்கள் "எங்களுக்கு எதிராக ஏன் சாட்சி சொன்னீர்கள்?" அதற்கு அவை பதிலளிக்கும் "ஒவ்வொன்றையும் பேச வைத்த இறைவனாகிய அல்லாஹ் தான் எங்களையும் பேச வைத்தான். அவனே உங்களை முதன் முறையாகப் படைத்தான். மேலும், இப்போது அவனிடமே நீங்கள் திரும்பக் கொண்டு செல்லப்படுகின்றீர்கள் (குர்ஆன் 41:19-22)

பாவம் செய்தவர்கள், இறைவனைப் புறக்கணித்தவர்கள். ஒழுங்கீனமான செயல்களில் ஈடுபட்டவர்கள், தங்களை

மீண்டும் உலகத்திற்கே அனுப்புமாறும், அப்படிச் செய்தால் தாங்கள் நற்செயல்கள் புரிவோமென்றும், பல தெய்வ வழிபாட்டையும், நம்பிக்கையின்மையையும் விட்டுவிடு வோமென்றும் வல்ல இறைவனிடம் முறையிடுவார்கள். ஆனால் அவர்களுடைய கோரிக்கைகள் உடனடியாக நிராகரிக்கப்படும். மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது என்று அவர்களுக்குக் கூறப்படும். அவர்கள் நீடித்த இழிவு தரும் இடத்திற்குச் செல்ல பணிக்கப்படுவார்கள். வானவர்கள் அவர்களை நரகத்திற்கு இழுத்துச் செல்வார்கள். நற்செயல் புரிந்தவர்களுக்கு வெகுமதிகள் வழங்கப்பட்டு சொர்க்கத்திற்கு அழைத்துச்செல்லப்படுவார்கள்.

அமைதியான வாழ்க்கையை மிகப்பெரும்பான்மையான மக்கள் விரும்புகிறார்கள். ஒரு சில விஷமிகளே மற்றவர்களின் வாழ்க்கையைச் சிரமத்திற்குள்ளாக்குகிறார்கள். தாங்கள் புரிந்திட்ட குற்றங்களுக்காக அவர்கள் தண்டிக்கப்பட வேண்டாமா? உலக நீதிமன்றங்கள் அளிக்கும் தண்டனையிலிருந்து அவர்கள் தப்பிவிட்டால் என்ன? ஆனால் எப்போதுமே அவர்கள் தண்டனையில்லாமல் போக அனுமதிக்கப்பட வேண்டுமா?

கணக்கின்றி தவறுகள் இழைத்திட்ட கொடுமையாளர்களை, இனப்படுகொலை புரிந்தவர்களை, சமுதாயத்தில் ஊழல் புரிந்தவர்களை, தங்களது இச்சைக்கு ஏற்ப பலரை அடிமைப்படுத்தியவர்களை அல்லாஹ் தண்டிப்பான்.

பாவம் புரிந்தவர்கள்,இறைவனைப் புறக்கணித்தவர்கள், நெறியற்ற செயல்களில் ஈடுபட்டவர்கள் அரசியலிலும், வியாபாரத்திலும் வெற்றி பெற்றவர்களாக வெளிப் படையாகத் தோன்றலாம். நற்சிந்தனையும், நல்லெண்ணமும் கொண்ட பலர் துன்பத்திலும் வேதனையிலும் வாழ்ந்து கொண்டிருக்கலாம். இது இறைவனின் நீதிக்குப் பொருத்தமற்றதாக இருக்கலாம். குற்றம் இழைத்தவர்கள், மனிதர்கள் உருவாக்கிய சட்டங்களிலிருந்து, உலக நீதிமன்றங்களிலிருந்து எந்த விதமான தண்டனையுமின்றி தப்பித்து விட முடியுமென்றால், மேலதிகமாக அவர்கள் வளமுடன் வாழ முடியுமென்றால், நல்ல மனிதர்களுக்கு இந்த உலகில் என்ன நன்மை இருக்கின்றது? அறநெறிப்

பண்புகளையும், நற்செயல்களையும் ஊக்குவிப்பது எப்படி? நற்செயல்களுக்கு வெகுமதி வழங்கிடவும் தீய செயல்களைத் தடுத்திடவும் ஏதாவது ஒரு வழி முறை இருக்க வேண்டும். இந்த உலகத்தில் இது முறையாக உடனடியாக செய்யப்பட வில்லையென்றால் இறுதி தீர்ப்பு நாளின் போது இது நிச்சயமாகச் செய்யப்படும்.

ஒருவன் தனது செயல்களுக்காகப் பதிலளிக்கக் கடமைப் பட்டவன் என்ற நீதி நிலைநாட்டப்படுவதற்கு மிகவும் அவசியமான ஒன்றாகும். இது நீதிக்காகக் காத்திருக்கும் உயர்ந்தவர்கள், பலவீனமானவர்கள் ஏழைகள் ஆகிய அனைவரின் தேவையாகவும் இருக்கின்றது.

மறுமை வாழ்விலும், இறுதித் தீர்ப்பு நாளிலும் நம்பிக்கை வைப்பது, மறு உலக வெற்றிக்கு உத்தரவாதம் அளிக்கும். அது இந்த உலகத்தையும் மகிழ்ச்சியாகவும், அமைதியாகவும் மாற்றித் தனிமனிதர்கள் பொறுப்புணர்வுடனும், கடமை வுணர்வுடனும் நடந்து கொள்ளத் துணை செய்யும். மேலும் நமது இன்றைய உலகின் பல சிக்கலான பிரச்னைகளுக்கும் ஆறுதல்தரும் முடிவான பதிலாகவும் அது அமையும்.

# 6
# அருளப்பட்ட புத்தகங்கள்

மனிதர்களாகிய நாம், இறைவனின் பணியாளர்கள்; பூமியில் அவனது முகவர்கள். இறைவனின் முகவர்கள் என்ற முறையில் நம்முடைய கடமைகளைச் செய்திட நமக்கு வழிகாட்டுதல் தேவைப்படுகின்றது. நமக்கு நாமே வழி காட்டிட முடியாதவர்களாக இருக்கின்றோம். ஏனெனில் நம்மிடம் பல பலவீனங்கள் உள்ளன. கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் பற்றிய நமது அறிவு ஒரு வரையறைக்குட்பட்டதே. அல்லாஹ் ஒருவன் மட்டுமே இந்தக் குறைபாடுகளுக்கு அப்பாற்பட்டவன். அவன் ஒருவன் மட்டுமே அனைத்து இடங்களுக்கும் அனைத்துக் காலத்திற்கும் தக்க வழிகாட்டுதல் வழங்கும் ஆற்றலைப் பெற்றிருக்கிறான். வழிகாட்டுதல் வழங்காமல் அல்லாஹ் நம்மை விட்டு விடவில்லை. அவன் தீர்க்கதரிசிகளை அனுப்பி வாழ்க்கையின் நேரான பாதையை நமக்குக் காட்டியுள்ளான். மேலதிகமாக வழிகாட்டக்கூடிய நூல்களை தனது தீர்க்கதரிசிகள் மூலமாகவும், தூதுவர்கள் மூலமாகவும் அனுப்பியருளியுள்ளான்.

அல்லாஹ்வின் அருட்கொடைகள் அளவற்றவை. நமக்குத் தேவையானவற்றையெல்லாம் அவன் வழங்கியுள்ளான். இளமைப்பருவத்தில் நாம் வளர்வதற்கும், பிறப்பிலிருந்து இளைஞர் பருவம் எய்துகின்றவரை நம்மை நம்முடைய பெற்றோர்கள் பரிவுடன் கவனிப்பதற்கும் அவன் எவ்வளவு ஆச்சர்யமான முறையில் ஏற்பாடுகள் செய்துள்ளான் என்பதைச் சற்று எண்ணிப் பாருங்கள். தாயின் கருப்பையில் இருக்கின்றபோது யார் நமக்கு உணவளிக்கின்றார்? நாம் பிறந்தவுடன் தாயின் மார்பைச் சுவைத்துப் பாலை

அருந்துகின்றோமே, அந்தப் பாலை தாயின் மார்பகங்களில் நிரப்பியது யார்? நிச்சயமாக கருணையுள்ள இறைவனே! எல்லாம் வல்ல அல்லாஹ் குர்ஆனில் கூறுகின்றான்.

> அல்லாஹ் அருளியுள்ள வேதங்களில் காணப்படுகின்ற வழிகாட்டுதலே அவன் மனித சமுதாயத்திற்கு வழங்கியுள்ள மிகப்பெரிய அருட்கொடையாகும். தூய்மையான முழுமை பெற்ற பெரிதும் பயன்படும் அறிவு மிகப் பெரிய நுண்ணறிவாளனான அல்லாஹ்விடமிருந்தே வருகிறது. (குர்ஆன் 2:146-147; 4:163: 53:1-6)

குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள வேதங்கள் அனைத்தையும் ஒரு முஸ்லிம் நம்புகின்றான். அவை மூஸா நபியின் தௌராத் (தோரா - மோசஸ்) தாவூது நபியின் ஸபுர் (டேவிட்டின் சால்ம்ஸ்), ஈஸா நபியின் இன்ஜில் (ஜீசஸின் கோஸ்பல்) மற்றும் முஹம்மது நபி(ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட குர்ஆன். இப்ராகிம் நபியின் சுஹாப் பற்றியும் குர்ஆன் குறிப்பிடுகின்றது (ஆப்ரஹாமின் வேதம்)

இறைவனால் அருளப்பட்ட வேதநூல்களில் குர்ஆன் மட்டுமே மாறாமல் அதன் அசலான முறையில் பாதுகாக்கப் பட்டு வருகின்றது. தௌராத், ஸபுர் மற்றும் இன்ஜில் வேத நூல்களின் மூலப் பிரதிகள் தற்போது இல்லை. இப்போது இருப்பவை, அந்த தீர்க்க தரிசிகளின் இறப்பிற்குப் பல ஆண்டுகளுக்குப் பின்னர் அவர்களைப் பின்பற்றியோர் எழுதியவைகளேயாகும். இப்படி எழுதியவர்கள், இறைவனுடைய வார்த்தைகளைத் திரித்தும் மாற்றியும் எழுதியுள்ளனர். இறைவனின் வார்த்தைகளோடு மனிதர்களின் வார்த்தைகளையும் அவற்றில் சேர்த்து விட்டனர்.

பழைய ஏற்பாடு, மற்றும் புதிய ஏற்பாட்டின் தொகுப்பான பைபிள், எஞ்சியிருந்த ஹீப்ரு மற்றும் கிரேக்க மொழிகளின் கையெழுத்துப் பிரதிகளிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. கவனமாக வாசிக்கின்ற ஒருவர் அதில் சில சேர்க்கைகளும், மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளதை மிக எளிதாக அறிந்து கொள்ள முடியும்.

இன்றைக்கு இருக்கின்ற பைபிளில் மனிதர்களால் பல செய்திகள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. அவை சரியாகத்

தோற்றமளிக்கவில்லை. அது இறை வெளிப்பாடு அல்ல. தவறான வழியில் இட்டுச் செல்கின்ற சில கருத்துக்களும் தீர்க்கதரிசிகளைப் பற்றிய தவறான செய்திகளும் அதில் இடம் பெற்றுள்ளன. இறைவனால் அத்தீர்க்கதரிசிகளுக்கு அனுப்பப்பட்ட சில செய்திகள் காணாமல் போயுள்ளன. அல்லது திரிக்கப்பட்டுள்ளன. இதற்கு அவர்களைப் பின்பற்றியோரின் புறக்கணிப்பு அல்லது அறிவீனமே காரணமாகும். அதே நேரத்தில் மனித சமூகத்திற்கு இறைவனின் வழிகாட்டியாக இருக்கின்ற குர்ஆன், அதன் அசலான வடிவத்தில், மொழியில், மாறாமல், திரிக்கப்படாமல் அப்படியே பாதுகாக்கப்பட்டுள்ளது. அது தெளிவான, குழப்பமில்லாத மொழியில் இறைவனின் செய்தியைத் திரும்பக் கூறுகின்றது. முந்தைய தீர்க்க தரிசிகளுக்கு இந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. குர்ஆனின் செய்தி அனைத்துக் காலத்திற்கும் பொருந்தக்கூடியது.

# குர்ஆன்
# இறைவனின் சக்தி மிக்க பேச்சு

குர்ஆன், எல்லாம் வல்ல அல்லாஹ்வின் தூய்மையான சக்தி மிக்க பேச்சாகும். அதிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் மனித சமூகத்திற்கு இறைவனிடமிருந்து வந்த செய்தியாகும். குர்ஆனின் வார்த்தைகள் மனித வரலாற்றின் மிகவும் சக்தி வாய்ந்த தெளிவான வார்த்தைகளாகும். குர்ஆனின் இந்த வார்த்தைகள்தான் ஒரு உந்து விசையாகத் திகழ்ந்து வேகமாக வளர்ந்து வருகின்ற இஸ்லாத்தை நோக்கி மக்களை ஓடிவரச் செய்கின்றது.

உலகில் கிடைக்கின்ற நூல்கள் அனைத்தையும் ஒருவர் படிக்க முடியும். ஆனால் குர்ஆன் இறைவனால் அருளப்பட்ட நூல். 1.7 பில்லியனுக்கும் (170 கோடி) அதிகமான முஸ்லிம்கள் மிகுந்த மரியாதையுடன் அதனை ஓதி, தங்களுடைய அன்றாட வாழ்க்கைக்கு இறைவன் அருளிய வழிகாட்டியாகக் கருதுகின்றனர். குர்ஆனை ஓதுகின்ற போது, எல்லாம் வல்ல அல்லாஹ்வுடன் நேரடி தொடர்பு கொள்வதாக முஸ்லிம்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

குர்ஆன், இறைவன் மனித சமூகத்திற்கு வழங்கியுள்ள மிகப் பெரிய அருட்கொடையாகும். "குர்ஆன்" என்பதற்கான நேரடியான பொருள் "படித்தல்" அல்லது "ஓதுதல்" என்பதாகும். குர்ஆன் மனித சமூகத்திற்கு அரபு மொழியில் அருளப்பட்ட தூய்மையான தெளிவான தெய்வீக வார்த்தையாகும். அது ஒரு நினைவூட்டலாகவும். ஒளியாகவும், அற்புதமாகவும் இருக்கின்றது. எல்லாம் வல்ல இறைவன் வானவர் ஜிப்ரீல்(அலை) மூலமாக, நபிகள் நாயகம்(ஸல்) அவர்கட்கு 23 ஆண்டுகளாக அதனை இறக்கியருளினான். ஒரு வெளிப்பாடு வந்ததும் நபிகளார் தமது தோழர்கட்கு அதனைத்

தெரிவித்து மனப்பாடம் செய்யுமாறும், தொழுகையின் போது அதனை ஓதி வருமாறும் கேட்டுக் கொண்டார்கள். அதனை எழுதி வைத்துக் கொள்ளுமாறும் தோழர்களை அறிவுறுத்தினார்கள்.

குர்ஆன், 1400 ஆண்டுகளுக்கு முன்னர், கி.பி. 610க்கும் 632க்கும் இடைப்பட்ட கால கட்டதில் அப்போதைய மக்கா, மதீனா நகரங்களை உள்ளடக்கிய ஜாஸ் என்ற பகுதியில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு அருளப்பட்டது. அந்தக் கால கட்டத்தில் அரேபியா நாடு வரலாற்றில் முன்னணிப் பங்கு வகிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## குர்ஆன் என்பது என்ன?

பிற சமய வேத நூல்களான தோரா அல்லது இன்ஜீல் அல்லது மகாபாரதத்துடன் குர்ஆனை ஒப்பிட முடியாது. ஏனெனில் குர்ஆனில் சில முந்தைய நபிமார்களின் வரலாறுகளும் நாடுகளின் வரலாறுகளும் இடம் பெற்றிருக்கின்றன. அது ஒன்றும் புராதான மக்களின் வரலாற்றை விவரித்துச் சொல்கின்ற ஒரு பதிவேடு அல்ல. அது வரிசைக்கிரம முறையில் தொகுக்கப்பட்ட ஒரு நூல் அல்ல. அது தர்க்க ரீதியான ஒரு துவக்கப்பகுதியையோ மத்தியப் பகுதியையோ அல்லது இறுதிப் பகுதியையோ கொண்டிருக்க வில்லை. அது எதுகை மோனையுடன் கூடிய ஒரு உரை நடை வரலாற்றுப் பாடல், ஸ்வரங்களின் ஐக்கியம் என இவையனைத்தும் ஒன்று சேர்ந்த ஒரு உன்னத வேத நூலாகும். குர்ஆனில் மொத்தம் 114 அத்தியாயங்களும் (சூராக்கள்) 6666 வசனங்களும் உள்ளன. அதன் ஒவ்வொரு வார்த்தையும் இன்னொரு வார்த்தையுடன் எதுகை மோனை மற்றும் பொருளுடன் இணைந்து இருக்கக் கூடியவிதத்தில் அமைந்துள்ளன. குர்ஆனின் அமைப்பு அதன் ஒரு புள்ளியைக் கூட மாற்ற இயலாத முறையில் உள்ளது. அதில் செய்யப் படுகின்ற ஒரு மிகச் சிறிய மாற்றம் கூட அதன் உள்ளடக்கத்தை சிதைத்து விடும்.

## குர்ஆனின் இணையற்ற தன்மை

அதனுடைய சிறப்பான உருவாக்கம், ஒவ்வொரு வார்த்தையும், ஒவ்வொரு வசனமும் ஒன்றுடன் ஒன்று

இணைத்து வைக்கப்பட்டிருக்கின்ற முறை, அதன் சொல்லாற்றல், அதன் மொழியழகு, அதன் நுட்பம் அதன் நடையின் நுணுக்கம் இவையாவும் குர்ஆனைப் போன்ற ஒரு நூலை வேறு யாரும் உருவாக்கிட முடியாது என்பதைப் பறைசாற்றுகின்றன.

அதனை மாற்றவோ திருத்தவோ முடியாது அல்லது குர்ஆனில் உள்ள வார்த்தைக்கு அல்லது வசனத்திற்கு இணையான ஒன்றை அதே இலக்கியத் தரத்திற்கு ஏற்ப யாராலும் உருவாக்க முடியாது. இதற்கு இணையான ஒரு வார்த்தையையோ அல்லது வசனத்தையோ உங்களால் உருவாக்க முடியுமா என குர்ஆனே அதனை ஓதுகின்றவர்கட்குச் சவால் விடுத்துள்ளது.

> நாம் நம் அடியார் மீது இறக்கியுள்ள இ(வ்வேதத்)தைப் பற்றி (இது நம்மால் அருளப் பட்டதா இல்லையா எனும்) சந்தேகத்தில் நீங்கள் இருப்பீர்களானால், இதைப் போன்ற ஒரே ஒரு அத்தியாயத்தையேனும் (உருவாக்கிக்) கொண்டு வாருங்கள். (இதற்காக) அல்லாஹ்வைத் தவிர உங்களுக்குத் துணை புரிபவர்கள் அனைவரையும் அழைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் உண்மையானவர்களாய் இருப்பின் (இதனைச் செய்து காட்டுங்கள்) நீங்கள் அப்படிச் செய்யாவிட்டால், நிச்சயமாக உங்களால் ஒரு போதும் அவ்வாறு செய்ய முடியாது. மனிதர்களையும், கற்களையும் எரிபொருளாகக் கொண்டதும், (சத்தியத்தை) நிராகரிப்பவர்களுக்கு தயார் செய்யப்பட்டதுமான நரக நெருப்புக்கு அஞ்சுங்கள். (குர்ஆன் 2:23-24)

குர்ஆனின் சிறப்பான மொழி நடையும், அதன் ஒருங்கமைப்பும் அதனை எளிதில் மனப்பாடம் செய்யும் விதத்தில் அமைந்துள்ளது. அதனுடைய மொழி நடை அதனை ஓதுகின்றவரை ஒரு வார்த்தையிலிருந்து இன்னொரு வார்த்தைக்கும், அதன் ஒருங்கமைப்பு ஒரு வசனத்திலிருந்து இன்னொரு வசனத்திற்கும் கொண்டு செல்கிறது. இதற்கு பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட இரண்டு வழிமுறைகள் உள்ளன. இசை நயத்துடன் அழகாக ஓதுவது ஒரு முறை.

இதற்கு "தஜ்வீது" என்று பெயர். மெதுவாக நிதானித்து ஓதுதல் அல்லது முறையான வழியில் ஓதுதல். இதற்கு "தர்தில்" என்று பெயர். முஸ்லிம் இளைஞர்கள் குர்ஆன் முழுவதையும் ஓதி மனப் பாடம் செய்து விடுகிறார்கள். மனிதகுல வரலாற்றிலேயே குர்ஆன் மட்டுமே அதன் மேலட்டை யிலிருந்து கடைசி அட்டை வரை மனனம் செய்யப்பட்டுள்ள ஒரே வேத நூலாகும்.

குர்ஆனை மனப்பாடம் செய்து அதனை இதயத்திலே வைத்திருக்கின்ற பல இலட்சக்கணக்கான ஹாபிழ்கள் தற்போது உலகில் உள்ளனர்.

தினமும் ஐவேளைத் தொழுகைகளின் போது குர்ஆனை ஓதுவது, அதிகாலை, மதியம், சூரியன் மறையும் நேரம், இரவு ஆகிய ரேங்களில் ஓதுவது என அல்லாஹ்வின் வார்த்தைகள் கடந்த 1400 ஆண்டுகளாக அரேபியப் பாலை வனத்திலிருந்து உலகிலுள்ள அனைத்து நாடுகளுக்கும் பயணம் செய்து வருகின்றது. இறைவனின் வார்த்தைகள் தொடர்ந்து இவ்வுலகில் எதிரொலித்துக் கொண்டே இருக்கும். இன்னும் உலகம் உள்ளளவும் அது தனது தூய அசலான வடிவத்தில் எதிரொலித்துக் கொண்டே இருக்கும்.

குர்ஆன் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களால் இயற்றப்பட்டது என்ற ஒரு தவறான கருத்து நிலவி வருகிறது. நபிகளார் கல்வி கற்றவரல்லர். அவர்களுக்கு எழுதவோ, படிக்கவோ தெரியாது என்ற உண்மை இந்தத் தவறான கருத்தை பொய்யாக்கும். குர்ஆனின் வார்த்தைகள் இறைவனால் இறக்கியருளப்பட்டவை. அதில் காணப் படுகின்ற வரலாறு மற்றும் அறிவியல் சார்ந்த செய்திகளும், அதன் இலக்கிய அழகும் அதனுடைய பிழையற்ற சரியான தன்மையும் அது இறைவனுக்கே உரியது என்பதைத் தெரிவிக்கின்றன. அவனே இந்த வேத நூலை தனது மேன் மையான வார்த்தைகளைக் கொண்டு உருவாக்கியுள்ளான். அரபி மொழி தெரியாத ஒருவன் கூட அதன் வார்த்தைகளைக் கேட்டால் ஒரு மந்திர சக்திக்கு கட்டுப்பட்டவன் போலாகி விடுவான்.

# குர்ஆனின் நோக்கமும், அதன் உள்ளடக்கமும்...

குர்ஆன் முழு மனித சமுதாயத்தையும் நாடுகளையும், சமூகங்களையும், குடும்பங்களையும், தனி நபர்களையும், இனங்களையும், பிரதேசங்களையும், காலத்தையும் நோக்கிப் பேசுகின்றது. தன்னுடைய வெளிப்படையான மற்றும் உள்ளார்ந்த போதனைகள் மூலமாக தனி மனிதர்களையும் ஆன்மாக்களையும் நோக்கிப் பேசுகின்றது. மேலும் ஆன்மீகம், இம்மை வாழ்வு, தனிநபர் மற்றும் கூட்டு வாழ்க்கை என வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் அது வழிகாட்டுகின்றது.

இனம், வட்டாரம், காலம் என எந்தவிதமான பாகுபாடுமின்றி குர்ஆன் ஒட்டு மொத்த மனித சமூகத்தை நோக்கிப் பேசுகின்றது. இறைவன், மனிதர்கள், இயற்கை, நியாயம், சகோதரத்துவம் மற்றம் இறை வெளிப்பாடுகள் இவையே குர்ஆனில் முக்கியமாகக் கூறப்பட்டுள்ள விஷயங்களாகும். குர்ஆன், இறைவனின் தனித்துவத்தைப் பற்றிப் பேசுகிறது. அவன் மனிதர்களின் அறியும் சக்திக்கு அப்பாற்பட்டவன். பாலின வரையறைக்கு உட்படாதவன் என்பதைப் பற்றியும் அவனுடைய சிறப்புப் பண்புகளையும் அவனைப் புகழ்வதற்குரிய சரியான வழி முறைகளைப் பற்றியும் பேசுகின்றது. தனிமனிதர்கள் என்ற முறையிலும் பூமியில் இறைவனின் பிரதிநிதிகள் என்ற முறையிலும் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகளை அது விளக்குகின்றது. குர்ஆனில் இயற்கையைப் பற்றியும் அவற்றின் மகத்துவம், நிலைத்த தன்மை, ஒழுங்குமுறை, ஆகியன பற்றியும் பல இடங்களில் கூறப்பட்டுள்ளன. குர்ஆனின் எட்டில் ஒரு பங்கு வசனங்களில் அதாவது 750 வசனங்களில் மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறிப் பண்புகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கையை நெறிப் படுத்துகின்ற விதிமுறைகளைக் கூறுகின்ற சட்ட ரீதியிலான 250 வசனங்களும் உள்ளன.

ஒவ்வொரு தனி மனிதனும் தனது படைப் பாளனுக்குப் பொறுப்பானவன் என்ற உணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டுமென குர்ஆன் வலியுறுத்துகின்றது. இதற்காகக் குர்ஆன் கட்டளைகளை மட்டும் பிறப்பிப்பதோடு நின்று விடாமல், மனிதர்களை நம்பவைக்கின்ற முயற்சி களிலும் ஈடுபடுகின்றது. எது சரி, எது தவறு, எது உண்மை, எது பொய் என்று தீர்மானிக்கின்ற வழிகாட்டுதலை குர்ஆன் மனித சமூகத்திற்கு வழங்கியுள்ளது. அத்தகைய வழிகாட்டல் இல்லையென்றால் மனிதன் பெரும் இழப்பிற்கு ஆளாகி விடுவான்.

இறைவன் ஒருவனே என்ற அழியாத உண்மையை வலியுறுத்துகின்ற இஸ்லாம் அவன் பால் அசைக்க முடியாத முழு நம்பிக்கை கொள்ளுமாறும் வேண்டுகிறது. நற்செயல்கள் புரிந்து, இறை பக்தி மிக்க நேர்மையான வாழ்க்கை நடத்திட அது மக்களை வேண்டுகிறது. இதுவே மீட்சிக்காக இஸ்லாம் வலியுறுத்துகின்ற மிக முக்கியமான கோட்பாடுகளாகும். அதன் அடிப்படையுமாகும்.

குர்ஆனின் மிகச் சிறந்த அத்தியாயங்களில் ஒன்றான "அல் இக்லாஸ்" (112வது அத்தியாயம்) ஏகத்துவக் கொள்கையைப் பற்றியே பேசுகிறது. இந்த அத்தியாயம் குர்ஆனின் மூன்றில் ஒரு பங்குக்குச் சமமானது என நபிகள் நாயகம்(ஸல்) நவின்றுள்ளார்கள். எல்லாம் வல்ல அல்லாஹ், தனக்கு இணையானவன் யாரும் இல்லை. மகன் இல்லை, சமமானவன் இல்லை-பங்காளி இல்லை, தன்னைத் தவிர வணங்குவதற்கு உரிமை படைத்தவன் வேறு எவரும் இல்லை என்று நமக்குத் தெரிவிக்கின்றான். இறைவனுடன் யாரையும் ஒப்பிட முடியாது. அவனது படைப்புகள் அவனை ஒத்திருக்கவில்லை. இறைவனுக்கு மனிதப் பண்புகள் கற்பிக்கப்படுவதையும், வரையறைகள் கற்பிக்கப்படுவதையும் குர்ஆன் நிராகரிக்கின்றது.

> உங்கள் இறைவன் ஒரே இறைவன் தான், அளவிலாக் கருணையும், இணையிலாக் கிருபையும் உடையவனான அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை(குர்ஆன் 2:163)

எனவே இறைவன் தனித்தவன். அவன் மட்டுமே

வணங்கத்தக்கவன் என்பதால் பிற பொய்க் கடவுள்களையும், தேவதைகளையும் நிராகரிக்க வேண்டும். இறைவனைத் தவிர பிறருக்கும் தெய்வீகக் குணங்கள் இருப்பதாகக் கூறப் படுகின்ற கொள்கையை இஸ்லாம் நிராகரிக்கின்றது.

> அவனோடு எதையும் இணையாக்காதீர்கள் (குர்ஆன் 4:36)

குர்ஆன் விடுக்கும் இந்த நம்பிக்கை அழைப்பு மிக எளிமையானது, நேரடியானது.

"லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மது ரசூலுல்லாஹ்" இதன் பொருள்: வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை. முஹம்மது ஸல்லல்லாஹு வலைஹிவ ஸல்லம் இறைவனின் தூதர்"

இஸ்லாத்தில் வணக்கம் என்பது, அல்லாஹ் கட்டளை யிடுகின்ற, அவன் விரும்புகின்ற அவன் மகிழ்ச்சியடைகின்ற சொற்கள், செயல்கள் என அனைத்தையும் உள்ளடக்கியதாகும். (தனிப்பட்ட வாழ்விலும் சரி, பொது வாழ்விலும் சரி)

குர்ஆன், உலகளாவிய சகோதரத்துவத்தை வலியுறுத் துகின்றது. மனிதர்கள் சாதி ரீதியிலோ, அல்லது வேறு வித்தியாசமான முறைகளிலோ படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற சிந்தனையை அது நிராகரிக்கின்றது. இறைவன் உலகளாவிய சகோதரத்துவம் பற்றி விளக்கிக் கூறுகிறான்.

> மனிதர்களே! நாம் உங்களை ஒரு ஆணிலிருந்தும், பெண்ணிலிருந்தும் படைத்தோம். பிறகு நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்ளும் பொருட்டு உங்களை சமூகங்களாகவும், கோத்தி ரங்களாகவும் அமைத்தோம். (குர்ஆன் 49:13)

சமத்துவமும் நீதியும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள். குர்ஆன் இந்த இரண்டிற்காகவும் பரிந்து பேசுகின்றது. மனிதர்கள் அவர்கள் ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி, கருப்பராயினும் சரி, வெள்ளையராயினும்சரி, ஏழையாயினும் சரி, பணக்காரனாயினும் சரி, ஆட்சியாளராயினும் சரி, குடிமக்களாயினும் சரி, உயர்ந்தவர்களாயினும் சரி, சாதாரண மானவர்களாயினும் சரி, இறைவனின் பார்வையில் அனைவரும் சமமானவர்களே. இறை பக்தியும், அறநெறியும்,

நற்செயல்களுமே ஒருவரை விட இன்னொருவருக்கு உயர்வைத் தருகின்றன. இனம், நிறம் மொழி, தேசியம் போன்ற வேறுபாடுகள் மனிதர்களை அடையாளப் படுத்துவதற்கான அம்சங்களே. இவற்றை பிரிவினைக்கோ, பாகுபாட்டிற்கோ, உயர்ந்த தன்மைக்கோ அடையாளமாகக் கருதக் கூடாது. மனித சகோதரத்துவம், நியாய உணர்வு ஆகியன பற்றிய இஸ்லாத்தின் கொள்கைகள் குர்ஆனில் மிகச் சிறந்த முறையில் விளக்கப்பட்டுள்ளன. (குர்ஆன் வசனங்கள் 49:13, 4:135ஐப் பார்க்கவும்)

இறப்பை அனைவரும் சந்தித்தே தீரவேண்டும். மனிதர்கள் தங்களது செயல்கள் அனைத்திற்கும் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள். இறப்பிற்குப் பிறகு உள்ள மறுமை வாழ்வு, இறுதித் தீர்ப்பு நாளின் போது இறைவன் முன்னிலையில் பதில் சொல்லக் கடமைப்பட்டிருத்தல் வெகுமதிகள் மற்றும் தண்டனைகள், சொர்க்கம், நரகம் இறை வெளிப்பாடுகளின் மெய்த் தன்மை ஆகியன பற்றி குர்ஆன் நமக்கு நினைவூட்டுகின்றது. இறைவனுக்குக் கீழ்ப்படிந்து நடந்தவர்கள் செல்லவிருக்கும் சொர்க்கத்தின் சிறப்புகள் பற்றியும் அதே போல் தீய செயல்களில் ஈடுபட்டோருக்கு நரகத்தில் கிடைக்கவிருக்கும் தண்டனைகள் பற்றியும் குர்ஆன் விரிவாகக் குறிப்பிடுகின்றது.

> உலக வாழ்க்கை என்பது விளையாட்டும் வேடிக்கையு மேயன்றி வேறில்லை. உண்மையில் எவர்கள் தீய நடத்தையைத் தவிர்க்க விரும்புகின்றார்களோ அவர்களுக்கு மறுமை இல்லமே மிகவும் நலமுடையதாக இருக்கும் அவ்வாறிருக்க நீங்கள் பகுத்தறிவைப் பயன்படுத்த மாட்டீர்களா? (குர்ஆன் 6: 32)

குர்ஆன், மனித சமூகத்தை நன்மையின் பக்கம் அழைக்கின்றது. எது நேரான வழி எது தவறான வழி என்பதையும் மிகத் தெளிவாக உரத்துக் கூறுகின்றது

> நன்மையின் பக்கம் அழைக்கக் கூடிய ஒரு குழுவினர் உங்களிடையே கண்டிப்பாக இருக்க வேண்டும் அவர்கள் நல்லவை புரியும் படி ஏவ வேண்டும். தீய செயல்கள் செய்வதனின்றும்

மக்களைத் தடுக்க வேண்டும். எவர்கள் இப்பணியைச் செய்கிறார்களோ உண்மையில் அவர்கள் வெற்றியாளர்கள் ஆவர் (குர்ஆன் 3:104)

குர்ஆனில் இயற்கை அம்சங்களான கருவியல், வானிலையியல், வானவியல், மண்ணியல், கடலியல் போன்ற பல துறை சார்ந்த விஷயங்களைப் பற்றிய மிகச் சரியான விளக்கங்கள் காணப்படுகின்றன. அதில் காணப்படுகின்ற அறிவியல் செய்திகள் மிகச் சரியாக உள்ளன என்பதைக் கண்டறிந்துள்ள இன்றைய விஞ்ஞானிகள், ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த இந்த வேதநூலில் இத்தகைய அறிவியல் கருத்துக்கள் இருப்பதறிந்து வியப்படைகிறார்கள்.

அதி விரைவில் நாம் இவர்களுக்கு நம்முடைய சான்றுகளை அனைத்துத் திசைகளிலும் அவர்களுக்குள்ளேயும் காண்பித்துக் கொடுப்போம். இந்தக் குர்ஆன் சத்தியமானது எனும் உண்மை இவர்களுக்குத் தெளிவாகிடும் வரையில் (குர்ஆன் 41:53)

உண்மையில் குர்ஆனில் சொல்லப்பட்டுள்ள அறிவியல் அற்புதங்கள் நவீன தொழில் நுட்பக் கருவிகள் மூலமும், விஞ்ஞான வளர்ச்சி காரணமாகவும் அண்மையில் தான் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. மனித வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும், நிலைகளிலும் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறை ஒரு விரிவான தொகுப்பே குர்ஆன் ஆகும்.

நாடுகளுக்கிடையிலான உறவுகள். வணிகம், பொருளாதாரம், அரசியல், நீதி, சமூக வாழ்க்கை, திருமணம், சொத்துரிமை என அனைத்து விஷயங்கள் பற்றியும் தெளிவான விதிகளை அது வகுத்தளித்துத் தந்துள்ளது. குற்றச் சட்டங்கள் பராமரிப்புச் சட்டங்கள், மணமுறிவு சட்டங்கள், குடிமையியல் சட்டங்கள் என அனைத்துச் சட்டங்களும் அதில் உள்ளன.

பசி, ஏழ்மை, சமத்துவமின்மை, அநீதி, போர்கள், சண்டைகள், இயற்கை வளங்களைச் சுரண்டல், பேராசை, இறைவனின் படைப்புகளுடன் வீண் பொழுது போக்கல் போன்றவை காரணமாக ஏற்படுகின்ற வேதனைகளின் தீர்விற்காக இஸ்லாம் விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்கித் தந்துள்ளது.

மனித சமுதாயத்திற்குச் சேவை செய்வதற்காகவே இறைவன் இவ்வுலகில் அனைத்தையும் படைத்துள்ளான் என்பதைப் பல குர்ஆன் வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. நவீன விஞ்ஞானமும், படைப்புகளின் இறுதி நோக்கம் மனித சமூகத்திற்குச் சேவை செய்வதே என்பதை நிரூபித்துள்ளது. இது இயற்கை விதியாகும். இதைப் போலவே மனித சமுதாயம் படைக்கப்பட்டதன் நோக்கமே படைத்தவனான இறைவனுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. இந்தக் கடமையை நிறைவேற்று வதற்குரிய ஒரு வழி இறைவனுடைய பிற படைப்புக் களுக்கும், ஒருவர் இன்னொருவருக்கு சேவை செய்வதே யாகும். இயற்கையின் ஒருங்கிணைப்பையும், அமைதியையும் நிலைநாட்டிட உதவும் மிக உயர்ந்த செயலான இதுவும் ஒரு வணக்க வழிபாடேயாகும். இது பற்றி படைத்தவனின் கட்டளை வருமாறு:

> மேலும் பூமியில் சீர்திருத்தம் ஏற்பட்டபிறகு அதில் குழப்பம் செய்யாதீர்கள். (குர்ஆன் 7:56)

தனது வழிகாட்டுதல்களையும், போதனைகளையும் பின்பற்றுமாறு குர்ஆன் வலியுறுத்துகின்றது. குர்ஆனின் போதனைகளுக்குக் கீழ்ப்படிவதைப் பொறுத்துத் தான் இவ்வுலக வாழ்க்கையிலும் மறு உலக வாழ்க்கையிலும் மனிதர்களின் வெற்றி அமைந்திருக்கும். பேராற்றல் வாய்ந்த எல்லாம் வல்ல அல்லாஹ்வின் சட்டங்களை நிலை நிறுத்துவதில் மக்கள் தங்களது சக்தியையும் செல்வத்தையும் பயன்படுத்த வேண்டுமெனவும் தாங்கள் வாழ்கின்ற சமூகத்தில் நிலவுகின்ற அனைத்துத் தீமைகளையும் போக்க முயற்சிக்க வேண்டுமெனவும் குர்ஆன் வலியுறுத்துகின்றது.

குர்ஆனின் சிறப்பம்சங்களில் ஒன்று அதன் யதார்த்தத் தன்மையாகும். நடைமுறைப்படுத்த முடியாத கொள்கைகளையும், சாத்தியமற்ற விஷயங்களையும் அது கூறவில்லை. மனிதன் எப்படி இருக்கின்றான் என்பதை குர்ஆன் ஏற்றுக் கொண்டு அவன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான ஆலோசனைகளை வழங்குகின்றது. அது மனிதனை உதவியற்ற அல்லது உபயோகமற்ற ஒரு படைப்பாகவோ, அவனை கருவிலிருந்து கல்லறை வரை பாவத்தில் மூழ்கியவனாகவோ சித்தரிக்கவில்லை. மாறாக,

அவனை ஒரு மேன்மையாளனாக, மதிப்பு மிக்கவனாக, கண்ணியமிக்கவனாகச் சித்தரிக்கின்றது.

குர்ஆனின் போதனைகளை நடைமுறைப்படுத்த முடியும் என்பதை நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் முன்னுதாரணங்களிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். ஒரு மனிதன் கடைப்பிடிக்கக்கூடிய சாத்தியக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு அவனின் பொதுவான நல்வாழ்விற்கான அறிவுரைகளைக் கூறுவதே குர்ஆனின் அணுகுமுறையாக இருக்கின்றது. இந்த முழுப்பரிமாணத்திலும், குர்ஆனின் ஞானம் நிறைவு பெற்றதாக இருக்கின்றது. அது உடலை வருத்தும்படி கூறவில்லை. அல்லது ஆன்மாவைப் புறக்கணிக்கவும் ஆலோசனை கூறவில்லை. இறைவனை மனித்தன்மைகள் கொண்டவனாக மாற்றவோ அல்லது மனிதனை தெய்வீகத் தன்மைகள் கொண்டவனாக மாற்றவோ அது முயற்சிக்கவில்லை. இறைவனின் முழுப்படைப்புருவாக்கத்தில் அனைத்துப் பொருட்களும் அதற்குரிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

மிகவும் பாதுகாக்கப்பட்ட புனித வேதநூல் குர்ஆன் ஒன்றேயாகும். 1400 ஆண்டுகளுக்கு முன்னர் அது அருளப்பட்டதிலிருந்து அதில் எதுவும் சேர்க்கப்படவுமில்லை, நீக்கப்படவுமில்லை, மாற்றம் செய்யப்படவுமில்லை.

> திண்ணமாக இந்த நல்லுரையை நாம் இறக்கி வைத்தோம். மேலும் நாமே இதனைப் பாதுகாப்போனாகவும் இருக்கின்றோம் (குர்ஆன் 15:9)

எழுத்து வடிவில் மட்டும் குர்ஆன் பாதுகாக்கப்படவில்லை. அது ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரின் இதயங்களிலும் பாதுகாக்கப்பட்டுள்ளது. இன்றைக்கு பல லட்சக் கணக்கான மக்கள் குர்ஆனை அதன் முதல் அட்டையிலிருந்து கடைசி அட்டைவரை மனப்பாடம் செய்து வைத்துள்ளனர். அதன் மூலம் அதில் எந்த விதமான திருத்தமும் செய்ய முடியாதவாறு பாதுகாக்கின்றனர்.

குர்ஆனின் கீழ்க்கண்ட வசனம் அதனுடைய ஆன்மீகத் தன்மையை அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிடுகின்றது.

> நாம் இந்த குர்ஆனை ஒரு மலையின் மீது இறக்கியிருந்தால் அது பணிவுள்ளதாகவும்,

அல்லாஹ்வின் அச்சத்தால் அது பிளந்து போவ தாகவும் நீர் கண்டிருப்பீர் நாம் இந்த உதார ணங்களை மக்கள் முன் விளக்கிக் கூறுவது அவர்கள் (தங்களின் நிலைமையைப் பற்றி) சிந்திக் கட்டும் என்பதற் காகத் தான் (குர்ஆன் 59:21)

நபிகள் நாயகம்(ஸல்) நவின்றுள்ளதாவது:

மக்கள் நம்ப வேண்டும் என்பதற்காக அனைத்து நபிமார்களுக்கும் அற்புதங்களை நிகழ்த்தும் வல்லமை வழங்கப்பட்டன. எனக்கு வழங்கப்பட்ட அற்புதம் குர்ஆனேயாகும்.

# குர்ஆனின் தாக்கம்

மனித வரலாற்றில் ஈடுஇணையற்ற ஒரு தாக்கத்தை குர்ஆன் ஏற்படுத்தியுள்ளது. மிக அதிக மக்களால் படிக்கப் பட்ட, ஓதப்பட்ட, மனப்பாடம் செய்யப்பட்ட, ஆய்வு செய்யப்பட்ட, விவாதிக்கப்பட்ட ஒரே மதிப்பிற்குரிய வேத நூல் குர்ஆன் மட்டுமே. (பைபிளை விடவும்) என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இருபதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த குர்ஆன் மொழி பெயர்ப்பாளரும், விளக்கவுரையா ளருமான முஹம்மது ஆஸாத் கூறுவதைப் பார்ப்போம்:-

உலகின் சமய, சமூக, அரசியல் வரலாற்றில் அடிப்படையான தாக்கத்தை உருவாக்கிய நமக்குத் தெரிந்த ஒரே தனித்த வேத நூல் குர்ஆன் மட்டுமே. அதன் செய்தியை முதன் முதலில் கேட்டவர்களின் வாழ்க்கையிலும் அவர்கள் மூலமாக அதனைப் பின்பற்றியோரின் சந்ததிகளிடமும் அவர்களது நாகரீகத்திலும் அது ஏற்படுத்திய உடனடியான தாக்கத்தைப் போல் வேறு எந்த ஒரு புனித நூலும் ஏற்படுத்த வில்லை. அது அரேபியாவை குலுங்கவைத்தது. சண்டை யிட்டுக் கொண்டிருந்த இனக்குழுக்களுக்கிடையே ஒரு நாட்டை உருவாக்கியது. சில நூற்றாண்டுகளுக்குள்ளாகவே அரேபியாவின் எல்லைகளைத்தாண்டி அதன் செய்திகள் பரவின. ஒரு கொள்கை சார்ந்த முதல் சமுதாயத்தை அது உருவாக்கியது. விழிப்புணர்வையும், அறிவு ஞானத்தையும் வலியுறுத்தியதன் மூலம் அது தன்னைப் பின்பற்று வோரிடையே அறிவின்பால் ஆர்வத்தையும், சுதந்திரமாக சிந்தித்திடும் உணர்வையும் ஏற்படுத்தியது. அதன் விளைவாகக் கல்விஞானமும், அறிவியல் ஆய்வும் கொண்ட போற்றத்தக்க ஒரு சகாப்தம் உருவாகியது. அது இஸ்லாமிய உலகை கலாச்சார மேன்மையின் உச்சத்திற்குக் கொண்டு சென்றது. அது உருவாக்கிய கலாச்சாரம் எண்ணற்ற வழிகளில் மத்திய கால ஐரோப்பாவின் இதயத்தினுள் ஊடுருவிச் சென்று மேற்கத்திய கலாச்சாரத்தின் புத்தாக்கத்திற்கு உறுதுணை புரிந்தது. அதன் காரணமாக மறு மலர்ச்சி ஏற்பட்டது. அறிவியல் உலகம் என்று அழைக்கப்படுகின்ற இன்றைய நமது உலகம் உருவானதற்கு அதுவே பெரிதும் காரணமாக இருந்தது.

# இறை வெளிப்பாடு

வானவர் ஜிப்ரீல்(அலை), நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் முன்பு பலமுறை தோன்றினார். அவர், சில சமயங்களில் தெய்வீக அம்சம் கொண்ட வானவர் உருவத்திலும், சில சமயங்களில் மனித உருவிலும் தம்முன் தோன்றியதாக நபிகளார் தெவித்துள்ளார்கள். மற்ற நேரங்களில் மணி ஒலிப்பது போல் ஒரு சப்தம் கேட்கும். உடனே இறை வெளிப்பாடுகள் அறிவிக்கப்படும். அதனை உற்றுக் கவனிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதால் நபிகளாருக்கு மூச்சுத் திணறுவது போன்ற ஒரு உணர்வு ஏற்படும். கடைசியில் சொல்லப்பட்ட முறை அவர்களுக்கு வேதனையை அளித்த போதிலும், முடிவில் தங்களுக்கு அருளப்பட்ட வசனங்களை அவர்களால் வார்த்தைக்கு வார்த்தை திருப்பிச் சொல்ல முடிந்தது. 23 ஆண்டுகளாக வானவர் ஜிப்ரீல்(அலை) சூழ்நிலைகளின் தேவைக்கு ஏற்ப இறைவசனங்களை நபிகளாருக்கு வெளிப்படுத்திக் கொண்டே வந்தார். அப்படி அருளப்பட்ட வசனங்களும், அத்தியாயங்களுமே இறுதியில் குர்ஆனாக வடிவம் பெற்றது.

இறைவெளிப்பாடுகள் குர்ஆனில் வரிசைக்கிரம முறையில் தொகுக்கப்படவில்லை. மாறாக. வானவர் ஜிப்ரீல் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கட்கு குறிப்பாக உணர்த்தியதன் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் ரமலான் மாதத்தின் போது அதுவரை தமக்கு அருளப் பட்டிருந்த குர்ஆன் வசனங்களை வானவர் ஜிப்ரீல்(அலை) கோடிட்டுக் காட்டிய முறையில் நபிகளார் அவருக்கு ஓதிக் காண்பிப்பார்கள். இது ஒரு சரிபார்ப்பு நிகழ்ச்சி போல் அமைந்திருந்தது. இப்படி 23 ஆண்டுகள் அருளப்பட்ட வசனங்களின் தொகுப்பே குர்ஆன் ஆகும்.

# குர்ஆனைத் தொகுத்தல்

*குர்ஆனின் ஒவ்வொரு வார்த்தையும் வானவர் ஜிப்ரீல்(அலை) மூலமாக நபிகள் நாயகம்(ஸல்) அவர்கட்கு அருளப்பட்ட உடனேயே பதிவு செய்யப்பட்டது. குர்ஆன் வசனங்கள் எந்த முறையில் ஒன்று சேர்த்து வைக்கப்பட வேண்டுமென்று வானவர் ஜிப்ரீல்(அலை) நபிகளாருக்கு அறிவித்திருந்தார். வசனங்கள், அவை அருளப்பட்ட வரிசைக்கிரம முறையிலோ அல்லது பொருள் சார்ந்த முறையிலோ தொகுப்பப்படவில்லை. அது இறைவனின் திட்டப்படியே தொகுக்கப்பட்டுள்ளது. இதுவே அதன் இணையற்ற சிறப்பை எடுத்துக் கூறும் இன்னொரு அம்சமாகும். நபிகளாரின் செயலாளராகவும், எழுத்தாளராகவும் இருந்த ஜைது பின் தாபித்(ரலி), நபிகளார் எப்படி சொன்னார்களோ அதே முறையில் குர்ஆன் வசனங்களைப் பதிவு செய்தார். தான் பதிவு செய்தவற்றை நபிகளாருக்கு அவர் மீண்டும் படித்துக் காட்டினார்.*

*குர்ஆனில் 144 அத்தியாயங்கள் உள்ளன. சுருக்கமான துவக்க அத்தியாயமான சூரா பாத்திஹாவைத் தொடர்ந்து வரும் இரண்டாவது அத்தியாயமான அல் பகறா 286 வசனங்களைக் கொண்ட மிகப் பெரிய அத்தியாயமாகும். படிப்படியாக பல குறுகிய அத்தியாயங்கள் வருகின்றன. 108 வது அத்தியாயமான "அல் கவ்ஸர்" 3 வசனங்களை மட்டுமே கொண்ட மிகச் சிறிய அத்தியாயமாகும். மொத்தத்தில் குர்ஆனில் 6666 வசனங்கள் உள்ளன. நபிகளார் மக்காவில் இருந்த போது அருளப்பட்ட இறை வசனங்களுக்கு "மக்கி" என்றும், மதீனாவில் இருந்த போது அருளப்பட்ட இறை வசனங்களுக்கு "மதனி" என்றும் அறியப்படுகின்றன.*

*குர்ஆன் 30 பாகங்களாகப் (ஜுஸ்வு) பிரிக்கப்பட்டுள்ளது. இவை ஓரளவு சம அளவில் உள்ளன. ஓதுவதற்கு வசதியாக இப்படி பிரிக்கப்பட்டுள்ளது.*

ஆரம்ப கால முஸ்லிம்களில் பலர், வசனங்கள் அருளப்பட்ட உடனேயே அவற்றை மனப்பாடம் செய்து கொண்டனர். மனனம் செய்த ஹாபிழ்களில் குறிப்பிடத் தக்கவர்கள் முயஸ்பின் ஜபல் உபாதா, அபூதர்தா, அபூ அயூப்அல் அன்ஸாரி மற்றும் உபய்பின் காப் ஆகியோராவர்.

கி.பி. 632ல் நபிகளாரின் மறைவிற்குப் பின்னர், ஹழ்ரத் உமர்(ரலி) அப்போது கலிபாவாக இருந்த அபூபக்ர்(ரலி) அவர்களிடம் குர்ஆனை ஒரே நூலாகத் தொகுக்க வேண்டுமென்று ஆலோசனை கூறினார். அதுவரை குர்ஆன் தனித்தனிப் பிரிவுகளாக எழுதி வைக்கப்பட்டிருந்தது. ஜைது பின் தாபித் (ரலி) தலைமையில் இந்தப் பணியைச் செய்து முடிப்பதற்கு குழு ஒன்று அமைக்கப்பட்டு அந்தக் குழுவிடம் குர்ஆனை ஒரே நூலாகத் தொகுக்கும் பணி ஒப்படைக்கப்பட்டது.

நபிகளார் காலத்தில் குர்ஆன் எப்படி பதிவு செய்யப் பட்டிருந்ததோ, அப்படியே அதனைத் தொகுத்திட வேண்டும் என்பதில் பெரிதும் கவனம் செலுத்தப்பட்டது. மிகக் கவனமான சரிபார்ப்பிற்குப் பின்னர் அந்தப் பணி நிறைவு பெற்றது. உமர் (ரலி) ஆட்சிக் காலத்தின் போது தொகுக் கப்பட்ட குர்ஆன் பிரதி ஒன்று நபிகளாரின் மனைவியர்களில் ஒருவரான ஹப்ஸா (ரலி) அவர்களிடம் இருந்தது.

பின்னாட்களில் முஸ்லிம் நாடுகளில் முழுவதிலும் குர்ஆனைக் கற்றுக் கொடுக்கும் பல மதரஸாக்கள் நிறுவப்பட்டன. உமர்(ரலி) ஆட்சிக் காலத்தின் போது டமாஸ்கஸ் நகரில் புகழ்பெற்ற ஹாபிழான அபூதர்தாவை தலைமை ஆசிரியராகக் கொண்டு நடைபெற்ற மதரஸாவில் 1600 மாணவர்கள் பயின்றனர்.

பின்னர் கலீபா உதுமான்(ரலி) எடுத்த சில நடவடிக்கைகள் காரணமாக குர்ஆனை ஒரே சீரான முறையில் ஓதிடும் முறை சாத்தியமாகியது. கலீபா உதுமான்(ரலி) காலத்தைச் சார்ந்த குர்ஆனின் இரண்டு அசல் பிரதிகள் தற்போதும் உள்ளன. ஒரு பிரதி இஸ்தான்புல்லிலுள்ள டாப்காபி அருங்காட் சியகத்திலும், இன்னொரு பிரதி உஸ்பெஸ்கிஸ்தானிலுள்ள தாஷ் கண்டிலும் வைக்கப்பட்டுள்ளன. கராச்சியிலுள்ள தேசிய அருங்காட்சியகத்தில் தாஸ்கண்டிலுள்ள அசல் பிரதியின் போட்டோ பிரதி வைக்கப்பட்டுள்ளது.

# சீறா

வரலாற்றின் முழு வெளிச்சத்தில் வாழ்ந்த நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு "சீறா" என்றழைக்கப்படுகின்றது. நபிகளாரின் சொல், செயல் அனைத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளன. நபிகளாருக்கு எழுதப் படிக்கத் தெரியாத காரணத்தால், அவர்களுக்குப் பணிவிடை செய்த 45 எழுத்தர்கள் கொண்ட குழு ஒன்று அவர்களுடைய பொன் மொழிகளையும், அறிவுரைகளையும் செயற் பாடுகளையும் பதிவு செய்துள்ளது. தம்முடைய முக்கியமான முடிவுகளைப் பதிவு செய்யுமாறு நபிகளாரே வலியுறுத்தி யுள்ளார்கள். அரசியல் உடன்படிக்கைகள், இராணுவ ஜாபிதாக்கள்(பட்டியல்கள்), அதிகாரப்பூர்வ அரசு கடிதப் போக்குவரத்துக்கள் ஆகிய அனைத்தும் பதப்படுத்தப்பட்ட தோல்களில் எழுதப்பட்டன. இத்தகைய முந்நூறுக்கும் மேற்பட்ட ஆவணங்கள் தற்போதும் காணக்கிடக்கின்றன. நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் எப்படிப் பேசினார்கள், உட்கார்ந்தார்கள், உறங்கினார்கள், உடையணிந்தார்கள், நடந்தார்கள், ஒரு கணவராக, ஒரு தந்தையாக, ஒரு மருமகனாக எப்படி நடந்து கொண்டார்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோரிடம் எப்படி நடந்து கொண்டார்கள், விலங்குகளை எங்ஙனம் நடத்தினார்கள், வணிக விஷயங்களில் எப்படி நடந்து கொண்டார்கள், ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டோரிடம் எப்படி நடந்து கொண்டார்கள், முகாம்களிலும், இராணுவப் பாசறைகளில் எப்படிச் செயல்பட்டார்கள், போர்களில் அவர்கள் நடந்து கொண்ட விதம், அரசியல் அதிகாரத்தை செலுத்திய முறை, அதிகாரம் பற்றிய அவர்களின் நிலைப்பாடு, தனிப்பட்ட பழக்கங்கள், விருப்பு வெறுப்புகள், தங்களது மனைவியரிடத்தில் அவர்கள் கொண்டிருந்த தனிப்பட்ட

உறவுகள் போன்ற மிக நுட்பமான அனைத்து விஷயங்களும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. நபிகளார் இறந்த சில ஆண்டுகளுக்குள்ளாகவே அவர்களின் முழு வாழ்க்கை வரலாறும் எழுத்து வடிவில் மக்களுக்குக் கிடைத்தது. நபிகளார் இறந்த நூறு ஆண்டுகளுக்குள்ளாகவே இப்னு இஸ்ஹாக் என்பவரால் எழுதப்பட்ட "சீரத் ரசூல் அல்லாஹ்" என்ற நூலே நபிகளாரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் ஆரம்ப காலத்திய சிறப்பான நூல்களில் ஒன்றாகும்.

## ஹதீஸ்கள்

குர்ஆனின் முதல் வசனம் இறக்கியருளப்பட்ட நாளிலிருந்து, நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மரணிக்கும் வரை அவர்கள் கூறிய நன்னெறி மொழிகள் மற்றும் உரைகளின் தொகுப்பே ஹதீஸ் எனப்படும். ஹதீஸ் என்பதன் நேரடியான பொருள் "அறிக்கை" அல்லது அறிவிப்பு என்பதாகும். பின்னர் இவை நபிகளாரின் பொன் மொழிகள் அல்லது மரபுகள் என வழங்கப்பட்டன. நபிகளாரின் ஆயுட் காலத்தில் அவர்கள் கூறிய பொன்மொழிகள் அவர்கள் தம் தோழர்களாலும், எழுத்தர்களாலும், ஈச்ச இலை நார்களிலும், மிருகத்தின் தோல்களிலும், வெள்ளைக் கற்களிலும், எலும்புத் தட்டுகளிலும் எழுதப்பட்டன. பலர் அவற்றை மனப்பாடமும் செய்திருந்தனர். நபிகளாரின் மறைவிற்குப் பின்னர் முஸ்லிம்கள் ஹதீஸ்களை தெரியப்படுத்தவும், அவற்றின் மெய்த்தன்மையை சரிபார்த்து உறுதிசெய்யவும் ஒரு சிறந்த அறிவியல் முறையை உருவாக்கி இருந்தனர்.

அனஸ்(ரலி) 10வயது நிரம்பப் பெற்றவராக இருந்த போதே எழுதவும் படிக்கவும் கற்றிருந்தார். அவருடைய பெற்றோரின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு நபிகளார் அவரைத் தனது தனிப்பட்ட உதவியாளராகவும், எழுத்தராகவும் நியமித்தார்கள். நபிகளாரின் எழுத்தர்கள் குழுவில் ஒருவராகச் சேர்ந்து கொண்ட அனஸ்(ரலி), இரவும் பகலும் நபிகளாருடனேயே இருந்தார். நபிகளாரின் இறப்பிற்குப் பின்னர், அனஸ்(ரலி) மிகப் புகழ் வாய்ந்த ஹதீஸ் அறிவிப்பாளராக விளங்கினார். அவர் தான் வைத்திருந்த

ஆவணங்களின் பக்கங்களை விரித்துக் காட்டி "இவை நான் பதிவு செய்து வைத்துள்ள நபிகளாரின் பொன்மொழிகள். இவற்றை நான் நபிகளாரிடம் படித்துக் காட்டி சரிபார்த்துள்ளேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆரம்பகால முஸ்லிம் அறிஞரான புகழ் பெற்ற இமாம் புஹாரி 7275 ஹதீஸ்களைத் தொகுத்துத் தந்துள்ளார். "அவரது ஸஹீஹ் புஹாரி" என்ற நூலில் இவை தொகுக்கப்பட்டுள்ளன. இமாம் முஸ்லிம் 9200 ஹதீஸ்களைத் தொகுத்துள்ளார். இவை அவரது ஸஹீஹ் முஸ்லிம் என்ற தொகுப்பில் உள்ளன. இவை தவிர மேலும் ஆறு அறிஞர்களால் தொகுக்கப்பட்டுள்ள நம்பகத் தன்மை வாய்ந்த ஹதீஸ் தொகுப்புகளும் உள்ளன. இந்த ஹதீஸ் தொகுப்புகள் அவற்றைத் தொகுத்தவர்களின் பெயராலேயே வழங்கப்படுகின்றன. புஹாரி, முஸ்லிம் ஹதீஸ் தொகுப்புகள் தவிர, திர்மிதி, இப்னு மாஜா, அபூதாவூது மற்றும் அன் நிஸால் ஆகிய தொகுப்புகளும் உள்ளன.

# சுன்னாஹ்

சீறாவும், ஹதீஸூம் ஒன்றிணைந்து சுன்னாஹ் உருவாகியது. சுன்னாஹ் என்பதற்கு வழிமுறை, உதாரணம் வழி என்ற பொருள்கள் உள்ளன. நபிகள் நாயகம் (ஸல்) மக்களுக்கு விடுத்த செய்தியின் முழுமையான பகுதியே சுன்னாஹ்வாகும். இது அவர்களின் சொற்கள், செயல்கள், அவர்களது புனிதமான இலக்கு ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். எனவே ஒவ்வொரு முஸ்லிமும் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதற்கான வழிகாட்டியாக இது கருதப்படுகின்றது. சுன்னாஹ்வின் மூலமாகவே, தொழுகை, நோன்பு, ஹஜ் ஆகிய இஸ்லாமியக் கடமைகளின் முக்கிய அம்சங்களை முஸ்லிம்கள் அறிந்து கொள்கின்றனர். அதே நேரத்தில் அறநெறி மற்றும் சமுதாய விஷயங்களில் சுன்னாஹ் ஒரு வழி காட்டியாகவும் விளங்குகின்றது. எனவே நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வாழ்க்கையையும், பொன்மொழிகளையும் அப்படியே பின்பற்றி நடப்பதன் மூலம் ஒரு முஸ்லிம் இறை பக்தி மிக்க ஒரு வாழ்க்கையைத் தேடிக் கொள்ள முடியும். சுன்னாஹ் இஸ்லாமிய வாழ்க்கையின் வழி முறையாகும்.

இஸ்லாமியச் சட்டங்களின் மூலாதாரமாகவே சுன்னாஹ் இருக்கின்றது. குர்ஆனும், சுன்னாஹ்வும் இஸ்லாத்தின் நடைமுறை மற்றும் கொள்கை விளக்கத்தின் அம்சங்களாகக் கருதப்படுகின்றன.

# 7

# நம்பிக்கையை நடைமுறைப்படுத்துதல்

இந்த அத்தியாயத்தில் இஸ்லாமிய நம்பிக்கையின் முக்கியமான விஷயங்களைப் பற்றி ஆராய விருக்கிறோம். அவையாவன: வணக்கம் (தொழுகை), நோன்பு, ஜகாத், ஹஜ் (புனிதப் பயணம்.) அல்லாஹ் வகுத்துத் தந்துள்ள இந்த வழிமுறைகள் மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் ஆன்மீக நோக்கங்களை அடையவும் உதவுகின்றன. இந்தக் கடமைகளில் சிலவற்றை தினந்தோறும் சிலவற்றை வாரந்தோறும், சிலவற்றை மாதந்தோறும், சிலவற்றை ஆண்டுக்கு இருமுறையும், சிலவற்றை வருடம் ஒரு முறையும் சிலவற்றை வாழ்க்கையில் ஒரு முறையும் நிறைவேற்ற வேண்டும். எனவே வாரத்தின் அனைத்து நாட்களிலும், மாதத்தில் அனைத்து வாரங்களிலும், வருடத்தின் அனைத்து மாதங்களிலும், வாழ்க்கையின் அனைத்து வருடங்களிலும் இக் கடமைகளை நிறைவேற்ற வேண்டியதுள்ளது. இதன் காரணமாக முஸ்லிம்களின் வாழ்க்கை முழுவதும் தெய்வீகத் தொடுதல் இருந்து கொண்டேயிருக்கிறது. நம்பிக்கை, மனிதனை முழுமையான அர்ப்பணிப்பு உணர்வில் ஒரே மாதிரியாக இருக்கச் செய்வதோடு, அவன் தனது நடைமுறையில் உறுதியாக இருக்கவும் வழி செய்கிறது.

## நம்பிக்கையின் பொருத்தம்

இஸ்லாத்தில் நம்பிக்கைக்கும், நடைமுறைக்கு மிடையேயுள்ள உறவானது முழு சமயத்தின் மீதும் ஒரு தெளிவான பிரதிபலிப்பையும் அதன் போதனைகளில் காணக் கிடக்கின்ற ஆழமான தத்துவத்தையும் வெளிப்படுத்துகின்றது. ஆன்மாவுக்கும், உடலுக்கும் ஆவிக்கும், பொருளுக்கும், சமயத்திற்கும் வாழ்க்கைக்கும் இடையில் இஸ்லாம் எந்த விதமான பிரிவுகளையும் அங்கீகரிக்க வில்லை. இறைவன் எந்த வழியில் மனிதனைப் படைத்தானோ அப்படியே இஸ்லாம் அவனை ஏற்றுக்கொள்கிறது. அவனது ஆன்மாவும், உடலும் ஒன்றிணைந்துள்ள இயற்கைத் தன்மையை அது அங்கீகரிக்கிறது. அது அவனது ஆன்மீகத் தன்மையைப் புறக்கணிக்கவில்லை. அப்படிச் செய்தால் அவன் ஒரு விலங்கைப் போலாவான். அவனது உடல் ரீதியான தேவைகளையும், அது குறைத்து மதிப்பிடவில்லை. அப்படிச் செய்தால் அவன் தேவதூதனாகி விடுவான். அப்படி மனிதன் இல்லை இருக்கவும் முடியாது.

மனிதனின் இயற்கையான சுபாவத்தை அப்படியே இஸ்லாம் முழுமையாக அங்கீகரிக்கிறது. மனிதனுடைய ஆன்மீகம் மற்றும் பொருள் சார்ந்த நிலையினை மேம்படுத்த அது மிகுந்த அக்கறை எடுத்துக்கொள்கிறது. சமயத்தை ஒரு தனிப்பட்ட விஷயமாக இஸ்லாம் கருதவில்லை, அல்லது பொதுவான வாழ்க்கை முறையின் ஒரு தனி அம்சமாகவும் அதனைக் கருதவில்லை. சமயம், மனிதர்களுடைய தனிப்பட்ட மற்றும் பொது வாழ்க்கையில் எந்த விதமான தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லையென்றால், அதற்கு எந்த வித மதிப்பும் இல்லை. அதே நேரத்தில் இறைச் சட்டங்களின் படி வாழ்க்கையை அமைத்துக் கொள்ளாவிட்டால், அந்த வாழ்க்கை பொருளற்றதாகிவிடும். எனவே ஒருவனின் தனிப்பட்ட நடத்தை, சமூகத்துடனான அவனது நடத்தை, உழைப்பு, மொழி, பொருளாதாரம், அரசியல், தேசம் மற்றும் சர்வதேச விவகாரங்கள் என வாழ்க்கையின் அனைத்து அம்சங்களைப் பற்றியும் இஸ்லாம் விரிவாகப் பேசுகின்றது. ஒரு மனிதனுடைய அன்றாட வாழ்க்கையிலிருந்து சமயம் பிரிக்கப்படுவதை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை.

உண்மையான சமயத்திற்கும், பொருள் பொதிந்த வாழ்க்கைக்கு மிடையிலான கருத்துப் பரிமாற்றம் மிகவும் முக்கிய மானதாகும். எனவே தான் இஸ்லாம் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் ஊடுருவி, இறைவன் ஏற்றுக் கொள்ளக் கூடிய முறையிலும், மனிதனுக்கு நன்மை பயக்கக் கூடிய முறையிலும் மனிதனின் செயல்பாடுகள் முழுமையாகவும், உறுதியாகவும் இருந்திட வேண்டுமென்று வலியுறுத்துகின்றது. உண்மையான சமயத்திற்கும் அன்றாட நடைமுறை வாழ்க்கைக்குமிடையேயுள்ள தொடர்பு காரணமாகவே "எனக்காக அல்லது இந்த உலக வாழ்க்கைக்காக ஆறு நாட்கள்; என்னுயை எஜமானனான இறைவனுக்காக ஒரு நாள்" என்ற தத்துவத்தை இஸ்லாம் ஏற்றுக்கொள்ளவில்லை.

அதைப்போலவே ஒரு மனிதன் வாரத்தின் ஆறு நாட்களை தனது மகிழ்ச்சிக்காகவோ அல்லது முழுவதும் தியானத்திற்கோ செலவிட்டு விட்டு ஒரு நாளை தனக்கென வைத்துக் கொண்டால் அதுவும் எந்த வகையிலும் நல்லதல்ல. சமநிலை அப்போதும் சரியாக இருக்காது.

## இஸ்லாத்தின் ஐந்து தூண்கள்

குர்ஆனில் காணப்படும் செய்திகளும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் ஹதீஸ்களும் (பொன்மொழிகள்) முஸ்லிம்களின் தனிப்பட்ட வாழ்க்கை முறையும் கூட்டு வாழ்க்கை முறையும் எப்படி அமைய வேண்டுமென்பதை விரிவான முறையில் விளக்கிக் கூறுகின்றன. நம்பிக்கையின் மையமாக ஐந்து தூண்கள் அல்லது ஐந்து அடிப்படைக் கடமைகள் இருக்கின்றன. இக்கடமைகளை முஸ்லிம்கள் அனைவரும் தவறாது கடைப்பிடிக்க வேண்டும்.

நபிகளாரின் ஹதீஸில் (பொன்மொழி) கூறப்பட்டுள்ள அந்த ஐந்து தூண்களாவன:

| | |
|---|---|
| 1. ஷஹாதத் | : நம்பிக்கை உறுதி மொழி |
| 2. ஷாலா | : தினசரி ஐந்து வேளைகள் தொழுகை புரிதல் வெள்ளிக் கிழமை சிறப்புத் தொழுகை; புரிதல் |
| 3. சியாம் | : ரம்ஜான் மாதம் முழுமையும் நோன்பு நோற்றல் |
| 4. ஜகாத் | : ஏழைகளுக்கு வழங்குதல் |
| 5. ஹஜ் | : மக்காவிற்குப் புனிதப் பயணம் மேற்கொள்ளல் |

## ஷஹாதத் அல்லது நம்பிக்கை உறுதிமொழி

இஸ்லாமிய சமயத்தில் இணைவதற்கு ஒருவன் எடுத்துக் கொள்ள வேண்டிய உறுதிமொழியே ஷஹாதத் எனப்படும். இதனை அரபியில் "லாயிலாஹா இல்லல்லாஹு" முஹம்மது

ரஸுலுல்லாஹ்" என்று கூறலாம். இதன் பொருள் "அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் யாரும் இல்லை. முஹம்மது நபி அவனது தூதராவார்" என்பதாகும்.

குர்ஆனை இறைவனுடைய வார்த்தை என்று ஏற்றுக் கொண்டவர்களும், முஹம்மது(ஸல்) அவர்களை இறைவனின் தூதர் என்று ஏற்றுக் கொண்டவர்களுமே முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுகின்றனர். ஷஹாதத் என்ற நம்பிக்கை உறுதி மொழியை எடுத்துக் கொண்டவரே முஸ்லிமாக முடியும்.

இந்த சிறிய உறுதி மொழி பாரதூரமான பல கருத்துக்களை உள்ளடக்கியதாகும்.

1. இறைவனின் விருப்பத்தின் காரணமாகவே இந்த உலகில் உள்ள அனைத்தும் (மனிதன், பிற படைப்புகள்) இருக்கின்றன.

2. இறைவனின் கருணையினால் நாம் வாழ்கின்ற காரணத்தால் நாம் முழுவதும் அவனையே சார்ந்துள்ளோம். நமக்கும் அவனுக்குமிடையிலான உறவு ஒரு எஜமானனுக்கும் அவனது வேலைக்காரனுக்குமிடையிலான உறவைப் போன்றதாகும்.

3. ஆகையால் நம்முடைய செயல்கள், சிந்தனைகள் அனைத்திற்கும் நாம் இறைவன் முன்னிலையில் பொறுப்பாளிகளாக இருக்கின்றோம். இறுதித் தீர்ப்பு நாளின் போது, உலகில் நாம் புரிந்த செயல்களுக்காக இறைவனிடம் கணக்குச் சமர்ப்பிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம். மறுமை உலகில் நாம் செல்ல வேண்டிய இடத்தை அவனே தீர்மானிப்பான்.

4. மறுமை வாழ்வுக்கு நம்மைத் தயார் செய்து கொள்வதற்காக நாம் இறைவனின் கட்டளைகளுக்கு ஏற்ப பொறுப்பான அறநெறிமிக்க வாழ்க்கையை நடத்த வேண்டும்.

5. இறைவனின் கட்டளைகளை அவனது தூதர்கள் மூலமாகவே நாம் தெரிந்து கொள்ள முடியும். இறைவன் பால் நம்பிக்கை கொள்வதற்கு அவனது வேத வெளிப்பாடுகளான இறை நூல்கள் மீதும் அவனது தூதர்கள் மீதும் நம்பிக்கை கொள்வது மிகவும் அவசியமானதாகும்.

6. ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு சமூகத்திற்கும் அனுப்பப்பட்ட அனைத்து இறை தூதர்களிலும் முஹம்மது நபி(ஸல்) அவர்களே இறைவனின் இறுதித் தூதராவார்கள். இறுதி நபி என்ற முத்திரை பெற்றவர் அவர்களேயாவர். அவர்களது காலத்தில் தான் வேத வெளிப்பாடுகள் முழுமை பெற்றன.

7. இறைவன் மனித அறிவிற்கு அப்பாற்பட்டவனாக இருக்கின்ற காரணத்தால் தனது செய்தியை தனது பணியாளர்களான வானவர்கள் மூலமாக தனது தூதர்களுக்குத் தெரியப்படுத்தினான்.

## சமய நடைமுறைகளும், இஸ்லாத்தில் பக்தி வாழ்க்கையும்

தன்னை வணங்குவதற்காகவே அல்லாஹ் மனித இனத்தைப் படைத்துள்ளான். குர்ஆனில் அவன் கூறுவதாவது:

*நான் ஜின்களையும், மனிதர்களையும் எனக்கு அடிபணிய வேண்டும் என்பதற்காகவேயன்றி வேறு எதற்காகவும் படைக்கவில்லை ( குர்ஆன் 51:56)*

## இபாதத்

வணக்க வழிபாட்டுச் சேவையின் அரபு வார்த்தையே இபாதத் என்பதாகும். இது அடிமை என்று பொருள் தரும் "இப்து" என்ற வேர்ச் சொல்லிலிருந்து வந்ததாகும். வணக்க வழிபாடு என்பது ஒரு அடிமை தனது எஜமானனுக்குச் செய்யும் பணி என்றும் சேவை என்பது எஜமான் என்ன விரும்புகின்றானோ அதன்படி செய்வது என்றும் கூறலாம்.

## வணக்கச் சேவை

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நவின்றதாவது:

"வணக்கம் சமயத்தின் தூணாகும்". மேலும் அவர்கள் கூறியதாவது "இறைவனுக்கு அடிபணிவதே இஸ்லாமாகும்.

"எனவே வணக்க வழிபாட்டை ஒருவன் மேற்கொள்ள வேண்டும். வருடாந்திர நோன்பு நோற்க வேண்டும். ஹஜ் செய்ய வேண்டும். ஏழைகளுக்கு ஜகாத் வழங்க வேண்டும்.

ஒவ்வொரு நாளும் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் ஐந்து வேளை தொழுகை நிறைவேற்ற வேண்டும். வெள்ளிக் கிழமையன்று சிறப்புத் தொழுகை நிறைவேற்ற வேண்டும்.

> *திண்ணமாக நான் தான் அல்லாஹ். என்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. எனவே எனக்கு அடி பணிவீராக! என்னை நினைவு கூர்வதற்காக தொழுகையை நிலைநிறுத்துவீராக!*
>
> *(குர்ஆன் 20:14)*

# பள்ளிவாசல் (மஸ்ஜித்)

1. பள்ளிவாசல் என்பது முஸ்லிம்கள் ஒன்று கூடித் தொழுகை நடத்தும் ஒரு இடமாகும். இங்கு தலை சாய்த்து இறைவனைத் தொழுகின்றனர்.

2. பல பள்ளி வாசல்களில் குப்பாயங்களும், மினராக்களும், தொழுவதற்கான பெரிய அறைகளும் உள்ளன.

3. எந்த ஒரு சிலையோ, உருவமோ, புனிதச் சின்னமோ, புனித நூலோ தொழுகையில் ஈடுபட்டிருப்போரின் முன்னால் வைக்கப்பட்டிருக்கவில்லை.

4. பள்ளிவாசலில் நுழைய கட்டணம் எதுவும் இல்லை. அங்கு தொழுகை புரியும் போது தேங்காய், இனிப்புகள், நறுமணப்பத்திகள் போன்ற பொருட்கள் எதுவும் வைக்கப்படுவதில்லை.

5. பள்ளிவாசல் முஸ்லிம்கள் தொழுகை நடத்துகின்ற ஒரு இடமாக மட்டுமின்றி, ஒரு தகவல் நிலையமாகவும், கல்வி நிலையமாகவும், பிரச்சினைகளைத் தீர்க்கின்ற ஒரு இடமாகவும் பயன்படுகின்றது.

6. முஸ்லிம்கள் வரிசையாக நின்று கொண்டு தொழுகை நடத்துகிறார்கள். தொழுகை நடைபெறும் போது எந்த ஒரு மனிதருக்கும் சிறப்புச் சலுகை அளிக்கப்படுவதில்லை. ஒருவருடைய சமூக, அரசியல், பொருளாதார தகுதிக்குத் தகுந்தாற்போல் அவருக்கு முன்வரிசைகளில் இடம் எதுவும் ஒதுக்கப்படுவதில்லை.

7. வானில் சூரியன் தெரிகின்ற நிலைமைக்கு ஏற்ப பள்ளி வாசலின் தொழுகை நேரம் நிர்ணயிக்கப்படுகிறது.

அ) சூரிய உதயத்திற்குச் சிறிது நேரத்திற்கு முன்னர் காலைத் தொழுகை (பஜ்ர்) நிறைவேற்றப்படுகிறது.

ஆ) நண்பகல் தொழுகை (லுஹர்) சூரியன் சரியத் துவங்கும் போது நிறைவேற்றப்படுகிறது.

இ) மூன்றாவது தொழுகையான அஸர், பொருட்களின் நிழல் அவற்றின் நீளத்தை விட இரண்டு மடங்கு அதிகமாகத் தெரியும் போது நிறைவேற்றப்படுகிறது.

ஈ) சூரியன் மறைந்த உடன் (மாலைத்தொழுகை) மக்ரிப் தொழுகை நிறைவேற்றப்படுகிறது.

உ) ஐந்தாவது தொழுகையான இரவுத் தொழுகை (இஷா) சூரியன் மறைந்து 90 நிமிடங்களுக்குப் பிறகு முற்றிலும் இருள் சூழ்ந்த பின்னர் நடைபெறுகிறது. தொழுகை நேரம் மிகச் சரியான முறையில் பின்பற்றப்படுகிறது. எந்த ஒரு முக்கிய மனிதரின் வசதிக்காகவும் நிர்ணயிக்கப்பட்ட தொழுகை நேரம் மாற்றப்படுவதில்லை.

8. இமாம் தொழுகையைத் தலைமை தாங்கி நடத்துகிறார். பள்ளிவாசலில் எந்த ஒரு அர்ச்சகரும் இல்லை. கற்றறிந்த ஒருவர் அல்லது சமூகத்தில் நன் மதிப்பைப் பெற்ற ஒருவர் தொழுகையைத் தலைமை தாங்கி நடத்தலாம்.

9. முஸ்லிமல்லாதவர்களும் பள்ளிவாசலினுள் வர அனுமதிக்கப்படுகின்றனர்.

10. விலங்குகளைப் பலியிடுவது பள்ளித் தொழுகையின் ஒரு அம்சமாக இல்லை.

11. மது பானங்கள் அருந்திவிட்டு பள்ளிக்கு வரக்கூடாது. பச்சை வெங்காயமோ அல்லது வெள்ளைப் பூண்டையோ உண்டவர்கள், சுத்தமாக வாயினைக் கழுவிய பின்னரே பள்ளிவாசலுக்குள் நுழைய முடியும்.

# "இந்த முழு உலகமும் பள்ளிவாசலே"

இந்த முழு உலகமும் ஒரு பள்ளிவாசல் தான் என நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.அசுத்தமான இடம் என்று உலகின் எந்தப்பகுதியிலும் இல்லை. உலகின் எந்த இடத்திலும் தொழுகை புரியலாம் என நபிகளாருக்கு இறைவன் அனுமதி வழங்கியுள்ளான். எனவே நபிகளாரின் வழியைப் பின்பற்றி முஸ்லிம்கள் உலகின் எந்த இடத்திலும் தொழலாம். முஸ்லிம்கள் பூங்காக்கள், சாலையோரங்கள், ரயில்வே பிளாட்பாரங்கள், விமான நிலைய ஓய்வுப் பகுதிகள் எனப் பல இடங்களிலும் தொழுகை நடத்துவதை நாம் பார்க்க முடியும். முஸ்லிம்களைப் பொறுத்த அளவில் இந்த முழு உலகமும் வணங்குவதற்குரிய இடம் தான். அவர்கள் எங்கிருந்தாலும் நிர்ணயிக்கப்பட்ட நேரங்களில் இறைவனை நினைவு கூர்ந்து தொழுகிறார்கள்.

இந்த சிறிய விளக்கத்திற்கு அப்பாற்பட்டு, நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் அமுத மொழிகளில் (ஹதீஸ்) இதற்கு மிக முக்கியமான விளக்கமும் தரப்பட்டுள்ளது. ஒரு முஸ்லிம் பள்ளிவாசலை அமைதியான இடமாகக் கருதுகிறான். மக்கள் அதனுள் தூய்மையான நிலையிலேயே நுழைகின்றனர். அவர்களது உடலும், அணிந்துள்ள ஆடைகளும், இதயங்களும், உள்ளங்களும் தூய்மையாகவே உள்ளன. இறைவனுக்குப் பணிந்து பணியாளர்களாகவே அவர்கள் பள்ளிவாசலுக்குள் செல்கின்றனர். பள்ளிவாசலுக்குள் நுழையும் போது அஸ்ஸலாமு அலைக்கும் (உங்களுக்கு இறைவனின் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) என்று ஏற்கனவே அங்கு வந்திருப்பவர்கட்கு முகமன் உரைக்கிறார்கள். புதிதாக வந்தவர்கள் அறிவிக்கும் அமைதி உறுதிமொழி இது. பள்ளிவாசல் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் பிரதிபலித்து தௌஹீது (ஓரிறைவன்) மனித சகோதரத்துவம் ஆகிய இரு செய்திகளையும் வழங்குகிறது.

இவ்வாறு உலகமே ஒரு பள்ளிவாசலாக இருக்க வேண்டுமென்று நபிகளார் விரும்புகின்றபோது இந்த உலகத்தையும் ஒரு சமாதான பூமியாக மாற்றவேண்டு மென்றும் வலியுறுத்தினார்கள். அனைத்து மக்களும், அவர்கள் உலகத்தின் எந்தப் பகுதியில் இருந்தாலும் அமைதியினைப் பெற வேண்டும் என்பதே நபித்துவத்தின் குறிக்கோளாகும். ஒரு பள்ளிவாசல் நல்லிணக்கத்தையும், மனித சகோதரத் துவத்தையும் பரப்புவது போல், இந்த உலகமும் ஒரு பள்ளி வாசலைப் போல் இருந்தால் அமைதி என்ற உயரிய கொள்கையை அடையமுடியும்.

# தொழுகை அழைப்பு

மக்களைத் தொழுகைக்கு அழைக்கும் பொருட்டு பள்ளிவாசல் மினாராக்களிலிருந்து பாங்கு (அழைப்பு) சொல்லப்படுகிறது.

ஜாகர்த்தாவிலிருந்து கஸபிளங்கா வரை உள்ள பள்ளி வாசல்களின் மினாராக்களிலிருந்து ஒலிக்கப்படும் அழைப்பின் வாசகங்களை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே அமைத்துத் தந்துள்ளார்கள். கிறிஸ்துவ தேவாலயங்களில் மணி அடிப்பதைப் போன்றும், கோவில்களில் சங்கு ஊதப் படுவதைப் போன்றும் "பாங்கு" தொழுகைக்கான தனித்த ஒரு அழைப்பாகும். பாங்கின் பொருள் மக்களுக்குச் சொல்லப்பட்டால் அது இன்னும் பயனுள்ளதாக அமையும்.

## பாங்கு

| | |
|---|---|
| 1. அல்லாஹுஅக்பர் | - இறைவன் மிகப் பெரியவன் (நான்கு முறை) |
| 2. அஷ்ஹது அன் லாயிலாஹ இல்லல்லாஹ் | - அல்லாஹ்ஒருவனைத் தவிர வேறு இறைவன் இல்லை என்று சாட்சியம் பகர்கிறேன். (இரு முறை) |
| 3.அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ் | - (முஹம்மது நபி அல்லாஹ்வின் தூதர் என்று சாட்சியம் பகர்கிறேன் (இரு முறை) |
| 4. ஹய்ய அலஸ் ஸலாஹ் | - தொழுகைக்கு விரைந்து வாருங்கள் (இரு முறை) |

5. ஹய்ய அலல் ஃபலாஹ் - வெற்றியின் பக்கம் விரைந்து வாருங்கள். (இரு முறை)

6. அல்லாஹு அக்பர் - இறைவன் மிகப் பெரியவன் (இரு முறை)

7. லா இலாஹ இல்லல்லாஹ் - அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவனே உண்மையான இறைவன்.

காலைத் தொழுகைக்கான அழைப்பின் போது "ஹய்யா அலல் பலாஹ்" என்று சொல்லப்பட்டபின்பு "அஸ்ஸலாத்து கைரும் மினன் நௌம்" என்ற (தூக்கத்தை விட தொழுகையே சிறந்தது என்று இதற்குப் பொருள்) வார்த்தைகள் இருமுறை சொல்லப்படுகின்றன.

என்றும் மாறாமல் சொல்லப்படும் இந்த தொழுகை அழைப்பு, இறைவனே மிகப் பெரியவன் (அல்லாஹு அக்பர்) என்ற நம்பிக்கையின் பாற்பட்டதாகும்.

(அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை முஹம்மது(ஸல்) அவர்கள் இறைவனின் தூதர் என்று நான் சாட்சியம் அளிக்கிறேன்)

கிட்டத்தட்ட 15 நூற்றாண்டுகளாக உலகெங்கும் முஸ்லிம்கள் வாழும் இடங்களிலெல்லாம் இந்த அழைப்பு விடுக்கப்பட்டு வருகிறது. பல்வேறு ஓசை நயங்களிலும் எதுகை மோனைகளின் இசை நயத்துடனும் இறைவனின் புகழ் பாடும் இந்த அழைப்பு மக்களை ஆன்மீக வழிக்கு வருமாறு அழைக்கிறது. காலையில் இது மக்களை விழிக்கச்செய்யும் அழைப்பாகவும், மாலையில் நினைவூட்டும் அழைப்பாகவும், இரவில் நிறைவு அழைப்பாகவும் அமைகிறது.

"இறைவன் ஒருவனே" என்பதை மக்களுக்கு நினைவூட்டுகிறது. தங்களது சுறுசுறுப்பான பணிகளுக்கு மத்தியிலும் மக்கள் இறைவனை நினைத்து பள்ளிவாசல்களுக்கு வந்து தொழுது பயபக்தியால் புத்தெழுச்சி பெற்று இறைவனின் பால் தங்களது நம்பிக்கையை உறுதி செய்கிறார்கள்.

# ஒலுச் செய்தல்

## தூய்மை நம்பிக்கையின் பாதி

தொழுகையை நிறைவேற்றுவதற்கு ஒலு மிகவும் அவசியமாகும்.

இறை நம்பிக்கை கொண்டவர்களே! தொழுகைக்காகச் செல்லும் போது உங்கள் முகங்களையும், முழங்கைகள் வரை உங்களுடைய கைகளையும் கழுவிக் கொள்ளுங்கள். இன்னும் உங்களுடைய தலைகளை (நீரால்) தடவிக் கொள்ளுங்கள். மேலும் உங்கள் கால்களை இரு கணுக்கால்கள் வரை கழுவிக் கொள்ளுங்கள் (குர்ஆன் 5:6)

"தூய்மை நம்பிக்கையின் பாதியாகும்" என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். எனவே தொழுவதற்கு முன்பு ஒருவர் தன்னுடைய உடலை சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

உடலின் பாகங்களை கீழ்க்கண்ட முறையில் சுத்தம் செய்யவேண்டும். தூய்மை நோக்கத்தை மனதில் கொள்வது இதன் முதல் படியாகும். பிஸ்மில்லாஹ் (இறைவனின் திருப்பெயரால்) என்று ஆரம்பித்து "இந்தத் தண்ணீரைத் தூய்மையாகவும், தூய்மைப்படுத்துவதற்காகவும் தந்த இறைவனுக்கே புகழனைத்தும்" என்று இறைவனைப் புகழ்ந்து கூறி கைகளை மணிக்கட்டு வரையில் கழுவி, தண்ணீர் கொண்டு வாயைக் கொப்பளித்து, நாசித்துவாரங்களை நீர் கொண்டு சுத்தம் செய்து, முகத்தை நெற்றியிலிருந்து நாடி வரை கழுவி பின்னர் காதுகளைச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். அதன் பின்னர் "இறுதி நாளின் போது என் முகத்தைப் பிரகாச மாக்குவாயாக! இருளடையச் செய்து விடாதே" என்று இறைவனிடம் பிரார்த்தித்து இரு கைகளையும் முட்டுவரை கழுவி, நனைந்த கை விரல்களைக் கொண்டு தலையையும், காதுத் துவாரங்களையும், கழுத்தையும் தடவி "எனக்குப் பயனுள்ள அறிவைக் கற்றுத் தருவாயாக" என்று இறைஞ்சி கணுக்கால் வரை முதலில் வலது காலையும் பின்னர் இடது காலையும் கழுவ வேண்டும். இப்படி மூன்று முறை செய்ய வேண்டும். (போதுமான தண்ணீர் இல்லையென்றால் ஒருமுறை செய்தால் போதும்) "நரகத்தைக் கடந்து செல்கின்ற

*போது எனது பாதங்களை உறுதியாக இருக்கச் செய்வாயாக! அந்த நாளின் போது எனது நண்பர்களின் கால்கள் உறுதியாகவும், எனது எதிரிகளின் கால்கள் தடுமாற்றத்துடனும் இருக்கின்றபோது எனது கால்களைத் தடுமாறச் செய்து விடாதே"*

*நிய்யத் (நோக்கம்) செய்தல்: பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் "அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திருப்பெயரால்"*


இரண்டு கைகளையும், மணிக்கட்டு வரை மூன்று முறை கழுவ வேண்டும்.




விரல்களுக்கிடையில் தண்ணீர் நன்கு பட்டிருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.




கை நிறைய தண்ணீர் எடுத்து மூன்று முறை வாயைக் கொப்பளிக்க வேண்டும்.




நாசித் துவாரங்களுக்குள் தண்ணீரை மூன்று முறை செலுத்தி சுத்தம் செய்ய வேண்டும். பின்னர் மூக்கின் நுனியை சுத்தம் செய்ய வேண்டும்.




முகத்தை மூன்று முறை வலது காதிலிருந்து இடது காது வரையிலும் நெற்றியிலிருந்து தொண்டை வரையிலும் கழுவ வேண்டும்.




முதலில் வலது கையையும் பின்னர் இடது கையையும் முழங்கை வரை மூன்று முறை கழுவ வேண்டும்.




நனைந்த இரண்டு உள்ளங் கைகளையும் நெற்றியின் உச்சியிலிருந்து கழுத்துவரை தடவ வேண்டும். நனைந்த கை விரல்களை காதுகளுக்குள்ளும், காதுகளுக்குப் பின்னாலும் தடவ வேண்டும்.





நனைந்த கைகளை கழுத்தின் பின்புறம் தடவ வேண்டும்.










இரண்டு கால்களையும், கணுக்கால் வரை கழுவ வேண்டும். வலது காலிலிருந்து ஆரம்பிக்க வேண்டும் கால் நகங்களுக்கிடையே தண்ணீர் பட்டதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.




இதன் முடிவில்.

அஸ்ஹது அன்லாயிலாஹா இல்லல்லாஹு வஹ்தஹு லா ஸரீக்கலஹு வ அஸ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸுலுஹு

"அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் யாருமில்லை என்று நான் சாட்சியம் பகர்கிறேன். அவன் தனித்தவன். இணை துணையற்றவன் என்றும் முஹம்மது அவனின் தூதர் பணியாள் என்றும் சாட்சியம் பகர்கிறேன்". என்று கூறவேண்டும்.

# தொழுகை (சலாத்)

தன்னை வணங்கவே இறைவன் மனித சமுதாயத்தைப் படைத்துள்ளான். இது பற்றி குர்ஆனில் இறைவன் குறிப்பிடுவதாவது:-

> நான் ஜின்களையும், மனிதர்களையும் எனக்கு அடிபணிய வேண்டும் என்பதற்காகவேயன்றி வேறு எதற்காகவும் படைக்கவில்லை
>
> (குர்ஆன் 51:56)
>
> திண்ணமாக நான் தான் அல்லாஹ். என்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. எனவே, எனக்கு அடி பணிவீராக! என்னை நினைவு கூர்வதற்காக தொழுகையை நிலை நிறுத்துவீராக!
>
> (குர்ஆன் 20:14)

மனிதச் சமூகத்தின் இறுதிச் சமயமான இஸ்லாத்தையும் ஓரிறைவனையும் நம்புவதற்குரிய நடைமுறை அத்தாட்சியே தொழுகை ஆகும். தொழுகை புரிவது முஸ்லிம்களுக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. நபிகளார் வழிகாட்டியபடி குறிப்பிட்ட நேரங்களில் தொழுகை நிறைவேற்றப்படுகின்றது. தொழுகை கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு கடமையாகும். இது படைத்தவனுக்கும், அவனை வணங்குபவனுக்கு மிடையே நேரடியான ஒரு தொடர்பை ஏற்படுத்துகின்றது.

தொழுகையினை மட்டுமே நிறைவேற்றும்படி இஸ்லாம் முஸ்லிம்களைக் கேட்டுக் கொள்ளவில்லை. அவர்கள் தங்களது ஆன்மாக்களைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் அது விரும்புகின்றது. திண்ணமாக தொழுகை மானக்கேடான மற்றும் தீயசெயல்களைத் தடுக்கின்றது. (குர்ஆன் 29:45)

ஆணாயினும், பெண்ணாயினும் ஒவ்வொரு முஸ்லிமும் தினமும் ஐவேளை தொழுகை புரிய வேண்டும். இதற்கு சட்டப்படியான விதிவிலக்கு யாருக்கும் அளிக்கப்பட வில்லை.

தொழுகைக்கான நேரங்கள், வானில் சூரியன் தோன்றும் நிலைக்கேற்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## ஐங்காலத் தொழுகைகள் வருமாறு:

1. பஜ்ர் (காலை): அதிகாலைத் தொழுகை- சூரியன் உதிப்பதற்கு சிறிது நேரத்திற்கு முன்னர் நடைபெறும் தொழுகை.

2. லுஹர் (நண்பகல்): நண்பகல் தொழுகை - சூரியன் உச்சியிலிருந்து சரியத் தொடங்கும் போது நிறைவேற்றப்படும் தொழுகை.

3. அஸர் (பிற்பகல்): பொருட்களின் நீளத்தை விட அதன் நிழல் இருமடங்கு அதிகமாக இருக்கும்போது நிறைவேற்றப்படுகின்ற தொழுகை இதுவாகும்.

4. மக்ஃரிப் (மாலை): மாலைத் தொழுகை சூரியன் மறைந்தவுடன் நிறைவேற்றப்படுகிறது.

5. இஷா: ஐந்தாவது இறுதித் தொழுகை இது. நன்றாக இருள் சூழ்ந்த பிறகு அல்லது சூரியன் மறைந்து 90 நிமிடங்களுக்குப் பிறகு இத்தொழுகை நிறைவேற்றப் படுகிறது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள கட்டாயத் தொழுகை களின் தன்மை அங்க அசைவுகள் ஓதப்படும் முறை ஆகியன அடிப்படையில் ஒரே மாதிரியாகவே இருக்கும் ஆனால் ரகாத்துகளின் (அலகு) எண்ணிக்கையைப் பொறுத்து இவை நீளத்தில் மாறுபடக் கூடும். தொழுகையினை நிறை வேற்றுகின்ற ஒரு முஸ்லிம் அப்போது இறைவனுடன் உள்ளார்ந்த இரகசியமான உரையாடலில் ஈடுபட்டிருக்கிறான். அந்த நேரத்தில் தனது எஜமானனான இறைவனிடம் தான் கூறியது என்ன என்பதையும் அவன் அறிந்தே இருக்கிறான்.

இஸ்லாமியத் தொழுகையை நாம் ஆராய்ந்து பார்த்து அதன் இணையற்ற தன்மையை அறிந்து கொள்கின்ற போது அது உடல் சார்ந்த ஒரு செயல் அல்ல என்பதை நாம் உணர்ந்து

கொள்ள முடியும். அது அறிவார்ந்த தியானமும், ஆன்மீக ஈடுபாடும், தார்மீக உயர்வும் உடற்பயிற்சியும் இணைந்த ஈடு இணையற்ற அபூர்வமான ஒரு சூத்திரமாகும். இறைவனை வணங்கிப் போற்றுகின்றபோது உடலின் ஒவ்வொரு தசையும் ஆன்மாவுடனும், உள்ளத்துடனும் இணைகின்ற பிரத்யேகமான ஒரு இஸ்லாமிய அனுபவமாக அது அமைந்துள்ளது. தொழுகை என்பது முஸ்லிம்கள் மீது விதிக்கப்பட்டுள்ள ஒரு ஒழுக்க நெறிமுறையாகும். தொழுகையைக் கடமையாக ஆக்கியிருப்பதன் மூலம் இஸ்லாம் அதனைப் பின்பற்றுவோரை நெறிப்படுத்தி இறைவனின் இருப்பை எப்போதும் உணர்ந்தவர்களாக அவர்கள் இருந்திட வகை செய்துள்ளது. தொழுகை, நேரந்தவறாமைக்கும், ஆரோக்கியமான ஒரு வாழ்க்கை முறைக்கும் முஸ்லிம்களை பழக்கப்படுத்துகின்றது. தண்ணீர் கொண்டு உடல் உறுப்புகளை சுத்தம் செய்வதன் மூலம் (ஒழு) தொழுகை உடலை தூய்மைப்படுத்துவதோடு மனதிற்கும் புத்துணர்ச்சியை அளிக்கிறது. நிற்பது, குனிவது, சாஸ்டாங்கமாக விழுவது, உட்கார்வது ஆகியன உடலுக்கு ஒரு சிறந்த உடற்பயிற்சியாக அமைகின்றது. தொழுகை ஆன்மீக திருப்தியையும், உணர்வுபூர்வ நிறைவையும் கொண்டு வருகின்றது.

தினசரிக் கவலைகளிலிருந்து மனச்சாட்சியை வெற்றிடமாக்கிட, இறைவன்பாலும் அவனது இருப்பின்பாலும் அவனது அதிகாரத்தின்பாலும் நம்பிக்கை கொண்டு ஒருவன் தன்னை உலக வாழ்க்கையில் உயர்த்திக் கொள்வதற்கும் அது துணை புரிகின்றது. இதனைச் செய்வதன் மூலம் ஒரு தொழுகையாளி வாழ்க்கையையும் அதில் ஏற்படுகின்ற பிரச்சினைகளையும் சந்திக்க முன்னை விடவும் அதிகமாக தயாராகி விடுகிறார். தொழுவதால் ஏற்படும் திருப்தியும் ஓதுவதன் வாயிலாக மனதிற்குள் ஊடுருவிச் செல்லும் கருத்துக்களும் நன்மையைச் செய்யவும், தீயவற்றைத் தடுத்திடவும் உலக மரபுகளைப் பேணிடவும் தேவைப்படுகின்ற மன உறுதியை வலுப்படுத்துகின்றது. இறுதியாக முஸ்லிம்கள் ஒன்று கூடி நேரான வரிசைகளில் நின்று தொழுகை புரிகின்ற போது அது அவர்களின் சமத்துவத்தையும் உலகளாவிய தன்மையையும், சகோதரத்துவத்தையும் மற்றவர்களுக்காக கவலைப் படுவதையும் உலகிற்குப் பறை சாற்றுகின்றது.

# தொழுகையை நிறைவேற்றுவது எப்படி


இந்த நிலையில் தொழுகை புரிவதற்கு நீங்கள் தயாராகி விட வேண்டும். நீங்கள் ஒழு செய்திருக்க வேண்டும். சுத்தமான உடையணிந்திருக்க வேண்டும். தொழுகின்ற இடமும் சுத்தமாக இருக்க வேண்டும். நீங்கள் எப்படித் தொழுகை புரியவேண்டும் என்பது பற்றி இனி பார்ப்போம்.

★ ஒரு சுத்தமான இடத்தில் (தொழுகைப் பாய் போல் ஒன்றின் மீது) கஃபாவின் திசையை நோக்கி நேராக நின்று கொள்ளுங்கள். இது "கியாம்" என்றும், நோக்கி நிற்கும் திசை "கிப்லா" என்றும் அழைக்கப்படுகின்றது. இந்தியா மக்காவிலுள்ள புனித பள்ளிக்கு கிழக்கு பகுதியில் இருப்பதால் இந்தியர்கள் மேற்குபகுதியை "கிப்லா" என்று அழைக்கிறார்கள். மற்ற நாடுகளில் "கிப்லா"வின் திசை மாறுபடும். தொழுகையை நிறைவேற்றுவதற்கு முன்பு நீங்கள கிப்லா இருக்கும் திசையைக் கண்டு பிடித்துக் கொள்ள வேண்டும்.


"இந்தப் பூமியையும், சொர்க்கத்தையும் படைத்த ஒரே இறைவனை நோக்கி என்னுடைய முகத்தைத் திருப்புகிறேன். நான் நேர்மையாகவும், பணிவாகவும் இருக்கின்ற அதே நேரத்தில் இறைவனுக்கு இணை வைக்கின்றவர்களில் ஒருவனாக நான் இல்லை என்றும், திண்ணமாக எனது வணக்க வழிபாடும், இறைப்பற்றும் என்னுடைய வாழ்வும் இறப்பும் இந்த உலகின் எஜமானனாகிய இணை துணையற்ற இறைவனுக்கே சொந்தமானது என்றும் சாட்சியம் பகர்கிறேன் நம்பிக்கை கொள்ளுமாறு நான் ஆணையிடப்பட்டுள்ளேன். நானே பணிவதில் முதல்வனாக இருப்பேன்." என்ற நிய்யத்தை மனதிற்குள்ளாகவோ அல்லது வார்த்தைகள் மூலமாகவோ சொல்லிக் கொள்ளுங்கள்.

1. உங்கள் கைகளை காதுகள் வரை உயர்த்திக் கொண்டு

(பெண்கள், குழந்தைகளும் தோள்பட்டைவரை) அல்லாஹு அக்பர் (இறைவன் மிகப் பெரியவன்) என்று சொல்லுங்கள்.



2.தொப்புளுக்குச் சிறிது கீழே அல்லது மார்பின் மீது உங்களது வலது கையை இடதுகையின் மீது வைத்துக் கட்டிக் கொண்டு (பெண்களும், குழந்தைகளும் மார்பின் மேல்



தங்களது கைகளை வைத்துக் கட்டிக் கொள்ள வேண்டும்) "அல்லாஹுவே... புகழும், பெருமையும் உனக்கே உரியன. உனது பெயரே சிறப்புக்குரியது. உனது மேன்மையே மேன்மை. உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை" என்று ஓதிக் கொள்ள வேண்டும்.

"அவூது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம்" சபிக்கப்பட்ட ஷைத்தானிடமிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்,

★ அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திரு நாமத்தால் பின்னர், குர்ஆனின் துவக்க அத்தியாயமான அல் பாத்திஹா சூராவை ஓத வேண்டும்.

> எல்லாப் புகழும் அனைத்துலகிற்கும் ரப் ஆகிய மாபெரும் கருணையாளனாகவும், தனிப்பெரும் கிருபையாளனாகவும் இருக்கின்ற, இறுதித் தீர்ப்பு நாளின் அதிபதியாகவும் இருக்கின்ற அல்லாஹ்வுக்கே உரியதாகும். உன்னை மட்டுமே நாங்கள் வணங்குகின்றோம். மேலும்

உன்னிடமே உதவி கேட்கிறோம். எங்களுக்கு நீ நேரான வழியைக் காண்பித் தருள்வாயாக! (அவ்வழி) எவர்களுக்கு நீ அருள் புரிந்தாயோ அவர்களின் வழி; உன்னுடைய கோபத்துக்கு ஆளாகாத மற்றும் நெறி தவறிப் போகாதவர்கள் வழி. (குர்ஆன் 1:1-7)

அனைத்துத் தொழுகையிலும் அல் பாத்திஹா சூரா கட்டாயமாக ஓதப்பட வேண்டும். அதன் பின்னர் துண சூரா ஓத வேண்டும்.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்,

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்


கூறுவீராக! அவன் அல்லாஹ் ஏகன்! அல்லாஹ் (எவரிடத்தும்) எத்தேவையுமில்லாதவன். அனைவரும் அவனிடத்தில் தேவையுடையவர்களே! அவன் யாருடைய சந்ததியும் இல்லை. அவனுக்கு யாரும் சந்ததி இல்லை. மேலும் அவனுக்கு நிகரானவர் எவருமே இலர் (குர்ஆன் 112)

3.அல்லாஹு அக்பர் என்று கூறி கீழே குனிய வே



பிறகு முட்டுக்கால்களில் உங்கள் கைகளை ஊன்றிக் கொண்டு "சுப்ஹான ரப்பியல் அழீம் வபிஹம்தி ஹி" (மாபெரும் இறைவனுக்கே புகழனைத்தும்) என்று மூன்று முறை கூற வேண்டும்.

இந்த நிலைக்கு "ருக்கூ" என்று பெயர்




4."ருக்கூ" விலிருந்து எழுந்து "ஸமி அல்லாஹு லிமன் ஹமிதாஹ்" (தன்னைப் புகழ்கின்றவரை அல்லாஹ் கேட்கிறான்") என்று கூறி ரப்பனா லக்கல் ஹம்து" (ஓ இறைவனே உனக்கே புகழ் அனைத்தும்) என்று கூறி நிற்கும் நிலைக்கு (கியாம்) வரவேண்டும். இதற்கு "இப்திதால்" என்று பெயர்.


5. அதன் பிறகு அல்லாஹு அக்பர் என்று கூறி உங்களுடைய

நெற்றி, மூக்கு, உள்ளங்கைகள், முட்டுக்கால்கள், கால் விரல்கள் ஆகியன தரையைத் தொடும் வண்ணம் "சாஸ்டாங்கம் செய்ய வேண்டும்.

"சுப்ஹான ரப்பியல் அஃலா வபிஹம்தி ஹி" என்று மூன்று முறை ஓத வேண்டும். (மிக உயர்ந்தோனாகிய அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்) இந்த நிலைக்கு "சுஜூது" என்று பெயர். உங்களது முட்டுக்கைகள் தரையைத் தொடக்கூடாது.



6 & 7. "அல்லாஹூ அக்பர்" என்று கூறிக்கொண்டு தரையிலிருந்து எழுந்து, முட்டுக்கால்களை மடக்கி கால் பாதங்களுக்கு மேல் வைத்துக் கொண்டு நேராக உட்கார்ந்து கொள்ள வேண்டும். சில நொடிகளுக்குப் பிறகு அல்லாஹூ அக்பர் என்று மீண்டும் கூறி சாஸ்டாங்கம் செய்து "சுப்ஹான ரப்பியல் அஃலா வபிஹம்தி ஹி" மூன்று முறை ஓத வேண்டும். பிறகு அல்லாஹூ அக்பர் என்று கூறிக் கொண்டு அந்த நிலையிலிருந்து எழுந்து நேராக நிற்கு வேண்டும்.



இத்துடன் தொழுகையின் ஒரு ரக்காத் நிறைவு பெறும். இரண்டாவது ரக்காத்தும் இதே முறையில் நிறைவேற்றப்பட வேண்டும். எனினும் தனா, தாவுத் (அவுது பில்லாஹி) அல்லது தஸ்மியாஹ் (பிஸ்மில்லாஹ்) ஓதப்பட வேண்டிய தில்லை. இரண்டாவதாக சாஸ்டாங்கம் செய்த பிறகு நேராக உட்கார்ந்து கொண்டு "தஷஹ்ஹூத்" அமைதியாக ஓத வேண்டும். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. தொழுகையும் நற்செயல்களும் அவனுக்கே! இறைவனின் கருணையும், ஆசீர்வாதமும் இறை தூதர் மீது உண்டாவதாக.


அல்லாஹ்வின் நேரான பணியாளர்களான நம்மீது சாந்தி உண்டாவதாக.

*அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லையென்றும், முஹம்மது(ஸல்) அவனின் தூதர் என்றும் நான் சாட்சியம் பகர்கிறேன்.*

*பிறகு "தருத்" (நபிகளின் மீது ஸலவாத்து) ஓத வேண்டும். யா அல்லாஹ்! இப்ராகிம் நபிக்கும், அவரது குடும்பத்தினர்களுக்கும் நீ அருள் புரிந்தது போல் முஹம்மதுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் அருள் புரிவாயாக. நீ உண்மையில் புகழுக்குரியவனாகவும், கருணையாளனாகவும் இருக்கின்றாய். யா அல்லாஹ் இப்ராஹிம் நபிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் நீ அருள்புரிந்தது போல் முஹம்மது நபிக்கும், அவரது குடும்பத்தினருக்கும் அருள் புரிவாயாக நீ உண்மையில் புகழுக் குரியவனாகவும் கருணையாளனாகவும் இருக்கின்றாய்.*

*அதற்குப் பிறகு ஏதாவத துஆ ஒன்றை ஓத வேண்டும் (இறைஞ்சுதல்) "யா அல்லாஹ்! எனக்கு நானே அநீதி இழைத்துக் கொண்டேன். பாவங்களை மன்னிக்கின்றவன்; உன்னைத் தவிர வேறு யாரும் இல்லை; ஆகையால் என்னை மன்னித்துவிடு; என்பால் இரக்கம் காட்டு. நீயே மன்னிப்பவன். கருணையாளன்."*

> *என் இறைவா! தொழுகையை நிலை நிறுத்து பவனாய் என்னை ஆக்குவாயாக. என் வழித் தோன்றல்களிலிருந்தும் (தொழுகையை நிலை நாட்டுபவர்களை) தோற்று விப்பாயாக! எங்கள் இறைவனே! மேலும் என் பிரார்த் தனையை ஏற்றுக் கொள்வாயாக! எங்கள் இறைவனே! எனக்கும் என் பெற்றோருக்கும் நம்பிக்கை கொண்டோர் அனைவருக்கும் கேள்வி கணக்கு கேட்கப்படும் நாளில் மன்னிப்பை அருள்வாயாக (குர்ஆன் 14: 40-41)*



8.பிறகு உங்களது முகத்தை வலது புறமாகத் திருப்பி "அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹ் (இறைவனின் சாந்தியும் சமாதானமும் உங்கள் மீது உண்டாவதாக) என்று கூற வேண்டும்.

9.பிறகு உங்களது முகத்தை இடது புறமாகத் திருப்பி "அஸ்ஸலாமுஅலைக்கும் வரஹ்மத்துல்லாஹ் (இறைவனின் சாந்தியும் சமாதானமும் உங்கள் மீது உண்டாவதாக) என்று மீண்டும் கூற வேண்டும். இத்துடன் இரண்டு ரகாத் தொழுகை நிறைவு பெறும்.




10.தொழுகை முடிந்த பிறகு அல்லாஹ்வின் மன்னிப்பையும், கருணையையும் வேண்டி துஆ கேட்பது ஒரு நல்ல முறையாகும். (இறைஞ்சி) இதனை உங்களது சொந்த மொழியில், சொந்த வார்த்தைகளைக் கொண்டும் கேட்கலாம். எனினும் அரபியில் சில துஆக்களை மனப்பாடம் செய்து கொள்வது சிறந்ததாகும்.

## தொழுகைக்குப்பிறகு ஓத வேண்டிய சில துஆக்கள் (இறைஞ்சுதல்)

*எங்கள் இறைவனே! எங்களுக்கு இந்த உலகிலும் நன்மையை அருள்வாயாக! மறு உலகிலும் நன்மையை அருள்வாயாக! மேலும் நரக வேதனையிலிருந்து நீ எங்களை காத்ருள்வாயாக! (குர்ஆன் 2:201)*

*யா அல்லாஹ் ! எங்களுக்கு நாங்களே அக்கிரமம் செய்து கொண்டோம் எங்களை நீ மன்னித்து கிருபை செய்யா விடில் நிச்சயமாக நாங்கள் இழப்பிற்குரிய வர்களாகி விடுவோம். (குர்ஆன் 7:23)*

*யா அல்லாஹ் நீயே அமைதியின் மூலாதாரம். அமைதி*

உன்னிடமிருந்து வருகிறது.மேன்மை மற்றும் கண்ணியத்தின் எஜமானனே நீயே புகழ்ச்சிக்குரியவன்-(முஸ்லிம்)

அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணை துணை இல்லை. அவன் பேராற்றல் கொண்டவன். அனைத்துப் புகழுக்கும் உரியவன். அனைத்துப் பொருட்களின் மீதும் அவன் அதிகாரம் செலுத்துகிறான். என் இறைவனே நீ கொடுக்க விரும்புவதை யாராலும் தடுக்க முடியாது. நீ கொடுக்க விரும்பாததை யாராலும் கொடுக்கவும் முடியாது. தனக்குரிய வாய்ப்புக்களை வைத்துக் கொண்டு யாரும் உனக்கெதிராக எதுவும் செய்து விடமுடியாது. (அல் புகாரி)

# தொழுகையின் முக்கியத்துவம்

இஸ்லாமிய வணக்கத்திலிருந்து ஒருவன் பெறக் கூடிய நன்மைகள் அளப்பரியன. அவற்றை அளவிட முடியாது. அதனால் கிடைக்கும் அருட் கொடைகள் கற்பனை செய்ய முடியாதவை. இது ஒரு மரபு சார்ந்த அனுமானமோ அல்லது வாய்ப் பாடமோ அல்ல. அது ஒரு அபூர்வமான உண்மை ஆன்மீக அனுபவம்.

ஒரு மனிதனின் வாழ்க்கையில் வணக்கத்தின் முக்கியத்துவமும் ஆற்றலும் என்ன என்பது பற்றி இனி பார்ப்போம்.

1.ஆண்களையும், பெண்களையும் அல்லாஹ்வுக்கு நெருக்கமானவர்களாக ஆக்குகின்றது.

2.மனித சமுதாயத்தின் இறுதிச் செய்தியான ஓரிறைவன் பாலும், இஸ்லாத்தின் பாலும் முஸ்லிம்கள் கொண்டுள்ள நம்பிக்கையின் நடைமுறை அத்தாட்சியாக அது விளங்குகின்றது.

3. அது மனிதர்களை கீழ்த்தரமான, மானக்கேடான, தவறான வழிகளினின்றும் தடுக்கின்றது. (குர்ஆன் 29:45)

4. அது தீய விருப்பங்களையும், உணர்வுகளையும் கட்டுப் படுத்தக்கூடிய ஒரு பயிற்சித் திட்டமாக விளங்குகின்றது.

5. அது இதயத்தை தூய்மையாக்குகிறது. உள்ளத்தை மேம்படுத்துகின்றது. ஆன்மாவுக்கு ஆறுதல் அளிக்கின்றது.

6. அது அல்லாஹ்வையும், அவனது மேன்மையையும் தொடர்ந்து நினைவூட்டிக் கொண்டே இருக்கின்றது.

7. அது ஒழுக்கத்தையும், ஆற்றலையும்

வளர்க்கின்றது

8. மிகவும் நேரிய வாழ்க்கைக்கு அது வழி காட்டுகிறது

9. அது உண்மையான சமத்துவத்திற்கும், உறுதியான ஒற்றுமைக்கும், உலகளாவிய சகோதரத்துவத்திற்கும். அத்தாட்சியாக விளங்குகின்றது.

10. பொறுமை, தைரியம், நம்பிக்கை, தன்னம்பிக்கை ஆகியவற்றின் ஊற்றுக் கண்ணாக அது திகழ்கின்றது.

11. சுத்தத்திற்கும், தூய்மைக்கும், நேரம் தவறாமைக்கும் அது ஒரு சிறந்த முறையாக விளங்குகின்றது

12. பணிவையும், நன்றியுணர்வையும், பண்பட்ட தன்மையையும் அது வளர்க்கின்றது.

13. படைத்தவனுக்கு நமது கீழ் படிதலைத் தெரிவிக்கின்ற ஒரு வெளிப்படையான செயலாக அது இருக்கின்றது.

14. நம்முடைய சொற்களும், செயல்களும் ஒன்று போல் அமைந்திட நம்மைத் தயார் செய்கின்ற ஒரு திட்டமாக அது இருக்கின்றது.

15. அது அறிவார்ந்த தியானமும், ஆன்மீக ஈடுபாடும், தார்மீக உயர்வும், உடற்பயிற்சியும் இணைந்த ஈடு இணையற்ற ஒரு சூத்திரமாகும்.

16. இறைவனை வணங்கிப் போற்றுகின்ற போது உடலின் ஒவ்வொரு தசையும் ஆன்மாவுடனும், உள்ளத்துடனும் இணைகின்ற ஒரு பிரத்யேக இஸ்லாமிய அனுபவமாக அது விளங்குகின்றது.

தொழுகையில் ஈடுபட்டு அதன் மூலம் பெறும் அனுபவத்தின் வாயிலாக ஆன்மீக மகிழ்ச்சியை அடைவதே மிகச் சிறந்த சான்றாக அமையும். அப்போதுதான் அதன் உண்மைப் பொருளை ஒருவர் உணர்ந்து கொள்ள முடியும்.

# ரமலானும் நோன்பும்

ரமலான்: ரம்ஸான் என்று உர்துவில் அழைக்கப்படுகின்ற இந்த மாதம் இஸ்லாமிய காலண்டரின் ஒன்பதாவது மாதமாகும். உலகெங்கிலுமுள்ள முஸ்லிம்கள் இந்த மாதம் முழுமையும் நோன்பு நோற்கின்றார்கள். இந்த வருடாந்திர நோன்பு, இஸ்லாத்தின் ஐந்து கடமைகளில் ஒன்றாகும். இந்த மாதத்திற்கு வானில் பிறை தோன்றுவதைப் பொறுத்து 29 அல்லது 30 நாட்கள் இருக்கும். இதைக் கணக்கிடுவதற்கு ஹதீஸில் ஏராளமான வரலாற்றுக் குறிப்புகள் காணக்கிடக்கின்றன.

இம்மாதத்தில் முஸ்லிம்கள் நோன்பு நோற்பதை இறைவன் கட்டாயமாக்கியுள்ளான். இது சம்பந்தமாக அல்லாஹ் குர்ஆனில் குறிப்பிடுவதாவது:

இறை நம்பிக்கையாளர்களே! உங்களுக்க முன்பு இருந்த (நபிமார்களைப் பின்பற்றியவ)வர்கள் மீது கடமை யாக்கப்பட்டது போல் உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப் பட்டிருக்கிறது. (அதன் மூலம்) நீங்கள் இறையச்ச முள்ளவர்களாய் திகழக் கூடும் (குர்ஆன் 2:183)

உணவு , பானங்கள், உடலுறவு, புகைப்பிடித்தல், பிற முறையற்ற செயல்கள், அத்துமீறிய நடத்தை, உலக சபலங்கள், விருப்பங்கள் ஆகியவற்றை காலை சூரிய உதயத்திற்கு முன்பிலிருந்து மாலை சூரியன் மறையும் வரை முழுவதுமாகத் தவிர்ப்பதே நோன்பு ஆகும். ரம்மலான் மாதம் முழுமையும் இந்த நோன்பினை மேற்கொள்ள வேண்டும்.

நோன்பு நோற்பவர்களுக்கு இறைவன் ஏராளமான அருட் கொடைகளை வழங்குகிறான். இந்த மாதத்தில் நோன்பு

நோற்கும் போது இறைவன் வழங்கும் அருட் கொடைகள் பலமடங்கு அதிகரிக்கின்றன. ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பதென்பது. அதிக அளவில் வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவதையும், குர்ஆன் ஓதுவதையும் உள்ளடக்கியதாகும்.

நோன்பு நோற்பது வயதுக்கு வந்த முஸ்லிம்களுக்கு கட்டாயமாக்கப்பட்டுள்து (வாஜிப்) உடல் நலமற்றோர், பயணிகள், மாதவிலக்குக்குள்ளாகி இருக்கும் பெண்கள் ஆகியோருக்கும் நோன்பு நோற்பதினின்றும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

தனிநபர் சார்ந்த அல்லது கூட்டான ஒரு வணக்க வழிபாடாக நோன்பினை குர்ஆன் கூறுகின்றது. நோன்பின் நெறிசார்ந்த மற்றும் ஆன்மீக அம்சங்களின் நோக்கம், ஒருவர் தன்னுடைய இயற்கையான விருப்பங்களைக் கட்டுப்படுத்தி அதன் மூலம் சுயக்கட்டுப்பட்டைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதேயாகும்.

நோன்பு ஒரு சமயக் கடமையாக ஆக்கப்பட்ட பிறகு மதீனாவில் இருந்த பல முஸ்லிம்கள் ரமலான் மாதத்தின் போது, இரவு நேரங்களில் மனைவியுடன் உடலுறவு கொள்வது கூட சட்ட விரோதமானது எனக் கருத ஆரம்பித்தனர். இது கூடுதலான சிரமங்களை அவர்கட்கு ஏற்படுத்தியது. "நீங்கள் இலகுவாக இருக்க வேண்டும் என்பதே இறைவனின் விருப்பமாகும். உங்களுக்கு சிரமங்கள் ஏற்படுவதை அவன் விரும்பவில்லை" என்ற இறை வசனங்கள் அப்போது தான் அருளப்பட்டன. இது ஆரம்ப காலத்தில் ரமலான் மாதத்தில் உடலுறவைத் தவிர்த்த முஸ்லிம் களுக்காகவே அருளப்பட்டன. பாலுணர்வை, இயற்கை தேவைகளான பசி மற்றும் தாகத்திற்கும் சமமாகவே குர்ஆன் கருதுகின்றது.

நோன்புக்கான நேரம் முடிந்தவுடன் உண்பதும், அருந்துவதும் எப்படி அனுமதிக்கப்பட்டுள்ளதோ அது போல் தான் பாலுணர்வும். இதில் ஒரு சமநிலை பேணப்படுகிறது. ஆன்மீக தாகம், உடல் இச்சையை இழந்துதான் பெற வேண்டும் என்பதல்ல. உடலும் ஆன்மாவும் ஒன்றிணைவதன் மூலமே இறைவனின் நெருக்கத்தைப் பெற முடியும்.

கணவனுக்கும், மனைவிக்குமுள்ள உறவு "ஆடை"

*போன்றது. என்று குர்ஆன் குறிப்பிடுகின்றது (குர்ஆன் 2:107) இது இந்த பரஸ்பர சம நிலை தொடர்பான ஒரு கருத்தேயாகும். ஆடை ஒருவனுடைய உடலைப் பாதுகாப்பது போல் தம்பதிகள் ஒருவருக்கொருவர் பாதுகாத்துக் கொள்கின்றனர். ஆடை உடலுக்கு ஆறுதல் அளிப்பது போல் கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் ஆறுதல் வழங்கிக் கொள் கின்றனர். ஆடை உடலுக்கு அழகு தருவது போல் கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் அழகாக இருக்கின்றனர். தம்பதியினரின் ஒருவருடைய பலவீனம் இன்னொருவரின் பலத்தைக் கொண்டு பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில் ஈடு செய்யப்படுகின்றது. ஒரு உறவில் இதைத் தவிர வேறு என்ன அழகான அம்சம் இருக்க முடியும். ரமலான் மாதத்தில் நோன்பை குர்ஆன் கடமையாக்கி யுள்ளதற்கு அந்த மாதத்தில் குர்ஆன் முதன் முதலாக இறக்கியருளப்பட்டதே காரணமாகும். உமது இறைவனின் பெயரால் ஓதுவீராக" என்ற குர்ஆனின் முதல் வசனம் (குர்ஆன் 96:1-5) ரமலான் மாதத்தின் 27ம் நாள் அன்று தான் (கி.பி.611ல்) இறக்கியருளப்பட்டது. எனவே முஸ்லிம்களின் சிந்தனையில் ரமலான் மாதம் இறைவனுக்கு மிகப் பிரியமான மாதமாகக் கருதப்படுகின்றது. நோன்பு என்ற ஒரு இணையற்ற வழிமுறையை இஸ்லாம் அறிமுகப்படுத்தியதன் மூலம் எண்ணற்ற நற் செயல்களையும் விலை மதிப்பற்ற பொருட்களையும் உற்பத்தி செய்கின்ற, வளர்ந்து வருகின்ற ஒரு மரத்தை ஊன்றியுள்ளது என்றே கூறலாம். இஸ்லாமிய நோன்பின் ஆன்மீகப் பொருள் விளக்கத்தை இனி காணலாம்.*

*1. படைத்துப் பரிபாலிக்கின்ற எல்லாம் வல்ல அல்லாஹ் விற்கான கடமைகளைச் செய்வதற்குரிய புத்தாக்கப் பயிற்சியை முஸ்லிம்களுக்கு அளிக்கின்ற ஒரு மாதமாக அது விளங்குகிறது.*

*2. உண்மையான அன்பை அது மனிதனுக்குக் கற்றுக் கொடுக்கிறது. ஏனெனில் இறைவனின் பால் கொண்டுள்ள அளப்பரிய அன்பு காரணமாகவே முஸ்லிம்கள் நோன்பு நோற்கிறார்கள்.*

*3. அது ஒரு மனிதனிடம் விழிப்புணர்வு மிக்க நல்ல மனச்சாட்சியை உருவாக்குகின்றது. ஏனெனில் நோன்பு நோற்பவன், நோன்பை இரகசியமாகவும் வைத்துக்*

கொள்கிறான். வெளிப்படையாகவும் தெரியப் படுத்துகின்றான். நோன்பின் போது ஒருவனுடைய நடத்தையை கண்காணிக்கவோ அல்லது அவனை நோன்பு நோற்கும் படி கட்டாயப்படுத்தவோ உலகியல் ரீதியில் அதிகாரம் படைத்தவர் யாரும் இல்லை. இறைவனின் மகிழ்ச்சிக்காகவும், தனது மனச்சாட்சியைத் திருப்திப் படுத்துவதற்காகவுமே அவன் நோன்பு நோற்கிறான். அதற்கு இரகசியமாகவும், வெளிப்படையாகவும் விசுவாசமாகவும் இருக்கிறான். இதைத் தவிர ஒரு மனிதனிடம் நல்ல மனச்சாட்சியை உருவாக்க வேறு சிறந்த வழி இல்லை.

4. நோன்பு சுய கட்டுப்பாட்டை வளர்க்கின்றது. சுயநலம், பேராசை, சோம்பேறித் தனம் ஆகியவற்றைக் கைவிட உதவி புரிகின்றது. மேலும் நோன்பின் மூலம் ஒருவன் பசி மற்றும் தாகத்தின் வேதனையை அனுபவித்திட முடிகின்றது. ஒவ்வொரு நாளும் பட்டினி கிடக்கின்ற ஏழைகள் மற்றும் ஆரவற்றவர்களின் தேவை என்ன என்பதை ஒருவன் நோன்பின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

5. மனிதனின் பொதுவான பண்பான கோபத்தையும் நோன்பு கட்டுப்படுத்துகின்றது.

6. நிதானத்தையும், மன உறுதியையும் கடைப்பிடித்திட நோன்பு ஒரு மிகச் சிறந்த பாடமாகும். முறையாக நோன்பு நோற்கும் ஒருவன் நிச்சயமாக தனது விருப்பங்களையும், உணர்வுகளையும் கட்டுப்படுத்தி உடல் சார்ந்த இச்சைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியும். ஆளுமைப் பண்பையும் சிறந்த நடத்தையையும் மன உறுதியையும், திட சங்கற்பத்தையும் அது மனிதனுக்கு அளிக்கிறது.

ஒரு மனிதன் உயர்வடைவதற்குரிய தெளிவான ஆன்மாவையும், சிந்திப்பதற்கு தெளிந்த உள்ளத்தையும், நுகர்வதற்கும், செயல்படுவதற்கும் தகுந்த உடலையும் அது அளிக்கிறது. அதைப்போலவே வயிற்றைப் பட்டினி போடும் போது ஜீரண உறுப்புக்கள் சற்று ஓய்வெடுத்துக் கொள்கின்றன. உண்மையில் நோன்பு நோற்பவன் தனது உடலைக் காப்பீடு செய்கின்றான். (ஆன்மாவைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை) வயிறு அதிகமாக நிரம்பியிருப்பதனால் ஏற்படக்கூடிய அனைத்து விதமான நோய்களையும் அது

தடுக்கின்றது. மருத்துவ அறிவிப்புகளும், உடற்கூறு விதிகளும் அனுபவங்களும் இதனை உறுதி செய்துள்ளன.

8. தான் சமூகத்திற்குச் சொந்தமானவன் என்ற உணர்வையும், ஒற்றுமையையும், சகோதரத்துவத்தையும், சட்டத்தின் முன்பும் இறைவனின் முன்பும் அனைவரும் சமம் என்ற உணர்வையும் அது மனிதனின் உள்ளத்தில் ஏற்படுத்துகின்றது. ஒரு மனிதன் நோன்பு நோற்கின்ற போது உருவாகின்ற இயல்பான உணர்வே இது. அதே நாளில் அதே முறையில் அதே நேரத்தில் அதே எண்ணத்துடன் அதே இலக்கை நோக்கி நோன்பு நோற்பதன் மூலம் ஒரு முஸ்லிம் ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்துடன் சேர்ந்து விட்ட உணர்வைப் பெறுகின்றான்.

# ஜகாத்

## (வசதி வாய்ப்பற்ற மக்களின் உரிமை)

ஜகாத் ஏழைகளுக்கும் தேவையுடையவர்களுக்கும் உரியதாகும். அது அல்லாஹ்வினால் விதிக்கப்பட்டதாகும். (குர்ஆன் 9:60) ஜகாத்தும் ஒரு இபாதத்தே. இபாதத் என்ற அரபு வார்த்தைக்கு வணங்குதல், இறைவனுக்குக் கீழ்படிதல் என்று பொருளாகும். இறைவனின் மகிழ்ச்சியையும் அவனது ஆதரவையும் பெறவே முஸ்லிம்கள் ஜகாத் வழங்குகிறார்கள்.

ஒருவன் தனது செல்வத்திலிருந்து ஏழை எளிய மக்களின் நலனிற்காக வழங்குவதே ஜகாத் எனப்படும். இது ஒரு தர்மமோ அல்லது பிச்சையோ அல்லது வரியோ அல்லது காணிக்கையோ அல்லது வெறும் அன்பின் வெளிப்பாடோ அல்ல. இது இவை அனைத்தும் சேர்ந்த ஒன்றாகும். அதனை விடவும் மேலானது. இது ஒருவன் தனது வருமானத்திலிருந்து அல்லது செல்வத்திலிருந்து வழங்கக்கூடிய ஒரு குறிப்பிட்ட சதவிகித பணம் அல்ல. மாறாக இது மிகப் பெரிய அளவில் வளம் தருகின்ற ஒரு ஆன்மீக முதலீடாகும். இது ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகத் தாமாக முன்வந்து வழங்கக்கூடிய ஒரு அன்பளிப்பு அல்ல. இது இறைவனால் விதிக்கப்பட்டுள்ள ஒரு கடமையாகும். இது ஒட்டு மொத்த மனித சமுதாயத்தின் நலனிற்காக முஸ்லிம்கள் மேற் கொள்கின்ற ஒரு செயலாகும். இது பணம்படைத்தவர்களின் செல்வத்தின் மீது ஏழைகளுக்கும் ஆதரவற்றவர்களுக்குமுரிய உரிமையாகும்.

ஜகாத் என்ற வார்த்தையின் நேரடியான பொருள் தூய்மைப்படுத்துதல் என்பதாகும். ஒரு முஸ்லிம் தனது செல்வத்திலிருந்து ஆண்டு தோறும் பணமாகவோ அல்லது பொருளாகவோ தேவையுள்ளவர்கட்கு வழங்குவதே இந்த

வார்த்தையின் செயல் முறைப் பொருளாகும். ஆனால் ஜகாத்தின் சமய மற்றும் ஆன்மீக முக்கியத்துவம் மிகவும் ஆழமானது. அதைப் போலவே அதனுடைய மனிதாபிமான சமூகப் பொருளாதார அரசியல் மதிப்பீடுகளும் முக்கியத்துவம் வாய்ந்தவை ஆழமானவை.

உலகிலுள்ள அனைத்துப் பொருட்களும் இறைவனுக்கே சொந்தமானது என்பது மிக முக்கியமான இஸ்லாமியக் கோட்பாடாகும். முஸ்லிம்கள் பொருள் ஈட்டவும், ஈட்டிய பொருளை அல்லாஹ் ஏற்கத்தக்க வழியில் செலவிடவும் கடமைப்பட்டுள்ளனர். தெய்வீக அதிகாரம் கொண்ட ஜகாத் அல்லாஹ்வின் எல்லைக்கு உட்பட்ட அவனது உரிமையாகும்.

# ஜகாத்தின் பாரதூரமான விளைவுகள்

*1. பேராசை, சுயநலம், இவ்வுலகின் மீதான பற்று ஆகியவற்றிலிருந்து ஜகாத் ஒரு மனிதனை விடுவிக்கின்றது. அல்லாஹ் கூறுகிறான்"உண்மை யாதெனில் யார் தங்கள் மனதின் உலோபித் தனத்திலிருந்து காப்பாற்றப் பட்டார்களோ அவர்களே வெற்றி பெறக்கூடியவர்களாவர்" (குர்ஆன் 59:9)*

*2. ஜகாத் மக்களின் செல்வத்தைத் தூய்மை யாக்குகின்றது. அவர்களுக்குச் சொந்தமில்லாத பங்கை உரிய தேவையுள்ள பயனாளிகளுக்கு பகிர்ந்து கொடுக்க அது வகை செய்கிறது. செல்வத்தின் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை தேவையுடையவர்கட்கு சரியான முறையில் வழங்க வேண்டும். அந்த குறிப்பிட்ட சதவிகித செல்வத்தை தம்மிடமே வைத்திருக்க அதன் உரிமையாளருக்கு எந்த விதமான தார்மீக அல்லது சட்டப்படியான உரிமையும் இல்லை. அவன் அப்படிச் செய்யத் தவறினால் தனக்குச் சொந்தமில்லாத ஒன்றை வைத்துக் கொண்டிருக்கிறான் என்றே கருதப்படும். தார்மீக ரீதியிலும், ஆன்மீக ரீதியிலும் சட்ட ரீதியிலும் வர்த்தக ரீதியிலும் அது ஊழலாகவே கருதப்படும். சட்டத்திற்கு புறம்பாக அவன் தன்னிடமே வைத்திருக்கும் அந்தச் செல்வம் (அதாவது ஜகாத் வழங்கப்படவேண்டிய சதவிகிதத்திற்குரிய செல்வம்) அவனது செல்வம் முழுவதையும் தூய்மை யற்றதாகவும், ஆபத்தானதாகவும் மாற்றி விடுகின்றது. அதே நேரத்தில் ஏழைகளுக்குரிய பங்கு பிரித்தெடுக்கப்பட்டு அவர்கட்கு உரிய முறையில் வழங்கப்பட்டால் மீதமிருக்கின்ற*

செல்வம் முழுவதும் தூய்மையானதாகவும், சிறந்ததாகவும் இருக்கும். தூய்மையான மூலதனமும், சிறந்த சொத்துக்களும் நிலையான வளத்திற்கும், நேர்மையான பணப்பரிமாற்றங்களுக்கும் அவசியத் தேவையாக இருக்கின்றன.

3. ஜகாத் அதனைக் கொடுப்பவரின் செல்வத்தைத் தூய்மைப்படுத்துகிறது. சுயநல மனப்பான்மையிலிருந்தும், செல்வத்தின் மீதான பேராசையிலிருந்தும் அவனின் இதயத்தைத் தூய்மையாக்குகின்றது. அது பெறுபவரின் உள்ளத்திலிருக்கின்ற பகை, பொறாமை, வெறுப்பு, உலோபித்தனம் ஆகிய தீய பண்புகளை நீக்கித் தூய்மைப்படுத்துகின்றது. கொடுப்பவருக்கு நல்லெண்ணமும், நல் வாழ்த்துக்களும் கிடைக்கின்றன. இதன் விளைவாக வர்க்கச் சண்டைகள், சந்தேகம், தவறான உணர்வுகள், அவ நம்பிக்கை, ஊழல், சீர்குலைவு ஆகிய தீய அம்சங்களிலிருந்து ஒட்டுமொத்த மனித சமூகமும் தூய்மையடைகின்றது.

4. சுயநலப் பேராசை, சமூகச் சச்சரவுகள், அழிவு தரும் கொள்கைகள் ஆகியவற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கக் கூடிய ஆரோக்கியமான ஒரு வழிமுறையாக ஜகாத் இருக்கின்றது. கொடுப்பவரின் உள்ளத்தில் சமூகப் பொறுப்புணர்வை உருவாக்குகின்ற ஜகாத் வாங்குபவரின் உள்ளத்தில் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்துகின்றது.

5. தனிநபர்களுக்கும், சமூகத்திற்கும் இடையே நிகழக்கூடிய ஆன்மீக மற்றும் மனிதாபிமான உணர்வின் அடிப்படையிலான பரிமாற்றத்தின் ஒரு தெளிவான வெளிப்பாடே ஜகாத் ஆகும். இஸ்லாம், தனி நபர்கள் வியாபாரம் செய்வதைத் தடை செய்யவில்லை. சொத்துக்கள் வைத்திருப்பதையும் கண்டிக்கவில்லை. ஆனால் அது

சுயநலமிக்க பேராசை கொண்ட முதலாளித்துவத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. தனி நபர்களுக்கும் சமூகத்திற்குமிடையில் குடிமகனுக்கும் அரசுக்கு மிடையில், முதலாளித்துவத்திற்கும், சோசலிசத்திற்கு மிடையில், உலகாதாயப் போக்கிற்கும் ஆன்மீகத்திற்கு மிடையில் ஒரு நிதானமாக நடுநிலைப் போக்கை நேர்மறையான வலுவான முறையில் வெளிப்படுத்துகின்ற இஸ்லாமியப் பொதுத் தத்துவத்தின் வெளிப்பாடே ஜகாத் ஆகும்.

6. இஸ்லாம் ஒரு முழுமையான வாழ்க்கை நெறியாகும். இந்த நெறிமுறைகள் பிற விஷயங்களோடு பொருளாதாரப் பிரச்னைகளையும் உள்ளடக்கியதாகும். சமூக நலன் மற்றும் நியாயமான செல்வப் பங்கீடு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த இஸ்லாமியப் பொருளாதாரக் கொள்கையின் அடிப்படை அம்சங்களில் ஜகாத் ஒன்றாகும். ஜகாத்தை கட்டாயமாக்கியுள்ள இஸ்லாம் ஏழைகளுக்கும் உதவி தேவைப்படுகின்றவர்கட்கும், பிற சமூக நல நோக்கங் களுக்கும் தாமாகவே முன் வந்து தாராளமான உதவி வழங்க வேண்டுமெனவும் முஸ்லிம்களை வலியுறுத்தியுள்ளது. இதற்கு தர்மம் என்று அழைக்கப்படுகின்றது. (சதகாஹ்)

7. ஜகாத் வழங்குவதன் மூலம், பணம் படைத்தவர்கள் தங்களது செல்வத்தை ஏழைகளுடன் பகிர்ந்து கொள்கிறார்கள். இதன் மூலம் செல்வக் குவிப்பு கட்டுப்படுத்தப்படுகிறது. நியாயமான செல்வப் பங்கீடு உறுதி செய்யப்படுகின்றது. சமுதாயத்தின் எந்தெந்தப் பிரிவினர் ஜகாத் பெறத் தகுதியுடையவர்கள் என்பது பற்றி இறைவன் குர்ஆனில் குறிப்பிட்டுள்ளான். (குர்ஆன் வசனங்கள் 9:60ஐப் பார்க்கவும்)

# ஹஜ் அல்லது புனிதப் பயணம்

*அல்லாஹ்வின் பிரியத்தையும், உவப்பையும் பெற மக்காவிற்குச் சென்று புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுங்கள் (குர்ஆன் 2:196)*

ஹஜ், இஸ்லாத்தின் ஐந்தாவது கடமையாகும். மக்காவிலுள்ள இறைவனின் இல்லமான கஅபாவை பார்வையிடுவதே ஹஜ் எனப்படும். பொருளாதர ரீதியில் வசதி பெற்றவர்கள் தங்களது வாழ்நாளில் ஒரு முறையேனும் மக்கா சென்று இந்த ஹஜ் கடமையை நிறைவேற்ற வேண்டும். இஸ்லாமிய ஆண்டின் 12வது மாதமான துல்ஹஜ் மாதத்தின் எட்டாம் தேதிக்கும் பதின்மூன்றாம் தேதிக்குமிடையில் இந்த ஹஜ் கடமையை நிறைவேற்ற வேண்டும் (குர்ஆன் 3:97, 22:27–30; 2:197 ஆகிய வசனங்களைப் பார்க்கவும்)

பைத்துல்லாஹ் (அல்லாஹ்வின் இல்லம்) என்று அழைக்கப்படுகின்ற அல்லாஹ்வின் இல்லமான கஅபா கன சதுர வடிவிலான ஒரு கட்டிடமாகும். அல்லாஹ்வை வணங்குவதற்கென கட்டப்பட்ட முதல் இறை இல்லம் இதுவேயாகும். (குர்ஆன் 3:96) மக்காவில் புனிதப் பள்ளி வாசலின் மத்தியில் அமைந்துள்ள கருப்புத்துணியால் போர்த்தப்பட்டுள்ள கன சதுரக் கட்டிடமே இது. ஹஜ், மனித சமுதாயம் ஒன்று கூடுகின்ற ஒரு மிகப் பெரிய நிகழ்வாகும். உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பலதரப்பட்ட இன, குல, மொழி, கலாச்சாரம் கொண்ட 30 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தங்களது சமயக் கடமையினை நிறைவேற்ற ஆண்டுதோறும் இங்கு வந்து கூடுகின்றனர். இஸ்லாமியக் கொள்கையின் சாராம்சத்தையும் அதன் மூலம் உலகம் பெறவிருக்கின்ற எழுச்சியையும் அது எடுத்துக்காட்டுகின்றது.

இஸ்லாம் எப்படி தனிப்பட்ட முறையிலும் கூட்டான முறையிலும் மக்களை ஒன்றிணைக்கிறது என்பதற்கு ஹஜ் ஒரு சிறந்த உதாரணமாகும். அது ஒரு அசாதாரணமான சமுதாய உணர்வையும், சமத்துவத்தை வலியுறுத்துகின்ற ஒற்றுமையையும் உருவாக்குகின்றது. ஹஜ்ஜின் ஒற்றுமை, அனைத்து விதமான இன, நிற, கலாச்சார வர்க்கப் பேதங்களை

அடியோடு ஒழிக்கின்றது. அனைத்துப் புனிதப் பயணிகளும் ஒரே மாதிரியான உடை உடுத்துகின்றனர். ஒரு மன்னரோ அல்லது பெரும் செல்வந்தரோ ஒரு பரம ஏழையுடன் எந்த விதமான வித்தியாசமுமின்றி அருகருகே நடந்து செல்கிறார். இறைவனின் முன்னிலையில் இத்தகைய வேறுபாடுகளை சில நொடிகளுக்கு நம்மால் களைய முடியுமென்றால் நம்முடைய அன்றாட வாழ்வில் இத்தகைய பேதங்கள் நம்மை கட்டுப்படுத்தாமலும் வென்று விடாமலும் இருக்க நாம் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். நாம் அடைய முயற்சிக்க வேண்டிய இலக்கான சமத்துவத்தின் அடையாளமே இது எனலாம். இஸ்லாம் நமக்கு வழிகாட்டியுள்ள சமநிலைக்கு முரணாகவும், தவறாகவும் இருக்கின்ற சமூக மரபுகள் என்ற மனிதக் கற்பனைகளைக் காட்டிலும் மிக முக்கியமான விஷயங்கள் உள்ளன என்பதற்கு "ஹஜ்" அத்தாட்சியாகவும். ஒற்றுமையும் சமத்துவமும் கொண்ட ஒரு சமூகத்தில் தனி மனிதத்துவத்தை அழிக்கின்ற நிலை இல்லை என்பதையும் அது உணர்த்துகின்றது. மிக அதிகமான தடவைகளில் ஹஜ்ஜின் போது சொல்லப்படும் வார்த்தையான "லெப்பைக்" நான் இங்கிருக்கிறேன் "அல்லாஹும்ம லெப்பைக்" உன்னிடமே வந்துவிட்டேன் என்ற அந்த வார்த்தைகள் கூட தனிப்பட்ட ஒரு அறிவிப்பே எனலாம். இறுதியாக ஒவ்வொருவருக்கும் அவர்களது தனிப்பட்ட செயல்கள் மற்றும் எண்ணங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டு பொறுப்புகள் வழங்கப்படுவது போல் இந்த மனித சமுத்திரத்தில் இறைவன் முன்னிலையில் ஒவ்வொரு தனி மனிதனும் அவனது சிறப்பியல்புகளைக் கொண்டே அறியப்படுகின்றான்.

ஹஜ்ஜின் 5 நாட்களில் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்து மக்காவில் ஒன்று கூடுகின்ற முஸ்லிம்கள் இறைவனை ஒன்றாகவே வணங்குகிறார்கள். ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு ஒன்றாகவே நகர்ந்து செல்கிறார்கள். புனிதப் பகுதிகளுக்குள் நுழையும்போது அவர்கள் கருணை மிக்க நிலையில் இருக்க வேண்டும். அவர்கள் உலக எண்ணங்களையும், ஆசைகளையும் முற்றிலும் துறந்து விட்டு "இஹ்ராம்" எனப்படும் தைக்கப்படாத இரண்டு வெள்ளைத் துணிகளை அணிந்து கொள்கிறார்கள்.

புனிதப் பகுதிகளில் வன்முறை முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். விலங்குகள், தாவரங்கள் ஏன் ஒரு ஈக்குக்கூட தீங்கு விளைவிக்கக் கூடாது. பெருமை என்று கருதக்கூடிய எல்லா வகையான அடையாளங்களையும் ஹஜ் பயணிகள் தவிர்க்க வேண்டும். தலை முடியைச் சீவுதல், நறுமணப் பொருட்களை உபயோகித்தல், நகங்களை வெட்டுதல் போன்ற செயல்களைத் தவிர்க்க வேண்டும். ஒருவன் தனது தோற்றத்தைப் பற்றிக் கவனம் கொள்ளாது முற்றிலும் தன்னை இறைவனுக்கே அர்ப்பணித்திட வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். இறைவன் இருப்பதை தெரிந்து கொள்ளக் கூடிய ஒரு மிகப் பெரிய மனிதக் கூட்டத்தில் இருக்கிறோம் என்பதை உணரக்கூடிய நிலையில் அவர்கள் இருக்கின்றார்கள். ஒருவன் தன்னை அறிந்து கொள்கின்ற அந்தத் தருணங்களில் "நான்" என்ற அகங்காரத்தை விட்டொழிக்க வேண்டும். இந்த அனுபவங்கள் காரணமாக உண்மையிலேயே பணிவு கொண்டவர்களாக நாம் ஆகிவிடுவோம்.

பாலுறவு ஆசை உட்பட அனைத்து ஆசைகளையும் அப்பால் வைத்து விடவேண்டும். ஹஜ் பயணிகள் இறைவனின் கருணையையும், மகிழ்ச்சியையும். மன்னிப்பையும் பெறுவதற்கே மக்காவிற்கு வருகிறார்கள். "இஹ்ராம்" உடை அணிந்த அந்தத் தருணத்திலிருந்து புனிதப் பயணிகள் அனைவரும் "ஓ என் இறைவனே! உனது அழைப் பினை ஏற்றே நான் இங்கு வந்துள்ளேன்" என்று அறிவித்து விடுகிறார்கள். தங்களது பயணக்காலம் முழுவதும் அவர்கள் "அல்லாஹு அக்பர்" (இறைவன் மிகப் பெரியவன்) என்றும், அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும் அவனைப் புகழ்ந்து கொண்டாடிக் கொண்டே இருக்கின்றார்கள்.

# உலக சகோதரத்துவம்

இஸ்லாத்தின் இணையற்ற சிறப்பம்சங்களில் ஒன்றாக "ஹஜ்" திகழ்கின்றது. பல்வேறு நோக்கங்களை நிறை வேற்றுவதற்காக இது அல்லாஹ்வால் வகுத்தளித்துத் தரப்பட்டுள்ளது. அவை கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

1. மிகப்பெரிய இந்த வருடாந்திர நம்பிக்கை சார்ந்த ஒன்று கூடலின் போது முஸ்லிம்கள் ஒருவரையொருவர் சந்தித்து ஒருவரைப் பற்றி ஒருவர் அறிந்து கொண்டு பொதுவான பிரச்னைப் பற்றி ஆராய்ந்து தங்களது பொது நலனை மேம்படுத்திக் கொள்கின்றனர்.

2. மனித சமூக வரலாற்றில் அறியப்பட்ட மிகப் பெரிய அமைதி மாநாடு இதுவேயாகும். ஹஜ் காலத்தின் போது, இறைவனுடனும் ஒருவருக்கொருவருடனும், ஒருவருடைய ஆன்மாவுடனும், விலங்குகளுடனும், பறவைகளுடனும், பூச்சிகளுடனும் கூட அமைதியைப் பேணவேண்டும். அமைதியே ஹஜ்ஜின் மையக்கருத்தாகும். யாருடைய அமைதிக்கும், எந்த ஒரு படைப்பினத்தின் அமைதிக்கும் பங்கம் நேரிடும் வண்ணம் செயல்படுவது தடுக்கப்பட்டுள்ளது.

3. இஸ்லாத்தின் உலகளாவிய தன்மையையும் சகோதரத்துவத்தையும், முஸ்லிம்களின் சமத்துவத்தையும் பறை சாற்றுகின்ற ஒரு மிகப்பெரிய நிகழ்ச்சி இது. அனைத்து முஸ்லிம்களும் உலகத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் இறைவனின் அழைப்பை ஏற்று மக்காவில் ஒன்று கூடுகின்றனர். அவர்கள் அனைவரும் ஒரேமாதிரியான எளிய உடையை அணிந்து கொள்கின்றனர். ஒரே விதமான வழிமுறைகளைக் கடைப்பிடிக்கின்றனர். ஒரே நேரத்தில், ஒரே முறையில் இறைவனை இறைஞ்சுகின்றனர். இங்கு சிறப்புரிமை யாருக்கும் இல்லை. எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மீதான அளப்பரிய விசுவாசமே இருக்கின்றது. பிரபுத்துவம் இங்கில்லை. ஆனால் பணிவும், அர்ப்பணிப்பு உணர்வுமே இருக்கின்றது.

4. முஸ்லிம்கள் இறைவன்பால் கொண்டுள்ள கட்டுப் பாட்டுணர்வையும், இறைப்பணிக்காக அனைத்து விதமான உலகியல் நலன்களையும் விட்டுக் கொடுக்க அவர்கள்

சித்தமாக உள்ளனர் என்பதையும் இது உறுதி செய்கின்றது.

5.நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் ஆன்மீக மற்றும் வரலாற்றுச் சூழலைப் பற்றி புனிதப் பயணிகள் அறிந்து கொண்டு. அதன் மூலம் புத்துணர்வு பெற்று தங்களது நம்பிக்கையை வலுப்படுத்திக் கொள்ள இது உதவுகின்றது.

6.ஆன்மீக வளம், தார்மீக பலம், தீவிரமான ஈடுபாட்டுணர்வு ஒழுங்குமுறை சார்ந்த அனுபவம், மனித சமுதாயத்தின் நலன், உணர்வூட்டும் அறிவு என இவையனைத்தும் ஒன்றிணைந்த இஸ்லாத்தின் ஒரே வழிமுறையாக ஹஜ் அமைந்துள்ளது.

ஒரு விலங்கைப் பலி கொடுத்து அதனை அல்லாஹ்விற்குச் சமர்ப்பிப்பது ஹஜ்ஜின் இறுதிச் செயல்பாடாகும். அதன் இறைச்சியும், இரத்தமும் அல்லாஹ்விடம் போய்ச் சேருவதில்லை. ஆயினும் உங்கள் இறையச்சமே அல்லாஹ்விடம் போய்ச் சேருகின்றது. (குர்ஆன் 22:37) என இறைவன் இது பற்றித் தெளிவுபடுத்தியுள்ளான்.

மக்காவைத் தவிர்த்து உலகின் பிறபகுதிகளில் வசிக்கின்ற முஸ்லிம்களும் இதேபோன்று ஹஜ்ஜுப் பெருநாளன்று இறைவனுக்குத் தங்களது காணிக்கையைச் செலுத்துகின்றனர். ஹஜ்ஜின் இறுதி நிகழ்ச்சியாக இது அமைகின்றது. எனவே இந்த ஹஜ்ஜுப்பெருநாள் தியாகத் திருநாள் (ஈதல் அதா)என அழைக்கப்படுகின்றது.

ஒரு முஸ்லிமை நேரான பாதையில் இட்டுச் செல்கின்ற ஆன்மீக ஒழுங்குமுறையே இந்த ஐம்பெரும் கடமைகளாகும்.

## முடிவுரை

குர்ஆனில் இறைவன் அடிக்கடி "தொழுகையை நிலை நிறுத்துங்கள். ஜகாத்தை கொடுங்கள்" எனக் கூறுகின்றான். ஓரிறைவனை வணங்க வேண்டுமென்பதும் சமுதாயத்திற்கு வழங்க வேண்டியவற்றை வழங்கிடவேண்டுமென்பதும், ஒரே மூச்சில் கூறப்பட்டுள்ளன. உடலையும் ஆன்மாவையும் இணைக்கின்ற மிகச் சிறந்த தெளிவான நிலைப்பாடு வேறு ஏதேனும் இருக்கின்றதா? ஆன்மீகக் கடமைகளில் பொருளியல் சார்ந்த நன்மைகள் இல்லாமலில்லை. உலகியல் கடமைகளிலும் ஆன்மீக மதிப்பீடுகள் உள்ளன. இத்தகைய

கடமைகளை நிறைவேற்றுபவரின் எண்ணங்களையும் நோக்கங்களையும் பொறுத்தே அனைத்தும் அமைகின்றன.

இஸ்லாத்தின் இந்த ஐந்து கடமைகளும் தனிமனிதப் பொறுப்புணர்வையும், சமூக விழிப்புணர்வையும், கூட்டு மனச்சாட்சியையும் பரந்துபட்ட இஸ்லாமிய சமுதாயத்தில் நானும் ஒரு உறுப்பினர் என்ற உணர்வையும் உள்ளடக்கிய வைகளேயாகும்.

இஸ்லாமிய நம்பிக்கையை ஏற்று முஸ்லிமாக மாறுவதென்பது பேராற்றல் கொண்ட ஏக இறைவனாகிய எல்லாம் வல்ல அல்லாஹ்வை வணங்குகின்ற ஒரு சமுதாயத்தில் நாமும் அங்கமாகி விடுகிறோம் என்பதையும், அவனது கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலம் சமூக ரீதியில் நியாயமான ஒரு சமூகத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம் என்பதையும் உணர்த்துகின்றன.

# 8
# இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகள்

## வாழ்க்கை பற்றிய கொள்கை

இறைவனின் ஞானம் மற்றும் அறிவின் அற்புதமான செயல்வடிவமே வாழ்க்கையாகும். இது அவனது ஆற்றல் மற்றும் கலையுணர்வின் தெளிவான பிரதிபலிப்பு என்றும் கூறலாம். அவனே வாழ்க்கையைக் கொடுத்தவன். நம்மைப் படைத்தவன். எந்த ஒரு பொருளும் தற்செயலாகத் தோன்றவில்லை. யாரும் தன்னைத் தானே படைத்துக் கொள்ள வில்லை. அல்லது வேறு யாரையும் படைக்க வில்லை. வாழ்க்கை அரிதான வளமிக்க ஒரு சொத்தாகும். எந்த ஒரு புத்தியுள்ள அல்லது சராசரி மனிதனும் அதனை இழக்க விரும்ப மாட்டான்.

வாழ்க்கை இறைவனால் மனிதனுக்கு வழங்கப் பட்டதாகும். அதனைத் திரும்ப எடுத்துக் கொள்ளும் உரிமை அவனுக்கு மட்டுமே உண்டு. வாழ்க்கையை அழிப்பதற்கு வேறு யாருக்கும் உரிமை இல்லை. இதன் காரணமாக, இஸ்லாம் அனைத்து விதமான தற்கொலைகளையும் சுய அழிப்புச் செயல்களையும் தடைசெய்துள்ளது. நெருங்கிய உறவினர் ஒருவர் மரணமடைந்தால், பொறுமையையும் நம்பிக்கையும் கடைப்பிடிக்குமாறு அது பரிந்துரைக்கின்றது.

இறைவன் மனிதனுக்கு வாழ்வைக் கொடுத்து அவனுக்கு இணையற்ற பண்புகளையும், அளப்பரிய திறமைகளையும்

அளித்திருப்பது அவற்றை வீணாக்க வேண்டும் என்பதற்காக அல்ல. சில கடமைகளை அவன் நிறைவேற்ற வேண்டும் என்று வரையறுத்திருப்பதும் வீண் அல்ல. வாழ்க்கையின் நோக்கத்தை நிறைவேற்றிடவும், உயிர் வாழ்வதன் குறிக்கோளை உணர்த்திடவும் மனிதனுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதே இறைவனின் எண்ணமாகும். தெய்வீக வழி காட்டுதல்களின்படி மனிதன் வாழும் கலையை அறிந்து கொள்ளவும், வாழ்க்கையின் இனிய சுவையை அனுபவிக்கவும் இறைவன் மனிதனுக்கு உதவிட விழைகின்றான். வாழ்க்கை இறைவனிடமிருந்து பெற்ற ஒரு அமானிதமாகும். மனிதன் அதன் பாதுகாவலனாக நியமிக்கப்பட்டிருக்கிறான். அவன் அந்த அமானிதத்தை நேர்மையுடனும், திறமையுடனும் இறைவனுக்குப் பயந்தும், பொறுப்பினை உணர்ந்தும் பாதுகாத்திட வேண்டும்.

வாழ்க்கையின் நோக்கம் இறைவனை வணங்குவதே யாகும். அதே நேரத்தில் மனிதன் தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டு முழுமையான தியானத்தில் தனது முழு வாழ்க்கையையும் செலவிட வேண்டும் என்பது இதன் பொருள் அல்ல. இறைவனை வணங்குவதென்பது, அவனது கட்டளைகளை அறிந்து கொள்ள முயற்சிப்பது, அவன் மீது அன்பு கொள்வது, அவனது கட்டளைகளுக்குக் கீழ்படிவது, வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் அவனது சட்டங்களை நடைமுறைப்படுத்துவது, நன்மையான செயல்களைச் செய்து தீமையான செயல்களிலிருந்தும் விலகியிருப்பதன் மூலமாக அவனுக்குச் சேவை செய்வது, அவனிடத்திலும் சக மனிதர்களிடத்திலும் நியாயமாக நடந்து கொள்வது என அனைத்தையும் உள்ளடக்கியதாகும். இறைவனை வணங்குவதென்பது வாழ்க்கையை வாழ்ந்து காட்டுவதுதானே தவிர, அதை விட்டு ஓடிப்போவது அல்ல.

வாழ்க்கையை ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து தொடங்கி ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சென்றடைகின்ற ஒரு பயணத்துடன் ஒப்பிடலாம். மறுமை என்ற நிரந்தர வாழ்க்கைக்கு முந்திய கட்டமாக இந்த உலக வாழ்க்கையை எடுத்துக் கொள்ளலாம். இந்தப் பயணத்தில் மனிதன் ஒரு பயணியே. தனது எதிர்கால வாழ்விற்கு எது பயனுள்ளதாக இருக்கும் என்பதைப் பற்றி மட்டுமே அவன் கவலைப்பட

வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமானால் அவன் தன்னால் முடிந்த அளவுக்கு நன்மையான செயல்களையே செய்து எந்த நிமிடத்திலும் அந்த நிலையான வாழ்க்கையை நோக்கிச் செல்ல தன்னைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டும். இந்த உலக வாழ்க்கையை நற்செயல்கள் புரிந்திட தனக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு நல்ல வாய்ப்பாகவே அவன் கருத வேண்டும். ஏனெனில் அவனது வாழ்வு முடிவிற்கு வரும் போது ஒரு நிமிடம் கூட அதனைத் தாமதப்படுத்திட அவனால் முடியாது. அவனால் அப்போது எதுவும் செய்ய முடியாது. தனது வாழ்வை நீட்டிக்கவும் முடியாது. எனவே வாழ்க்கையை இறைவனின் போதனைகளின் படி அமைத்துக் கொண்டு மறு உலக வாழ்க்கைக்குச் செல்வதற்கான ஒரு பாதுகாப்பான வழியாக அதனை அமைத்துக் கொள்ள வேண்டும். இறுதியான இலக்கை அடைவதற்கு வாழ்க்கை ஒரு முக்கியமான வழி முறையாகும். ஒரு மனிதன் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக் கூடாது, எப்படி வாழ வேண்டும் என்பது பற்றிய தெளிவான வழிகாட்டு தல்களையும், நியதிகளையும் இஸ்லாம் வகுத்தளித்துத் தந்துள்ளது. மனிதர்கள் அனைவரும் இறைவனால் படைக்கப்பட்டவர்களே! அவனிடமே அவர்கள் திரும்பிச் செல்ல வேண்டும் என்பதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை. தம்முடைய தெளிவான அறிவிப்பு ஒன்றில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் "மனிதர்கள் தங்களைப் புதியவர்களாக அல்லது உலகத்தைக் கடந்து செல்கின்ற பயணிகளாகக் கருதிக் கொள்ள வேண்டுமென" அறிவுறுத்தியுள்ளார்கள்.

# பாவம் பற்றிய கொள்கை

*எவரெவர் எதைச் சம்பாதிக்கின்றார்களோ அதற்கு அவரவர்களே பொறுப்பாளிகளாவர். மேலும் ஒருவரின் சுமையை மற்றவர்கள் சுமக்கமாட்டார்கள். பின்னர் நீங்கள் அனைவரும் உங்கள் அதிபதியிடமே திரும்ப வேண்டியதுள்ளது. (குர்ஆன் 6:164)*

தெரிந்திருந்தும் வேண்டுமென்றே இறைவனின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிய மறுப்பது பாவமாகும். பல இறைக்கொள்கையில் நம்பிக்கை வைப்பது பாவங்களிலேயே மிகப்பெரிய பாவமாகும். (ஒன்றுக்கு மேற்பட்ட கடவுள்கள் அல்லது பல கடவுள்கள் பால் நம்பிக்கை வைப்பது) வேண்டுமென்றே இறைவனின் கட்டளைகளுக்குக் கீழ்படிய மறுப்பது பாவச் செயலாக கருதப்படுகின்ற போதிலும் இறைவன் தனி நபர்களுக்கும், சமுதாயத்திற்கும் கேடு விளைவிக்கின்ற செயல்களைப் பாவச் செயல்கள் என்று கூறி தடை செய்துள்ளான். கொலை, தாக்குதல், திருட்டு, மோசடி, வட்டி, மணமாகாத ஆண்-பெண்ணின் பாலியல் உறவு, விபச்சாரம், சூன்யம் வைத்தல், போதை தரும் மது அருந்துதல் பன்றியிறைச்சி உண்ணல், போதை மருந்துகளை உபயோகித்தல் போன்றவை பாவச் செயல்களுக்கு உதாரணங்களாகும்.

"முதல் பாவம்" என்ற தத்துவத்தை இஸ்லாம் நிராகரிக்கின்றது, "ஒருவரின் சுமையை மற்றவர்கள் சுமக்க மாட்டார்கள்" என இறைவன் குர்ஆனில் குறிப்பிடுகின்றான். நாம் ஒவ்வொருவரும் இறைவனிடம் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள். ஒருவன் இன்னொருவனைப் பாவம் செய்யத் தூண்டினால், தூண்டியவன், செய்தவன் என இருவருமே தண்டனைக்குள்ளாவார்கள். ஒருவன் பாவம் செய்ததற்காகவும், மற்றவன் பாவம் செய்யத் தூண்டியதற்காகவும் தண்டனை பெறுவார்கள்.

பாவம் புரிகின்றவர்கள் இறைவனின் தண்டனைக்கு உரியவர்களாகின்றனர். அதிர்ஷ்டவசமாக இறைவன் பெரும் கருணையாளனாகவும், மன்னிப்பவனாகவும் இருக்கின்றான். இறைவன் அளவற்ற ஞானத்துடனும், நீதியுடனும் செயல் படுகிறான். அன்னை மர்யத்தின் மகனான ஈஸா(அலை) (இயேசுகிறிஸ்து) மனித சமூகத்தின் பாவங்களுக்காக மரணமடைந்தார் என்ற கூற்றை முஸ்லிம்கள் நம்பவில்லை. இறைவன் மிகப்பெரும் கருணையாளன். அவன் தான் நாடியவர்களை மன்னிக்கின்றான். இயேசு கிறிஸ்து நமது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காகவே மரணமடைந்தார் என்று கூறுவது இறைவனின் அளவற்ற ஆற்றலையும், நியாயத்தையும் மறுப்பதற்குச் சமமாகும். இறைவன் கருணையில் எந்த வரையறையும் இல்லை.

வருந்தி மன்னிப்பு கோருவதும் ஒரு வணக்க வழிபாடே. ஒரு மனிதன் இறைவனின் கருணையினால் மீட்சி பெறமுடியும். இதய சுத்தியுடன் தன்னிடம் நேரடியாக வருந்திப் பாவமன்னிப்புக் கோருபவர்கட்கு மன்னிப்பு வழங்குவதாக எல்லாம் வல்ல அல்லாஹ் வாக்குறுதி வழங்கியுள்ளான்.

நேரான முறையில் வருந்தி பாவமன்னிப்புக் கோருவதற்குக் கீழ்க்கண்ட நிபந்தனைகள் உள்ளன.

1. அவன் பாவம் புரிந்துள்ளதை உணர்ந்து அங்கீகரித்து அதற்காக உண்மையிலேயே வருந்த வேண்டும்.

2. அவன் மன்னிப்புக் கோரி இறைவனிடம் முறையிட வேண்டும்.

3. மீண்டும் பாவம் புரியமாட்டேன் என்ற நேர்மையான உறுதிப்பாடு அவனிடம் இருக்க வேண்டும்.

4. அவன் செய்த பாவம், இன்னொருவனுக்கு தீங்கு விளைவித்திருந்தால் அந்தத் தீங்கினை நீக்க அவன் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

அவன் மீண்டும் பாவம் புரிந்திட்டால், ஏற்கனவே இறைஞ்சிப் பெற்ற மன்னிப்பு செயலற்றுப் போய்விடும்

என்பது இதன் பொருள் அல்ல. மீண்டும் பாவம் புரியமாட்டேன் என்ற தீவிரமான ஒரு உறுதிப்பாடு அவனது உள்ளத்தில் எழ வேண்டும் என்பதே முக்கியமானதாகும். நாளை என்ன நடக்கும் என்பதை நம்மால் அறிந்து கொள்ள முடியாது. பாவமன்னிப்புக் கோருவதற்கான கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கின்றன. மிகப்பெரும் மன்னிப்பாளனாகிய எல்லாம் வல்ல அல்லாஹ் ஆதத்தின் பிள்ளைகள் பாவ மன்னிப்பு வேண்டி தன்னிடம் வரும்போது மகிழ்ச்சி அடைகின்றான்.

இறைவனைத் தவிர வேறு யாரும் பாவங்களை மன்னிக்க முடியாது. வேறு ஒருவர் மூலமாகவோ அல்லது வேறு ஒருவரிடமோ பாவமன்னிப்புக் கோருவதற்கு ஒரு முஸ்லிமுக்கு அனுமதி இல்லை. அப்படிச் செய்வது பல தெய்வ வழிபாட்டிற்குச் சமமானதாகும்.

# தவாஃப்

## செய்த குற்றத்திற்காக வருந்துதல் பற்றிய கொள்கை

கருணை மிக்க இறைவன் நம்மை ஒரு போதும் மறப்பதில்லை. நம்மைக் கைவிடுவதுமில்லை; நம்முடைய வேண்டுதல்களைப் புறக்கணிப்பதுமில்லை. தன்னுடைய கருணை மற்றும் அன்பின் வாயிலாக நமக்கு நேர்வழி காட்டியிருக்கின்றான். நமக்கு வழிகாட்டவும் உதவி புரியவும் தூதர்களையும், வேத நூல்களையும் நமக்கு அனுப்பியுள்ளான். இறைவனால் அனுப்பப்பட்ட இறுதித்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் ஆவர். இறைவனின் உண்மையான வேத நூலாக தற்போது விளங்குவது குர்ஆனே. நபிகள் நாயம்(ஸல்) அமுத மொழிகள் மற்றும் குர்ஆனின் போதனைகளிலிருந்தும் நாம் இறைவன் மன்னிப்பு அளிப்பது பற்றி அறிந்து கொள்கிறோம். ஒருவன் ஒரு பாவம் செய்தால் அல்லது தவறிழைத்தால் அவன் இறைவனின் கட்டளைகளை மீறி விடுகிறான். இறைவனுக்கு எதிராக பெரும் குற்றத்தில் ஈடுபட்டவனாகிறான்; அவனது மாண்பையும், இருப்பையும் இழிவுபடுத்தி விடுகிறான். ஆனால் அவன் உண்மையிலேயே தான் இழைத்திட்ட தவறுகளுக்காக மனம் வருந்தி இறைவனிடம் பாவ மன்னிப்புத் தேடுவானாகில் இறைவன் அதனை ஏற்றுக் கொண்டு அவனுக்கு பாவமன்னிப்பு வழங்குவான்.

நேரிய பாதையில் செல்பவர்கட்கு சொர்க்கம் வழங்குவதாக இறைவன் உத்தரவாதம் தருகின்றான். தவறுகள் இழைத்து விட்ட பின்னர் மனம் வருந்தியவர்கட்கு மன்னிப்பு வழங்க வாக்குறுதி அளிக்கின்றான். நிராகரிப்பவர்களை அவன் எச்சரிக்கிறான். இறைவனையும் அவனது ஏகத்துவத்தையும் நிராகரித்தவர்கள் கூடதங்களது தவறுகளை உணர்ந்து

*இறைவனின் பக்கம் திரும்பினால் இறைவன் அவர்களை மன்னிப்பான். இதுபற்றி குர்ஆனில் இறைவன் குறிப்பிடுவதாவது:*

*"(நபியே) கூறுவீராக! தங்கள் ஆன்மாக்களுக்கு கொடுமை இழைத்துக் கொண்ட என் அடிமைகளே! அல்லாஹ்வின் கருணை பற்றி நம்பிக்கை இழந்து விடாதீர்கள். திண்ணமாக, அல்லாஹ் எல்லாப் பாவங்களையும் மன்னித்து விடுகிறான். அவன் பெரிதும் மன்னிப்பவனும் கருணையாளனும் ஆவான். திரும்பி விடுங்கள் உங்கள் இறைவனின் பக்கம்: மேலும் அடி பணிந்து விடுங்கள். அவனுக்கு உங்கள் மீது வேதனை வருவதற்கு முன்பாகவே! பிறகு எங்கிருந்தும் உங்களுக்கு உதவி கிடைக்காது" (குர்ஆன் **39:53,54**)*

*தனது இந்த மிகப்பெரும் ஆதரவிற்கும் அன்பிற்கும் பதிலாக இறைவன் நம்மிடமிருந்து எதனையும் எதிர்பார்ப் பதில்லை. ஏனெனில் அவன் தேவையற்றவன். தனித்தவன். தனக்குத் திருப்பித் தருமாறு அவன் நம்மிடம் எதையும் கேட்பதில்லை. நாம் அவனுக்கு வெகுமதிகள் எதுவும் வழங்கிட முடியாது. அவனது கணக்கிட இயலாத கருணையையும் ஆதரவையும் நாம் மதிப்பிட முடியாது. அவன் நம்மிடம் எதிர்பார்ப்பதெல்லாம் நாம் அவனுக்கு நன்றியுடையவர்களாகவும். அவனைப் போற்றக் கூடியவர் களாகவும் அவன் பரிந்துரைத்துள்ள நற்குணங்களைப் பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும் என்பது தான். அவன் தான் நம்மை அச்சத்திலிருந்தும், மூடப் பழக்கத்திலிருந்தும் விடுவித்தவன். அவன் நம்மை அவமானப்படுத்த விரும்பவில்லை. ஏனெனில் அவன் தான் நம்மைப் படைத்து அனைத்து படைப்பினங்களுக்கும் மேலான நிலையில் நம்மை வைத்திருப்பவன். எனவே அவன் நமக்கு என்ன விதிமுறைகளை உருவாக்கித் தந்துள்ளானோ அவை நமது நன்மைக்காகவும் நலனிற்காகவும் தான் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.*

# ஈமான்

## நம்பிக்கை பற்றிய கொள்கை

நேர்மறையான செயல்பாடுகள், ஆக்கப்பூர்வமான கருத்துக்கள் மற்றும் சக்திவாய்ந்த நற்பயன் அளிக்கக் கூடிய அம்சங்கள் மூலமாகப் பெற்ற ஒரு மகிழ்ச்சிகரமான ஒரு நிலையே இஸ்லாத்தில் நம்பிக்கை எனப்படும்.

*புனித குர்ஆனும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் அமுத மொழிகளும் (ஹதீஸ்கள்) உண்மையான நம்பிக்கையின் அம்சங்கள் மற்றும் தரம் பற்றி வரையறுத்துக் கூறியுள்ளன. எனவே உண்மையான முஸ்லிம் நம்பிக்கையாளர்கள் யாரெனில்:-*

*1. இறைவன் மீதும், மலக்குகள் மீதும், இறைவனின் வேதங்கள் மீதும் இறுதி வேதமான குர்ஆன் மீதும் நம்பிக்கை கொண்டோர் மற்றும் தூதர்கள் மீதும், முஹம்மது(ஸல்) அவர்கள் தான் இறுதித் தூதர் என்றும் இறுதித் தீர்ப்பு நாளின் மீதும் இறைவனின் அளப்பரிய ஞானம் மற்றும் அறிவின் மீதும் நம்பிக்கை வைத்திருப்போர்.*

*2. எப்போதும் இறைவன்பால் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருப்போர்.*

*3. இறைவன் வழங்கியுள்ள செல்வம், வாழ்க்கை, ஆரோக்கியம், அறிவு, அனுபவம் போன்றவற்றை அவனது வழியில் (வழிகாட்டுதலின் படி) செலவிடுவோர்.*

*4. தினசரி தொழுகைகளையும், வாராந்திர ஜும்ஆ*

தொழுகையையும், வருடாந்திர பெருநாள் தொழுகைகளையும் நிறைவேற்றுவோர்.

5. தங்களுடைய வருடாந்திர வருமானத்தில் இரண்டரை சதவிகிதத்தை, அல்லது வர்த்தகம் செய்வோர் தங்களது செலவினங்களையும் கடனையும் தவிர்த்து மீதம் உள்ள மொத்த இருப்பிற்கு இரண்டரை சதவிகிதத்தை ஆண்டுதோறும் தகுதிவாய்ந்த ஏழைகளுக்கு வழங்கி வருவோர்.

6. நற்செயல்களைப் புரிந்து தீய மற்றும் தவறான செயல்களுக்கு எதிராகத் தங்களால் முடிந்த அளவிற்கு சட்டப் பூர்வமான வழி முறைகளில் எதிர்த்துப் போராடுவோர்.

7. இறைவனின் பாலும், அவனது தூதர் பாலும் சக மனிதர்களான முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிமல்லாதவர்கள் பாலும் நேரிய முறையில் இறைவனுக்காகவே அன்பு செலுத்துவோர்.

8. தங்களது உறவினர்கள் மற்றும் அண்டை வீட்டுக்காரர்கள் மீதும் அன்பு செலுத்துவோர். விருந்தாளிகளை அன்புடன் உபசரிப்போர்.

9. உண்மையே பேசுவோர், நல்ல விஷயங்களைப் பேசுவோர், அல்லாத விஷயங்களைத் தவிர்ப்போர்.

10. இயற்கையையும், இறைவனின் படைப்புகளையும் பாதுகாப்போர்.

இஸ்லாம் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் ஆழமாகவும், ஆக்கப்பூர்வமாகவும் ஊடுருவிச் சென்றிட இந்த நம்பிக்கையே காரணமாக இருக்கின்றன. இஸ்லாமியக் கோட் பாடுகளின்படி ஒரு மனிதனின் ஆன்மீக மற்றும் பொருளியல் வாழ்க்கையிலும், அவனது தனிப்பட்ட மற்றும் சமூக நடத்தையிலும், அதைப்போல் அவனது அரசியல் மற்றும் பொருளாதார வாழ்க்கையிலும் உண்மையான நம்பிக்கை மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

# இயற்கை பற்றிய கொள்கை

பூமியும் அதில் உள்ள படைப்பினங்களும் இறைவனுக்குக் கீழ்ப்படிகின்ற பணியாட்கள் என்றும், அவை இறைவன் பால் பிரியம் கொண்டுள்ளன என்றும், அவை இறைவனுக்குத் தலை சாய்க்கின்றன என்றும் இறைவன் குறிப்பிடுகின்றான்.

> வானங்களில் உள்ளவர்களும், பூமியில் உள்ளவர்களும் சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும், மலைகளும், மரங்களும், பிராணிகளும் மற்றும் மனிதர்களில் பெரும்பாலோரும் ஏன் அல்லாஹ்வின் வேதனைக்கு இலக்காகிய பலரும் அல்லாஹ்வின் திருமுன் ஸஜ்தா செய்து சிரம் பணிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நீர் காணவில்லையா? அல்லாஹ் யாரைக் கேவலப்படுத்துகின்றானோ அவரைக் கண்ணியப்படுத்துவோர் எவருமிலர். திண்ணமாக அல்லாஹ் தான் நாடியதைச் செய்கின்றான். (குர்ஆன் 22:18)

எனவே இயற்கை வளங்களைச் சுரண்டவோ அவற்றைத் தவறான முறையில் பயன்படுத்தவோ நமக்கு அதிகாரமில்லை. உண்மையில் இயற்கைக்கும் மனிதனுக்குமிடையே உள்ள தொடர்பைப் பயன்படுத்தி இயற்கை வளங்களை தவறாகப் பயன்படுத்துவதென்பது நம்மை நாமே தவறாகப் பயன்படுத்திக் கொள்வதற்குச் சமமாகும். மனித உயிர் எப்படிப் புனிதமானதோ அது போல் தான் இயற்கையும் புனிதமானது. இறைவன் இது பற்றிக் குறிப்பிடுவதாவது:

> அவன் வானத்தை உயர்த்தினான் தராசை நிலை நாட்டினான். நீங்கள் தராசில் நீதி தவறிவிடக் கூடாது என்பதற்காக மேலும் நீதியுடன் மிகச் சரியாக நிறுங்கள். தராசில் எடைக்குறைவு ஏற்படுத்திவிடாதீர்கள். (குர்ஆன்.55:7-9)

பூமியை அவன் எல்லாப் படைப்புகளுக்காகவும் அமைத்தான். அதில் விதவிதமான சுவை மிகு கனிகள் ஏராளமாக இருக்கின்றன. பேரீச்சை மரங்களும் இருக்கின்றன. அவற்றின் பழங்கள் பாளைகளால் மூடப்பட்டு இருக்கின்றன.

விதவிதமான தானியங்கள் உள்ளன. அவற்றில் உமியும் உண்டு. மணியும் உண்டு. ஓ! ஜின்களே, மனிதர்களே! உங்கள் அதிபதியின் எந்த அருட் கொடைகளை நீங்கள் பொய்யெனக் கூறுவீர்கள் (குர்ஆன் 55:10–13)

அவன் வானத்தை உயர்த்தினான். தராசை நிலை நாட்டினான். நீங்கள் தராசில் நீதி தவறிவிடக்கூடாது என்பதற்காக மேலும் நீதியுடன் மிகச் சரியாக நிறுங்கள். தராசில் எடைக் குறைவு ஏற்படுத்திவிடாதீர்கள்.

(குர்ஆன் 55:10–13)

பூமிக்கும், சுற்றுச் சூழலுக்கும் உரிமைகள் உள்ளன. இதில் முதல் உரிமை என்ன வென்றால் அவை நமக்குச் சொந்த மில்லை என்பதை நாம் அங்கீகரிப்பதேயாகும். நாம் அவற்றைப்படைக்கவில்லை. எனவே அவை நமக்குச் சொந்த மில்லை. மாறாக அதனுடைய சட்டப்பூர்வ சொந்தக்காரனிட மிருந்து நாம் அதனை அமானிதமாகப் பெற்றுள்ளோம். இறைவனைச் சாராமல் இயற்கைக்கு எந்த விதமான பொருளும் இல்லை என்பதையும், தெய்வீக நோக்கம் இல்லாமல் அவை இருப்பதில்லை என்பதையும் ஓரிறைக் கொள்கை வலியுறுத்துகின்றது. இயற்கையின் குர்ஆனியப் பெயர்"படைக்கப்பட்ட ஒழுங்கு முறை" என்பதாகும்.

# கலீபா

# பொறுப்பாளர் பற்றிய கொள்கை

இஸ்லாமியக் கொள்கையின் இரண்டாவது முக்கியமான அம்சம் கலீபா(பிரதிநிதி) என்பதாகும். இந்த வார்த்தையை அதிகாரம் பெற்ற பிரதிநிதி அல்லது பொறுப்பாளர் என்று மொழி பெயர்க்கலாம். இந்தப் பூமியில் மனிதர்கள் இறைவனின் பிரதிநிதிகள் அல்லது பொறுப் பாளர்கள் என இறைவன் குர்ஆனின் இரண்டாவது அத்தியாயம், வசனம் 30ல் வானவர்கட்குத் தெரிவிக்கின்றான். "நான் ஒரு பிரதிநிதியை பூமியில் ஏற்படுத்தப் போகிறேன்". என்று இறைவன் குறிப்பிடுகிறான். கலீபா என்பவர் உயர் அதிகாரம் பெற்ற ஒருவரின் பிதிநிதியாகும். அவருக்கோ / அவளுக்கோ தனித்த அதிகாரம் எதுவுமில்லை. பொறுப்பாளர் தங்களது பொறுப்புகளைச் சிரத்தையுடன் நிறைவேற்றி அறக்கட் டளையின் நிலைத்த தன்மையையும், வளர்ச்சியையும் உறுதி செய்ய வேண்டும்.

இந்தப் பூமியில் இறைவனின் பிதிநிதிகள் என்ற முறையில் தனியாகவும், கூட்டாகவும் இயற்கையின் சமநிலை அல்லது ஒன்றிணைப்பை பராமரிப்பதும் சுற்றுப்புறச் சூழ்நிலையை தாவரயினங்களுடனும் விலங்குகளுடனும் பாதுகாப்பதும், இறைவனின் படைப்புகள் அனைத்தையும் மரியாதையுடன் நடத்துவதும் நமது பொறுப்பாகும். நாம் சுதந்திரமாக இல்லை, இறைவனைச் சார்ந்தே இருக்கின்றோம். நாம் இந்த உலகில் நம்முடைய செயல்களுக்காகவும் அறிவியல் தொழில் நுட்பம் வர்த்தகம் போன்றவற்றிற்காகவும் தனியாகவும் கூட்டாகவும் இறைவனுக்குப் பதில் சொல்லக் கடமைப் பட்டுள்ளோம். பூமியின் ஒருமைப்பாட்டையும், அதனுடைய

சுற்றுச் சூழலையும் பாதுகாப்பதற்காகவும் இறைவன் நமக்கு வழங்கியுள்ள இந்தப் பொறுப்பு ஒரு சோதனையேயாகும். பிரதிநிதிகள் என்ற முறையில் நமது பொறுப்புகளை எங்ஙனம் நிறைவேற்றியுள்ளோம் என்பதைப் பொறுத்தே இறைவன் நம்மை எடைபோடுகிறான்.

"உங்களைப் பூமியில் பிரதிநிதிகள் ஆக்கியவனும் அவனே" (குர்ஆன் 6:165)

எனவே இயற்கை ஒரு அமானிதமாக இருக்கின்றது. அறநெறி மற்றும் ஒழுங்கு சார்ந்த ஒரு போராட்டக் களமாகவும் அது திகழ்கின்றது. இயற்கையின் பால் நமக்கு ஒரு தற்காலிகக் கட்டுப்பாடு இருக்கின்றதே தவிர அதன் மீது சுயாதிகாரம் நமக்கு எதுவுமில்லை.

இயற்கையின் பாதுகாவலன் என்ற பொறுப்பிலிருந்து நாம் தவறினால் நாம் மனிதர்கள் என்ற நிலையிலிருந்தும் தவறி பூமியில் அன்னியர்களாகி விடுவோம்.

மேலும் பூமியில் சீர்திருத்தம் ஏற்பட்ட பிறகு நீங்கள் அதில் குழப்பம் விளைவிக்காதீர்கள் (குர்ஆன் 7:56)

பூமியில் உள்ள அனைத்தின் மீதும் கருணை காட்டுங்கள். சொர்க்கத்தில் இருக்கின்ற அவன் உங்களிடம் கருணை காட்டுவான்" என நபிகள் நாயகம்(ஸல்) நவின்றுள்ளார்கள்.

# நற்செயல்கள் பற்றிய கொள்கை

மேலெழுந்த வாரியான நம்பிக்கைகள், சடங்குகள், உயிரற்ற நடைமுறைகள், வலுவற்ற நம்பிக்கைகள் ஆகியன பற்றி இஸ்லாம் மக்களை எச்சரிக்கின்றது.

நற்செயல்கள் பற்றி இறைவன் திருக்குர்ஆனில் குறிப்பிட்டிருப்பதாவது:

நற்செயல்கள் என்பது உங்கள் முகங்களைக் கிழக்கு நோக்கியோ மேற்கு நோக்கியோ திருப்புவதல்ல. மாறாக அல்லாஹ்வையும் இறுதி நாளையும், வானவர்களையும், வேதங்களையும், நபிமார்களையும் ஒருவன் முழுமையாக நம்புவதும் மேலும் (அல்லாஹ்வின் மீதுள்ள நேசத்தின் காரணமாக) தனக்கு விருப்பமான பொருளை உறவினர் கட்கும், அநாதைகளுக்கும், வறியவர்களுக்கும், வழிப்போக் கர்களுக்கும், யாசிப்பவர்களுக்கும், அடிமைகளை மீட்பதற்கும் வழங்குவதும், மேலும் தொழுகை நிலை நாட்டி ஜகாத் கொடுத்து வருவதுமே நற்செயல்களாகும். மேலும் வாக்குறுதி அளித்தால் தம் வாக்குறுதிகளை நிறைவேற்று பவர்களும், வறுமை மற்றும் துன்பங்களின் போதும், சத்தியத் திற்கும், அசத்தியத்திற்கும் நடக்கும் போராட்டத்தின் போதும் பொறுமையுடன் நிலைத்து இருந்தவர்களுமே புண்ணிய வான்கள் ஆவர். இவர்களே உண்மையானவர்கள். மேலும் இவர்களே இறையச்சமுடையவர்கள் (குர்ஆன் 2:177)

இதுவே குர்ஆன் படம் பிடித்துக்காட்டும் ஒரு நல்ல மனிதனுக்குரிய இலக்கணமாகும். வெறும் வார்த்தைகளோ அல்லது மேலெழுந்தவாரியான சடங்குகளோ நற் செயலாகாது. ஒரு நல்ல மனிதன் நன்மை பயக்கக் கூடிய அனைத்து விதி முறைகளுக்கும் கீழ் படிய வேண்டும் இறைவனின் பிரியம் காரணமாக அவன் முழுமையாகவும், நேர்மையாகவும் ஊக்கம் பெற்று இறைவனுக்காக சக மனிதர்கள் பாலும் அன்பு செலுத்த வேண்டும்.

# (சமநீதி)

## சமநீதி பற்றிய கொள்கை(இஃதிதால்)

நீதி, நிதானம், தன்னடக்கம், சமநிலை, இணக்கம் ஆகிய வார்த்தைகள் இஸ்லாத்தின் ஒழுக்கம் சார்ந்த நெறி முறைகளைக் கூறும் வார்த்தைகளாகும். சமுதாயத்திற்கு இந்த ஒழுக்க நெறிகளே அடிப்படையாக இருக்கின்றன. ஆனால் சமநிலை மற்றும் நீதிக்கான தேடுதல் இறைவனுடனும், இயற்கையுடனும், வரலாற்றுடனும் தொடர்பு கொண்டதாகும். இறைவனின் கட்டளைக்கு முழுவதுமாகக் கீழ்ப்படிந்து, பொறுப்பாளர் என்ற பொறுப்புக்கு ஏற்ப ஒரு நிதானமான நடுநிலைச் சமுதாயமாக இருந்திட அது வேண்டுகிறது. (உம்மத்தன் வஸந்தன்)

நீதியின் குறிக்கோளை சமநிலைக் கொள்கையை கடைப்பிடிப்பதன் மூலமே அடைய முடியும் (குர்ஆன் 2:143)

மனிதனின் நடத்தையில் தீவிரவாத உணர்வை இஸ்லாம் ஊக்குவிக்கவில்லை. இஸ்லாம் துறவறத்தையோ அல்லது அளவுக்கு அதிகமான இன்ப நுகர்ச்சியையோ ஆதரிக்க வில்லை. இஸ்லாம் ஒரு தார மணத்திற்கே முன்னுரிமை அளிக்கின்றது. ஆனால் அதனை வலியுறுத்த வில்லை. சில சூழ்நிலைகளில் அது போர் புரிந்திட அனுமதி அளிக்கின்றது. ஆனால் அதன் மையச் செய்தி இறைவனுக்குப் பணிதலும், அமைதியுமேயாகும். சுருங்கக்கூறின். மனிதனின் உள்ளார்ந்த சக்திக்கும் தேவைக்கும், வரையறைக்கும் ஏற்ப அவனது நடத்தையை ஒழுங்குபடுத்த இஸ்லாம் முயற்சிக்கின்றது. ஆனால் அது மனிதனின் இயற்கைத் தன்மை தீவிரமாக மாற்றப்படுவதை ஏற்கவில்லை. ஏனெனில் அத்தகைய நிலை உடல் ரீதியில் சாத்தியமற்றது. ஆன்மீக ரீதியல் விரும்பத்தகாதது.

"நடுநிலை"ப் பண்பின் மிகப் பெரிய ஆசானாக நபிகளார் திகழ்ந்தார்கள். பிரம்மச்சர்யத்தையோ, அளவுக்கு அதிகமாக நோன்பு நோற்பதையோ, எதிர்மறை எண்ணத்தையோ, கோபமான குணத்தையோ நபிகளார் ஆதரிக்கவில்லை. அப்படி யாரும் இருக்கக் கூடாது என்று தமது தோழர்களுக்கு ஆணையிட்டார்கள். நபிகளாரின் தோழர்களில் சிலர் தாங்கள் பக்தி நிறைந்த வாழ்க்கையே நடத்துவதாக பெருமை அடித்துக் கொண்டார்கள். ஒருவர் தான் திருமணம் செய்து கொள்ள வில்லையென்றும், இரண்டாமவர் தான் இறைச்சி உண்ப தில்லையென்றும், மூன்றாமவர் தான் வெறுந்தரையில் படுத்துறங்குவதாகவும், நான்காமவர் தான் எப்போதும் நோன்பிருப்பதாகவும் குறிப்பிட்டபோது நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறியதாவது:

"அப்படிச் செய்யாதீர்கள்! சில நாட்கள் நோன்பிருங்கள். மற்ற நாட்களில் உணவு உண்ணுங்கள். இரவின் ஒரு பகுதியில் தூங்குங்கள். இன்னொரு பகுதியில் தொழுகையில் ஈடுபடுங்கள், உங்களது உடம்புக்கு உங்கள் மீது உரிமை உள்ளது. உங்களது கண்களுக்கு உங்கள் மீது உரிமை உள்ளது. உங்களது மனைவிக்கு உங்கள் மீது உரிமை உள்ளது. உங்களது விருந்தினருக்கு உங்கள் மீது உரிமை உள்ளது."

ஒருமுறை நபிகளார் "வரம்பு மீறுகின்றவன் ஒழிந்து போகட்டும்" என்று மூன்று முறை கூறினார்கள்.

இன்னொரு சந்தர்ப்பத்தில் "நிதானம், நிதானம், நிதானம். நிதானம் மூலம் மட்டுமே நீங்கள் வெற்றியடைய முடியும்" என்று கூறினார்கள்.

இவ்வாறாக நபிகள் நாயகம்(ஸல்) , உலக நடவடிக்கை களுடன் சமய நடவடிக்கைகள் இணைந்தே இருக்க வேண்டுமென்றும் இரண்டிற்குமிடையே ஒரு சமநிலை இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள். அவர்கள் உலக விஷயங்களுக்கு அளவுக்கதிகமான முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அதே நேரத்தில் ஆன்மீக இன்பத்தின் முக்கியத்துவத்தையும் குறைக்கவில்லை. அளவுக்கதிகமாக செல்வம் சேர்ப்பதையும், உலகின் மீதான பற்றையும் வெறுத்தார்கள். அதே நேரத்தில் கடுமையான போக்கையும், துறவு நிலையினையும் ஆதரிக்கவில்லை. இறைவனுக்கும்

மனிதனுக்குமிடையில் வாழ்வை அவர்கள் பிரிக்கவில்லை.

நபிகளாரின் இந்தப் போதனைகளிலிருந்து முஸ்லிம்கள் மட்டும் பலன் பெறவில்லை. அமெரிக்காவின் துணை ஜனாதிபதி அல்கோர் கூறியுள்ள சில வார்த்தைகளை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

"குர்ஆன் கற்பித்துள்ள இஸ்லாத்தின் மையக் கொள்கைகள் தவ்ஹீது; (ஏக இறைவன்); கலீபா-(பிரதிநிதி); (பொறுப்பாளர்) அத்ல் (நீதி), ஆகும். இவையே சுற்றுப்புறச் சூழல் ஒழுங்கு முறையினைப் பாதுகாக்கின்ற தூண்களாக விளங்குகின்றன.

# சேவை பற்றிய கொள்கை

இவ்வுலகில் சிலருக்கு வாழ்க்கையில் அனைத்து விதமான வசதிகளும் கிடைத்துள்ளன. சிலருக்கு இந்த வசதிகள் கிடைக்க வில்லை வசதி உள்ளவர், வசதி வாய்ப்பற்றவருக்கு உதவ வேண்டுமெனக் குர்ஆன் கூறுகின்றது.

வாழ்க்கையில் மிக நல்ல நிலையில் உள்ள ஒருவர் இறைவனுக்கு நன்றியுடையவராக இருக்க வேண்டும். நம்முடைய உதவி, யாருக்குத் தேவைப்படுகின்றதோ அவர்களுக்கு உதவுவதே இறைவனுக்குச் செலுத்தும் நன்றியாகும். நமக்கு இறைவன் அருளியுள்ள அனைத்துப் பொருட்களிலும், நமது சக மக்களுக்கும் பங்கு உள்ளது. அவர்களுக்கு உரிய பங்கினை வழங்காவிடில், இறைவனுக்கு நாம் செலுத்துகின்ற நன்றி அரைகுறையாகவே இருக்கும். இவ்வளவு அதிகமாக நமக்கு வழங்கப்பட்ட பின்னரும், நாம் சேவை ஆற்றவில்லையெனில் நாம் பலவீனமான இதயம் கொண்டவர்களாகவே இருப்போம்.

## அனைவருக்கும் சேவை புரிய வேண்டும்:

தங்களைப் பற்றி மட்டுமின்றி பூமியிலுள்ள ஒவ்வொரு மனிதனைப் பற்றியும் கவலையுற வேண்டும் என்று இஸ்லாம் முஸ்லிம்களை வலியுறுத்துகின்றது. மதவெறி வெறுப்பையும், பகையையும் உருவாக்குகின்றது. குருட்டுத் தனமான தேசிய வெறி கொண்ட ஒரு மனிதன் மற்ற நாடுகளுடன் சகிப்புத் தன்மையுடனும், பரிவுடனும் இருக்க மாட்டான். இஸ்லாம் இந்தப் போக்கினை எதிர்க்கின்றது. இறைவனின் அனைத்துப் படைப்புகளையும் ஒரே குடும்பமாகவே இஸ்லாம் கருதுகின்றது. நபிகள் நாயகம்(ஸல்) கூறியதாக அனஸ்(ரலி) அறிவிப்பதாவது: "இறைவனின் குடும்பம் அனைத்துப் படைப்புக்களையும் கொண்டதாகும். அவர்களுள் குடும்பத்திற்கு நற் சேவை புரிபவனே இறைவனால் நேசிக்கப்படுகின்றான்"

தேவையுடையவர்கட்கும், ஆதரவற்றவர்கட்கும் அநாதைகளுக்கும் சேவை புரியுமாறு குர்ஆன் கட்டளை இட்டுள்ளது. முஸ்லிம்களுக்கு அல்லது ஒரு குறிப்பிட்ட குழுவிற்கு மட்டுமே சேவை புரிய வேண்டுமென்று அது ஒரு

போதும் கூறியதில்லை. மனித குலம் முழுமைக்கும் சேவை புரிய வேண்டுமென்று அது விரும்புகின்றது. நமது உறவினர் களாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, நம்முடன் உடன்படுகின்றார்களோ இல்லையோ, நமது மொழியைப் பேசுகின்றார்களோ இல்லையோ, அனைவருக்கும் எந்த வித வித்தியாசமும் வேறுபாடுமின்றி நாம் சேவை செய்ய வேண்டும். துன்பத்திலிருக்கும் எந்த ஒரு மனிதனையும் கவனிக்காமல் விட்டு விடக்கூடாது. துன்பங்களிலிருந்து விடுபட அவனுக்கு நாம் உதவ வேண்டும். ஏனெனில், நிறம், தேசியம், நாடு ஆகியவற்றில் வேறுபாடுகள் இருந்தாலும் மனிதர்கள் அனைவரும் உடன் பிறப்புக்களே. அனைவரும் ஒரு அம்சத்திலிருந்து படைக்கப்பட்டவர்களே. நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் ஹதீஸ் இதனைத் தெளிவு படுத்துகின்றது. "நீங்கள் மற்றவர்களிடம் இரக்கத்துடன் நடந்து கொண்டாலொழிய உண்மையான நம்பிக்கையாளர்களாக ஆக மாட்டீர்கள்" என்று கூறியபோது ஒரு தோழர், "இறைவனின் தூதரே! நாங்கள் அனைவரும் இரக்கமிக்க வர்களாகவே இருக்கின்றோம்" என்று கூறினார். அதற்கு நபிகளார் "நீங்கள் உங்களது நெருங்கிய உறவினர்களிடம் மட்டும் தான் இரக்கம் காட்ட வேண்டும் என்பதல்ல அதன் பொருள். அனைத்து மக்கள் மீதும் நீங்கள் இரக்கம் காட்ட வேண்டும்" எனக் கூறினார்கள்.

## சுயதியாகம்

தார்மீகப் பொறுப்பும், பதில் சொல்லக் கடமைப் பட்டுள்ளோம் என்ற உணர்வும் மனிதர்களிடையே உருவாக வேண்டும் என்பதை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. அதன் மூலம் மனித உரிமைகளும், பொறுப்புகளும் மனிதனின் மனச் சாட்சிக்குள் ஆழமாகப்பதிந்துவிடும். மனித உரிமைகளைப் பற்றிப் பேசுவது மிகவும் எளிது. ஆனால் தன்னைப் போல் பிறர் விஷயத்தில் அதனைச் செயல்படுத்துவது மிகவும் சிரமமானதாகும். ஒருவன் தன்னைப் போலவே பிறருடைய விருப்பங்களுக்கும் முன்னுரிமைகளுக்கும் மதிப்புக் கொடுக்க வேண்டும். இதற்கு சுயநலமற்ற பண்பும் நியாய உணர்வும், பரிவும் நிச்சயம் தேவை.

"ஒருவன் தான் எதனை விரும்புகின்றானோ அதனையே பிறருக்கும் விரும்ப வேண்டும். இல்லையெனில் அவன் ஒரு உண்மையான முஸ்லிமாக ஆக மாட்டான்" என நபிகள் நாயகம்(ஸல்) நவின்றுள்ளார்கள்.

# சுதந்திரம் பற்றிய கொள்கை

சுதந்திரம் ஒரு கொள்கை ரீதியிலும் ஒரு மதிப்பிடு ரீதியிலும் பல தனி மனிதர்கட்கும் குழுக்களுக்கும் நாடுகளுக்கும் மறுக்கப்பட்டே வந்துள்ளது. அது அடிக்கடி தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு தவறாகப் பயன்படுத்தப்பட்டும் வந்துள்ளது.

இந்தப் பொதுவான கருத்திற்கு அப்பாற்பட்டு இஸ்லாம் சுதந்திரத்தைப் போதிக்கின்றது. அதனைச் செழுமைப் படுத்துகின்றது. முஸ்லிம்களுக்கும், முஸ்லிமல்லா தவர்கட்கும் சுதந்திரம் கிடைத்திட உத்தரவாதமளிக்கின்றது. மனிதன் தனது வாழ்க்கையில் செய்கின்ற சுயமான அனைத்து நடவடிக்கைகளுக்கும் சுதந்திரம் பற்றிய இஸ்லாமியக் கொள்கை பொருந்தக் கூடியதாக உள்ளது. ஒவ்வொரு மனிதனும் பிறக்கின்ற போது தூய்மையான நிலையில் சுதந்திரமாகவே பிறக்கின்றான். இதன் பொருள், மனிதன் பிறக்கும் போதே அடக்குமுறை, பாவம், பரம்பரையாக வரும் தாழ்வு மனப்பான்மை மற்றும் பூர்விகத்தடங்கல்கள் ஆகிய வற்றிலிருந்து விடுபட்டு சுதந்திரமாகவே பிறக்கின்றான் என்பதாகும். இறைவனுடைய சட்டங்களை அவன் வேண்டுமென்றே மீறினாலோ அல்லது மற்றவர்களின் உரிமைகளை மதிக்காமலிருந்தாலோ அவனது சுதந்திர உரிமை புனிதமான ஒன்றாக இருக்காது.

நம்பிக்கை, வழிபாடு, மனச்சாட்சி ஆகியன பற்றிய சுதந்திரம் இஸ்லாத்தில் மிகவும் முக்கியமானதாகும். ஒவ்வொரு மனிதனும் நம்பிக்கை, வழிபாடு, மனச்சாட்சி விஷயங்களில் தனது சுதந்திரத்தைப் பிரயோகித்திட உரிமை பெற்றவனாவான். இறைவன் குர்ஆனில் குறிப்பிடுவதாவது.

> தீனில் (இறை நெறியை மேற்கொள்வதில்)
> யாதொரு கட்டாயமோ நிர்ப்பந்தமோ இல்லை.

> தவறான வழியிலிருந்து நேரான வழி தெளிவாகப் பிரிக்கப்பட்டு விட்டது. இனி எவர் தாஃகூத்தை நிராகரித்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறாரோ அவர் திட்டமாக மிகப் பலமான பிடிமானத்தைப் பற்றிக் கொண்டவராவார். அது என்றுமே அறுந்து விடாது. (அவர் தன்னுடைய ஆதரவாளனாகத் தேர்ந்தெடுத்துக் கொண்ட) அல்லாஹ் யாவற்றையும் செவியுறுவோனாகவும் நன்கறிந்தோனாகவும் இருக்கின்றான் (குர்ஆன் 2:256)

சமயம் என்பது நம்பிக்கை, விருப்பம், பற்று ஆகியவற்றின் அடிப்படையில் உருவானது. எனவே "கட்டாயம்" என்ற வார்த்தைக்கு இஸ்லாத்தில் இடம் இல்லை. மேலும், இறைவனைப் பற்றிய உண்மையை இஸ்லாம் மக்களுக்கு எடுத்துக்கூறி அதனைப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பினை அவர்களின் விருப்பத்திற்கே விட்டு விடுகின்றது. இது பற்றிக் குர்ஆன் குறிப்பிடுவதாவது:-

> தெளிவாகக் கூறிவிடும்:- இது உங்கள் இறைவனிட மிருந்து வந்துள்ள சத்தியமாகும். இனி நம்பிக்கை கொள்ள விரும்புவோர் நம்பிக்கை கொள்ளட்டும். நிராகரிக்க விரும்புவோர் நிராகரிக்கட்டும் (குர்ஆன் 18:29)

சுதந்திரம் பற்றிய இஸ்லாமியக் கொள்கை நம்பிக்கையின் ஒருஅம்சமாகும். இது மிக உயர்ந்த படைப்பாளனாகிய இறைவனிடமிருந்து வந்த புனிதமான ஆணையாகும். இது கீழ்க்கண்ட அடிப்படைக் கொள்கைகளின் மீது கட்டமைக் கப்பட்டுள்ளது.

முதலாவதாக மனிதனின் மனச்சாட்சி இறைவனுக்கு உட்பட்டதாகும். அவனுக்கு அனைவரும் நேரடியான பொறுப்பாளர்களாவர். இரண்டாவதாக, ஒவ்வொரு மனிதனும் தத்தமது செயல்களுக்குப் பொறுப்பாளியாவான். தனது செயல்களின் பலனை அவன் மட்டுமே அனுபவிக்க உரிமையானவன். மூன்றாவதாக, மனிதன் தான் என்ன செய்திட வேண்டுமென்பதைத் தீர்மானிக்கின்ற உரிமையை இறைவன் அவனுக்கே வழங்கியுள்ளான். நான்காவதாக,

மனிதனுக்கு உரிய அளவிற்கு ஆன்மீக வழிகாட்டுதல்களும், பகுத்தறியும் பண்புகளும் வழங்கப்பட்டுள்ளன. அதன் மூலம் அவன் தான் விரும்புகின்ற முடிவினை எடுக்க இயலும். சுதந்திரம் பற்றிய இஸ்லாமியக் கொள்கை இத்தகைய அடிப்படைகளைக் கொண்டது. சுதந்திரத்திற்கு இஸ்லாத்தில் இத்தகைய மதிப்பு வழங்கப்பட்டு இருக்கின்றது. அது மனிதனின் இயல்பான உரிமையாகவும், ஆன்மீக சலுகையாகவும் தார்மீக உரிமையாகவும், அனைத்திற்கும் மேலாக சமயக் கடமையாகவும் இருக்கின்றது. சுதந்திரம் பற்றிய இஸ்லாமியக் கொள்கையின் வரையறைக்குள் சமய துன்புறுத்தல்களுக்கோ, வர்க்க மோதல்களுக்கோ இனப் பாகுபாடுகளுக்கோ இடமில்லை. வாழ்வதற்கான உரிமையைப் போன்று தனி மனிதன் ஒருவரின் சுதந்திர உரிமையும் புனிதமானதாகும். சுதந்திரம் வாழ்க்கைக்குச் சமமானதாகும்.

நம்பிக்கை சார்ந்த விஷயங்களில் எந்த விதமான கட்டாயமுமில்லை. இவ்வாறாக முஸ்லிம்கள் நம்பிக்கைகளையும், பிற சமயங்களையும், அவற்றின் போதனைகளையும், மதிக்கின்றார்கள். முஸ்லிம்கள் ஆட்சி செலுத்திய நாடுகளில் வாழ்ந்து வந்த முஸ்லிமல்லாத மக்கள் தங்களது சட்டங்களுக்கும், விதிமுறைகளுக்கும் ஏற்ப வாழ்வதற்கு அனைத்து உரிமைகளும், பொறுப்புகளும் பெற்று சமமான குடிமக்களாக வாழ்வதற்கு உரிமை வழங்கப்பட்டிருந்தது.

# சமத்துவம் பற்றிய கொள்கை

சமத்துவக் கொள்கை இஸ்லாத்தின் அடிப்படையான அம்சங்களில் ஒன்றாகும். அது சம உரிமைக் கொள்கையாகும். இந்த சமத்துவ மரபை தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது; அல்லது அது முற்றிலும் ஒன்றானது என்றோ அல்லது ஒரே மாதிரியானது என்றோ எண்ணிக்கொண்டு குழப்பக் கூடாது. இறைவனின் பார்வையில் மனிதர்கள் அனைவரும் சமம் என்றே இஸ்லாம் போதிக்கின்றது. ஆனால் அவர்கள் ஒரே மாதிரியானவர்களாக இருக்க வேண்டிய தேவையில்லை. திறமைகளிலும், மறைவான விஷயங்களிலும் ஆசைகளிலும் செல்வத்திலும் வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் இந்த வித்தியாசங்களில் எதுவும் ஒரு மனிதனை விட இன்னொரு மனிதனை உயர்வானவனாகவோ அல்லது ஒரு இனத்தை விட இன்னொரு இனத்தை உயர்வானதாகவோ ஆக்கிவிடாது. இறைவனைப் பொறுத்த அளவில் ஒரு மனிதன் கொண்டி ருக்கும் உடமைகளோ அவனது தோலின் நிறமோ அவன் பெற்றிருக்கும் செல்வத்தின் அளவோ, கௌரவமோ எந்த விதமான தாக்கத்தையும் ஏற்படுத்தாது. இறைபக்தியில் காணப்படும் வேறுபாட்டையே இறைவன் அங்கீகரிக்கின்றான். ஆன்மீக உயர்வையும், நற்செயல் களையுமே அவன் அங்கீகரிக்கின்றான். இறைவன் கூறுகின்றான்...

> "மனிதர்களே! நாம் உங்களை ஒரு ஆணிலிருந்தும், பெண்ணிலிருந்தும் படைத்தோம். பிறகு நீங்கள் ஒருவருக் கொருவர் அறிமுகமாகிக் கொள்ளும் பொருட்டு உங்களை சமூகங்களாகவும், கோத்தி ரங்களாகவும் அமைத்தோம். உண்மையில் உங்கள் இறைவனிடம் அதிகக் கண்ணியம் வாய்ந்தவர் உங்களில் அதிக இறையச்சம் கொண்டவர்கள் தாம். திண்ணமாக அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனாகவும், தெரிந்தவனாகவும் இருக்கின்றான்.(குர்ஆன் 49:13)

இனம், நிறம் அல்லது சமூக அந்தஸ்து ஆகிய வேறு பாடுகள் தற்செயலானவை தான். இறைவனின் பார்வையில் ஒரு மனிதனின் நிலையில் அவை எந்த விதமான தாக்கத்

தையும் ஏற்படுத்துவதில்லை. சமத்துவ மரபு அரசியல் சட்ட உரிமையல்ல. இரு நல்லவர்கள் போடுகின்ற ஒப்பந்தமுமல்ல. தயாள சிந்தை கொண்ட தர்மச் செயல் அல்ல. அது முஸ்லிம்களின் நம்பிக்கையின் ஒரு பகுதியாகும். ஒரு முஸ்லிம் அதனை தீவிரமாக எடுத்துக் கொண்டு அதன் படி நடக்க வேண்டும். சமத்துவம் பற்றிய அடிப்படை அம்சங்கள், இஸ்லாமிய அமைப்பு முறையிலேயே ஆழமாக வேரூன்றியுள்ளன. கீழ்க்கண்ட அடிப்படை அம்சங்களில் அது நிலை பெற்றிருக்கின்றன.

1. அனைத்து மனிதர்களும் பேராற்றல் கொண்ட மாபெரும் இறைவனால் படைக்கப்பட்டவர்கள்.

2. ஆதம்-ஹவ்வா என்ற பொதுவான பெற்றோர் வழியில் வந்த மனிதர்கள் அனைவரும் ஒரே மனித குலத்தின் சமமான பங்காளிகள்.

3. இறைவன் தனது படைப்புகள் பால் அன்பு கொண்டவ னாகவும் நீதி செலுத்துபவனாகவும் இருக்கின்றான். அவன் எந்த இனத்திற்கும், சமயத்திற்கும், பாகுபாடு காட்டுவதில்லை. இந்த முழு பிரபஞ்சமும் அவனது கட்டுப் பாட்டில் உள்ளது. அனைத்து மக்களும் அவனது படைப்புக்களே.

4. அனைத்து மனிதர்களும் பிறப்பில் சமமானவர்களே. ஏனெனில் பிறக்கும் போது யாரும் எந்த ஒரு உடைமையையும் கொண்டுவரவில்லை. இறக்கும்போது அனைவரும் சமமே. ஏனெனில் அப்போது தங்களது உடமைகளை யாரும் எடுத்துச் செல்வதில்லை.

5. இறைவன் ஒவ்வொரு மனிதனையும் அவனது தகுதி மற்றும் திறமையைக் கொண்டே மதிப்பீடு செய்கிறான்.

6. இறைவன் மனிதனுக்கு பெருமையையும் கண்ணியத்தையும் வழங்கியுள்ளான்.

இவையே இஸ்லாமிய சமத்துவக் கொள்கையின் முக்கிய

அம்சங்களாகும். இந்தக் கொள்கை முழுவதுமாகச் செயல் படுத்தப்பட்டால் அநீதிகளுக்கோ, துன்பங்களுக்கோ இடமில்லை. இந்த தெய்வீக ஆணை முழுமையாக நிறைவேற்றப்படும் போது அடக்கு முறைக்கோ ஒடுக்கும் முறைக்கோ அங்கு இடமில்லை. தெரிவு செய்யப்பட்ட கண்ணியமான மக்கள் என்ற கருத்திற்கோ, சலுகை பெற்ற அல்லது தண்டிக்கப்பட்ட இனங்கள் என்ற வார்த்தைகளுக்கோ சமூக சாதிகள், இரண்டாந்தரக் குடிமக்கள் என்ற கருத்துக்களுக்கோ பொருள் இல்லை. அவை வழக்கொழிந்த சொற்களாகி விடும்.

## சகோதரத்துவம் பற்றிய கொள்கை

"(தொடக்கத்தில்) மக்கள் அனைவரும் ஒரே சமுதாய மாகவே இருந்தனர். பின்னர் பல்வேறு கொள்கைகளையும் வழிமுறைகளையும் தோற்றுவித்தனர்" (குர்ஆன் 10:19)

"மேலும் உங்களுடைய இந்தச் சமுதாயம் திண்ணமான ஒரு சமுதாயமாகும். மேலும் நான் உங்கள் அதிபதி ஆவேன். எனவே எனக்கே அஞ்சுங்கள்".. ஆயினும் பிற்காலத்தில் மக்கள் தங்களுடைய தீன்நெறியைத் தங்களுக்கிடையே துண்டு துண்டாக்கிக் கொண்டார்கள். ஒவ்வொரு பிரிவினரும் தம்மிடம் எது இருக்கின்றதோ அதைக் கொண்டு மகிழ்ச்சி யடைக்கின்றனர்." (குர்ஆன் 23: 52,53)

இஸ்லாமிய வழிமுறையில் போற்றத்தக்க இன்னொரு அடிப்படையான அம்சம் மனித சகோதரத்துவமாகும். சுதந்திரம் மற்றும் சமத்துவம் பற்றிய கொள்ளை எந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டதோ அதே அடிப்படையில் தான் இந்த சகோதரத்துவக் கொள்கையும் உருவாக்கப் பட்டுள்ளது. சுதந்திரம் மற்றும் சமத்துவக் கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்டு இஸ்லாமிய சகோதரத்துவம், இறைவன் ஒருவன், அவன் இணையற்றவன் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையின் அடிப்படையிலும் மனித சமுதாயத்தின் ஒற்றுமை, சமயம் மற்றும் வணக்க வழிபாட்டு முறையின் ஒற்றுமை ஆகியவற்றின் அடிப்படையிலும் அமைந்துள்ளது. இறைவன் ஒருவன் அவன் நிலையானவன், இணையற்றவன். அவனே அனைத்தையும் படைத்தவன். பரிபாலிப்பவன். அனை வருக்கும் அவனே நீதிபதி; அனைவருக்கும் அவனே எஜமான். அவனைப் பொறுத்தவரை, சமூக அந்தஸ்து, தேசியப் பெருமை, இன மேன்மை ஆகிய அம்சங்களுக்கு எந்த

முக்கியத்துவமும் இல்லை. அவன் முன்னால் மனிதர்கள் அனைவரும் சமமானவர்களே! ஒருவருக்கொருவர் சகோதரர்களே! என்பதே இஸ்லாத்தின் கொள்கையாகும்.

மனித சமூகத்தின் ஒற்றுமையில் முஸ்லிம்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். படைக்கப்பட்ட வழிமுறை. முதல் பெற்றோர், இறுதியில் செல்ல வேண்டிய இடம் ஆகிய அம்சங்கள் அனைவருக்கும் ஒன்று தான். இறைவனே மனிதனைப்படைத்தான். மனிதர்கள் அனைவர்கட்கும் பொதுவான பெற்றோர் ஆதம் - ஹவ்வா அவர்களே! ஒவ்வொரு மனிதனும் இந்தப் பெற்றோருக்குச் சொந்த மானவர்களே. அவனும் அதில் ஒரு அங்கமே. இறுதியாகச் செல்ல வேண்டிய இடத்தைப் பற்றி முஸ்லிம்களின் உள்ளத்தில் எந்த விதமான சந்தேகமும் இல்லை. தங்களைப் படைத்த இறைவனிடமே அவர்கள் திரும்பிச் செல்வார்கள்.

இறைவனுடைய சமய ஒற்றுமையில் முஸ்லிம்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். இறைவன் ஒரு குறிப்பிட்ட சமயத்திற்கு உரியவன், அல்லது ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கு , இனத்திற்கு ஆதரவாக இருக்கின்றான் என்று இதற்குப் பொருள் அல்ல. இறைவனுடைய சமயத்தில் எந்த விதமான முரண்பாடுகளோ அல்லது அடிப்படை வித்தியாசங்களோ இல்லை என்பதே இதன் பொருளாகும்.

# நீதி பற்றிய கொள்கை

இஸ்லாத்தில் "அத்ல்" என்று கூறுப்படும் நீதி மிகவும் உயர்ந்த ஒரு மரபாகும். குர்ஆன் அருளப்பட்டதன் முதன் மையான நோக்கமும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் அடிப்படையான பணியும் பூமியில் நீதியை நிலநாட்டுவதே என்று இஸ்லாமிய அறிஞர்கள் கூறுகின்றனர். நீதி என்ற கொள்கையைச் சுற்றியே முஸ்லிம்களின் சமூக வாழ்க்கை அமைந்துள்ளது. நம்பிக்கையாளர்கள், ஒருவருக்கொருவர் நீதியான முறையில் நடந்து கொள்ளுமாறு பணிக்கப் பட்டுள்ளனர். நீதி நம்மிடமிருந்தே துவங்குகின்றது. மனிதனுடைய உடல், உள்ளம்,ஆன்மா ஆகியவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்வதை அது உள்ளடக்கியதாகும். குடும்ப உறவுகள் நீதியின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப் படவேண்டும். பெற்றோரையும், மூத்தவர்களையும் மதித்தல், தனது குழந்தைகள் அனைவர் மீதும் சமமான முறையில் அன்பும், பிரியமும் செலுத்துதல், துணைவி, துணைவர் பால் நாணயமாகவும், விசுவாசமாகவும் இருத்தல் ஆகிய இவையனைத்தும் குடும்ப வாழ்க்கையின் நியாயமான வெளிப்பாடுகாளாகும். சமுதாய அளவில், ஒருவன் தனது சமுதாயக் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்ற வேண்டும் என்பதே நீதியின் எதிர்பார்ப்பாக உள்ளது. அனைத்து வகையான அடக்கு முறைகளுக்கும் ஒடுக்கு முறைகளுக்கும் எதிராக நிற்பது ஒரு முஸ்லிமின் கடமையாகும். இந்த நடவடிக்கைகளில் அவனது சொந்த உறவினர்களும், சமூகமும், நாடும் ஈடுபட்டிருந்தாலும் கூட அவன் அவர்களை எதிர்த்து நிற்க வேண்டும். இறைவன் குர்ஆனில் குறிப்பிடுவதாவது:-

"இறை நம்பிக்கை கொண்டவர்களே: நீங்கள் அல்லாஹ் வுக்காக வாய்மையில் நிலைத்திருப்போராயும், நீதிக்குச் சான்று வழங்குவோராயும் திகழுங்கள்! எந்தக் கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள பகைமை உங்களை நீதியிலிருந்து பிறழச் செய்துவிடக் கூடாது. நீங்கள் நீதி செலுத்துங்கள். இதுவே இறையச்சத்திற்கு மிகப் பொருத்தமானது." (குர்ஆன் 5:8)

இறை நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நீதியைக்

கடைப்பிடிப்பவராகவும், அல்லாஹ்வுக்குச் சான்று வழங்குபவராகவும் திகழுங்கள். (நீங்கள் செலுத்திய நீதியும் வழங்கும் சாட்சியும்) உங்களுக்கோ... உங்கள் பெற்றோருக்கோ-நெருங்கிய உறவினருக்கோ பாதகமாக இருந்தாலும் சரியே (குர்ஆன் 4:135)

குர்ஆனின் இந்த வசனங்கள் நீதியைப் பற்றிய ஒரு தெளிவான கண்ணோட்டத்தை தெரிவிக்கின்றன. அவை மனிதர்களை நீதியின் பக்கம் நிற்கும்படி அறிவுறுத்துகின்றன. அப்படி நிற்பது அவர்களது பெற்றோர்கள், உறவினர்கள் நண்பர்கள் ஆகியோரின் நலன்களுக்குப் பாதகமாக இருந்தாலும் சரி ஏன் தங்களது சொந்த நலன்களுக்குப் பாதகமாக இருந்தாலும் சரி, அதைப் பற்றி கவலைப்படக் கூடாது. உங்களுடைய சொந்த எதிரிகளாக இருந்தாலும் சரி அல்லது இஸ்லாத்திற்கு எதிரான மக்களாக இருந்தாலும் சரி, நீங்கள் நீதியின் பாதையிலிருந்து பிறழ்ந்து செல்லக் கூடாது எனவும் குர்ஆன் முஸ்லிம்களை எச்சரிக்கின்றது. எந்த வித அச்சமுமின்றி யாருக்கும் ஆதரவாக இல்லாமல், முஸ்லிம்கள் நீதிக்கு சான்று வழங்குபவர்களாக இருக்க வேண்டுமென்றும், அநியாயத்தையும் அடக்கு முறையையும் எதிர்த்து நிற்பது ஒரு சமயக் கடமையாகும் எனவும் குர்ஆன் வலியுறுத்துகின்றது.

> மேலும் பலவீனர்களாக்கப்பட்ட - அடக்கி ஒடுக்கப்பட்ட ஆண்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோருக்காக அல்லாஹ்வின் வழியில் நீங்கள் போர் புரியாமல் இருக்க என்னதான் காரணம்... (குர்ஆன் 4:75)

உண்மையை உரைப்பதற்காக ஒரு கொடுங்கோல் மன்னன் முன்னால் உறுதியாக நின்றிடுங்கள். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அடக்குமுறைக்கு எதிராகவும், அடக்குமுறைக்கு உள்ளான மக்களுக்கு ஆதரவாகவும் குரல் எழுப்பும்படி முஸ்லிம்களை அறிவுறுத்தியுள்ளார்கள். அடக்குமுறைக்கு உள்ளானவனின் நண்பனாக இருங்கள். கொடுங்கோல் மன்னர்களின் அடக்கு முறையையும் அவர்களின் தவறான வழிகளையும் எதிர்த்து நியாயமான வழிகளில் போராடுங்கள் என்று குர்ஆன் கூறுகின்றது.

# இல்ம்

## அறிவு பற்றிய கொள்கை

ஒரு மனிதனுடைய நடத்தையின் அனைத்து அம்சங்களிலும் நீதியை நிலைநாட்டுவதற்கு ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அறிவு தேவைப்படுகின்றது. ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் அவர்கள் அறிவைத் தேடிப்பெற வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகின்றது. முஸ்லிம் சமுதாயம் ஒரு அறிவார்ந்த சமுதாயமாக இருந்தால் தான் அது நேர்மையான ஒரு சமுதாயமாக இருக்கும்.

எனவே, அறிவைத் தேடுவதும் ஒரு சமூகக் கடமையே யாகும். அறிவின் சில குறிப்பிட்ட துறைகளில் உதாரணமாக சட்டம், மருத்துவம், கல்வி, பொறியியல் ஆகியவற்றில் போதுமான எண்ணிக்கையில் நிபுணர்கள் இருப்பதை ஒவ்வொரு முஸ்லிம் சமூகமும் உறுதி செய்ய வேண்டும். ஒரு குறிப்பிட்ட துறையில் நிபுணராக இருப்பவர் இஸ்லாமிய வார்தையில் "ஆலிம்" என அழைக்கப்படுகிறார். சமய அறிஞர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், சமூக ஆர்வலர்கள், தத்துவவாதிகள் ஆகிய அனைவரும் "ஆலிம்கள்" என்றே அழைக்கப்படுகின்றனர். அழகுணர்வு, கண்ணியம், சுதந்திரம், நீதி ஆகியவற்றை மேம்படுத்த நிதானத்துடனும், பணிவுடனும் அறிவினைத் தேடிப் பெற வேண்டும் என இஸ்லாம் கூறுகின்றது.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நவின்றுள்ளதாவது:-

"தொழுகையை மட்டும் நிறைவேற்றுகின்ற ஒருவரை விடவும் ஒரு அறிஞனின் உயர்வு நட்சத்திரங்களால் சூழப்பட்ட முழு சந்திரனின் உயர்வுக்கு ஒப்பானதாகும்." அறிவைத் தேடுவது ஒவ்வொரு முஸ்லிமின் கடமையாகும். அறிவைத் தேடுவதற்காக சீனாவுக்குச் செல்ல வேண்டுமானாலும் சென்றிடுங்கள்.

# அமைதி பற்றிய கொள்கை

அமைதி பற்றிய இஸ்லாத்தின் அணுகுமுறையைத் தெரிந்து கொள்ள இஸ்லாத்தைப் பற்றிய சில அடிப்படையான விஷயங்களை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இஸ்லாம், அமைதி என்ற வார்த்தைகள் ஒரே வேர்ச் சொல்லிருந்து வந்த ஒத்த பொருளுடைய வார்த்தைகளாகும். இறைவனின் பெயர்களில் ஒன்று "அமைதி". தொழுகையின் போது ஒவ்வொரு முஸ்லிமும் அமைதி என்ற வார்த்தையுடனேயே அதனை நிறைவு செய்கின்றனர். முஸ்லிம்கள் இறைவனின் பக்கம் திரும்பிச் செல்கின்ற போது அவர்களை வாழ்த்துகின்ற வார்த்தையும் அது தான். முஸ்லிம்கள் தங்களது தினசரி வணக்க வழிபாட்டின் போது அமைதியை வெளிப்படுத்துகிறார்கள். முஸ்லிம் என்ற பெயர் உரிச் சொல்லுக்கு "அமைதி" என்றே பொருள். எனவே இஸ்லாம் அமைதியின் உறைவிடமாகும்.

இவ்வாறாக, இஸ்லாத்தின் அடிப்படையான, முக்கியமான கொள்கையாக அமைதி இருக்கின்றது. எனவே இஸ்லாத்தின் வழி இறைவனை அணுகுகின்ற ஒருவன் இறைவனுடனும், தன்னுடனும், சக மனிதர்களிடமும் அமைதி வழியைக் கடைப்பிடிக்கிறான். இந்த மரபுகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து மனிதனை உலகில் அவனுக்குரிய இடத்தில் வைத்து, இஸ்லாமியக் கண்ணோட்டத்தின் படி அவனது வாழ்வைப் பார்க்க வேண்டும். நல்ல நம்பிக்கையும், குறிக்கோள்களும் கொண்ட மனிதர்கள் இந்த உலகை மிகச் சிறந்த உலகமாக ஆக்கிடத் துணைசெய்கின்றனர். இதன் மூலமே மனித சமூகத்தின் கண்ணியத்தைத் திரும்பப் பெற முடியும். சமத்துவத்தை அடையமுடியும். உலகளாவிய சகோதரத்துவத்தை அனுபவிக்க முடியும். நீடித்த அமைதியைக் காட்ட முடியும்.

# நல்லொழுக்கம் பற்றிய கொள்கை

நல்லொழுக்க நெறிகள் பற்றிய இஸ்லாத்தின் கொள்கை சில அடிப்படை நம்பிக்கைகளையும் விதிமுறைகளையும் சுற்றியே வகுக்கப்பட்டுள்ளது. அவற்றை கீழே பார்க்கலாம்.

1. இறைவன் அனைத்தையும் படைத்தவன். நன்மைக்கும், உண்மைக்கும் அழகிற்கும் அவனே மூலாதாரமாக இருக்கின்றான்.

2. பொறுப்பும், மதிப்பும், கண்ணியமும் கொண்ட மனிதன் இறைவனின் முகவராக இருக்கின்றான்.

3. பூமியிலும், வானத்திலுமுள்ள அனைத்தையும் மனிதனுக்குச் சேவை புரியவே இறைவன் படைத்துள்ளான்.

4. தன்னுடைய இரக்கம் மற்றும் கருணைக்குப் பதிலாக மனிதனிடமிருந்து சாத்தியமற்ற எதனையும் இறைவன் எதிர்பார்க்கவில்லை. அல்லது அவனது சக்திக்கு அப்பாற்பட்ட விஷயங்களில் அவனைப் பதில் சொல்லக் கடமைப்பட்டவனாகவும் ஆக்கவில்லை. வாழ்க்கையின் நல்ல விஷயங்களை அனுபவிக்க மனிதனுக்கு இறைவன் தடை ஏதும் விதிக்கவில்லை.

5. நிதானம், நடைமுறை, மற்றும் நடுநிலைமை ஆகிய பண்புகள் உயர்ந்த கட்டுப்பாட்டுணர்விற்கும் சிறந்த நல்லொழுக்கப் பண்புகளுக்கும் உத்தரவாதமளிக்கின்றன.

6. அனைத்துப் பொருட்களையும் அனுபவிக்க மனிதனுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சில விஷயங்களைக் கட்டாயம் செய்ய வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அவற்றை நாம் செய்ய வேண்டும். செய்யக் கூடாது என்று தடுக்கப்பட்ட விஷயங்களை நாம் கட்டாயம் தவிர்க்க வேண்டும்.

7. இஸ்லாத்தின் நல்லொழுக்கப் பரிமாணங்கள் எண்ணிலடங்காத அளவில் உள்ளன. அவை பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை. விரிவானவை. இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே உள்ள உறவு பற்றியும், மனிதனுக்கும் சக மனிதர்களுக்குமிடையேயுள்ள உறவு பற்றியும் மனிதனுக்கும் பிரபஞ்சத்திலுள்ள பிற படைப்பினங்களுக்குமிடையேயுள்ள உறவு பற்றியும் இஸ்லாமிய ஒழுக்க

நெறிகள் விரிவாக எடுத்துக் கூறுகின்றன.

மிகவும் குறிப்பாக, இறைவனுடனான முஸ்லிம்களின் உறவானது அன்பு, கீழ்ப்படிதல். முழுமையான நம்பிக்கை, முழுமையான சிந்தனை, அமைதி, பாராட்டு, நேரான நடத்தை, விறுவிறுப்பான சேவை ஆகிய அம்சங்களை உள்ளடக்கியது. சக மனிதர்களுடனான உறவு என்பது கீழ்க்கண்ட அம்சங்களை உள்ளடக்கியதாகும். தனது உறவினர்களிடம் அன்பு பாராட்ட வேண்டும். அண்டை வீட்டுக்காரனுக்காக கரிசனப்பட வேண்டும். பெரியவர்கட்கு மதிப்பளிக்க வேண்டும். இளைஞர் களிடத்தில் பரிவு காட்ட வேண்டும். நோயுற்றவர்களை நன்கு கவனிக்க வேண்டும். தேவையுள்ளவர்கட்கு உதவ வேண்டும். துன்பத்தில் இருப்பவர்கள்பால் பரிவு காட்ட வேண்டும். சோர்வுற்றவர்கட்கு மகிழ்ச்சி அளிக்க ேண்டும். ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் பால் மகிழ்ச்சி கொள்ள வேண்டும். அறியாமைக் காரர்களைச் சகித்துக் கொள்ள வேண்டும். ஆதரவு அற்றவர்களை மன்னிக்க வேண்டும். தவறு செய்தவர்களை அங்கீகரிக்கக் கூடாது. அற்பமான விஷயங்களை புறக்கணிக்க வேண்டும். மேலதிகமாக தனக்குள்ள உரிமைகளைப் போல அடுத்தவர்களின் நியாயமான உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். முஸ்லிம்களின் உள்ளம் ஆக்கப்பூர்வமான கொள்கைகளையும் தீவிரமான தொடர் செயல்பாடுகளையும் கொண்டிருக்க வேண்டும். அவனது இதயம் பரிவான உணர்வுகளையும், நல்லெண்ணத்தையும் கொண்டிருக்க வேண்டும். அவனது ஆன்மா அமைதியையும் களங்கமற்ற தன்மையையும் பிரதிபலிக்க வேண்டும். அவனது ஆலோசனை நியாயமானதாகவும், மரியாதைக்குரியதாகவும் இருக்க வேண்டும். வாய்மையும், நற்செயலும் அவனது முதன்மைக் குறிக்கோள்களாக இருக்க வேண்டும். பணிவுடமை, எளிமை, மரியாதை, பரிவு ஆகியன அவனது இயல்புகளாக இருக்க வேண்டும். அவனைப் பொறுத்த வரையில் மூர்க்கத்தனம், தற்பெருமை, கடுமை, அசிரத்தை ஆகிய பண்புகள் தவிர்க்கப்பட வேண்டியவை; எதிர்மறைத் தன்மையுடையவை. அவை இறைவனை அதிருப்தியுறச் செய்கின்றன.

நல்லொழுக்கப் பண்புகள் எங்ஙனம் அமைந்திருக்க

வேண்டும் என்பதற்கு குர்ஆன் மிகச் சிறந்த வழிகாட்டு தல்களைவழங்கியுள்ளது. அவற்றைப் பார்ப்போம்:-

*ஆதத்தின் மக்களே! ஒவ்வொரு தொழுகையின் போதும் உங்களை அலங்கரித்துக் கொள்ளுங்கள் ; மேலும் உண்ணுங்கள், பருகுங்கள், வீண் விரயம் செய்யாதீர்கள். திண்ணமாக அல்லாஹ் விரயம் செய்வோரை நேசிப்பதில்லை.*

*(நபியே! அவர்களிடம்) நீர் கேட்பீராக: அல்லாஹ் தன் அடிமைகளுக்குத் தோற்றுவித்துள்ள அலங்காரத்தையும் மேலும் அவன் வழங்கியுள்ள தூய்மையான உண்ணும் பொருள்களையும் தடை செய்தது யார்? நீர் கூறும். இறை நம்பிக்கையாளர்களுக்கு இப்பொருள்கள் அனைத்தும் உலக வாழ்க்கையில் கிடைக்கும். மறுமை நாளில் அவர்களுக்கே அவை உரியனவாயிருக்கும் "இவ்வாறு நாம் நம்முடைய வசனங்களை அறிவுடைய சமூகத்தாருக்குத் தெளிவாக விவரிக்கின்றோம்".*

> *(நபியே ! இவர்களிடம்) நீர் கூறுவீராக! என்னுடைய இறைவன் தடை செய்திருப்பது இவற்றையெல்லாம் தாம். மானக் கேடான வற்றைச் செய்தல் அவை வெளிப் படையாக இருந்தாலும் சரி மறைவாக இருந்தாலும் சரி; பாவம்புரிதல், நேர்மைக்கு மாறாக வரம்பு மீறிய செயல்களில் ஈடுபடுதல், மேலும் எவற்றைக் குறித்து எந்த ஆதாரத்தையும் அல்லாஹ் இறக்கிடவில்லயோ அவற்றை அல்லாஹ்வுடன் இணை வைத்தல் மேலும் எவற்றைக் குறித்து (அவை அல்லாஹ் கூறியவை தான் என்பதை) நீங்கள் அறியவில்லையோ அவற்றை அல்லாஹ் வின் மீது ஏற்றிச் சொல்லல். (குர்ஆன் 7:31-33)*

இஸ்லாத்தில் நல்லொழுக்கமென்பது இறைவன் பால் நம்பிக்கை கொள்வது, சமயச் சடங்குகள், ஆன்மீக அனுஷ்டானங்கள், சமூக நடத்தை. முடிவெடுத்தல், அறிவார்ந்த தொடர் நடவடிக்கைகள், உட்கொள்ளும் பழக்கம், பேசுகின்ற முறை, மற்றும் மனித வாழ்க்கையின் அனைத்து விதமான அம்சங்களையும் உள்ளடக்கியதாகவும், ஒருங்கிணைக்கப் பட்டதாகவும் இருக்கின்றது. ஏனெனில் நல்லொழுக்கம்

இஸ்லாத்துடன் ஒன்றறக்கலந்த ஒரு அம்சமாகும். நல்லொழுக்கம் பற்றி குர்ஆனில் பல்வேறு இடங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுத்திக் கூறப்பட்டுள்ளது. இறைவன் கூறுகின்றான்.....

> மேலும் நீங்கள் அனைவரும் அல்லாஹ்வுக்கே அடிபணிந்து வாழுங்கள். அவனோடு எதையும் இணையாக்காதீர்கள். தாய்-தந்தையரிடம் நல்ல விதமாக அன்புடன் நடந்து கொள்ளுங்கள். மேலும் உறவினர்கள் வறியவர்கள், அநாதைகள் ஆகியோருடனும் நல்ல விதமாக நடந்து கொள் ளுங்கள். மேலும் உறவினரான அண்டை வீட்டார், அந்நியரான அண்டை வீட்டார், பக்கத்தி லிருக்கும் நண்பர், மற்றும் வழிப்போக்கர், உங்கள் கை வசத்திலுள்ள அடிமைகள் ஆகியோருடனும் நயமாக நடந்து கொள்ளுங்கள். திண்ணமாக அறிந்து கொள்ளுங்கள். வீண் பெருமையிலும் கர்வத்திலும் உழல்பவர்களை அல்லாஹ் நேசிப்ப தில்லை. அவர்கள் தாமும் உலோபிகளாக இருந்து பிற மக்களையும் உலோபித்தனம் புரியுமாறு ஏவுவார்கள். மேலும் அல்லாஹ் தன் அருளிலிருந்து அவர்களுக்கு வழங்கியுள்ள செல் வங்களை மறைப்பார்கள். (இத்தகை யவர்களையும் அல்லாஹ் நேசிப்பதில்லை). இத்தகைய நன்றி கெட்ட ஈனர்களுக்கு நாம் இழிவு தரும் வேதனையைத் தயார் செய்து வைத்திருக்கின்றோம். மேலும், எவர்கள் தம் பொருளைப் பிறர் மெச்சுவதற்காகச் செலவழிக் கின்றார்களோ, மேலும் எவர்கள் அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொள்ளா திருக்கின்றார்களோ அத்தகையவர்களையும் அல்லாஹ் நேசிப்பதில்லை. உண்மை என்ன வெனில், ஷைத்தான் யாருக்குத் தோழனா கின்றானோ அவர் மிகவும் கெட்ட தோழனையே அடையப்பெற்றவராவார். *(குர்ஆன் 4:36-38)*

# ஜிகாத் பற்றிய கொள்கை

நீதிக்கான தொடர் போராட்டத்தின் வெளிப்பாடே ஜிகாத் ஆகும். இதன் பொருள் "நேரடிப் போராட்டம்" என்பதாகும். இது பல வழிகளில் நடத்தப்படலாம். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு ஹதீஸின் படி ஒருவன் தன்னுடைய தன்முனைப்புக்கும், பேராசைக்கும், திருப்தி செய்ய முடியாத ஆசைகளுக்கும் எதிராகத் தனக்குள் நடத்துகின்ற போராட்டமே மிக உயர்ந்த ஜிகாத் ஆகும். ஒரு சமூகத்தின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு ஜிகாத்தில் ஈடுபடலாம். அடக்குமுறை மற்றும் சர்வாதிகார மனப்பான்மைக்கு எதிராக அல்லது ஒரு சமுதாயத்தின் அறிவார்ந்த நிலையை உயர்த்து வதற்காக ஜிகாத்தில் ஈடுபடலாம். அடக்கு முறைக்கு எதிராகவும், ஆக்கிரமிப்பிற்கு எதிராகவும் நடத்தப்படுகின்ற உடல் ரீதியான போராட்டமாகவும் அது இருக்கலாம். எனவே ஜிகாத்திற்கு "புனிதப்போர்" என்ற சொல்லாடலைத் தாண்டி அதைவிடவும் அதிகமான பொருள்கள் உள்ளன.

ஆக்ரமிப்புச் செய்வதற்காகவோ, அல்லது நாடுகளைக் கைப்பற்றுவதற்காகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட அரசியல் முறையைத் திணிப்பதற்காகவோ நடத்தப்படுகின்ற போர்கள் ஜிகாத் ஆகாது. ஜிகாத் என்பது ஒரு தற்காப்புப் போரே. அதில் ஈடுபடுகின்றவர்கட்கு சில குறிப்பிடத்தக்க பொறுப்புகள் உள்ளன. ஒரு இஸ்லாமிய அரசின் கண்காணிப்பின் கீழ் மட்டுமே ஜிகாத் நடத்தப்பட்டவேண்டும். அப்பாவி தனி நபர்கள், பெண்கள், குழந்தைகள், ஆயுதமற்ற பொது மக்கள் ஆகியோரைத் துன்புறுத்தக் கூடாது. சொத்துக்களையும், சுற்றுப்புறத்தையும் அழிக்கக் கூடாது. ஆள் கடத்தல், பிணைக் கைதிகளாகப் பிடித்தல், பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுடுதல், மக்கள் பணிபுரிகின்ற கட்டிடங்களைக் குண்டு வீசித் தாக்குதல் ஆகிய தீய செயல்களைத் தவிர்க்க வேண்டும். இச்செயல்களை இஸ்லாம் முற்றிலும் கண்டிக்கின்றது.

மேலும் ஒருவர் இன்னொருவர் மீது ஜிகாத்தை அறிவிக்க முடியாது. உதாரணமான ஒரு முஸ்லிம் நாடு இன்னொரு

முஸ்லிம் நாட்டிற்கு எதிராக அல்லது ஒரு சர்வாதிகாரி தனக்கு எதிராக அணிதிரண்டுள்ள நாடுகளுக்கு எதிராக ஜிகாத்தை அறிவிக்க முடியாது. ஜிகாத்திற்கு முழு முஸ்லிம் சமூகத்தின் ஒருமித்த கருத்தும் வேண்டும். எதிரி ஒரு ஆக்ரமிப்பாளரா? அல்லது ஆதரவற்ற பாதிக்கப்பட்ட மக்களை அடக்கி ஒடுக்கியவரா? என்றும் அடையாளம் காணப்படவேண்டும்.

## "ஷரிஅத்"

# இஸ்லாமியச் சட்டம் பற்றிய கொள்கை

ஷரிஅத் இஸ்லாத்தின் ஒரு பிரிக்க முடியாத அங்கமாகும். அது இஸ்லாமியச் சட்டம் என அறியப்படுகின்றது. இதன் காரணமாக அது குற்றவியல் சட்டங்களும், தண்டனைகளும் கொண்ட ஒரு தொகுப்பு என்று பலர் அனுமானிக்கின்றனர். சட்டம் பற்றிய மரபு ரீதியிலான புரிதலை விடவும், ஷரிஅத் மேலும் அதிகமான பல அம்சங்களை உள்ளடக்கியதாகும். சமூகத்தின் அடிப்படைக்கும், செயல்பாட்டிற்கும் தேவையான சட்ட ரீதியான விதிமுறைகளை ஷரிஅத் வழங்கியுள்ள போதிலும் அது முஸ்லிம்கள் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் கடைப்பிடிக்க வேண்டிய தார்மீக நெறிசார்ந்த சமூக, அரசியல் நடத்தை விதிமுறைகளையும் விளக்குகிறது.

முஸ்லிம்களுக்கான நடத்தை விதிகளை வகுத்துத் தந்துள்ள "ஷரிஅத்" எனப்படும் இஸ்லாமியச் சட்டம் குர்ஆன் மற்றும் நபிகளாரின் வழிமுறைகள் என்ற இரு முக்கிய ஆதாரங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. அது மனித சமுதாயம் உலக வாழ்க்கையிலும், இறப்பிற்குப் பின்பு உள்ள மறுமை வாழ்க்கையிலும் வெற்றியடைவதையே குறிக் கோளாகக் கொண்டு வகுக்கப்பட்டுள்ளது.

ஷரிஅத், மனித சமுதாயத்திற்கு ஒரு வழிகாட்டி. அது நன்மையை (மஃரூப்) நிலை நிறுத்தவும், தீமையை (முங்கார்) சமுதாயத்திலிருந்து விலக்கவும் தேவையான முழுமையான சட்டங்களை வகுத்தளித்துத் தந்துள்ளது. வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கும், திருப்திக்கும் இறைவனின்

மகிழ்ச்சியைப் பெறுவதற்கும் தேவையான தெளிவான நேரிய பாதையை அது காட்டுகின்றது.

ஷரிஅத்தின் அடிப்படை குர்ஆனேயாகும். அது விதிமுறைகளைப் பற்றிக் கூறுகின்றது. அதே நேரத்தில் நபிகளார் கடைபிடித்த வழிமுறைகள் அதனை எப்படிச் செயல் படுத்துவது என்பதற்கு விளக்கமாக அமைந்துள்ளன. உதாரணமாக தொழுகை, நோன்பு, ஜகாஅத், ஆலோசனை செய்து முடிவெடுத்தல், தவறான முறையில் பொருள் சேர்த்தல், செலவழித்தல் ஆகியவை பற்றிக் குர்ஆன் குறிப்பிடுகின்றது. ஆனால் அவற்றை எப்படிச் செய்ய வேண்டும் என்ற விளக்கம் அதில் இல்லை. இறைவனின் கட்டளைப்படி எப்படிச் செயல்படவேண்டும் என்பதை நபிகளாரின் வழிமுறைகளே நமக்குக் காட்டுகின்றன.

குர்ஆனே நமக்கு வழிகாட்டுகின்ற வேதநூலாகும். அதனை எப்படிப் பின்பற்ற வேண்டுமென்பதை நபிகளாரே நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள். அவற்றை எப்படிப் பின்பற்ற வேண்டும் என்று கூறுவதோடு மட்டும் நின்று விடாமல் தாமே அவற்றைக் கடைப்பிடித்து நமக்கு வழிகாட்டியுள்ளார்கள். குர்ஆனே நபிகளாரின் வாழ்க்கையாக இருந்தது.

## ஷரிஅத்தின் நோக்கங்கள்

கருணையை அடிப்படையாகக் கொண்டு மனிதர்களுக்கும் அரசிற்குமிடையில் நீதியை நிலை நாட்டுவதே ஷரிஅத்தின் இறுதி நோக்கமாகும். தனி நபர்கள், சமூதாயம், அரசாங்கம், ஆட்சியாளர்கள், குடிமக்கள் ஆகியோரின் உரிமைகளையும், பொறுப்புக்களையும் வலியுறுத்துவதும் அதன் நோக்கமாகும். சமூகப் பொருளாதார அரசியல் நீதியை வலியுறுத்தி ஒரு நல்லொழுக்கமிக்க சமூகத்தை உருவாக்குவதே அதன் முதன்மை நோக்கமாகும். ஷரிஅத் மனிதர்களுக்கு முழுமையான சுதந்திரத்தை வழங்கியுள்ளது. ஷரிஅத் வகுத்துத் தந்துள்ள விதிமுறைகளின் படி செயல்படுவதே அந்த சுதந்திரமாகும். அதன்படி செயல்படாமலிருக்கவும் அது சுதந்திரம் வழங்கியுள்ளது. தங்களது சமூகத்தை ஷரிஅத்தின் அடிப்படையில் நெறிப்படுத்த விரும்புவோர். அதனை விருப்பத்துடனும், உணர்வுடனும் பின்பற்றுகின்றனர்.

சுயச் சார்பு கொண்ட ஒரு சுதந்திரமான சமூகத்தை தனது சொந்த வளங்களைக் கொண்டே அமைத்திட ஷரிஅத் வழி காட்டுகின்றது. ஒரு சமூகம் தனது வளங்களைக் கட்டுக்குள் வைத்துக் கொண்டு அதனைப் பயன்படுத்துகின்ற சுதந்திரத்தைக் கொண்டிருக்க வேண்டும். இல்லையெனில் அது வளங்களை சரியான முறையில் பகிர்ந்தளிக்க முடியாது. சமூகப் பொருளாதார நீதியை நிலை நிறுத்தவும் முடியாது. ஷரிஅத்தின் அடிப்படையில் சமூகம் செயல்பட வேண்டுமென்றால் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் சுயச்சார்பு, சுயமரியாதை ஆகிய பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

# பிக்ஹ்

# இஸ்லாமிய சட்டவியல் பற்றிய கொள்கைகள்

இஸ்லாமிய சட்ட அறிவியல் அல்லது இஸ்லாமிய சட்டவியல் "பிக்ஹ்" என்று அழைக்கப்படுகின்றது. குர்ஆன் மற்றும் சுன்னாஹ்வின் (நபிகளாரின் வாழ்க்கை முறை) அடிப்படையில் அமைந்த இஸ்லாமியச் சட்டங்களின் தொகுப்பு என்றும் இதற்கு விளக்கமளிக்கலாம். "பிக்ஹ்" என்ற வார்த்தைக்கான நேரடியான பொருள் மதிநுட்பம், அறிவு என்பதாகும். ஆரம்பகால இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் ஷரிஅத்திலிருந்தும் தங்களது மதி நுட்பம் அல்லது அறிவின் மூலமும் பெற்ற சட்ட விஷயங்களை தொகுத்து வழங்கினர். அதுவே "பிக்ஹ்" எனப்படுகின்றது. இது மனிதர்களால் உருவாக்கப்பட்டதே.

மிகப்பரந்துபட்ட அளவில் சமய, அரசியல், சமுதாய வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் பிக்ஹ் உள்ளடக்கியதாகும். வணக்க வழிபாடுகள் மற்றும் சமய சம்பந்தப்பட்ட பிற விஷயங்கள், குடும்பச் சட்டம், வாரிசுச் சட்டம், சொத்து மற்றும் ஒப்பந்தச் சட்டம், குற்றவியல் சட்டம் அரசு நிர்வாகம் பற்றிய சட்டம் போர் பற்றிய சட்டம் என பிற அம்சங்களையும் அது கொண்டுள்ளது.

இஸ்லாமியச் சட்டம் அல்லது ஷரிஅத் உயரிய இஸ்லாமிய வாழ்க்கையை உருவகப்படுத்துகின்றது. இஸ்லாம் ஒரு முழுமையான வாழ்க்கை நெறியாகும். இஸ்லாம் பரிந்துரைத்துள்ளபடி வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்காக வழிமுறைகளை ஷரிஅத் வழங்குகின்றது. இறைவனின் கட்டளைக் கேற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு அது நமக்கு உதவுகின்றது. அதுவே நமது

வாழ்க்கையின் குறிக்கோளை அடைவதற்கான வழிமுறையாகவும் உள்ளது.

"பிக்ஹ்" அறிவியலின் அடிப்படையில் ஷரிஅத்தை எளிதில் புரிந்து கொள்ளும் முறையிலும் நடைமுறைப் படுத்தும் முறையிலும் இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் அதனை உருவாக்கியுள்ளனர். "பிக்ஹ்" வைப் பற்றிய விரிவான அறிவும், புரிதலும் உள்ளவர் "பிக்ஹி" என அழைக்கப் படுகின்றார். ஷரிஅத்தின் அடிப்படையில் தீர்ப்பு வழங்குவதற்குத் தகுதியானவர் "முப்தி" என அழைக்கப் படுகின்றார். அவர் வழங்கும் தீர்ப்புக்கு "பத்வா" என்று பெயர்.

# இஜ்திஹாத்

## மாற்றம் பற்றிய கொள்கை

ஷரிஅத் இஸ்லாத்தின் நிரந்தர அடிப்படையாக இருக்கின்றது. நல்லொழுக்கம் சார்ந்த விஷயங்களே இஸ்லாத்தில் நிலையானவை. மாறாதவை. வணக்க வழிபாடுகள், சில சமூகத் தீமைகளைத் தடைசெய்கின்ற கட்டளைகள், சமூகம், பொருளாதாரம், அரசியல் முன்னேற்றத்திற்காக வகுக்கப் பட்டுள்ள விதிமுறைகள், அறிவையும் தெளிவையும் பெறச் செய்யப்படுகின்ற ஊக்குவிப்பு நடவடிக்கைகள் ஆகியவை மாறாதவை. மற்ற அனைத்து விஷயங்களும் மாறுதலுக்கு உட்பட்டவை. இஸ்லாம் வலிமை வாய்ந்த வளமிக்க முன்னேறிய ஒரு சமூகத்தைக் கட்டமைக்க விரும்புகின்றது.

இஸ்லாத்தில் மாற்றம் பற்றிய கொள்கைக்கு "இஜ்திஹாத்" என்று பெயர். ஷரிஅத்தின் அம்சங்களில் ஏற்படக் கூடிய சந்தேகங்களுக்கு ஒருவன் தன்னாலியன்ற அளவுக்கு பெருமுயற்சிகள் மேற்கொண்டு தெளிவு பெறுவதே "இஜ்திஹாத்" ஆகும். இந்த முயற்சி புதிய சிந்தனைகள் மூலமாக மேற்கொள்ளப்படலாம். புதிய வழி முறைகளில் விஷயங்களை அறிந்து புரிந்து கொள்வது, சமூகம் சார்ந்த விஷயங்களில் புதிய சிந்தனையை மேற்கொள்வது ஆகியன இந்த வழிமுறைகளில் அடங்கும். ஷரிஅத் சம்பந்தப்பட்ட விஷயங்களில் இஜ்மா அல்லது சமூகத்தின் ஒருமித்த கருத்து வாயிலாக "புதிய புரிதல்கள் ஏற்படுகின்றபோது, அது இஸ்லாமியச் சட்டத்தில் ஒரு பகுதியாக இடம் பெற்று விடுகின்றது.

இஜ்திமா (முழு அளவிலான சிந்தனை), இஜ்மா (ஒருமித்த கருத்து) இஸ்திஸ்லாஹ் (பொது நலன்), சூரா (ஆலோசனை) ஆகியவற்றின் அடிப்படையிலேயே முஸ்லிம் சமூகம் முன்னோக்கிச் செல்ல முடியும். மாற்றத்திற்காக அது தன்னைத் தயார் செய்து கொள்ள முடியும். இஸ்லாமியச் சட்டம் படிப்படியாக வளர்ச்சி பெற்று விரிவடையும்.

## ஷூரா

# ஆலோசனை பற்றிய கொள்கைகள்

ஷூரா அல்லது ஆலோசனை வாழ்க்கையின் பல்வேறு வித்தியாசமான சூழ்நிலைகளில் தேவைப்படுகின்றது. இஸ்லாத்தில் அரசியல் விஷயங்களில் மட்டுமன்றி, குடும்பங்கள் மற்றும் தொழில், சமுதாயம் சார்ந்த விஷயங் களிலும் ஆலோசனை ஊக்குவிக்கப்படுகின்றது. இது பற்றி "அவர்கள் தங்களின் செயல்களை ஒருவருக்கொருவர் ஆலோசனை செய்து நடத்துகின்றனர் என்று குர்ஆன் குறிப்பிடுகின்றது." (குர்ஆன் 42:38) இத்தகையோரே இறைவ னிடமிருந்து நிலைத்த வெகுமதிகளைப் பெறுகின்றோர் பட்டியலில் உள்ளனர். எனவே இஸ்லாமியக் கொள்கை யின்படி "ஷூரா" கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாகும்.

நபிகள் நாயகம்(ஸல்), முக்கியமான சமுதாய விஷயங் களிலும் குடும்ப விஷயங்களிலும் தங்களைச் சுற்றியிருப் பவர்களுடன் ஆலோசனை மேற்கொண்ட பின்னரே முடிவெடுப்பதை வழக்கமாகக் கொண்டி ருந்தார்கள். ஆலோசனை பெறுவதிலும், அதனை ஏற்று நடப்பதிலும் நபிகளார் முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்கள். இந்த வழியில் ஒரு நேர்மையான தலைவராக, ஒரு இராணுவத் தளபதியாக, ஒரு தகப்பனாராக, ஒரு கணவராக சிறந்ததொரு முன்மாதிரியாக அவர்கள் வாழ்ந்து காட்டினார்கள். தங்களுடைய குடும்ப உறுப்பினர்களிட மிருந்து தொடர்ந்து ஆலோசனை பெற்று வந்தார்கள். உண்மையில் "ஆலோசனை" அவர்களது வாழ்க்கையோடு இணைந்த ஒரு அம்சமாகவே இருந்தது. அதனைத் தமது சமூக மக்களும் கடைப்பிடிப்பதை உறுதி செய்து கொண்டார்கள். பரஸ்பர பேச்சு வார்த்தைகள் மூலமாக சமூகத்தில் ஒற்றுமையை நிலை நாட்டினார்கள்.

## குடும்பங்களுக்கிடையே ஆலோசனைகள்

அதைப்போலவே குடும்பங்களிலும் ஆலோசனை மிகவும்

முக்கியமானதாகும். ஆலோசனை, குடும்ப அமைப்பை வலுப் படுத்தி ஒருங்கிணைந்து முடிவு எடுக்கும் கலாச்சாரத்தை உருவாக்குகின்றது. அது குழந்தைகளிடம் கூட நம்பிக்கையை ஏற்படுத்தி குடும்பத்தில் இணக்கமான உறவு ஏற்பட உதவி புரிகின்றது. "ஆலோசனை, குடும்பக் கட்டமைப்பின் ஒரு அம்சமாக இருக்கின்றபோது, குழந்தைகளுக்கு வளர்ச்சியடையும் பருவத்தில் ஏற்படக்கூடிய பிரச்னைகள், நடத்தையில் ஏற்படும் மாற்றங்கள், பொருளாதார சவால்கள், பிரியமானவர்களின் இறப்பு ஆகிய பிரச்னைகளை எளிதில் சமாளிக்க முடியும். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் "சிறந்த நடத்தையும், நற்பண்புகளும் கொண்டவர்களே நம்பிக்கை யாளர்களில் மிகவும் சிறந்தவர்கள். தங்களது குடும்பத்திற்கு யார் மிகுந்த நல்லவர்களாக இருக்கின் றார்களோ அவர்களே உங்களில் சிறந்தவர்கள்" என்றும் நவின்றுள்ளார்கள்.

இன்றைய நமது நடத்தையுடன் இதனை ஒப்பிட்டுப் பாருங்கள். மிக முக்கியமான விஷயங்களான பிள்ளைகளின் திருமணங்கள், முதலீடு, வீடுகட்டுதல், குழந்தைகளின் கல்வி ஆகியவற்றில் நாம் நமது பெண்களைக் கலந்து ஆலோசிப்பதே இல்லை. அவர்களது ஆலோசனையை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்வதும் இல்லை. பெண்கள் செலவாளிகள் என நாம் கருதுகிறோம். நமது காலடியில் புதைந்து கிடக்கின்ற மிகப் பெரிய புதையலைப் பற்றித் தெரியாமல் எந்த விதமான நோக்கமுமின்றி நிலத்தைச் சுற்றிக் கொண்டு அலைவதற்கு இது ஒப்பானதாகும். பெண்களின் உரிமைகளுக்காகப் பாடுபடுகிறோம் என்று சுய தம்பட்டம் அடித்துக் கொள் பவர்களும், நீதி வழங்குகின்ற முக்கியப் பொறுப்புகளில் இருக்கின்றவர்களும் கூட பெண்களை இரண்டாந்தர மக்களாகவே கருதுகின்றனர். மாறாக பெண்கள் முழுமையில் பாதியாக இருக்கிறார்கள். அந்தப்பாதி தான் இன்னொரு பாதியை பயனுள்ளதாக ஆக்கியுள்ளது. பெண்களின் நிலை இரண்டாம் பட்சமானது அல்ல. அது முழுமை பெற்றது. இரண்டு பாதிகளும் ஒன்றிணையும் போது உயிர் பெறுகின்றது. இந்த ஒற்றுமை இல்லாமல் அது நபித்துவமாக இருந்தாலும் துறவறமாக இருந்தாலும், அல்லது சாதாரண மனிதனாக இருந்தாலும் மனித சமூகம் முழுமை பெறாது.

# ஹலால்-ஹராம்: சட்டபூர்வமான - சட்டபூர்வமற்ற செயல்கள் பற்றிய கொள்கைகள்

இஸ்லாம் ஒரு முழுமையான வாழ்க்கை முறையாகும். தனிமனித வாழ்க்கை அல்லது சமுதாய வாழ்க்கையின் எந்த ஒரு பகுதியையும் அது விட்டு விடவில்லை. பொருளாதாரம் வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமானதாகும். எனவே நமது பொருளாதார வாழ்க்கைக்கு இஸ்லாம் பல விதிமுறைகளை வகுத்துத் தந்துள்ளது. நாம் எப்படிச் சம்பாதிக்கிறோம். அதை எப்படிச் செலவு செய்கிறோம் என்பதே இஸ்லாத்தின் முக்கிய குறிக்கோளாக இருக்கின்றது. இஸ்லாமிய அமைப்பு முறை நடுநிலையானதாகும். அது ஒவ்வொன்றையும் அதற்குரிய சரியான இடத்தில் வைத்துள்ளது. சம்பாதிப்பதும். செலவு செய்வதும் நமது வாழ்க்கைக்கு இன்றியமையாதவை என்பதில் சந்தேக மில்லை. ஆனால் நாம் இதற்காக மட்டும் வாழவில்லை. மனிதன் உயிர் வாழ உணவு தேவைதான். ஆனால் அவன் உணவுக்காக மட்டும் வாழவில்லை. நமது வாழ்க்கைக்கு மிகப் பெரிய குறிக்கோள் உள்ளது. நாம் பூமியில் இறைவனின் பிரதிநிதிகள் (கலீபா) நமக்கு உடல் மட்டுமில்லை. ஒரு ஆன்மாவும் உள்ளது. (ரூஹ்) மனச்சாட்சியும் உள்ளது. மனச்சாட்சி இல்லை யென்றால் நமது நடத்தை காட்டு விலங்குகளின் நடத்தையை விட மோசமாக இருக்கும். அது சமுதாயத்தில் ஏராளமான பிரச்னைகளைத் தோற்றுவிக்கும்.

இஸ்லாம் கூறியுள்ள அனைத்து விஷயங்களும் மனித சமுதாயத்தின் நன்மைக்கும், நலனிற்காகவுமே உள்ளது. ஒரு நேர்மையான சமுதாயத்தை உருவாக்குவதே இஸ்லாமிய பொருளாதாரக் கொள்கைகளின் நோக்கமாகும். அத்தகைய சமூகத்தில் நியாயத்திற்கோ, உண்மைக்கோ, ஒழுக்கத்திற்கோ, நம்பிக்கைக்கோ,பொறுப்பிற்கோ எந்த விதமான மதிப்பும் அளிக்காமல் அதிகப் பங்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக சுயநல நோக்குடன் போராடக் கூடாது. பொறுப்புடனும், நேர்மையுடனும் நாம் நடந்து கொள்ள வேண்டும்.

இஸ்லாத்தின் பொருளாதார முறை கீழ்க்கண்ட விதிமுறைகளின் அடிப்படையில் அமைந்ததாகும்.

1. சட்டபூர்வமான வழிகளில் பொருள் ஈட்டுவது செலவு செய்வது:-

தாங்கள் விரும்பிய படி பொருளீட்டவோ அல்லது செலவு செய்யவோ முஸ்லிம்களுக்கு அனுமதி இல்லை. குர்ஆன் மற்றும் சுன்னாஹ்வின் அடிப்படையில் அமைந்த இஸ்லாமியச் சட்டங்கள் பொருளீட்டுவதையும் செலவு செய்வதையும் ஒழுங்கு படுத்துகின்றன.

2. ஆல்கஹால் கலந்த மது பானங்களை உற்பத்தி செய்வது. விற்பனை செய்வது, பங்கிடுவது ஆகியன சட்டத்திற்குப் புறம்பானதாகும். அதே போல் சூதாட்டம், லாட்டரி, வட்டி வரவு செலவுகளும் சட்டத்திற்குப் புறம்பானதாகும். (குர்ஆன் 5:90,91; 2:1-5)

அத்தியாவசியமான உணவுப் பொருட்களைப் பதுக்குதல் கடத்தல், செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்குதல் ஆகியனவும் தடுக்கப்பட்டுள்ளது (குர்ஆன் 3:180, 9:34-35)

சமூகத்திற்குக் கேடு விளைவிக்கும் விபச்சாரம், ஒழுங் கீனமான செயல்கள் ஆகியன மூலம் சம்பாதிப்பதும் சட்ட விரோதமானதாகும். (குர்ஆன் 24:23)

இஸ்லாம், தீமைகளின் வேர்களையே அழித்து ஒரு நியாயமான நீதிமிக்க சமுதாயத்தை உருவாக்க விரும்புகின்றது. ஒரு முஸ்லிம் எப்போதும் சட்டபூர்வமான வழிகளிலேயே பொருளீட்ட வேண்டும். தான் செய்கின்ற வற்றையெல்லாம். இறைவன் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதை அவன் தனது மனதில் இறுத்த வேண்டும். இறுதித் தீர்ப்பு நாளின்போது, அவன் தனது செயல்களுக்காக இறைவனிடம் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளான். பேராற்றல் கொண்ட இறைவனிடம் அவன் எதையும் மறைக்க முடியாது.

சட்டத்திற்குப் புறம்பாகச் செலவு செய்ய இஸ்லாம் அனுமதி அளிக்கவில்லை. ஒரு முஸ்லிம் பொறுப்பற்ற முறையில் தனது வருமானத்தைச் செலவு செய்ய முடியாது. மாறாக அவன் சிந்தித்து நேர்மையான வழிகளில் செலவு செய்ய வேண்டும். ஆடம்பரமும் விரயமும் மிகக் கடுமையான முறையில் குர்ஆனில் கண்டிக்கப்பட்டுள்ளன. (குர்ஆன் 7:31, 17:26, 19:27-31, 25:28)

# 9

# அன்றாட வாழ்க்கையில் இஸ்லாம்

## இஸ்லாமிய குடும்ப வாழ்க்கை

இந்த உலகம் முழுவதிலும் பரவி வாழ்கின்ற மனித சமுதாயத்தை வழி காட்டிச் சீர்திருத்துகின்ற மிக முக்கியமான பணி நபிகள் நாயகம்(ஸல்) அவர்கட்கு வழங்கப்பட்டிருந்தது. ஆன்மீக வாழ்க்கை மற்றும் உலக வாழ்க்கை என்ற மனித வாழ்க்கையின் இரு அம்சங்களையும் சீர்திருத்துகின்ற பணிகளையும் இது உள்ளடக்கியது. குர்ஆனில் சொல்லப் பட்டிருக்கின்ற தெய்வீக வழிகாட்டுதலின் அடிப்படையில் பணிகளைச் செய்யும்படி இறைவன் நபிகளாருக்குக் கட்டளையிட்டிருந்தான்.

குர்ஆனின் போதனைகளும், நபிகளாரின் போதனைகளும் காலம், சமூகம் என்ற இரு தடைகளையும் தாண்டி, தெரிந்த அல்லது இன்னும் தெரியாமல் இருக்கின்ற மனித வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் தாண்டிச் செல்கிறது. ஒரு உலகளாவிய கொள்கையை உருவாக்கி அதற்குத் தகுந்தாற் போல் விதிமுறைகளையும் சட்டங்களையும் நபிகளார் வகுத்துத் தந்துள்ளார்கள். இந்த வழிமுறை முழு மனித சமுதாயத்தின் பொதுவான மரபுகளைக் கொண்டதாகவும் அதனை அடைய விரும்புகின்ற ஒவ்வொருவருக்கும் எளிதில் கிடைக்கும் வண்ணமும் உருவாக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களும், முஸ்லிமல்லாதவர்களும் குர்ஆன் மற்றும்

நபிகளாரின் போதனைகளுக்கு மேலதிகமாக நன்மக்களாகவும் நல்ல வணக்க வழிபாட்டாளர்களாகவும் ஆகுவதற்கு ஊக்குவிக்கப்பட்டனர். அன்பு செலுத்தாதவர்கள் மற்றும் மக்கள், விலங்குகள், சுற்றுப்புறச்சூழல் ஆகியவை பற்றி கவலைப் படாதவர்களின் தொழுகையை அல்லாஹ் அங்கீகரிப்பதில்லை.

இஸ்லாம் வகுத்துத் தந்துள்ள சில கோட்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இன்றைய பண்பட்ட 21ம் நூற்றாண்டில் நம்முடைய வழிகளை அவை தெளிவு படுத்துகின்றன.

## பெற்றோர்

பெற்றோர்களிடம் இரக்கமும், பரிவும் காட்ட வேண்டுமென்று திருக்குர்ஆன் கட்டளையிடுகிறது. பெற்றோர்களுடன் அன்புடனும், இரக்கத்துடனும் நடந்து கொள்வதை குர்ஆன் ஓரிறைக் கொள்கையோடு தொடர்பு படுத்திக் கூறுகிறது.

> உம் அதிபதி விதித்துள்ளான். அவனைத் தவிர வேறெவரையும் நீங்கள் வணங்காதீர்கள். தாய் தந்தையரிடம் மிகக் கண்ணியமான முறையில் நடந்து கொள்ளுங்கள். (குர்ஆன் 17:23)
>
> இறைவனின் கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படிவதோடு மக்களுடன் அன்போடு நடந்து கொள்ள வேண்டுமென அறிவுறுத்தும் குர்ஆன், இந்த விஷயத்தில் பெற்றோர்களை முதன்மைப் படுத்துகிறது. உங்களது பெற்றோருக்கு நல்லது செய்யுங்கள் (குர்ஆன் 4:36) என்று கூறுகிறது.

திருக்குர்ஆனின் பல இடங்களில் இறை வணக்கத்திற்கு அடுத்து, பெற்றோர்களை நன் முறையில் நடத்துவது பற்றியே அதிகம் பேசப்படுகிறது. இறைவனுக்குப் பிறகு பெற்றோரின் அன்பைப் பெறுவதே முக்கியமானது என்பது இதன் பொருளாகும். ஒருவனது பிறப்பில் அவனது வளர்ப்பில், அவனுக்கு கல்வி அளிப்பதில், அவனுக்கு ஒழுக்கத்தைப் போதிப்பதில், அவனது உலக முன்னேற்றத்திற்கு உதவுவதில் என அனைத்து நிலைகளிலும் பெற்றோர்களின் பங்களிப்பு

மகத்தானது. பெற்றோர்களின் கவனிப்பு இல்லா விட்டால், ஒருவனது முன்னேற்றம் பெரும் சிக்கலுக்கு உள்ளாகிவிடும். படிப்பறிவற்ற ஏழைப் பெற்றோர்கள் கூட தங்களது குழந்தைகளுக்காகப் பெரும் தியாகம் புரிகிறார்கள். அதற்கு ஈடு இணை எதுவுமில்லை. பெற்றோர் களுடன் நன்முறையில் நடந்து கொள்வதன் மூலம், இறைவனின் அருளை நாம் பெறுகிறோம். இறைவனுக்கு நன்றி செலுத்துவதே தொழுகையில் மெய்ப் பொருளாகும். பெற்றோர்களின் அந்தஸ்து இறைவனுக்கு நிகரானது அல்ல. எனவே நாம் பெற்றோர்களை வணங்க முடியாது. ஆனால் அவர்களை மிகுந்த மரியாதையுடன் நடத்த வேண்டும். அவர்களை அன்பாக நடத்துவதன் மூலமே, நாம் அவர்கட்கு நமது நன்றிக்கடனைச் செலுத்த முடியும். இறைவனுக்கும், பெற்றோருக்கும் நன்றி செலுத்துமாறு குர்ஆன் நமக்குக் கட்டளையிடுகிறது.

> *எனக்கு நன்றி செலுத்து; மேலும் உன் பெற்றோருக்கு நன்றி செலுத்து ( 31:14)*

நவீன நாகரீகம் குடும்ப அமைப்பைச் சீர்குலைத்து விட்டது. இந்த அமைப்பில் இருந்த உயர்ந்த மாண்புகள் சிதைக்கப்பட்டு விட்டன. வயதான பெற்றோர்கள் தற்போது பெரிதும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். அவர்களை என்ன செய்வது என்று பொது மக்கள் இப்போது விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். வருங்காலத்திற்கு எந்தவிதப் பங்களிப்பும் செய்ய இயலாத நிலையில் உள்ள முதிய பெற்றோர்களை எவ்வளவு காலத்திற்குப் பராமரித்துக் காப்பது எனப் பலபேர் நினைக்கிறார்கள்.

இப்போது உபயோகமற்றவர்கள் எனக் கருதப்படும் பெற்றோர்கள் ஒரு காலத்தில் தங்கள் குழந்தைகளின் பால் அதிக அதிகாரம் செலுத்தியவர்கள் தான். அவர்கள் நினைத்திருந்தால் குழந்தைகளை அந்தப் பச்சிளம் பருவத்திலேயே அழித்திருக்க முடியும். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள். இன்றைய புதிய தலை முறையினர் தங்களது பெற்றோர்களின் பரிவில் இருந்தவர்கள் தான். பெற்றோர்கள் தான் தங்களது குழந்தைகளை வியர்வை சிந்தி உழைத்து ஆளாக்கியவர்கள். எனவே திருக்குர்ஆன் வயதான பெற்றோர்களை அன்புடனும், கண்ணியத்துடனும்

நடத்த வேண்டுமெனக் கட்டளையிட்டுள்ளது.

> பெற்றோரில் ஒருவரோ, இருவரோ முதுமை அடைந்து விட்டநிலையில் உம்மிடம் இருந்தால் அவர்களைச் சீ என்று கூடக் கூறாதீர். மேலும் அவர்களைக் கடிந்து பேசாதீர்! மாறாக அவர்களிடம் கண்ணியமாகப் பேசுவீராக! மேலும் பணிவுடனும், கருணையுடனும் அவர்களிடம் நடந்து கொள்வீராக! மேலும் நீர் இறைஞ்சிய வண்ணம் இருப்பீராக! என் இறைவனே சிறுவயதில் எவ்வாறு என்னை இவர்கள் பாசத்துடனும் கருணையுடனும் வளர்த்தார்களோ அவ்வாறு இவர்கள் மீது கருணை புரிவாயாக. (குர்ஆன் 17:23, 24)

இஸ்லாமியக் கொள்கைகளின்படி, பெற்றோருக்காக நாம் பிரார்த்தித்தால் மட்டும் போதாது. நாம் குழந்தைகளாக இருந்தபோது எங்ஙனம் நம்மை அன்பு பாராட்டி வளர்த்தார்கள் என்பதை நினைவு கூர்ந்து அவர்கள் பால் பரிவுடன் நாம் நடந்து கொள்ள வேண்டும். குறிப்பாக பெற்ற தாயைப் பெரிதும் மதிக்க வேண்டும். பெற்றோர்களையும். வயதானவர்களையும் அவர்களது சிரமமான காலத்தில் நன்கு கவனித்துக் கொள்வதை, மிகப்பெரிய கௌரவமாகவும், ஆசீர்வாதமாகவும், ஆன்மீக வளர்ச்சிக்கான அரிய வாய்ப்பாகவும் கருதவேண்டும்.

இஸ்லாத்தில், பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமை தொழுகைக்கு அடுத்த கடமையாகும். பெற்றோர்கள் அதனை எதிர்பார்ப்பது அவர்களின் உரிமையாகும். வயதானவர்கள் சிரமத்தில் இருக்கின்ற போது (அது அவர்களின் தவறல்ல) அவர்கள் பால் எரிச்சல் அடைவது ஒரு இகழத்தக்க செயலாகவே கருதப்படும்.

"மேலும், அவர்களைக் கடிந்து பேசாதீர். மாறாக

*அவர்களிடம் கண்ணியமாகப் பேசுவீராக (குர்ஆன் 17:23)*

# பெண்கள்

இஸ்லாமியப் பெண்களைப் பற்றி நினைக்கின்ற போது பலருக்கு "ஒடுக்கப்பட்ட", "கீழான", "சமமற்ற" என்ற வார்த்தைகளே முதலில் நினைவுக்கு வருகின்றன. கலாச்சார நடைமுறைகளுடன் இணைத்துப் பார்க்கப்படும் இந்த ஒரே மாதிரியான பிரச்சாரம் இஸ்லாத்தைப் பற்றிய ஒரு குழப்பமான நிலையை உருவாக்கி ஏழாம் நூற்றாண்டிலிருந்து இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள முற்போக்கான பல உரிமைகளை அங்கீகரிக்க மறுக்கின்றது. பெண்கள் தாழ்ந்தவர்களாகவோ, சமமற்றவர்களாகவோ கருதப்படவில்லை. இந்த அத்தியாயத்தில் இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகள், சமுதாயத்தில் அவர்களது பொறுப்புகள், பங்களிப்பு ஆகியன பற்றியும் இஸ்லாத்தில் ஆண்-பெண் சமத்துவம் பற்றியும் விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றது.

அரேபியாவில் பெண் குழந்தைகள் உயிரோடு புதைக்கப்பட்ட, பெண்கள் மாற்றத்தக்க சொத்தாகக் கருதப்பட்ட அந்தக் காலத்தில் இஸ்லாம் அவர்களின் நிலையினை உயர்த்தி மரியாதை வழங்கியதோடு, இதற்கு முன்னர் எந்த சமூகமும் வழங்கிடாத உரிமைகளை வழங்கி அவர்களைப் பாதுகாத்தது. இஸ்லாம் பெண்களுக்கு கல்வி கற்கும் உரிமையை மற்றும் தாங்கள் விரும்பியவரை மணந்து கொள்ளும் உரிமையை, திருமணத்திற்குப் பின்னர் தங்களது சுய அடையாளத்தை தக்கவைத்துக் கொள்ளும் உரிமையை விவாகரத்துச் செய்யும் உரிமையை, வேலை செய்கின்ற உரிமையை, சொத்துக்களை வைத்திருக்கவும் அதனை விற்கவுமான உரிமையை, சட்டப்படி பாதுகாப்புப் பெற்றிடும் உரிமையை, வாக்களிக்கும் உரிமையை. சமூக, அரசியல் நடவடிக்கைகளில் கலந்து கொள்ளும் உரிமையை

வழங்கியுள்ளது.

கி.பி.610ஆம் ஆண்டு மக்காவில் இறைவன் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கட்கு இறைச் செய்தியை அருளத் துவங்கினான். ஓரிறைவன் மீது நம்பிக்கை கொள்ளுமாறும், ஒருவருக்கொருவர் நீதியுடனும், கருணையுடனும் நடந்து கொள்ளுமாறும் மக்களை நபிகளார் கேட்டுக் கொண்டார்கள். சமய நம்பிக்கையற்ற அரேபிய சமூகத்தை சீர்திருத்தம் செய்வதில் குறிப்பாக பெண்களைப் பற்றிய அவர்களின் மனோபாவத்தை சீர்திருத்துவதில் நபிகளார் பெரிதும் கவனம் செலுத்தினார்கள். பெண் குழந்தைகளைக் கொன்றிடும் வழக்கத்தை ஒழித்தார்கள். பெண்களை மதிப்பும், கண்ணியமும், உரிமையும் பெற்ற ஒரு உன்னத நிலைக்கு உயர்த்தினார்கள்.

இஸ்லாத்தின் புனித நூலான குர்ஆனில் ஒரு முழு அத்தியாயத்தையே இறைவன் பெண்களுக்காக ஒதுக்கி யிருக்கிறான். இதற்கும் மேலாக குர்ஆனின் பல இடங்களில் பெண்களைப் பற்றிக் கூறியுள்ளான். மனித சமூகம் முழுமையும் ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி அனைவரும் தூய நிலையிலேயே படைக்கப்பட்டுள்ளனர் என்று இஸ்லாம் பிரகடனப் படுத்தியுள்ளது. தீய மனப்பான் மைகளை விட்டொழித்து இந்தத் தூய்மையான நிலையைப் பாதுகாப்பதும், நற்செயல்கள் மூலம் தங்களது உள்ளுணர்வுகளைப் பாதுகாப்பதும் ஒவ்வொரு முஸ்லிமின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

இறைவனின் பார்வையில் ஆண்-பெண் இருவரும் சமமே என்பதை இஸ்லாம் உறுதிப்படுத்தியுள்ளது. உண்மையில் உங்கள் இறைவனிடம் அதிகக் கண்ணியம் வாய்ந்தவர் உங்களில் அதிக இறையச்சம் கொண்டவர்தாம் என்று குர்ஆன் குறிப்பிடுகின்றது. (குர்ஆன் 49:13) குர்ஆனின் இன்னொரு இடத்தில் இறைவன் தெளிவாக அனைத்து மனிதர்களும் சமமானவர்களே என்று குறிப்பிடுகின்றான். "ஆணாயினும், பெண்ணாயினும் எவர் இறை நம்பிக்கை கொண்டவராய் இருக்கும் நிலையில் நற்செயல் புரிகின்றாரோ அவரை (இவ்வுலகில்) தூய வாழ்வு வாழச் செய்வோம். (மறுமையிலும்) அத்தகையோர்க்கு அவர்களின் உன்னதமான செயல்களுக்கு ஏற்ப நாம் கூலி வழங்குவோம் (குர்ஆன் 16:97)

ஆண்களும் பெண்களும் சமமே என்பதை இஸ்லாம் மிகத் தெளிவாக அங்கீகரித்துள்ளது. அதே நேரத்தில் இருபாலாரும் ஒரே தரத்தினர் அல்ல என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளது. இறைவன் ஆண்களையும் பெண்களையும் உடல் சார்ந்து மனம் சார்ந்து தனித்தனி சிறப்பியல்புகளுடன் படைத்துள்ளான். இஸ்லாம் கூறுகின்ற இந்த வேறுபாடுகள் ஒரு ஆரோக்கியமான குடும்ப அமைப்பிற்கும் சமூகக் கட்டமைப்பிற்கும் துணை புரிகின்றன. இதன் மூலம் ஒவ்வொரு ஆணும் அல்லது பெண்ணும் தமக்கேயுரிய விசேடத் திறமைகளை சமூகத்தின் நலனிற்காகப் பயன்படுத்த முடியும்.

இப்படி இறைவனின் விதிகள், மாறுபட்ட வழிகளில் இருபாலாருக்கும் பொருந்தக் கூடிய விதத்திலேயே அமைந்துள்ளன. சாதாரணமாக, பெண்கள் தங்களது கண்ணியத்தைக் காத்துக் கொள்வதற்காகத் தலைமுடி உள்ளிட்ட உடலின் பாகங்களை மறைக்க வேண்டுமென இறைவன் ஆணையிட்டுள்ளான். அதே நேரத்தில் பெண்கள் அளவிற்கு இல்லாவிட்டாலும் ஆண்களும் தங்களது கண்ணியத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக உடலின் சில பாகங்களை மூடிக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். எனவே இறைவன் ஆண் பெண் இருபாலாரையும் கண்ணியமாக இருக்கும்படி ஆணையிட்டுள்ளான். ஆனால் இதனைக் கடைப்பிடிப்பதில்தான் சிறிது வேறுபாடு உள்ளது.

அதைப்போலவே உரிமைகள் பொறுப்புக்கள் - செயல் பாடுகள் ஆகியன பெண்களுக்கும் ஆண்களைப் போலவே சமநிலையில் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் இவை ஒரே மாதிரியாக இல்லை. இஸ்லாம் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி அடையாளத்தை வழங்கியுள்ளதால் இவ்விருவரையும் ஒப்பிட்டுப் பார்ப்பது தேவையற்ற ஒன்றாகும். ஒவ்வொருவரும் சமூக அறநெறியையும், சமூகச் சமநிலையையும் நிலை நிறுத்துவதற்காக பரஸ்பரம் தத்தமது பங்களிப்பைச் செய்து வருகின்றனர்.

இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இது தற்போது முஸ்லிம் பெண்களைப் பற்றி நிலவி வருகின்ற சில தவறான எண்ணங்கள் பற்றியும் பெண்களின் வேறுபட்ட சமூகச்

செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகள் பற்றியும் விளக்குகின்றது. முஸ்லிம்கள் இஸ்லாத்தை முழுவதும் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாக இல்லை என்பதையும், தங்களது கலாச்சாரத் தாக்கம் மற்றும் தனிப்பட்ட நலன்கள் சார்ந்து சில விஷயங்களைக் கடைப்பிடிக்கிறார்கள் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்தச் சூழ்நிலையில் அவர்கள் பெண்களுக்கு தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையை மறுப்பதோடு. அவர்களை நடத்துவது சம்பந்தமாக இஸ்லாம் வகுத்தளித்துத் தந்துள்ள தெளிவான விதிமுறைகளுக்கு எதிராகவும் செயல் படுகிறார்கள். எனவே அவர்களது செயல்பாடுகள் இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகளுக்கு எதிராக அமைந்து விடுகின்றன.

## கல்வி:

ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி அறிவைத் தேடுவது ஒவ்வொரு முஸ்லிமின் கடமையாகும் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கி.பி. ஏழாம் நூற்றாண்டிலேயே தெரிவித்துள்ளார்கள். நபிகளாரின் இந்தப் பிரகடனம் மிகவும் தெளிவானது. வரலாற்றுக் காலம் முழுவதும் இது முஸ்லிம்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. மிகவும் செல்வாக்குப் பெற்ற மார்க்க அறிஞர்களில் ஒருவராக நபிகளாரின் மனைவியான ஆயிஷா(ரலி) திகழ்ந்தார்கள். அதன் காரணமாக நபிகளாரின் மறைவிற்குப் பின்னர் மக்கள் இஸ்லாத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்காக ஆயிஷா(ரலி) வை நாடிச் சென்றார்கள். பெண்களின் அறிவாற்றலும் அவர்களின் கல்விப் பங்களிப்பும் இஸ்லாமிய ஆட்சியின் போது ஊக்குவிக்கப்பட்டது. உதாரணமாக கி.பி.859ஆம் ஆண்டு பாத்திமா அல் பிஹ்ரி என்ற பெண்மணியால் மொரொக்கோவில் அல் குராவியின் பள்ளிவாசலும் பல்கலைக்கழகமும் தோற்றுவிக்கப்பட்டது. இது ஒரு பழம் பெரும் பல்கலைக் கழகமாகும்.

## தாய்மை:

இஸ்லாம் தாய்மார்களுக்கு மிக உயர்ந்த நிலையினை

வழங்கி குடும்பத்தில் அவர்களின் அந்தஸ்தை உயர்த்தியிருக்கிறது. குழந்தைகளை வளர்ப்பதில் ஒரு தாய் செய்கின்ற அனைத்துத் தியாகங்களையும் இறைவன் குர்ஆனில் குறிபிட்டுள்ளான். எனவே தாய்மார்கள் அன்புடனும் மரியாதையுடனும் கவனத்துடனும் நடத்தப்பட வேண்டியவர்கள் என இறைவன் அறிவுறுத்தியுள்ளான். தாய்மார்களின் முக்கியத்துவத்தை உணர்த்தவே நபிகள் நாயகம்(ஸல்) "தாயின் காலடியில் சொர்க்கம் இருக்கின்றது" என்று கூறியுள்ளார்கள்.

இன்னொரு சந்தர்ப்பத்தில் ஒருவர் இந்த உலகில் நம்முடைய அதிக பட்சமான அன்பினையும், கருணையையும், உரிமைகளையும் பெறத் தக்கவர் யார்?" என்று நபிகளாரிடம் திரும்பத் திரும்பக் கேட்ட போது ஒவ்வொரு தடவையும் நபிகளார் அவரிடம் "உமது தாயார்" என்று பதிலளித்தார்கள். அந்த மனிதர் நான்காவது தடவையாகக் கேட்டபோது நபிகளார்"உமது தகப்பனார்" எனப் பதிலளித்தார்கள்.

பெற்றோர்களின் சமய நம்பிக்கையைப் பற்றி கருத்தில் எடுத்துக் கொள்ளாது, அவர்களை அன்புடன் நடத்த வேண்டுமென நபிகளார் தமது தோழர்களிடம் கூறினார்கள். இது பற்றி அஸ்மா(ரலி) குறிப்பிடுவதாவது "இஸ்லாத்தில் நம்பிக்கை கொள்ளாத எனது தாயார் மக்காவிலிருந்து மதீனாவிற்கு வந்து என்னைச் சந்தித்து சில பொருட்களைக் கேட்டார். நான் நபிகளாரிடம் "எனது தாயார் என்னை வந்து சந்தித்து என்னிடம் சிலவற்றை எதிர்பார்க்கிறார். அவரது வேண்டுகோளை நான் நிறைவேற்ற வேண்டுமா? நான் அவரை அன்புடன் நடத்த வேண்டுமா? என்று கேட்டேன். அதற்கு நபிகளார் "ஆமாம். உங்களுடைய தாயாரிடம் அன்பாக நடந்து கொள்ளுங்கள்" என்று கூறினார்கள்.

## அரசியல் – சமூக சேவை:

ஆரம்ப கால முஸ்லிம் பெண்கள் சமுதாயத்தின் ஒருங்கிணைந்த செயல்பாட்டில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொள்பவர்களாக இருந்தார்கள். பெண்கள் தங்களது கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்தினார்கள். முக்கிய விஷயங்களில் அவர்களும் கலந்து ஆலோசித்தனர். போர்களில்

காயமுற்ற வீரர்களுக்குப் பெண்கள் பணிவிடை செய்தார்கள். சில பெண்கள் போர்களில் கலந்து கொண்டனர். சந்தைகளில் வெளிப்படையாக வியாபாரம் செய்து வந்தார்கள். இரண்டாவது கலீபாவான ஹழ்ரத் உமர்(ரலி) சந்தையின் மேற்பார்வையாளராக சாஃபா பின்த் அப்துல்லாஹ் என்ற பெண்மணியை நியமித்திருந்தார்கள்.

இஸ்லாமிய வரலாற்றில் பெண்கள் அரசாங்கத்திலும் பொது விஷயங்களிலும், சட்டத்தை உருவாக்கும் பணியிலும் கல்விகற்பிக்கும் பணியிலும், ஆய்வுப் பணியிலும் ஈடுபட்டிருந்தார்கள். இந்த மரபைப் பேணிப் பாது காப்பதற்காக, சமுதாயத்திலும் பல்வேறு பிற விஷயங்களிலும் பெண்கள் தீவிரமாக பங்கு பெறவும், பணியாற்றவும், தலைமை தாங்கவும் ஊக்குவிக்கப்பட்டனர்.

## பரம்பரைச் சொத்துரிமை

இஸ்லாமிய வருகைக்கு முன்னர், உலகெங்கிலுமுள்ள பெண்களுக்கு வாரிசுச் சொத்துரிமை மறுக்கப்பட்டு வந்தது. பெண்களே ஒரு சொத்தாகக் கருதப்பட்டு ஆண்களால் உடமையாக்கிக் கொள்ளப்பட்டனர். பெண்கள் சொந்தமாக சொத்துக்களை வைத்துக் கொள்ளும் உரிமையையும், உறவினர்களிடமிருந்து வாரிசுச் சொத்துக்களை பெறும் உரிமையையும் இஸ்லாம் வழங்கியது. கி.பி 7ஆம் நூற்றாண்டில் இது மிகவும் புரட்சிகரமானஒரு கொள்கையாகவே கருதப்பட்டது.

ஒரு பெண் அவள் மனைவியோ, தாயோ, சகோதரியோ அல்லது மகளோ யாராகயிருந்தாலும் சரி இறந்து போன உறவினரின் சொத்தில் அவளுக்குப் பங்கு உள்ளது. இறந்தவருக்கும் அவளுக்குமுள்ள உறவின் தகுதியைப் பொறுத்தும், வாரிசுகளின் எண்ணிக்கையைப் பொறுத்தும் அவளுக்குரிய பங்கு கிடைக்கும். உலகிலுள்ள பல சமூகங்கள் பெண்களுக்கு வாரிசுச் சொத்தினை வழங்க மறுத்த காலத்தில் இஸ்லாம், பெண்களுக்கு இந்த உரிமையை வழங்கி உலகளாவிய நீதியை நிலை நாட்டியுள்ளது.

## பொருளாதாரப் பொறுப்புகள்

இஸ்லாத்தில் பெண்கள் பொருள் ஈட்டவோ, ஈட்டிய பொருளை வீட்டிற்காகவோ அல்லது உணவிற்காகவோ அல்லது வேறு பொதுச் செலவுகளுக்காகவோ செலவு செய்ய வேண்டிய கட்டாயமில்லை. திருமணமான பெண்ணுக்கு அவளது கணவர் பொருளாதார ரீதியில் உதவிட வேண்டும். திருமணமாகாத பெண்ணாக இருந்தால் இந்தப் பொறுப்பு அவளது நெருங்கிய ஆண் உறவினர்களைச் சாரும். (தகப்பனார், சகோதரர், மாமா, சிறிய, பெரிய தந்தையார்)

ஒரு பெண்ணுக்கு வேலை செய்யவும், அதன் மூலம் கிடைக்கின்ற வருவாயை தனது விருப்பம் போல் செலவு செய்யவும் உரிமை உண்டு. அந்த வருவாயை அவள் தனது கணவருக்கோ அல்லது உறவினர்களுக்கோ கொடுக்க வேண்டியதில்லை. எனினும் ஒரு நல்லெண்ண சமிக்ஞையாக அவள் கொடுக்கலாம். உதாரணமாக மக்கா நகரில் மிகச் சிறந்த வணிகராகத் திகழ்ந்த அன்னை கதீஜா(ரலி), தனது வருமானத்தை தனது கணவரான நபிகளாருக்குக் கொடுத்தார்கள். இஸ்லாத்திற்காகவும் தாராளமாக வழங்கினார்கள்.

திருமணத்தின் போது மணமகளுக்கு மணமகன் "மஹர்" என்னும் திருமணக் கொடையைக் கொடுக்க வேண்டும். இந்த "மஹர்" பணம் சட்டப்படி மணமகளுக்கே உரியது. இதனை வேறு யாரும் பயன்படுத்த முடியாது. மணமுறிவு ஏற்பட்டால் இந்த மஹர் தொகையையும், திருமணத்திற்குப் பிறகு அவள் சுயமாக வேலை செய்து ஈட்டிய வருவாயையும் அவளே வைத்துக் கொள்ளலாம். அவளது உடமைகளில் முன்னாள் கணவருக்கு எந்த விதமான உரிமையும் கிடையாது. இது பெண்ணின் சுதந்திரத்தையும் பொருளாதாரப் பாதுகாப்பையும் உறுதி செய்வதோடு மண முறிவுக்குப் பின் அவளுக்கு பொருளாதாரரீதியில் துணை புரிகின்றது.

## திருமணம்

தனக்கு யார் கணவராக வரவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை பெண்ணுக்கு உண்டு. திருமண ஒப்பந்தம் நிறைவேற வேண்டுமானால், அவளது சம்மதம் கட்டாயம் வேண்டும். யாரையும் திருமணம் செய்து கொள்ளுமாறு அவளைக் கட்டாயப்படுத்த முடியாது. சில கலாச்சார மரபுகளைக் காரணம் காட்டி அவளுக்கு கட்டாயத் திருமணம் செய்விக்கப்பட்டால் அது இஸ்லாத்திற்கு எதிரானதாகும். அதேபோல் பெண்கள் தங்களது திருமண வாழ்க்கையில் அதிருப்தியுற்றவர்களாக இருந்தால் கணவன்மார்களிமிருந்து விவாக ரத்துப் பெறும் உரிமையும் அவர்கட்கு உண்டு.

இஸ்லாத்தில் திருமணம் பரஸ்பர அமைதி, அன்பு மற்றும் பரிவின் அடிப்படையில் அமைந்ததாகும். இது பற்றி இறைவன் திருக்குர்ஆனில் கூறுவதாவது:

மேலும் அவனுடைய சான்றுகளில் இதுவும் ஒன்றாகும். அவன் உங்களுக்காக உங்கள் இனத்திலிருந்தே மனைவியரைப் படைத்தான். நீங்கள் அவர்களிடம் அமைதி பெற வேண்டும் என்பதற்காக மேலும் உங்களிடம் அன்பையும், கருணையையும் தோற்றுவித்தான். திண்ணமாக சிந்திக்கும் மக்களுக்கு இதில் நிறையச் சான்றுகள் உள்ளன (குர்ஆன் 30:21)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்து நற்பண்புகளின் ஒட்டு மொத்த உருவகமாகத் திகழ்ந்தார்கள். அனைத்து முஸ்லிம்களுக்கும் அவர்களே ஒரு சிறந்த முன் மாதிரியாகத் திகழ்ந்தார்கள். வீட்டு வேலைகளில் மனைவியர்கட்கு உதவிகரமாக இருந்த அவர்களின் முன்மாதிரியும், குடும்ப உறுப்பினர்களை அன்புடனும் பரிவுடனும் நடத்திய விதமும், முஸ்லிம்கள் தங்களது அன்றாட வாழ்க்கையில் மேற்கொள்ள வேண்டிய சிறந்த மரபுகளாகும். நபிகளார் தமது மனைவியர்களை மிகுந்த மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்தினார்கள். அவர்களை ஒரு போதும் திட்டியதில்லை. தங்களது மனைவியர்களிடத்தில் நன்முறையில் நடந்து கொள்பவர்களே உங்களில் மிகச் சிறந்தவர்கள் என்று நபிகள் நாயகம்(ஸல்) நவின்றுள்ளார்கள்.

## கண்ணியமும், தீங்கிலிருந்து பாதுகாப்பும்:

உணர்வு ரீதியான, உடல் ரீதியான, மன ரீதியான எந்த விதமான அவதூறுக்கும் இஸ்லாத்தில் இடம் இல்லை. பெண்களை மோசமான முறையில் நடத்துவதற்கும் இஸ்லாமிய விதிகளில் இடமில்லை. குடும்ப வன்முறை எந்த வடிவத்தில் இருந்தாலும் இஸ்லாம் அதனைக் கண்டிக் கின்றது. இஸ்லாமியப் போதனைகளை முழுமையாகப் படிக்கும்போது இந்த உண்மையை உணர்ந்து கொள்ள முடியும். முன்னணி இஸ்லாமிய பெண் மார்க்க அறிஞரான டாக்டர் ஜைனப் ஆல்வானி "இஸ்லாம் அனைத்து வகையான அடக்கு முறைகளையும் அவதூறுகளையும் தடை செய்துள்ளதாகக் குறிப்பிடுகின்றார். இஸ்லாத்தின் பெயரால் நியாயமற்ற முறையில் அதிகாரம் செலுத்துகின்ற ஒருவர் தனது சொந்த காலாச்சார மரபுகளையும் தனிப்பட்ட நலன்களையும் நிலைநாட்டவே அவ்வாறு செய்கின்றார். இறைவனின் படைப்புகள் அனைத்தும் கண்ணியத்திற்குரியவையே. இஸ்லாமியச் சட்டத்தில் அவை பாதுகாக்கப்படுகின்றன" என்றும் குறிப்பிடுகின்றார்.

## அடக்கம் (பணிவு)

பெண்களின் உடல் வனப்பிற்கு தொடர்ந்து முக்கியத்துவம் கொடுத்து வருகின்ற ஊடகங்கள் அவர்கள் அடைய முடியாத அழகின் தரத்தில் இருப்பதாகச் சித்தரிக்கிறார்கள். முஸ்லிம் பெண்கள் அணிகின்ற கண்ணியமான உடைகளின் காரணமாகவே அவர்கள் ஒடுக்கப் பட்டவர்களாகச் சித்திரிக்கப்படுகின்றனர். இது தவறான கருத்தாகும். உண்மையில் அவர்கள் விடுதலை பெற்றவர்களே. உடல் உறுப்புக்களை வெளிக்காட்டாத இந்தக் கண்ணியமான தோற்றம் அவர்களின் ஆளுமைத் திறனையும், பண்புகளையும் வெளிப்படுத்துகின்றன. அவளும் ஒரு மனுஷி என்ற தன்மையை இது அளிக்கின்றது. இந்த விஷயத்தில் முஸ்லிம் பெண்கள் தூய்மையும் இறைப்பற்றுமிக்க இயேசுவின் அன்னை மரியத்துடன் தங்களை அடையாளப்படுத்திக் கொள்கின்றனர்.

முடிவாக, இறைவனாலும், அவனது தூதரான முஹம்மது நபி(ஸல்) அவர்களாலும் வழங்கப்பட்டுள்ள வழி காட்டு

தல்களின் அடிப்படையில் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் இஸ்லாத்திற்கு ஒரு மிகச்சிறந்த மரபு இருக்கின்றது. இஸ்லாமியச் சட்டத்தில் பெண்களுக்கு அதிகமான உரிமைகளும், பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு சமூகத்தில் கண்ணியமும் மரியாதையும் அந்தஸ்தும் இருக்கின்றது.

## தகப்பனார்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தன்னுடைய மகனுக்கு நல்ல பண்புகளை கற்றுக் கொடுப்பதைத் தவிர ஒரு தந்தை தனது மகனுக்குச் செய்யும் பேருபகாரம் வேறு எதுவுமில்லை என்று நவின்றார்கள். மேலும், ஒரு தந்தை தனது குழந்தைகளுக்கு நல்ல கல்வியையும், நல்ல பண்புகளையும் சொல்லிக் கொடுப்பதே மிகச் சிறந்ததாகும் என்றும் கூறினார்கள். நபிகளார் மேலும் கூறியதாவது: மூன்று விஷயங்கள் நீங்கலாக ஒரு மனிதனின் செயல்கள் அவன் இறந்ததும் முடிவுக்கு வந்து விடுகின்றன.

அவையாவன:- அவன் செய்த தானதர்மங்கள்; பயனளித்துக் கொண்டிருக்கும் கல்வி மற்றும் அவனுக்காகப் பிரார்த்தனை செய்யும் குழந்தைகள்; தனது தகப்பனாருடைய நண்பர்களுடன் அன்புடனும், மரியாதையுடனும் நடந்து கொள்வதே ஒருவன் செய்யும் சரியான செயல்களில் உயர்ந்ததாகும் என்றும் நபிகளார் நவின்றுள்ளார்கள்.

## குழந்தைகள்

குழந்தைகளை வளர்த்து ஆளாக்குகின்ற பொறுப்பினை பெற்றோர்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ளது. இந்தக் கடமை, குழந்தைகளின் மீதான தனிப்பட்ட கவனம், அவர்களுக்கு உணவளித்தல், அவர்களை இஸ்லாமிய முறைப்படி வளர்த்தல், முஸ்லிம் சமூகத்துடன் அவர்களை ஒருங்கிணைத்தல் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். இஸ்லாமிய ஷரீஅத்தின்படி இஸ்லாமிய நம்பிக்கை, சடங்குகள், இஸ்லாமியச் சட்டம், ஒழுக்க மாண்புகள் ஆகியன பற்றி பெற்றோர்கள் குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் சேவை புரிகின்ற ஒரு வாழ்க்கைக்குப் பெற்றோர்கள் அவர்களைத் தயார் படுத்த

வேண்டும். அவர்கள் தவறுகள் செய்யும் போது திருத்த வேண்டும். எப்போதும் அவர்களுக்குத் தக்க ஆலோசனைகள் வழங்கி நெறிப்படுத்த வேண்டும். பலதரப்பட்ட நம்பிக்கைகள் கொண்ட மக்கள் வாழ்கின்ற ஒரு பன்முகச் சமூகத்தில் பலசமயங்களின் அடிப்படை போதனைகளை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். பிற சமயக் கொள்கைகளுக்கு மதிப்பளித்து அவற்றை சகித்துக் கொள்ளக் கூடிய ஒரு மனப்பான்மையை குழந்தைகளிடம் ஏற்படுத்த வேண்டும்.

குழந்தைகளின் கள்ளங்கபட மற்ற தன்மைக்காகவும், சமயோசித புத்திக்காகவும் நற்குணத்திற்காகவும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் அன்பு பாராட்டினார்கள். இறைவனுக்கு நெருக்கமாகவும் தமது இதயத்திற்கு நெருக்கமாகவும் இருந்த அன்பிற்குறிய குழந்தைகள் பால் கவனம் செலுத்தினார்கள். குழந்தைகளை முத்தமிட்டார்கள். அவர்களைத் தமது தோளில் வைத்து சுமந்து கொண்டு சென்றார்கள். அவர்களுடன் விளையாடினார்கள்.

## உறவினர்கள்

உறவினர்களை அன்புடன் நடத்துங்கள் (4:36) என்று குர்ஆன் கூறுகின்றது. பெற்றோர்களுக்குப் பிறகு, உறவினர்கள் தாம் நமது மிகுந்த அன்பிற்குப் பாத்திரமானவர்கள். நமது பெற்றோர்கள் மூலமாக உறவினர்கள் நமக்குச் சொந்தக் காரர்களாகி விடுகிறார்கள். உறவினர்களுடன் உறவைப் பேணி வருவது நமது சமூக வாழ்க்கையை மகிழ்ச்சியாக்குகிறது. நபிகளார் கூறியதாக ஆமீர் மகன் சுலைமான் அறிவிப்பதாவது:- ஓர் உறவினர் அல்லாத ஏழைக்கு இரக்கப்பட்டு தர்மம் செய்வது வெறும் தர்மமே யாகும். ஆனால் அது உறவினருக்குக் கொடுக்கப்பட்டால், அது தர்மம் மட்டுமின்றி உறவைப் பேணும் ஒரு அத்தாட்சியாகவும் கருதப்படும். உறவினர்களுக்கு வழங்குவது இரட்டை நன்மை தரக்கூடியது என்பதே இதன் பொருளாகும். தன்னுடைய உறவினர்களுடன் ஒரு மனிதனுக்குப் பாசம் ஏற்படுவது இயற்கையான ஒரு உணர்வே. ஆனால் இந்த உறவுகள் எளிதில் அறுந்து போகக் கூடியவைகளே. மிகச் சாதாரணச் சம்பவங்கள் கூட உறவு முறியக் காரணங்களாக அமைந்து விடுகின்றன.

இப்படி உறவுகள் முறிந்து போக அனுமதிக்கக்கூடாது. உறவுகளைப் பேண ஒவ்வொருவரும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என நபிகளார் வலியுறுத்தியுள்ளார்கள்.

உமர் மகன் அப்துல்லாஹ்(ரலி) நபிகளார் கூறியதாக அறிவிப்பதாவது:- உறவினர்களுடன் உறவைப் பேணி வருவதென்பது பரஸ்பரம் உறவை வெளிப்படுத்துவது என்பது மட்டும் பொருளல்ல, உண்மையில் சிக்கலுக்குள்ளான உறவுகளைச்சரி செய்வதும் தான் .

## பெரியவர்கள்

பெரியவர்கட்கு மதிப்பும், மரியாதையும் அளிக்கப்படவேண்டும். வாழ்க்கையின் அஸ்தமனத்தில் இருக்கும் அவர்களது நம்பிக்கைகளுக்கும், மனோ பலத்திற்கும் புத்துணர்வு அளிக்க வேண்டுமென்றும் நபிகளார் கூறியுள்ளார்கள். நபிகளார் கூறியதாக அனஸ்(ரலி) அவர்கள் அறிவிப்பதாவது:- ஒரு இளைஞன் வயது முதிர்ந்த ஒருவருக்கு உதவி செய்தால், அவன் முதுமையை அடையும் போது இறைவன் அவனுக்கு உதவிட ஆட்களை நியமிப்பான்

முதியவர்களுக்கு மிகுந்த முன்னுரிமை கொடுத்திடுமாறு வானவர் ஜிப்ரீல் தமக்குக் கட்டளை யிட்டுள்ளதாக நபிகளார் ஒரு முறை சொன்னார்கள். விழாக்களின் போதும், உணவு பரிமாறும் போதும் மற்றவர்களை விடப் பெரியவர்கட்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும், உணவு பரிமாறும் போது பெரியவர்களிடமிருந்து ஆரம்பியுங்கள் என்றும் வானவர் ஜிப்ரீல் கூறியதாக நபிகளார் தெரிவித்துள்ளார்கள். மேலும் நபிகளார் கூறியிருப்பதாவது:- இளைஞர்கள் பால் இரக்கம் காட்டாதவர்களும், பெரியோர்கள் பால் மரியாதை செலுத்தாதவர்களும் நம்முடைய சமூகத்தின் (முஸ்லிம்)

அங்கமாக இருக்க மாட்டார்கள்.

# 10

# இஸ்லாத்தில் சமூக வாழ்க்கை

## அண்டை வீட்டார்கள்

நம்முடன் இணைந்து வாழ்கின்ற நம்முடன் சமூக உறவுகளைப் பேணுகின்ற அண்டை வீட்டார்களை நாம் புறம் தள்ள முடியாது. நாம் அவர்களுக்கு அளிக்க வேண்டிய பல்வேறு சலுகைகளை இஸ்லாம் பட்டியலிட்டுள்ளது. மற்றவர்களை விடவும், அண்டை வீட்டுக்காரர்களுக்கு அதிக உரிமைகள் உள்ளன. அண்டை வீட்டுக்காரர்களை மூன்று வகையினராகப் பிரிக்கலாம். அவையாவன 1. நமக்கு உறவினராக இருக்கும் அண்டை வீட்டார். 2. உறவினரல்லாத அண்டை வீட்டார். 3. அலுவலகங்களில் கல்லூரிகளில் பள்ளிக் கூடங்களில் பயணங்களின் போது நம்மைச் சந்திப்பவர்கள்.

கீழ்க்காணும் குர்ஆன் வசனங்களில், அண்டை வீட்டுக்காரர்களுடன் எங்ஙனம் கண்ணியமாகவும், பரிவுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

> மேலும் உறவினராக அண்டைவீட்டார், அந்நியரான அண்டை வீட்டார், பக்கத்தி

லிருக்கும் நண்பர் மற்றும் வழிப் போக்கர் உங்கள் கை வசத்திலுள்ள அடிமைகள் ஆகியோருடன் நயமாக நடந்து கொள்ளுங்கள். (குர்ஆன் 4:36)

நாம் அண்டை வீட்டுக்காரர்களுடன் சேர்ந்து வாழ வேண்டியதுள்ளது. எனவே அவர்களுடனான சமூகத்தொடர்புகளை நாம் விட்டு விடமுடியாது. நம்மிடம் தொடர்பு இல்லாதவர்களை விடவும், அண்டை வீட்டுக்காரர்கள் அதிக உரிமைகள் பெற தகுதியுள்ளவர்கள்.

உலகில் உள்ள அனைத்து சமயங்களும், அண்டை வீட்டுக்காரர்களுடன் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டுமென்ற விஷயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளன. ஆனால், இஸ்லாம் அத்தோடு நிறுத்திக் கொள்ளாமல், அண்டை வீட்டார் என்ற கருத்தியலுக்கு வேறு எந்த சமயமும் கொடுக்காத அதிக முக்கியத்துவத்தைக் கொடுத்துள்ளது. குறுகிய நேரத்திற்கு ஒன்றாகச் சேர்ந்து இருப்பது கூட அவர்களிடையே உரிமைகளை ஏற்படுத்தப் போதுமானதாகும். ஒன்று சேர்ந்து இருப்பது நீடித்தால், உரிமைகள் மேலும் வலுப்பெறுகின்றன.

நபிகளார் சொன்னதாக ஆயிஷா(ரலி) அவர்களும், உமர் மகன் அப்துல்லாஹ்(ரலி) அவர்களும்அறிவிப்பதாவது:-

அண்டை வீட்டுக்காரர்களுடன் தாராள மனப் பான்மையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை வானவர் ஜிப்ரீல் என்னிடம் வலியுறுத்திச் சொன்ன போது எங்கே சொத்தில் அவர்கட்கும் பங்கு கொடுக்க வேண்டும் என்று சொல்லிவிடுவாரோ என்று நான் பயந்து விட்டேன் எந்த விதத்திலும் அண்டை வீட்டுக்காரர்களைப் பாதிக்கும் வண்ணம் நடந்து கொள்ளக் கூடாது என்பதை வலியுறுத்திக் கூறும் இஸ்லாம், அவர்கள் நமது உதவி பெறத் தகுதியானவர்கள் என்றும் கூறுகிறது. அவர்களைக் கண்ணியமான முறையில் நடத்த வேண்டும் அதன் மூலம் அவர்களுக்கு நாம் சமுதாயத்தில் பாதுகாப்பாக வாழ்கிறோம் என்ற நம்பிக்கையும், நமக்கு உதவி செய்ய எந்த நேரத்திலும் ஆட்கள் இருக்கிறார்கள் என்ற உணர்வும் ஏற்படும். இது சம்பந்தமான இஸ்லாத்தின் அணுகுமுறையை கீழ்க்கண்ட செய்திகளிலிருந்து உணர்ந்து கொள்ள முடியும். ஒரு தடவை இறைவன் அறியச் சொல்கிறேன். அவன் முஸ்லிம் அல்ல

இறைவன் அறியச் சொல்கிறேன் அவன் முஸ்லிம் அல்ல, இறைவன் அறியச் சொல்கிறேன் அவன் முஸ்லிம் அல்ல. இப்படி மூன்று முறைகள் நபிகளார் சொல்லியபோது, அபூஹுரைரா(ரலி) அவர்கள் குறுக்கிட்டு யாரைப்பற்றி இவ்வாறு சொல்கிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு நபிகளார் "தனது அண்டை வீட்டுக்காரரைத் தொல்லைக் குள்ளாக்கி அவதியுற வைப்பவனே அவன்" என்று கூறினார்கள். இதிலிருந்து அண்டை வீட்டுக்காரரை அவதிக் குள்ளாக்குவது இறை நம்பிக்கைக்கு முரண்பட்ட செயலே என அறியமுடியும்.

நபிகளார் சொன்னதாக அப்பாஸ் மகன் அப்துல்லா (ரலி) அறிவிப்பதாவது:- அடுத்த வீட்டுக்காரன் பட்டினி கிடக்கும் போது தன் வயிற்றை நிரப்பிக் கொண்டவன் உண்மையான முஸ்லிம் அல்ல அண்டைவீட்டுக்காரர்களிடம் சமாதானமாக வாழ வேண்டும். தேவைப்படும்போது அவர்கட்கு உதவிட வேண்டும் என்பதே இஸ்லாமிய மரபாகும் என்பதை இதிலிருந்து தெரிந்துகொள்ள முடியும்.

இன்னொரு சந்தர்ப்பத்தில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நவின்றதாவது... அண்டை வீட்டுக்காரருக்குச் செய்ய வேண்டிய கடமைகள் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? உங்களிடம் அவர் உதவி கேட்டால் உதவி செய்யுங்கள் துன்பத்தில் இருக்கும்போது அவருக்கு உதவுங்கள். அவர் கடன் கேட்டால் கொடுங்கள். தேவை ஏற்படும் போது அவருக்கு உதவிடுங்கள். அவர் பிணியுற்றிருந்தால் அவருக்கு உதவிடுங்கள். அவர் இறந்து போனால் அவரது ஜனாஸாவுடன் செல்லுங்கள். மகிழ்ச்சியாக இருக்கும் போது அவருக்கு வாழ்த்துச் சொல்லுங்கள். அவருக்கு இடுக்கண்கள் ஏற்பட்டால் அதற்காக இரக்கப்படுங்கள். அவரது அனுமதியின்றி உங்கள் வீட்டை அவரது வீட்டைக்காட்டிலும் உயர்த்திக் கட்டாதீர்கள். ஏனெனில் அவரது வீட்டிற்கு காற்று

வருவதை அது தடுக்கக் கூடும். அவரைத் துன்புறுத்தாதீர்கள் ஒரு பழம் வாங்கினால் அவருக்கும் அதைப் பகிர்ந்து கொடுங்கள்.

## ஏழைகள்

இறைவன் குர்ஆனில் குறிப்பிடுகின்றான்....

> ...அவர்கள் குற்றவாளிகளிடம் கேட்பார்கள் உங்களை நரகத்திற்குக் கொண்டு வந்தது எது? அதற்கு அவர்கள் கூறுவார்கள் தொழக் கூடியவர்களில் நாங்கள் இருக்கவில்லை. நாங்கள் ஏழைகளுக்கு உணவளிக்கவில்லை. (குர்ஆன் (74:42-44)

நபிகள் நாயகம்(ஸல்) தமது துணைவியார் அன்னை ஆயிஷா(ரலி) விடம் கூறியதாவது "தேவை என்று கேட்டு வீட்டிற்கு வந்தவர்களை வெறும் கையுடன் திருப்பி அனுப்ப வேண்டாம் ஏதாவது அவர்களுக்குக்கொடுத்து அனுப்பு. அது அரை பேரீத்தம் பழமாக இருந்தாலும் சரி" என்று கூறினார்கள். "ஓ ! ஆயிஷாவே, ஏழைகளை நேசி. அவர்களோடு நெருக்கமாக இரு. மீண்டும் உயிர்ப்பிக்கும் நாளில் இறைவன் உன்னை தனது அருகில் வைத்துக் கொள்வான்" என்று கூறினார்கள். "ஏழைகளை அழைக்காமல், பணக்காரர்களை மட்டுமே அழைத்து நடத்தப்படும் விருந்தில் பரிமாறப்படும் உணவு தான் மிக மோசமான உணவாகும்" என நபிகளார் கூறினார்கள்.

நபிகளாரின் தோழர்களில் ஒருவரான ஜாபர்அலி(ரலி) ஏழைகளைப் பெரிதும் நேசித்தார். அவர்களோடு உட்கார்ந்து பேசுவார். எப்போதும் ஏழைகளுடனேயே இருப்பார். அவரை நபிகளார் ஏழைகளின் தந்தை (அபுல் மஸாஜுன்) என்று சிறப்புடன் அழைத்தார்கள். இன்னொரு தோழரான ஸைது (ரலி) அவர்கள் அவ்வப்போது கர்வத்துடன் நடந்து கொண்டு, ஏழைகளைவிடத் தான் உயர்ந்தவர் என்று

எண்ணிக்கொள்வார். நபிகளார் அவரிடம் உங்களது வெற்றிக்கும், செல்வத்திற்கும் ஏழைகளின் உழைப்பே காரணம் என்று கூறுவார்கள்.

## அடிமைகள்
## வேலையாட்கள்

நபிகளார் சொன்னதாக அப்துல்லாஹ்பின் உமர்(ரலி) அறிவிப்பதாவது:- வியர்வை உலருவதற்கு முன் உழைத்தவனுக்கு அவனது கூலியைக் கொடுத்து விடுங்கள் நபிகளார் அடிமைகளிடம் மிகவும் அன்பாக இருந்தார்கள் அவர்கள் நம்முடைய சகோதரர்கள், சகோதரிகள். நீங்கள் உண்ணுவதை அவர்களுக்கும் கொடுங்கள். நீங்கள் உடுத்துவதை அவர்கட்கும் உடுத்தக் கொடுங்கள் என்று கூறினார்கள்.

அடிமைகள் என்று அழைக்கப்படும்போது அவர்கள் அவமரியாதையாக உணர்ந்தார்கள். எனவே நபிகளார் தன்னுடைய தோழர்களிடம் "என்னுடைய அடிமை என்னுடைய அடிமைச்சிறுமி" என்று அழைக்காதீர்கள். "என்னுடைய மகனே! என்னுடைய மகளே" என அழைத்திடுங்கள் என்று கூறினார்கள். அதுபோல் அடிமை களிடமும் அவர்களுடைய எஜமானர்களை "பிரபு" என்று அழைக்காதீர்கள் என்றும் இறைவன் ஒருவனே பிரபு என்றும் கூறினார்கள். இறப்பதற்கு முன்பு விடுத்த செய்தியில் நபிகளார் அடிமைகள் விஷயத்தில் நீங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள் என்று கூறியிருந்தார்கள்.

## ஊனமுற்றோர்
## (மாற்றுத்திறனாளிகள்)

உடல் ஊனமுற்றோர் மற்றும் மனநிலை பாதிக்கப் பட்டோர் ஆகியோர்பால் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அளவு கடந்த பிரியமும், அன்பும், பரிவும் செலுத்தினார்கள்.

வரலாற்று நெடுகிலும், ஏன் இப்போது வரை, இம்மக்கள் புறக்கணிக்கப்பட்டவர்களாக உள்ளனர். அவர்கள் சமூகத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டவர்கள் போல் நடத்தப் படுகிறார்கள். சமூகத்திற்குப் பளுவாகக் கருதப்படுகிறார்கள். நபிகளார் அவர்கள் பால் கொண்டிருந்த இரக்கம், அவர்களை துன்பமும் பரிதாபமும் நிறைந்த நரகத்திலிருந்து மகிழ்ச்சி, வெற்றி என்ற உயரங்களுக்குக் கொண்டு சென்றது. நபிகளார் கூறியதாவது:- பூமியில் உள்ளவர்களிடத்தில் இரக்கம் காட்டுங்கள். வானத்தில் இருக்கும் இறைவன் உங்கள் மீது இரக்கம் காட்டுவான். நபிகளாரின் இந்தத் தொலைநோக்கு சிந்தனை, பார்வையற்றோர், காது கேளாதோர், ஊனமுற்றோர், மனநிலைபாதிக்கப்பட்டோர் என சமூகத்தின் பலவீனமான பிரிவினர்களை உள்ளடக்கியதாகும்.

## அநாதைகள்

*பெற்றோர்கள் மற்றும் உறவினர்களின் உரிமைகள் மிகவும் முக்கியமானவை. இவர்களைத்தவிர, சமுதாயத்தின் பலவீனமான பிரிவைச் சார்ந்த மக்கள் நமது அன்பிற்கு உரியவர்கள் ஆவர். இது விஷயத்தில் முதலில் அனாதைகளும், பின்னர் ஏழைஎளிய மக்களும் குறிப்பிடப்படுகின்றனர். குர்ஆன் கூறுகிறது:- அநாதைகளையும், ஏழைகளையும் அன்பாக நடத்துங்கள் (திருக்குர்ஆன் 4:36)*

ஒரு தந்தையோ, அல்லது தாயோ இறந்து போனால் குழந்தைகளுக்கு அன்பும், கவனிப்பும் கிடைக்காமல் போய்விடுகிறது. குழந்தைகளின் பொருளாதார நிலையும் கேள்விக்குறியாகி விடுகிறது. எனவே இத்தகைய அநாதைக் குழந்தைகளைப் பராமரிக்கின்ற பொறுப்பினை சமுதாயம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்போது தான் பெற்றோரை இழந்த துயரத்தை அவர்கள் உணர மாட்டார்கள். சமுதாயம் இவர்களைப் புறக்கணித்தால், இவர்களின் உடல் வளர்ச்சி மட்டுமின்றி மன வளர்ச்சியும் பாதிக்கப்படும். அத்தகைய கவனிக்கப்படாத குழந்தைகள் சமுதாயத்திற்கு எதிராக தீவிரவாதக் கருத்துக்களுக்கு தங்களது உள்ளத்தில் இடம்

கொடுக்கும் சூழ்நிலையும் உருவாகலாம். ஒரு நல்ல குடிமகனாக இருப்பதற்குப் பதிலாக அவர்கள் சமூக விரோத சக்திகளாக மாறவும் வாய்ப்புண்டு.

குர்ஆனின் வசனங்களும், நபிகளாரின் உபதேசங்களும் அநாதைக் குழந்தைகளைக் கவனித்து அவர்களின் கல்வி மற்றும் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்ற வேண்டியதன் தேவையை வலியுறுத்துகின்றன.

இயலாமை காரணமாகவும், புரியாமை காரணமாகவும், அநாதைகளால் தங்களது உரிமைகளைப் பாதுகாக்க இயலாது அவர்களது உரிமைகளைப் பறிப்பது மிகவும் எளிது. அப்படிப் பறிப்போரைப் பற்றி குர்ஆன் கடுமையாகக் கண்டிக்கிறது.

> அநாதைகளின் சொத்துக்களை யார் அநியாயமாக உண்கிறார்களோ அவர்கள் உண்மையில் தங்கள் வயிறுகளில் நெருப்பைத்தான் நிரப்பிக் கொள்கிறார்கள். மேலும், அதிவிரைவில் அவர்கள் கொழுந்து விட்டெரியும் நெருப்பில் வீசி எறியப்படுவார்கள். (திருக்குர்ஆன் 4:10)

அநாதைக் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை சமுதாயமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தும் இஸ்லாம் இறைவனுக்கு அஞ்சிவாழ்கின்ற பண்பை அவர்களிடையே ஏற்படுத்துவதோடு சமுதாயத்திற்கே சொத்தாக விளங்கும் வண்ணம் அவர்களை நாகரீகமிக்க குடிமக்களாகவும் மாற்றிடவும் வேண்டுகிறது.

## நோயாளிகள்

நோயாளிகளைப் போய்ப் பார்ப்பதும், அவர்களது உடல் நலம் குறித்து விசாரிப்பதும், அவர்களது அருகில் இருந்து கொண்டு அவர்களது நெற்றியில் கை வைத்துப் பார்ப்பதும், தேவைப்பட்டால் அவர்களுக்கு உணவளிப்பதும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் பழக்கமாகும். அவர்களுக்காக கவலைப் பட்டு, அவர்களுக்கு ஆறுதல் கூறி இறைவன் நாடினால் நீங்கள் சீக்கிரம் குணமடைந்து விடுவீர்கள் என்றும் கூறுவார்கள். யாராவது ஒருவர் முஸ்லிமாக இருந்தாலும் சரி,

இல்லாவிட்டாலும் சரி, உடல் நலமற்று இருக்கிறார் என்று கேள்விப்பட்டால் நபிகளார் உடனே சென்று அவர்களைப் பார்த்து வருவார்கள். இஸ்லாத்தின் மோசமான எதிரியும், வஞ்சகனுமான அப்துல்லாஹ் பின் உபய் என்பான் உடல் நலமற்று இருந்த போது கூட நபிகளார் அவனைப் போய் பார்த்து விட்டு வந்தார்கள்.

# விலங்குகளையும், பறவைகளையும் நடத்தும் முறை

பூமியில் வாழும் எல்லாப் பிராணிகளும், தன் இரு சிறகுகளின் துணை கொண்டு பறந்து செல்லும் எல்லாப் பறவைகளும் உங்களைப் போன்ற உயிரினங்களாகவே இருக்கின்றன. (குர்ஆன் 6:38)

மேலும். அல்லாஹ் ஒவ்வொரு உயிர்ப் பிராணிளையும் ஒரே விதமான நீரிலிருந்து படைத்தான். அவற்றில் சில தம் வயிற்றால் ஊர்ந்து செல்கின்றன. வேறு சில இருகால்களால் நடந்து செல்கின்றன. இன்னும் சில நான்கு கால்களால் நடந்து திரிகின்றன. (குர்ஆன் 24:45)

அனைத்துப் படைப்புக்களும் இறைவனின் குடும்பத்தைச் சார்ந்தவையே. தனது குடும்பத்திடம் நன்றாக நடந்து கொள்பவரையே அல்லாஹ் பெரிதும் நேசிக்கிறான்.

மனித சமூகத்தின் நன்மைக்காகவும், பயன் பாட்டிற்காகவுமே விலங்குகளை இறைவன் படைத்திருக்கின்ற போதிலும் மனிதர்கள் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டிய சில கடமைகளையும் அவன் வகுத்தளித்துத் தந்துள்ளான். குர்ஆனின் கூற்றுப்படி விலங்குகளின் நடத்தையும் ஒழுங்கு முறைகளும் நுண்ணறிவும், தெளிவும் அவை இறைவனின் அத்தாட்சிகளே என்பதை அறிவிக்கின்றன. எறும்புகள் தமக்கிடையே செய்திகளைப் பறிமாறிக் கொள்கின்றன என்பது பற்றி பூச்சி ஆராய்ச்சியாளர்களின் கண்டு பிடிப்புக்கு முன்னரே இறைவன் குர்ஆனில் அது பற்றிக் கூறியுள்ளான். (குர்ஆன் 2:78). மேலும் தேனீக்களுக்கு இறைவன் தனது வஹியை அறிவித்தான். (குர்ஆன் 16:68,69) தேனின் நிவாரணம் தரும் மருத்துவக் குணம்

பற்றியும் குர்ஆன் குறிப்பிடுகின்றது. குர்ஆனின் சில அத்தியாயங்களுக்கு விலங்குகள் மற்றும் பூச்சிகளின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. உதாரணம் அல் பகறா (பசு-அத்தியாயம்2) நம்ல் (எறும்பு-அத்தியாயம் 27) அன்கபூத் (சிலந்தி - அத்தியாயம் 29) நஹ்ல் (தேனீ அத்தியாயம் 16) விலங்குகளின் உயிரோடு விளையாடுவதையும் அவற்றை சித்திரவதை செய்வதையும் இஸ்லாம் தடை செய்துள்ளது. நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் கீழ்க்கண்ட ஹதீஸ்கள் இதனைத் தெளிவாக விளக்குகின்றன.

ஒருமுறை தோழர் ஒருவர் பறவைக் கூட்டிலிருந்து ஒரு குஞ்சை வெளியே எடுத்து விட்டார். இதனால் தாய்ப்பறவை பதற்றமடைந்து அந்தத் தோழரைத் தாக்கியது. இதனைக் கண்ணுற்ற நபிகளார் உடனே குஞ்சை கூட்டில் வைத்து விடும்படி அத்தோழரிடம் வேண்டிக் கொண்டதோடு, அங்கு அப்போது இருந்த அனைத்துத் தோழர்களிடமும், இந்தப் பறவை தன்னுடைய குஞ்சிடம் காட்டும் இரக்கத்தைவிட இறைவன் உங்களிடம் காட்டும் இரக்கம் உயர்வானது என்று குறிப்பிட்டார்கள்.

யாரொருவர் ஒரு சிட்டுக்குருவியையோ அல்லது ஒரு பெரிய விலங்கினையோ உயிர் வாழ்வதற்கான அவற்றின் உரிமையை மதிக்காமல் கொல்கிறாரோ அவர் இறுதித் தீர்ப்பு நாளின் போது இறைவனுக்குப் பதில் சொல்லக் கடமைப் பட்டவராக இருப்பார் என" நபிகளார் நவின்றுள்ளார்கள்."

"ஒரு விலங்கின் உரிமை மதிக்கப்பட வேண்டும்; உணவு மற்றும் பிற தனது தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அதன் உரிமையும் மதிக்கப்பட வேண்டும். இதில் எந்த விதமான சமரசத்திற்கும் இடமில்லை. இது மனிதர்களின் கடமைகளில் ஒன்றாகும். தங்களது ஆன்மீக உயர்வுக்கு ஒரு முக்கியமான நிபந்தனையாகும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்" எனவும் நபிகளார் கூறினார்கள்.

உயிருள்ளவைகள் எரிக்கப்படுவதை நபிகள் நாயகம்(ஸல்) தடை செய்தார்கள். ஒரு முறை எறும்புகள் எரிக்கப்படுவதைக் கண்ணுற்ற நபிகளார் யார் இதை எரித்தது என்று கேட்டார்கள். இன்னார் தான் இவற்றை எரித்தார் என்று அவர்கட்குத் தகவல் தெரிவிக்கப்பட்டபோது நபிகளார் நெருப்பு கொண்டு தண்டனை கொடுக்கும் உரிமை இறைவன்

ஒருவனுக்கு மட்டுமே உண்டு என்று கூறி இந்த எளிய உயிரினங்களைப் பாதுகாக்குமாறு தனது தோழர்கட்கு அறிவுறுத்தினார்கள்.

தீங்கு செய்யும் உயிரினங்களைக் கூட அவை இறைவனின் படைப்பில் உள்ள ஒரு அம்சமே என்று கருதினார்கள். ஒரு முறை நபிகளார் தமது தோழர்களுடன் மெக்காவிற்கு அருகிலுள்ள மினா என்ற இடத்தில் இருந்த போது, ஒரு குகையிலிருந்து பாம்பு ஒன்று வந்தது. அதைத் தோழர்கள் கொல்ல முயன்ற போது அது தப்பித்துச் சென்று விட்டது. இதன் பின்னர் நபிகளார், "அதனுடைய தீங்கினின்றும் இறைவன் உங்களைக் காப்பாற்றி விட்டான். உங்களுடைய தீங்கினின்றும் அவன் அதனைக் காப்பாற்றி விட்டான் என்று கூறினார்கள். உங்களுடைய தீங்கினின்றும் இறைவன் அதனைக் காப்பாற்றி விட்டான்" என்று கூறியதன் மூலம் நபிகளார் இவ்வுலகில் பாம்புகளும் தங்களது பணியைச் செய்கின்றன என்பதனை உணர்த்தினார்கள். எல்லா உயிரினங்களும் இந்த உலக அமைப்பின் ஒரு அங்கமே என நபிகளார் கருதினார்கள்.

தங்களுடைய வாழ்நாள் முழுவதும் நபிகளார் விலங்குகளைக் கருணையுடன் நடத்த வேண்டுமென்பதை வலியுறுத்தியுள்ளார்கள். மக்காவை நோக்கி படை நடத்திச் சென்ற போது பாதை ஓரத்தில் கிடந்த நாய் ஒன்றின் குட்டிகளைப் பாதுகாக்கும் படி நபிகளார் சொன்னார்கள். ஒரு நாய் தனது குட்டிகளுக்குப் பாலூட்டிக் கொண்டிருந்த போது அதனைக் கண்ணுற்ற நபிகளார் தனது தோழர்களில் ஒருவரான சுராகா மகன் ஜுஐல் என்பாரை அந்த நாய்க்குக் காவலாக நின்று படைகளால் அதற்கு ஆபத்து நேராமல் பார்த்துக் கொள்ளும்படி ஆணையிட்டார்கள். படை முழுவதும் அந்தப் பகுதியைக் கடந்து செல்லும் வரை அவர் அங்கு பாதுகாவலாக நின்றார். இது நபிகளார் எந்த அளவிற்கு விலங்குகளின் பால் கருணையும் இரக்கமும் கொண்டிருந்தார்கள் என்பதைக் காட்டுகிறது. படை நடத்திச் சென்று கொண்டிருந்த நேரத்திலும் ஒரு நாய்க்கும் அதன் குட்டிகளுக்கும் துன்பம் நேரிடாத வண்ணம் அவற்றின் பால் கவனம் செலுத்தினார்கள்.

நபிகளார், பூனைகளை மிகவும் நேசித்தார்கள். ஆனால் பொதுவாக, தனது தோழர்களிடம் விலங்குகளை அன்புடன்

நடத்த வேண்டுமென்று வலியுறுத்துவார்கள். ஒரு முறை தனது தோழர்களிடம் நபிகளார் சொன்ன கதை இது: கொழுத்தும் வெயிலில் ஒருவன் சாலை வழியாகச் சென்று கொண்டிருந்தான். வழியில் ஒரு கிணற்றைப் பார்த்த அவன் தாகம் தணிப்ப தற்காக அதனுள் இறங்கினான். அவன் மேலே ஏறி வந்த போது, ஒரு நாய் தாகத்துடன் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தான். என்னைப் போலவே இந்த நாயும் தாகமாக உள்ளது என உணர்ந்த அவன், மீண்டும் கிணற்றினுள் இறங்கி தனது செருப்பில் நீரை நிரப்பி, அதனை தனது வாயின் பற்களுக் கிடையில் வைத்துக் கொண்டு மேலே வந்து அந்த நாய்க்கு நீரைக் குடிக்கக் கொடுத்து அதன் தாகத்தை தீர்த்தான். இதற்காக இறைவன் அவனுடைய எல்லாப் பாவங்களையும் மன்னித்தான் விலங்குகளிடம் நன் முறையில் நடந்து கொண்டால் நமக்கு வெகுமதி கிடைக்குமா என நபிகளாரிடம் கேட்டபோது "ஒரு உயிரினத்திற்குச் செய்யும் எந்த ஒரு நன்மையான செயலுக்கும் இறைவனின் வெகுமதி உண்டு" என்று பதிலளித்தார்கள்.

இன்னொரு தருணத்தில் நபிகளார் கூறியதாவது:- ஒருபெண் ஒரு பூனையை இறக்கும் வரை அடைத்து வைத்ததற்காகக் தண்டிக்கப்பட்டாள். இதன் காரணமாக அவள் நரகத்திற்கு அனுப்பப்பட்டாள். அதனை அடைத்து வைத்திருந்த போது அதற்கு அவள் எந்த உணவும் கொடுக்க வில்லை. அதனை அவிழ்த்து விட்டு இரைதேட அனுமதிக் கவுமில்லை. விலங்குகள் பால் அன்பும், மரியாதையும் செலுத்துவதை நபிகளார் இஸ்லாமியப் போதனைகளின் ஒரு அம்சமாகவே கருதி அதனை வலியுறுத்தி வந்தார்கள்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இதனை அவர்கள் வலியுறுத்தத் தவறவில்லை.

## பசுமைப் பூமி

நபிகளார் சொன்னதாக அனஸ்(ரலி) அவர்கள் குறிப்பிடுவதாவது:- யாராவது ஒருவன் ஒரு மரத்தை நட்டு அதன் பழங்களை மக்களோ அல்லது பிற உயிரினங்களோ உண்டால், அவன் செய்திட்ட கொடையாக அது கருதப்படும்.

இந்த முறையில் ரோடுகளின் இரு பக்கங்களிலும் நிழல் தரும் மரங்களை நட்டு வைப்பதும், சமூக வனக்காடுகளை அமைப்பதும் பூங்காக்கள் மற்றும் பாதுகாப்புக்காடு அமைப்பதும் பெரிதும் வலியுறுத்தப்பட்டது. நபிகளார் ஒரு முறை சொன்னார்கள் "வழிப்போக்கர்களுக்கும் விலங்கு களுக்கும் நிழல் தருகின்ற மரத்தை ஒருவன் வெட்டினால் நியாயத் தீர்ப்பு நாளின் போது இறைவன் அவனுக்குத் தண்டனை வழங்குவான்".

இதன் மூலம் நபிகளார் இந்த பூமியைப் பசுமையாக வைத்துக் கொள்வதில் எவ்வளவு தூரம் அக்கறை காட்டி யுள்ளார்கள் என்பதை உணரமுடியும். நாம் வாழ்ந்து கொண்டி ருக்கின்ற இந்த உலகத்தை எங்ஙனம் பாதுகாக்க வேண்டும் என்பது பற்றியும் அவற்றின் மீதான நம் உரிமைகள் பற்றியும், அவை இறுதித்தீர்ப்பு நாளின் போது எப்படி நம்முடைய செயல்களை வெளிப்படுத்தும் என்பது பற்றியும் முற்றிலும் புதிய முறையில் விளக்கம் தந்துள்ளார்கள்.

நபிகளார் மேலும் சொன்னதாவது "இறுதித் தீர்ப்பு நாள் நெருங்கி வரும் போது ஒருவன் தனது கையில் ஒரு மரச் செடியைப் வைத்திருந்தால் உடனே அவன் அதை நடட்டும்"

ஒரு முஸ்லிமின் மனச்சாட்சி கடைசிவரை இயற்கையுடன் நெருங்கிய உறவு கொண்டதாக இருக்க வேண்டுமென்றும், ஒருவனுடைய கடைசி நற்செயல் கூட ஒரு

உயிரைப் புதுப்பித்தலோடு தொடர்புடையதாக இருக்க வேண்டும் என்பதும் இதன் மூலம் வலியுறுத்தப்படுகிறது.

## இயற்கை வளங்கள்

இயற்கை என்பது இறைவனின் படைப்பு. அதிலுள்ள வளங்கள் அவன் நமக்கு அளித்திட்ட வெகுமதிகள் ஆகும். அவற்றை அழிக்கக் கூடாதென்றும் வீணாக்கக் கூடாதென்றும் அவன் உத்தரவிடுகிறான்.

> ஆதத்தின் மக்களே! ஒவ்வொரு தொழுகையின் போதும் உங்களை அலங்கரித்துக் கொள்ளுங்கள். மேலும் உண்ணுங்கள், பருகுங்கள். ஆனால் விரயம் செய்யாதீர்கள். திண்ணமாக அல்லாஹ் விரயம் செய்வோரை நேசிப்பதில்லை. ( 7:31)

இயற்கை வளங்களை இரக்கமின்றிச் சுரண்டுவது படைத்தவனுக்கு மட்டுமல்ல, மனித குலத்திற்கே எதிரானது ஆகும். இயற்கை வளங்களைப் பயன்படுத்தும் போது மிகுந்த கவனத்துடன் நடந்து கொள்ளுமாறு நபிகளார் தமது தோழர்களிடம் வலியுறுத்தினார்கள். தண்ணீரை எவ்வளவு சிக்கனமாகப் பயன்படுத்த முடியுமோ அவ்வளவு சிக்கனமாகப் பயன் படுத்தும்படி சொன்னார்கள்.

ஒரு முறை ஸைது என்ற முக்கியத் தோழர் ஒலுச் செய்வதை (தொழுகைக்கு முன்னர் தண்ணீர் கொண்டு குறிப்பிட்ட உடல் அவயவங்களை சுத்தம் செய்வதற்கு ஒலு என்று பெயர்) நபிகளார் பார்க்க நேர்ந்தது. அவர் அளவிற்கு அதிகமாகத் தண்ணீரைச் செலவழிப்பதைக் கண்ட நபிகளார் ஓ ஸைதே ஏன் வீணாக்குகிறீர்கள் என்று கேட்க அதற்கு அவர் ஒலுச் செய்யும் போது தண்ணீர் செலவழிப்பது வீணா? என்று எதிர் கேள்வி கேட்க, நபிகளார் ஆம், ஓடிக்கொண்டிருக்கும் நீரோடையின் தண்ணீரைப் பயன்படுத்தும் போதும் சிக்கனம் அவசியம் எனக் குறிப்பிட்டார்கள்.

தண்ணீரையோ அல்லது இயற்கை வழங்கியுள்ள வேறு எந்த ஒரு பொருளையுமோ அற்பமாகக் கருத வேண்டாம் என நபிகளார் ஸைதுக்கும் பிற தோழர்கட்கும் உபதேசித்தார்கள். அதற்கு மாறாக அவற்றை மதித்து, சிக்கனமாகப் பயன்படுத்தி இறைவனின் அருளைப் பெறுமாறு வலியுறுத்தினார்கள்.

நீரோடையில் சென்று கொண்டிருக்கக் கூடிய தண்ணீரைக் கூட வீணாக்கக் கூடாது என்று சொல்லி யிருப்பதன் மூலம், நபிகளார் இயற்கை வளங்கள் எதையும் வீணாக்கக் கூடாது என்பதை வலியுறுத்தினார்கள். எந்தச் சூழ்நிலையிலும், எப்படிப்பட்ட விளைவுகள் ஏற்பட்டாலும், மனிதன் இயற்கையை மதித்து நடப்பதை ஒரு கொள்கை யாகவே கொண்டிருக்க வேண்டும் என வலியுறுத்தினார்கள்.

இன்றைக்கு உலகில் பலநாடுகளில் தண்ணீர்த் தட்டுப்பாடு மிகக் கடுமையாக உள்ளது. நமக்கு தண்ணீர் வழங்கியுள்ள இறைவனுக்கு நாம் நன்றி செலுத்தி, நம்முடைய வாழ்க்கையில் தண்ணீரை மிகுந்த கவனத்துடன் பயன்படுத்த வேண்டும். இவ்வாறாக, நபிகளார் நமக்கு உபதேசித் துள்ளவற்றை கருத்திலே கொண்டு, எதையும் நாம் வீணாக்கக் கூடாது. பூமியில் லஞ்சம் பரவுவதையும் நாம் தடுக்க வேண்டும்.

கத்தோலிக்கப் பெண் கிறிஸ்துவத் துறவியாகயிருந்து பின்னர் புகழ் பெற்ற எழுத்தாளராக மாறிய கேரன் ஆம்ஸ்ட்ராங் என்பவர் தான் எழுதியுள்ள தீர்க்கதரிசி முஹம்மதுவின் வாழ்க்கை என்ற நூலில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களை நமது காலத்திய தீர்க்கதரிசி என்று குறிப்பிட் டுள்ளார். நாம் வாழும் இந்தப் பூமியைப் பற்றியும் அதிலுள்ள பூச்சிகள், விலங்குகள், பறவைகள், மரங்கள், பாறைகள், மலைகள், ஆறுகள், கடல்கள் ஆகியன பற்றியும் நபிகளார் செய்திட்ட உபதேசங்கள் என்றும்நினைவு கூறுத்தக்கவை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சுற்றுப்புறச் சூழல் கேடு, உயிரினங்களின் சமபலமற்ற நிலை, ஓசோன் படலத்தின் ஓட்டை,புவி வெப்பமயமாதல் போன்ற ஆபத்துகளை இன்றைய மனித சமுதாயம் சந்திக்கின்ற இந்தக் கால கட்டத்தில் நபிகளாரின் வாழ்க் கையிலும், அவரது போதனை களிலும் இருக்கின்ற இது சம்பந்தப்பட்ட செய்திகளை நாம் புறக்கணிக்க முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# 11

# தனிப்பட்ட வாழ்க்கை ஆளுமையை வளர்த்தல்

நபிகள் நாயகம் அவர்கள் வெறுமனே மக்களுக்கு வழிகாட்டியதோடு நின்றுவிடவில்லை. மிக அதிக எண்ணிக் கையிலான தோழர்கட்கு அவர்கள் பயிற்சி அளித்தார்கள். அப்படிப் பயிற்சி பெற்றவர்கள் நபிகளார் மரணமுற்ற ஒரு நூற்றாண்டுக்குள்ளாகவே இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்த பல நாடுகளுக்கும் சென்றார்கள். நபிகள் நாயகம்(ஸல்) மிகப் பெரிய சீர்திருத்தவாதி. இதற்கு அரபியில் "முஸக்கி" என்று பெயர். மனித சமுதாயத்தின் மிக உயர்ந்த குறிக்கோள்களைக் கொண்ட இஸ்லாத்தின் வாழும்முன் மாதிரியாக நபித்தோழர்கள் திகழ்ந்தார்கள். கி.பி.7ஆம் நூற்றாண்டில் நபிகள் நாயகம்(ஸல்) ஏற்றிய இந்தச் சுடரை முன்னோக்கி ஏந்திச் செல்பவர்களாக அவர்கள் மாறினர்கள்.

பல சந்தர்ப்பங்களில் மக்கள் தவறுதலாக சமய வாதிகளை கடவுளின் அவதாரம் என்று கருதி அவர்களிடமிருந்து தெய்வீக ஆணைகளைப் பெற முயல்கிறார்கள். இஸ்லாத்தின் தூதரான நபிகளார், இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பட்ட செய்திகளுக்கும், ஆலோசனை, அறிவுரை மூலமாக மக்களுக்கு வழங்கிய தமது கருத்துக்களுக்குமிடையில் ஒரு தெளிவான வரையறையை உருவாக்கியிருந்தார்கள். தெய்வீகச் செய்திகள் படிப்படியாக அவர்கட்கு அருளப்பட்டபோது, அவை இறைவனிடமிருந்து வந்தவை என மக்களிடம்

கூறினார்கள். அதே நேரத்தில் அச் செய்திகள் பற்றி தமது மனைவியர்கள், தோழர்கள் மற்றும் சுற்றியிருப்போரிடம் அவ்வப்போது கலந்துரையாடுவார்கள். தாம் ஒரு மனிதரே என்பதைத் தெளிவுபட மக்களிடம் தெரிவித்த நபிகளார், பொதுவான விஷயங்களை சமூக மக்களுடன் கலந்து பேசித் தீர்வு காணவே விரும்பினார்கள். ஜனநாயகக் கோட்பாடு மக்களின் சிந்தனையில் தோன்றாத கி.பி ஏழாம் நூற்றாண்டில் கலந்து பேசி முடிவெடுக்கும் முறையை (சூரா) நபிகளார் அறிமுகம் செய்தார்கள். இதுவே ஜனநாயகத்திற்கு முன்னோடியாக அமைந்தது.

அல்லாஹ்வால் வழிநடத்தப்பட்ட போதிலும் தாமும் ஒரு மனிதரேயென்றும், பிற மனிதர்களைப் போலத் தாமும் தவறான முடிவுகள் எடுத்திட வாய்ப்புகள் உண்டென்றும் நவின்ற நபிகளார் பிரச்னைகள் ஏற்படும்போது சம்பந்தப்பட்ட அனைவரிடமும் கலந்து ஆலோசித்து முடிவெடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

தங்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கூறுமாறு தோழர்களை நபிகளார் தூண்டுவார்கள். அவர்கள் கூறும் கருத்துக்களைக் கவனத்தில் எடுத்துக் கொண்டே முடிவெடுப்பார்கள். தோழர்களுடன் இருக்கும் போது, அவர்களது உள்ளத்தில் சிந்திக்கும் திறனை உருவாக்கும் நோக்கில் அவர்களிடம் கேள்விகளை எழுப்புவார்கள். அவர்களது கூர்மையான அறிவுத்திறனை கிளர்ந்தெழச் செய்து அதன் மூலம் சரியான பகுத்தறிவுக்கு ஏற்ற முடிவுகளை எடுக்கும்படி அவர்களை மாற்றினார்கள். தோழர்களிடமே ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க எண்ணியிருந்ததால் அவர்கள் சிந்தனை செய்யும் விதத்திலேயே கேள்விகளைக் கேட்பார்கள். சில நேரங்களில் அந்தக் கேள்விகள் இஸ்லாத்தின் அடிப்படைத் தன்மைக்கு முரணாகக் கூடத் தோற்றமளிக்கும். ஆனால் கேட்பவர்கள் நன்கு சிந்திக்க வேண்டுமென்பதற்காக அவ்வாறு கேட்பார்கள். உதாரணமாக ஒரு முறை "தன்னுடைய எதிரியை வீழ்த்துபவன் பலமான மனிதன் அல்ல" என்று நபிகளார் கூறியபோது சுற்றிலுமிருந்த தோழர்கள் மத்தியில் நபிகளாரின் கருத்துப்படி யார் பலமுள்ள மனிதன் என்பதை அறிய ஆவல் ஏற்பட்டது. சில நொடிகளுக்குப் பிறகு நபிகளார் "கோபம் ஏற்படும் போது

தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்பவனே பலமான மனிதன்" என்று பதிலளித்தார்கள்.

சில நேரங்களில் நபிகளார் சூசகமாகப் பேசுவார்கள். ஒரு தடவை தமது தோழர்களிடம் "ஒருவன் தன் கை வசம் வைத்திருக்கும் உடமைகளில் செல்வம் இல்லை" என்று குறிப்பிட்டார்கள் இது கேட்ட தோழர்கள் வியப்புடன் அவர்களை நோக்கிய போது நபிகளார் "ஆன்மாவின் செல்வமே உண்மையான செல்வம்" என்று குறிப்பிட்டார்கள்.

சில சமயங்களில் நபிகளாரின் சில அறிவிப்புகள் மேலோட்டமாகப் பார்க்குமிடத்து பொதுவான நெறி முறைகளுக்கு முரண்பாடாகத் தோன்றும். உதாரணமாக, ஒரு முறை நபிகளார் தமது தோழர்களிடம் "நீங்கள் உங்களது சகோதரர்கள் நியாயமாக நடந்து கொண்டாலும் அல்லது நியாயமற்ற முறையில் நடந்து கொண்டாலும் அவர்களுக்கு உதவி புரியுங்கள்" என்று கூறினார்கள். இதனைக் கேட்ட தோழர்கள் சற்று தடுமாறிப் போயினர். நபிகளார் என்ன கூறவருகிறார்கள் என்று அவர்கட்குப் புரியவில்லை. தோழர்களில் ஒருவர் நபிகளாரிடம் "நியாயமான முறையில் நடந்து கொள்கின்ற சகோதரர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் நியாயமற்ற முறையில் நடந்து கொள்பவர்கட்கு எங்ஙனம் உதவிட முடியும் எனக் கேட்டார். அதற்கு நபிகளார் "அவன் நியாயமற்ற முறையில் நடந்து கொள்வதைத் தடுத்திடுங்கள் அதுவே அவனுக்குச் செய்யும் உதவியாகும்" எனக் குறிப்பிட்டார்கள்.

இன்னொரு சந்தர்ப்பத்தில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் "வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவதன் மூலமாகவும் இறைவனிடம் இறைஞ்சிக் கேட்பதன் மூலமாகவும் உங்களது பாவங்கள் மன்னிக்கப்படும் என்று கருதாதீர்கள். மனித உரிமை மீறலில் ஈடுபட்டு குற்றம் புரிந்தவர்கள் இறுதித் தீர்ப்பு நாளின் போது மன்னிக்கப்படமாட்டார்கள்" என்று குறிப்பிட்டார்கள். சகோதர மனிதனுக்கு எதிராகப் பாவச் செயல்களில் ஈடுபடுவது எவ்வளவு மோசமான செயல் என்பதை மக்களுக்கு உணர்த்தவே நபிகளார் இங்ஙனம் குறிப்பிட்டார்கள். ஒரு முறை நபிகளார், "ஆதரவற்றவர் என்பவர் யார்" என வினவிய போது தோழர்கள் எதிர்பார்த்த

படியே "பணமோ அல்லது வேறு வருமானங்களோ இல்லாதவர் ஆதரவற்றவர்" என்று பதிலளித்தார்கள்.

ஆனால் நபிகளார் "ஆதரவற்றவர்" என்ற வார்த்தைக்கு ஒரு புதிய பொருள் கூறினார்கள். சக மனிதர்களின் உரிமைகளைப் பறிக்காதீர்கள் என்று தமது தோழர்கட்கு அறிவுரை கூறிய அவர்கள் தொடர்ந்து கூறியதாவது:- "உண்மையான ஆதரவற்றவர் யாரெனில் இறுதித் தீர்ப்பு நாளின் போது அவரது பை வணக்க வழிபாடுகள், நோன்பு, தர்மம் போன்ற நன்மையான செயல்களால் நிறைந்து வழியும். அதே நேரத்தில் மற்றவர்கள் அவர் தங்களைப் பற்றி அவதூறு உரைத்ததாகவும், தாங்கள் இல்லாத நேரத்தில் தங்களைப் பற்றி தவறாகப் பேசியதாகவும், ஒருவருடைய பொருளை (பணத்தை) அபகரித்துக் கொண்டதாகவும், அவரது கையில் இன்னொரு மனிதனின் இரத்தக்கறை படிந்திருப்பதாகவும் புகார் கூறுவார்கள். இதன் விளைவாக, அவர் புரிந்திட்ட தீய செயல்களுக்குப் பகரமாக அவர் புரிந்திட்ட நன்மைகள் அனைத்தும் ஒவ்வொன்றாக எடுக்கப்பட்டு அவரது நன்மைகள் அனைத்தும் பாவங்களாக மாறிவிடும். அவரை நரகத்திற்கு இழுத்துச் செல்லுமாறு இறைவன் கட்டளையிடுவான்.

இவ்வாறாக நபிகளார் சமூக அறநெறிப் பண்புகளுக்கு முக்கியத்துவம் அளித்தார்கள். ஒரு நம்பிக்கையாளர் தனது சமயக் கடமைகளையும், சடங்குகளையும் முற்றிலும் நிறைவேற்றினால் மட்டும் போதாது. மாறாக அவர் மனித உறவுகளை பலப்படுத்துகின்ற சமுதாய மரபுகளைப் பேணுவதிலும் அக்கறை காட்ட வேண்டும் என்பதை நபிகளார் வலியுறுத்தினார்கள். வெறுமனே குருட்டுத்தனமாக கீழ்படிந்து நடப்பதற்கும் அல்லது இயந்திர கதியில் செய்ததை அப்படியே திருப்பிச் செய்வதற்கும் அப்பாற்பட்டு தங்களது திறமையையும் நுண்ணறிவையும் வளர்த்துக் கொள்ள வேண்டுமெனத் தமது தோழர்களைத் தூண்டினார்கள். சமூக உறவுகளைப் பேணுவதிலும் சம மனிதர்களின் உரிமைகளைப் பேணுவதிலும் எப்போதும் விழிப்புடன் இருந்து

வரையறைகளைத் தாண்டாமல் நடந்து கொள்ளும்படியும் தோழர்களை அறிவுறுத்தினார்கள்.

## புறங்கூறல்

எல்லாம் வல்ல அல்லாஹ், திருக்குர்ஆனில் பின்வருமாறு கூறுகிறான்.

> இறை நம்பிக்கை கொண்டவர்களே! அதிகம் சந்தேகம் கொள்வதைத் தவிர்த்திடுங்கள். ஏனெனில் சில சந்தேகங்கள் பாவமாக இருக்கின்றன. மேலும் துப்பறிவதில் ஈடுபடாதீர்கள். இன்னும் உங்களில் ஒருவர் மற்றவரைப் பற்றிப் புறம் பேச வேண்டாம். உங்களில் எவரேனும் இறந்து விட்ட தன் சகோதரனின் இறைச்சியை உண்ண விரும்புவரா என்ன? பாருங்கள் நீங்கள் அதனை அறுவெறுப்பாகக் கருதுகிறீர்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். திண்ணமாக அல்லாஹ் பாவ மன்னிப்புக் கோரிக்கையை பெரிதும் ஏற்றுக் கொள்பவனாகவும் கிருபையாளனாகவும் இருக்கின்றான். (திருக்குர்ஆன் 49:12)

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நவின்றுள்ளதாவது:- "யாராவது என்னிடம் வந்து எனது நாவைக் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருப்பேன், என்னுடைய மர்மஸ்தலத்தைப் பாதுகாப்பேன், அடுத்தவர்களைப் பற்றி தவறாகப் பேசமாட்டேன், அவதூறு பேச மாட்டேன், புறம் கூற மாட்டேன், விபச்சாரம் மற்றும் அதுபோன்ற பாவச் செயல்களில் ஈடுபடமாட்டேன் என்று வாக்குறுதி அளித்தால் நான் அவர்கட்குச் சொர்க்கம் உண்டு என்று உத்தரவாதம் அளிக்கிறேன்".

## சந்தேகம்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறியதாவது:-

சந்தேகம் பற்றி எச்சரிக்கையாக இருங்கள். தவறான

தகவல்களின் அடிப்படையில் சந்தேகம் ஏற்படக்கூடும். அடுத்தவரை உளவு பார்க்காதீர்கள். மற்றவர்களுடைய மறைவான குறைகளைப் பகிரங்கப்படுத்தாதீர்கள்.

## பொய்யுரைத்தல்

இறைவன் குர்ஆனில் கூறுகிறான்:

> விக்கிரகங்கள் எனும் அசுத்தத்தைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். பொய்யுரைப்பதையும் நிறுத்தி விடுங்கள் (திருக்குர்ஆன் 22:30) என்றும்..
>
> அவன் பொய்யுரைப்பவர்களில் ஒருவனாக இருந்தால் நிச்சயமாக அல்லாஹ்வின் சாபம் அவன் மீது உண்டாகும் (திருக்குர்ஆன் 24:7) என்றும் கூறுகிறான்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் "உங்களுடைய சகோதரனிடமோ, சகோதரியிடமோ நீங்கள் ஒன்றைக் கூறி அது உண்மை என்று அவர்கள் ஏற்றுக் கொள்ளும் போது, நீங்கள் பொய்யுரைத்தால் அது மிகப் பெரிய துரோகமாகும்" என்று கூறினார்கள். மேலும்

"மக்கள் சிரிப்பதற்காகப் பொய்யுரைப்பவன் நாசமாகப் போகட்டும் நாசமாகப் போகட்டும், நாசமாகப் போகட்டும் என்றும்" கூறினார்கள்.

## யூகங்கள் பாவமேயாகும்

தவறான யூகங்களும், மற்றவர்களைப் பற்றிக் காரணமின்றித் தவறாகப் பேசுவதும் தடுக்கப்படவேண்டும். நம்பிக்கையாளர்கள் யூகமாகப் பேசுவதைத் தவிர்த்திட வேண்டும். சில யூகங்கள் பாவகரமானவை. மற்றவர்களை உளவு பார்க்க வேண்டாம். இல்லாத போது பிறரைப் பற்றித் தவறாகப் பேச வேண்டாம். மேலும் வாய்மொழியாகச் சொல்லப்படும் செய்திகளையோ, வதந்திகளையோ, கிசுகிசுக்களையோ நம்ப வேண்டாம். ஏனெனில் அவை பெரும்பாலும் பொய்யாகவும், உண்மையும் மெய்யும் கலந்ததாகவும், உண்மைக்கு முற்றிலும் மாறானதாகவும் இருக்கின்றன. பிறரைப் பற்றியோ அல்லது சம்பவங்களைப் பற்றியோ கூறுகின்ற போது, நம்பிக்கையாளர்கள் முழு உண்மைகளையும் விசாரித்துத் தெரிந்து கொண்டபின்னரே கூற வேண்டும். மற்றவர்களைப் பற்றிக் கருத்துச் சொல்கின்ற போது, மிகுந்த கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும். இது பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுவதாவது.

> இறை நம்பிக்கை கொண்டவர்களே! அதிகம் சந்தேகம் கொள்வதைத் தவிர்த்திடுங்கள். ஏனெனில் சில சந்தேகங்கள் பாவமாக இருக்கின்றன. (குர்ஆன் 49:12)
>
> இறை நம்பிக்கை கொண்டவர்களே! தீயவன் ஒருவன் ஏதேனும் ஒரு செய்தி உங்களிடம் கொண்டு வந்தால், அதன் உண்மை நிலையை நன்கு விசாரித்துத் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் தெரியாத்தனமாக ஏதேனும் ஒரு கூட்டத்தினருக்குத் தீங்கிழைத்து விட்டு பின்னர் உங்கள் செயலுக்காக வருந்தும் நிலை ஏற்பட்டு விடக்கூடாது. (குர்ஆன்: 49:6)
>
> நல்ல வார்த்தைக்கு (கலிமா தய்யிபாவு)க்கு

*அல்லாஹ் எவ்வாறு உவமை கூறுகிறான் என்பதை நீர் கவனிக்கவில்லையா? அது ஒரு நல்ல மரத்தைப் போன்றதாகும். அதன் வேர் பூமியில் ஆழப் பதிந்திருக்கின்றது. அதன் கிளைகள் வானளாவ உயர்ந்து நிற்கின்றன. எந்நேரமும் அம்மரம் தன் இறைவனின் ஆணைக் கேற்ப கனிகளை வழங்கிக் கொண்டிருக்கிறது. (திருக்குர்ஆன் - 14:24-25)*

*மேலும் கெட்ட வார்த்தைக்கு உவமை, ஒன்றுக்கும் உதவாத கெட்ட மரத்தைப் போன்றதாகும். அந்த மரம் பூமியின் மேல் மட்டத்திலிருந்து பிடுங்கி எறியப்படுகிறது. அதற்கு எந்த விதமான நிலையான தன்மையும் கிடையாது. (திருக்குர்ஆன் 14:26)*

*இறை நம்பிக்கையாளர்களே! எந்த ஆண்களும், பெண்களும் மற்றெந்த ஆண்களையும், பெண்களையும் பரிகாசம் செய்ய வேண்டாம். ஒருவேளை அவர்கள் இவர்களை விடச் சிறந்தவர்களாக இருக்கலாம். நீங்கள் ஒருவரையொருவர் குத்திப்பேசாதீர்கள். ஒருவருக்கொருவர் மோசமான பட்டப்பெயர்களைச் சூட்டி அழைக்காதீர்கள். (திருக்குர்ஆன் 49:11)*

## பகிரங்கமான பாவம்

*குர்ஆனில் எல்லாம் வல்ல அல்லாஹ் குறிப்பிடுவதாவது:*

*மேலும் ஒருவன் ஒரு தவறை அல்லது பாவத்தைச் செய்து விட்டு ஒரு நிரபராதியின் மீது அதைச் சுமத்தி விட்டால் அவன் பெரும் அவதூறையும், வெளிப்படையான பாவத்தையும் நிச்சயம் சுமந்து கொள்பவனாவான் (குர்ஆன் 4:122)*

## ஆடம்பரம்

### குர்ஆன் கூறுவதாவது:

*வீண் செலவு செய்யாதீர்கள். திண்ணமாக வீண்செலவு செய்வோர் சைத்தானின்*

சகோதரர்களாவர். சைத்தானோ தன் இறைவனுக்கு மிகவும் நன்றி கொன்றவனாய் இருக்கின்றான். (குர்ஆன் 17:26,27)

## திமிர்(செருக்கு)

மேலும் பூமியில் செருக்காக நடக்காதீர்கள். ஏனெனில் உம்மால் பூமியைப் பிளந்து விடமுடியாது. மலையளவுக்கு உயர்ந்து விடவும் முடியாது (குர்ஆன் 17:37)

பெருமை பேசித்திரிகின்ற யாரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை. (குர்ஆன் 57:23)

## ஆசைகள் (விருப்பம்)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாவது: "நான் அச்சப்படுவது வறுமை குறித்து அல்ல. உங்களுக்கு முன்னால் இருந்தவர்கள் செய்தது போல் நீங்களும் உலக விஷயங்களில் ஆசை கொள்ள ஆரம்பித்து விடுவீர்கள். அவர்களை அழித்தது போல் உங்களையும் அது அழித்து விடும் என்றே நான் அஞ்சுகிறேன்.

## பொறாமை

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நவின்றுள்ளதாவது: "பொறாமைக் குணத்திலிருந்து விலகியிருங்கள். விறகுகளை நெருப்பு எரிப்பதைப் போல், பொறாமை நற்செயல்களை எரித்து அழித்து விடும்.

நியாயமற்ற முறையில் ஒரு முஸ்லிமின் கண்ணியத்தைக் குலைப்பது போன்ற மோசமான செயல் வேறொன்றுமில்லை"

## இகழ்ச்சி(பரிகாசம்)

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறியிருப்பதாவது:

*மற்றவர்களின் துன்பம் கண்டு மகிழ்ச்சியடையாதீர் அல்லாஹ் அவனது துன்பத்தை நீக்கி அந்த இடத்தில் உன்னை வைத்து விடலாம்.*

## பொருட்களைப் பதுக்குதல்

*குர்ஆன் குறிப்பிடுவதாவது: அல்லாஹ் தனது அருளிலிருந்து தங்களுக்கு வழங்கியவற்றை எவர்கள் கஞ்சத்தனம் புரிகின்றார்களோ அவர்கள் அதனைத் தமக்கு நல்லதென எண்ணி விடவேண்டாம். மாறாக அது அவர்களுக்கு மிகவும் கெட்டதாகும். தமது கஞ்சத்தனத்தின் மூலம் அவர்கள் சேமித்து வைத்தவை எல்லாம் மறுமை நாளில் அவர்களின் கழுத்தில் விலங்காகப் பூட்டப்படும். (குர்ஆன் 3:180)*

*எவர்கள் தங்கத்தையும், வெள்ளியையும் சேகரித்து வைத்துக் கொண்டு அவற்றை அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யாமல் இருக்கின் றார்களோ அவர்களுக்குத் துன்புறுத்தும் தண்டனை இருக்கின்றது. (குர்ஆன் 9:34)*

## தவறான முறையில் சம்பாதித்த செல்வங்கள்

*தவறான வழிமுறையில் சேர்த்த பணத்தையோ அல்லது சொத்தையோ ஒருவன் பயன்படுத்தி தனது தேவைகளைப் பூர்த்தி செய்தால் அவன் தனக்குத் தானே பெரிய தீமை புரிகின்றான். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் எச்சரித்தது போல் அவனது வணக்கங்கள் அல்லாஹ்வால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அவனது வேண்டுதல்களுக்கு பதில் அளிக்கப்பட மாட்டாது. அவனது வேண்டுகோள்கள் நிறைவேற்றப்பட மாட்டாது. அவன் ஏதாவது நற்செயல்கள் புரிந்திருந்தாலும், அதனால் பயன் ஏதும் ஏற்படாது. மறுமையில் அல்லாஹ்வின் ஆதரவோ, அல்லது அனுதாபமோ அவனுக்குக் கிடைக்காது. அதில் எந்தப் பங்கும் அவனுக்குக் கிடைக்காது.*

*நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நவின்றுள்ளதாவது:-*

ஒருவன் நேர்மையற்ற முறையில் பணம் சம்பாதித்து அல்லது சொத்துக்களை அடைந்து பிறகு அதன் ஒரு பகுதியைத் தர்மம் செய்தாலும் அவன் செய்த தர்மம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அதனைக் கொண்டு அவன் தனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டால் அதில் எந்த விதமான நன்மையோ அபிவிருத்தியோ இருக்காது. தனது இறப்பிற்குப் பிறகு அவன் அச்சொத்துக்களைத் தனது சந்ததியினருக்கு விட்டுச் சென்றால் அது அவனுக்கு நரகத்திற்குரிய ஒரு வழிமுறையாகவே இருக்கும். (தவறான முறையில் சம்பாதித்த பணத்திலிருந்து தர்மம் செய்தால் அது ஒரு போதும் மீட்சிக்கு இட்டுச் செல்லாது) ஒரு அசுத்தம் இன்னொரு அசுத்தத்தைப் போக்காது அதனைத் தூய்மையானதாக ஆக்க முடியாது. மேலும் நபிகளார் கூறியதாவது: "அல்லாஹ் தூய்மையானவன்: தூய்மையான காணிக்கைகளையே அவன் ஏற்றுக் கொள்கிறான்.

## ஏமாற்றுதல் - மோசடி

குர்ஆன் கூறுவதாவது: அளவில் மோசடி செய்பவருக்குக் கேடுதான். அவர்கள் எத்தகையோர் என்றால், மக்களிடமிருந்து அளந்து வாங்கும் போது நிறைவாக வாங்குகின்றார்கள். அவர்களுக்கு அளந்தோ, நிறுத்தோ கொடுக்கும்போது குறைவாகக் கொடுக்கிறார்கள். (குர்ஆன் 83:1-3)

நபிகளார் ஒரு நாள் சந்தையை திடீரென்று பார்வையிட்ட போது ஒரு வணிகர் நன்கு காய்ந்த தானியங்களோடு, ஈரமான தானியங்களையும் கலந்து வைத்திருந்ததைப் பார்த்து விட்டார்கள். உடனே அந்தத் தானியக் குவியலின் உள்ளே தமது கைகளை விட்டு கலப்படத்தை உறுதி செய்த நபிகளார், வாங்குபவர்களை ஏமாற்றுவதற்காக அவர் இவ்வாறு செய்ததை அறிந்து "ஏன் இப்படிச் செய்தீர்கள் என அவரிடம் வினவினார்கள்.அதற்கு அவர் மழைதான் காரணம் என்று பதிலளித்தார். உடனே நபிகளார் "பிறரை ஏாற்றக் கூடியவர் நம்மவர் இல்லை" என்று அறிவித்தார்கள்.

குழப்பம்-லஞ்சம்

குர்ஆன் கூறுவதாவது:- அல்லாஹ் அருளிய உணவை

உண்ணுங்கள், பருகுங்கள் ஆனால் பூமியில் குழப்பம் செய்து கொண்டு திரியாதீர்கள் (குர்ஆன் 2:60)

## பேராசை

போது மென்ற மனமே வெற்றிக்கும் மகிழ்ச்சிக்கும் வழி வகுக்கும். பேராசை பெருநட்டத்தை ஏற்படுத்தும்.

நம்மில் பல பேர் பொருட்செல்வம் மிகுந்த மகிழ்ச்சியைத் தரும் என நினைக்கிறோம். இது நமக்கு வசதிகளைத் தருமே தவிர, மகிழ்ச்சியைத் தராது. பொருட் செல்வத்தை மட்டும் வைத்துக் கொண்டு ஒருவன் மன ரீதியான மகிழ்ச்சியைப்பெற முடியாது. உண்மையில், போதுமென்ற மனமே நம்மை மகிழ்ச்சிக்கு இட்டுச் செல்லும். உள்ளத்தில் அமைதியை ஏற்படுத்தும். நமது ஆத்மாவை பேராசை என்ற பிணியிலிருந்து விடுவிக்கும். பேராசைக்கும், இச்சைக்கும் முடிவே கிடையாது. ஒன்றை நிறைவேற்றினால் இன்னொன்றின் மீது அவாவை ஏற்படுத்தி அது பெருகிக் கொண்டே போகும். மனிதனின் இயற்கையான குணம் பற்றி நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறியதாவது:- ஆதமுடைய மகனுக்கு ஒரு பள்ளத்தாக்கு அளவிற்குத் தங்கம் கொடுக்கப்பட்டாலும் அவன் அதை விட இரண்டு மடங்கு விரும்புகிறான். அவனது வாயை எதுவும் நிரப்புவதில்லை. மண்ணைத் தவிர, யார் தனக்காக வருந்துகிறானோ, அவனுக்கு இறைவன் மன்னிப்பு வழங்குகிறான்.

மனிதன் எப்போதுமே செல்வத்தையும், பொருளாதார வளமையையுமே விரும்புகிறான். மேலும் மேலும் விரும்புவது அவனது இயற்கைக் குணம். மனிதன் எப்போதுமே வாய்ப்புக்களைத் தேடியே அலைகிறான். செல்வந்தனாக வேண்டும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும். கார் வாங்க வேண்டும். எழிலார்ந்த வீடுகள் கட்ட வேண்டும் என்ற கனவுகளிலேயே வாழ்கிறான். சுருக்கமாகக் கூறினால், ஒரு தனிமனிதனின் விருப்பப் பட்டியல் முடிவற்றது. தன்னுடைய ஆசைகளையும், கனவுகளையும் நிறைவேற்றிக்கொள்ள அவன் அனைத்து

முயற்சிகளிலும் ஈடுபடுகிறான். உலகாதாய வளங்களைப் பெறுவதற்காக மனிதன் எப்போதும் ஆவலாக இருக்கிறான். அதை அடையும் முயற்சியில், நியாயங்களையும், மரபுகளையும் புறக்கணிக்கிறான். இந்த உலகத்தின் மீதான பற்றும், அதை அனுபவிக்க வேண்டுமென்ற ஆவலும், மறுமை வாழ்க்கையை அடைவதினின்றும் நம்மை பின்னுக்குத் தள்ளும். வாழ்வதன் நோக்கமே படைத்த இறைவனை வணங்குவதற்காகத்தான் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

இது சம்பந்தமான கீழ்க்கண்ட இறை வசனம் நம்மை நெறிப்படுத்த உதவுகிறது.

> உங்கள் செல்வங்களும், உங்கள் பிள்ளைகளும் உங்களை நம்மிடத்தில் மிகவும் நெருக்கமாக்கி வைக்கக் கூடியவை அல்ல. ஆயினும் நம்பிக்கை கொண்டு நற்செயல் புரிந்தவர்களைத் தவிர. அத்தகையவர்களுக்கே அவர்கள் செய்த செயல்களின் கூலி இரு மடங்கு இருக்கிறது. மேலும் அவர்கள் உயர்ந்த மாளிகையில் நிம்மதியோடு இருப்பார்கள். (குர்ஆன் 34:37)

## மது - சூதாட்டம்

மதுவையும், சூதாட்டத்தையும் தடைசெய்து குர்ஆனின் 5வது அத்தியாயத்தில் 90வது வசனத்தில் கூறப்பட்டுள்ளது.

இறை நம்பிக்கை கொண்டவர்களே மது, சூதாட்டம், பலிபீடங்கள், குறிபார்க்கும் அம்புகள் ஆகியவை அருவருக்கத்தக்க ஷைத்தானியச் செயல்களாகும். அவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அதன் மூலம் நீங்கள் வெற்றி பெறலாம் (குர்ஆன் 5:90)

மது அருந்துவதும், சூதாட்டதில் ஈடுபடுவதும் அபாயகரமானவை. அவை சமூகத்தில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை. அது மக்களை உழைப்பதினின்றும் விலகியிருக்கச் செய்து, செல்வத்தை அடைவதற்காக முறைகேடான வழிகளில் ஈடுபடுமாறு தூண்டுகின்றது. அப்பழக்கம், பெரும்பாலான குடும்பங்களை பொருளாதார அழிவிற்கு இட்டுச் செல்கிறது. அவர்களை

கடனாளியாகவும், ஆதரவற்றவர்களாகவும் ஆக்குகின்றது. மேலும், அது சமூகத்தின் அற நெறிகளைச் சிதைக்கின்றது.

மிகவும் சிறப்பிற்குரிய ஆங்கில வரலாற்றாசிரியரான அர்னால்டு டோயின் பீ என்பவர் இஸ்லாம் மனித சமூகத்திற்கு வழங்கியுள்ள மிகவும் மதிக்கத்தக்க, நிலைத்த நன்கொடை என்ன வென்றால், அது மதுவையும், சூதாட்டத்தையும் தடை செய்ததேயாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## ரிபா அல்லது வட்டி

வட்டியுடன் தொடர்புடைய அனைத்துவகையான பணப் பரிமாற்றங்களையும் இஸ்லாம் தடை செய்துள்ளது. இஸ்லாத்தில் வட்டிக்கும் கந்து வட்டிக்குமிடையில் எந்த விதமான வித்தியாசமும் இல்லை. இஸ்லாத்தில் வட்டி என்ற பேச்சுக்கே இடமில்லை. வட்டி என்ன பெயர் சொல்லி அழைக்கப்பட்டாலும் அதனை இஸ்லாம் தடை செய்துள்ளது.

வட்டி என்பது வணிகமுமல், லாபமுமல்ல. அது ஒரு வகையான சுரண்டலே. சொத்துக்குவிப்பே குர்ஆன் கூறுகின்றது:-

> ....வியாபாரமும் வட்டியைப் போன்றது தான் என்று அவர்கள் கூறுகின்றார்கள். உண்மையில் அல்லாஹ் வியாபாரத்தை அனுமதிக்கப் பட்டதாகவும் (ஹலால்) வட்டியை தடுக்கப்பட் டதாகவும் (ஹராம்) ஆக்கியுள்ளான் (குர்ஆன் 2: 275)

> ...நீங்கள் வட்டிக்கு விடும் பணம் அல்லாஹ் விடத்தில் பெருகுவதில்லை. ஆனால் அல்லாஹ்வின் உவப்பைப் பெற வேண்டுமென நாடியவர்களாய் நீங்கள் வழங்கும் ஜகாத் - அதனை வழங்குவோர் தாம் உண்மையில் தம்முடைய செல்வத்தைப் பெருக்கிக் கொள்பவராவார் (குர்ஆன் 30:139)

> ...இறை நம்பிக்கை கொண்டவர்களே! பன் மடங்காகப் பெருகி வளரும் வட்டியை உண்ணாதீர்கள்! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்.

*நீங்கள் வெற்றி பெறுவீர்கள் (குர்ஆன் 3:130)*

*இறை நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் உண்மையில் நம்பிக்கையாளர்களாக இருப்பின் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் (உங்களுக்கு வர வேண்டிய) வட்டிப் பாக்கிகளை விட்டு விடுங்கள். ஆனால் அவ்வாறு நீங்கள் செய்யாவிடின் அல்லாஹ்விடமிருந்தும் அவனது தூதரிடமிருந்தும் (உங்களுக்கு எதிராக) போர் அறிவிக்கப்பட்டுவிட்ட தென்பதை அறிந்து கொள்ளுங்கள். (இப்போதும் கூட) நீங்கள் பாவ மன்னிப்புக் கோரி (வட்டியை கைவிட்டு) விட்டால் உங்களுடைய மூலதனம் உங்களுக்கே உரியது. நீங்கள் அநீதி இழைக்கக் கூடாது. உங்கள் மீதும் அநீதி இழைக்கப்பட மாட்டாது. (குர்ஆன் 2:278,279)*

தற்போதைய தாராளச் சந்தைப் பொருளாதாரத்தில் வட்டி ஒரு பிரிக்க முடியாத அங்கமாக இருக்கின்றது. செல்வந்தர்கள் ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கும் ஜகாத் போலல்லாமல் வட்டி ஏழைகளிடமிருந்து செல்வத்தை எடுத்து வசதியானவர்கட்குக் கொடுக்கின்றது. நவீனப் பொருளாதாரம் வட்டியைச் சார்ந்தே உள்ளது. அது இல்லாமல் வாழ முடியது என்ற நிலை ஏற்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. உலகமெங்கும் துவக்கப்பட்டு வெற்றிகரமாக நடந்துவரும் வட்டியில்லா இஸ்லாமிய வங்கி மற்றும் மூலதன நிறுவனங்கள் இந்தத் தவறான கருத்திற்கு சவால் விடுகின்றன.

## கருக்கலைப்பும் வறுமை பற்றிய அச்சமும்

குர்ஆன் கூறுகின்றது:

*இவர்களில் ஒருவருக்குப் பெண் குழந்தை (பிறந்திருப்பது) பற்றி நற் செய்தி சொல்லப் பட்டால் அவரது முகத்தில் கருமை கவ்விக் கொள்கிறது. துக்கத்தால் அவர் தொண்டை அடைத்துக் கொள்கிறது. (குர்ஆன் 16:258)*

இஸ்லாத்திற்கு முந்தைய கி.பி.ஏழாம் நூற்றாண்டு அரேபியாவில் பெண் குழந்தைகளைக் கொல்லும் வழக்கம் இருந்து வந்தது. அவர்கள் மூன்று காரணங்களைக் கூறிப் பெண் குழந்தைகளைக் கொன்றார்கள். இது பற்றிக் குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. முதலாவதாக, தங்களது கடவுள்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக பலிபீடங்களில் வைத்துப் பெண் பிள்ளைகளைத் தியாகம் செய்தார்கள். (குர்ஆன் வசனங்கள் 6:37 மற்றும் 6:140ஐப் பார்க்கவும்.) இரண்டாவதாக, வறுமை காரணமாகப் பெண் குழந்தைகளைக் கொன்றார்கள். இது பற்றி எச்சரிக்கை விடுத்துள்ள குர்ஆன், "குழந்தைகளைக் கொல்வது சட்டத்திற்குப் புறம்பான கொடுஞ்செயல்" என்று கூறியுள்ளது.

> வறுமைக்கு அஞ்சி உங்களது பிள்ளைகளைக் கொலை செய்யாதீர்கள். நாம் தான் அவர்களுக்கு உணவளிக்கிறோம். உங்களுக்கும் உணவளிக்கிறோம். உண்மையில் அவர்களைக் கொலை செய்வது பெரும்பாவமாகும். (குர்ஆன் 17:31)

புராதன காலத்திலிருந்து இன்றைய நவீன காலம் வரை கூறப்பட்டு வருகின்ற "குடும்பக் கட்டுப்பாடு" என்ற கருத்தின் ஆணிவேரையே இந்த வசனங்கள் வெட்டி வீழ்த்துகின்றன. வறுமைக்கு அஞ்சியே பலர் குழந்தைகளைக் கொல்கிறார்கள். அல்லது கருக்கலைப்புச் செய்கிறார்கள். தற்காலத்தில் கருத்தடை சாதனங்கள் பல புழக்கத்திற்கு வந்து விட்டன. கருவில் இருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்று அறிந்து கொள்ளவும் கருவிகள் வந்து விட்டன. பெண் குழந்தை இருப்பது அவமானம் என்று கருதியே பிறந்த பச்சிளம் குழந்தைகளை உயிருடன் புதைக்கின்றார்கள். பத்தில் ஒருவர் இந்தக் குற்றச் செயலில் ஈடுபடுகின்றனர். ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் இச் செயலில் ஈடுபடுகின்றனர். பெற்ற தாய்மார்களே குழந்தைகளை உயிரோடு புதைப்பதற்காகக் கொடுக்கின்றனர். பெண் சிசுக் கொலை என்ற பெயரில் இந்தக் கொடிய பழக்கம் இன்றைக்கும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. யூனிசெப் வெளியிட்டுள்ள உலகக் குழந்தைகள் அறிக்கையின் படி இந்தியாவில் பெண்களை விட ஆண்களே அதிகம் உள்ளனர். அதாவது 1000 ஆண்களுக்கு 880 பெண்களே உள்ளனர். உலக அளவில் ஆண்-பெண் விகிதாச்சாரம் 1000க்கு

*954 என்ற அளவில் உள்ளது. பெண் சிசுக் கொலை காரணமாகவே பெண்கள் பிறப்பு விகிதம் குறைந்துள்ளது.*

*ஒவ்வொரு ஆண்டும், பிறப்பதற்கு முன்பாகவே 70 மில்லியன் பெண் குழந்தைகள் கொல்லப்படுவதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன. திகைப்பூட்டும் இந்த எண்ணிக்கை ஒட்டு மொத்த மனித சமுதாயத்தையே வெட்கித் தலை குனிய வைத்துள்ளது. இது ஒவ்வொருவரின் மனச் சாட்சியையும் உலுக்க வேண்டும். ஆனால் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கின்ற ஒரு நாகரீக உலகில் வாழ்ந்து கொண்டிருப்பதாகத்தான் நாம் இன்னமும் எண்ணிக் கொண்டிருக்கிறோம்.*

*ஆண் குழந்தைகளை விரும்புகின்ற கலாச்சாரச் சூழல் மற்றும் கருவில் இருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்று அறியும் நவீன தொழில் நுட்பக் கருவியைப் பயன்படுத்தி பெண் கருவை அழிக்கின்ற போக்கு ஆகியன காரணமாக பெற்றோர்கள் ஆண் குழந்தையையே விரும்புகின்றனர் என்பது தெளிவாகத் தெரிகின்றது.*

*பெண் குழந்தைகளைக் கொன்றவர்கள் இறுதித் தீர்ப்பு நாளின் போது ஏன் அவர்கள் தங்களது பெண் குழந்தைகளைக் கொன்றார்கள் என்று கேள்வி கேட்கப்படுவார்கள். அதற்கு அவர்கள் பதில் சொல்லியாக வேண்டும். இது பற்றிக் குர்ஆன் குறிப்பிடுவதாவது:-*

> *மேலும் உயிருடன் புதைக்கப்பட்ட சிறுமியிடம் கேட்கப்படும் போது எக் குற்றத்திற்காகக் கொல்லப்பட்டாள் (குர்ஆன் 81:8,9)*

*பெண் குழந்தை குடும்பத்திற்கு அவமானத்தைத் தேடித் தருபவளல்லர் என்று நபிகள் நாயகம் (ஸல்) தெளிவுறக் கூறியுள்ளார்கள். அதற்கு மாறாக, அவள் குடும்பத்திற்குப் பெருமை சேர்ப்பவள். தனது பெண் குழந்தைகளை நல்ல முறையில் வளர்த்து அவர்களை ஆளாக்குபவர்கள் இறுதித் தீர்ப்பு நாளின் போது நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுடன் நெருக்கமாக இருந்திடும் பாக்கியத்தைப் பெற்றிடுவார்கள்.*

## இனவெறி

இன வெறியையும் நிற வெறியையும் இஸ்லாம் முற்றிலும் ஒழித்துள்ளது. கி.பி.ஏழாம் நூற்றாண்டில் இஸ்லாத்திற்கு முந்தைய அரேபியாவில் "இனக்குழு" அடிப்படையில் மக்காவில் இனவெறி நிலவியது. மக்கா நகர் குறைஷியர்கள் பொதுவாக அரேபியர்களையும் குறிப்பாகத் தங்களையும் மற்றவர்களை விட உயந்தவர்களாகக் கருதிக் கொண்டனர். இறைச் செய்தியைக் கொண்டு வந்த நபிகளார் கீழ்க் கண்டவாறு பிரகடனம் செய்தார்கள்.

எந்த ஒரு அரேபியரும், அரேபியரல்லாதவரை விட உயர்ந்தவர் அல்லர். எந்த ஒரு வெள்ளை நிற மனிதரும் கருப்பு நிற மனிதரை விட உயர்ந்தவர் அல்லர். ஒரு அபிசீனிய கருப்பு முஸ்லிம் ஆட்சி செலுத்தினாலும் முஸ்லிம்கள் அவருக்குக் கீழ்படிந்து நடக்க வேண்டும்.

> உண்மையில் உங்கள் இறைவனிடம் அதிகக் கண்ணியம் வாய்ந்தவர் உங்களில் அதிக இறையச்சம் கொண்டவர்தாம் (குர்ஆன் 49:13)

இன்றைக்கும் கூட கருப்பு நீக்ரோக்களும் பிற பின்தங்கிய மக்களும் நாகரீகம் பெற்றதாகச் சொல்லப்படும் வெள்ளை இன மக்களாலும் உயர் சாதியினராலும் எவ்வாறு நடத்தப் படுகின்றனர் என்பதை நாம் அறிவோம். பதினைந்து நூற்றாண்டுகளுக்கு முன்னால், நபிகளாரின் காலத்தில் பிலால்(ரலி)அவர்களின் நிலையை எண்ணிப்பாருங்கள். இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களில் முஸ்லிம்களைத் தொழுகைக்கு அழைக்கும் பணி மிகுந்த கவுரவமான பொறுப்பாகக் கருதப்பட்டது. அந்தப் பணி இந்த நீக்ரோ அடிமைக்கு வழங்கப்பட்டது. மக்கா வெற்றிக்குப் பிறகு இந்த

நீக்ரோ அடிமையை (பிலாலை) உலக முஸ்லிம்களால் புனிதமான இடமாகக் கருதப்படும் வரலாற்றுப் பாரம்பர்யம் வாய்ந்த கஅபாவின் உச்சி மீதேறி நின்று மக்களை தொழுகைக்கு அழைத்திடுமாறு நபிகளார் ஆணையிட்டார்கள்.

# 12

# நற்குணமும் - நற்பண்புகளும்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறியிருப்பதாவது:

ஓ மக்களே! உங்களது மார்க்கமாக இஸ்லாத்தை இறைவன் தேர்ந்தெடுத்துத் தந்துள்ளான். நற்குணம் மற்றும் நற்பண்புகள் மூலம் அதனைக் கடைப்பிடித்து நடந்திடுங்கள்.

## அடக்கம் - நம்பிக்கை

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நவின்றுள்ளதாவது: ஒவ்வொரு சமயத்திற்கும் ஒரு தனிப் பண்பு உண்டு. இஸ்லாத்தின் தனிப் பண்பு அடக்கமாகும்.

அடக்கமும் நம்பிக்கையும் ஒன்று சேர்ந்திருப்பவை. இதில் ஏதாவது ஒன்றை இழந்து விட்டால் இன்னொன்றும் போய்விடும்.

## நற்செயல்களை இறைவன் விரும்புகிறான்:

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறியிருப்பதாவது:

எல்லாம் வல்ல இறைவன் நல்லவன். அவன் நற்

செயல்களை விரும்புகிறான். அவன் தூய்மையானவன். தூய்மையையே விரும்புகிறான்"

"இறைவன் உங்களது உருவங்களையோ, தோற்றங்களையோ பார்ப்பதில்லை. அவன் உங்களது இதயங்களையும், செயல்களையுமே பார்க்கின்றான்.

## சந்திப்பும் வாழ்த்தும்

குர்ஆன் கூறுவதாவது:-

மேலும் உங்களுக்கு (ஸலாம் எனும்) வாழ்த்துக் கூறப்பட்டால் நீங்கள் அதை விட அழகிய முறையில் அல்லது (குறைந்த பட்சம்) அதைப் போன்றாவது பதில் வாழ்த்துக் கூறுங்கள். திண்ணமாக அல்லாஹ் ஒவ்வொரு செயலுக்கும் கணக்கு வாங்குபவனாய் இருக்கின்றான் (குர்ஆன் 4:86)

வீடுகளில் நீங்கள் நுழையும் போது உங்களைச் சார்ந்தவர்கட்கு ஸலாம் கூறுங்கள் (குர்ஆன் 24:61)

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நவின்றுள்ளதாவது:-

"இளைஞர் மூத்தவருக்கு ஸலாம் கூறட்டும். நடந்து கொண்டிருக்கும் ஒருவர் உட்கார்ந்து கொண்டிருக்கும் ஒருவருக்கு ஸலாம் கூறட்டும். குறைந்த எண்ணிக்கையில் உள்ளோர் அதிக எண்ணிக்கையில் உள்ளோருக்கு ஸலாம் கூறட்டும்."

"இரு மனிதர்கட்கு நடுவில் அவ்விருவரின் அனுமதி இல்லாமல் உட்காராதீர்கள்"

## தர்மம்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நவின்றுள்ளதாவது:-

"சூரியன் உதிக்கின்ற ஒவ்வொரு நாளும் தர்மம் செய்வது ஒவ்வொரு மனிதனின் கடமையாகும். தகராறு செய்து கொண்டிருக்கும் இருவருக்கிடையே சமாதானம் செய்து வைப்பதும் தர்மமே"

சக மனிதனை நோக்கி புன்னகை புரிவதும் தர்மமே. உங்களது சகோதரனுக்கு (உங்கள் சகோதரிக்கும்) நீங்கள்

வழங்கும் புன்னகையும் தர்மமே.

தெருவில் கிடக்கின்ற தீங்கு செய்யும் பொருட்களை அப்புறப்படுத்துவதும் தர்மமே"

விதவைகளுக்கும், ஏழைகளுக்கும் உதவி புரிகின்ற ஒருவன் இறைவனின் பாதையில் ஜிகாத் செய்வதற்கும், பகல் முழுவதும் நோன்பிருந்து இரவு முழுவதும் வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவதற்குச் சமமாகும்.

## அன்பு

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நவின்றுள்ளதாவது:-

மக்களிடம் அன்பு செலுத்தாதவர்களிடம் இறைவன் அன்பு செலுத்துவதில்லை. யார் அன்பாகவும் இறைவனின் படைப்புகளுக்கு அனுசரணையாகவும் இருக்கின்றாரோ அவருக்கு அல்லாஹ் தனது அன்பையும் பிரியத்தையும் காட்டுகின்றான். உலகத்திலுள்ள படைப்புகள்பால் அன்பு செலுத்துங்கள். அல்லாஹ் உங்களிடம் அன்பு செலுத்துவான்.

## உண்மை அன்பு

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஒரு முறை தனது தோழர் ஒருவரிடம் உண்மையான அன்பின் இரகசியம் பற்றிக் குறிப்பிட்டார்கள். மனிதர்கள் எதை விரும்பு கின்றார்களோ அதனை விட்டும் விலகியிருங்கள். மனிதர்கள் உங்களை விரும்புவார்கள்.

அன்பின் வழியைப் பின்பற்றுமாறு இறைவன் நபிகளாரைத் தூண்டினான்.

மேலும் என் அடியான் நஃபில் எனும் உபரி வணக்க வழிபாடுகளின் மூலம் என் பக்கம் தொடர்ந்து நெருங்கி வந்து கொண்டிருக்கிறான். எந்த அளவுக்கு எனில் நான் அவனை நேசிக்கும் அளவுக்கு (நெருங்கி வருகிறான்) நான் அவனை நேசித்து விட்டால் எதைக் கொண்டு அவன் கேட்கிறானோ அத்தகைய அவனது செவியாக நான் ஆகிவிடுவேன். எதைக் கொண்டு அவன் பார்க்கின்றானோ அத்தகைய பார்வையாக நான் ஆகி விடுவேன். எதைக் கொண்டு அவன் பிடிக்கிறானோ அத்தகைய அவனது கையாக நான் ஆகி விடுவேன். மேலும்

எதைக் கொண்டு நடக்கிறானோ அத்தகைய காலாக நான் ஆகிவிடுவேன். இறைவனின் அன்பு தெய்வீக நெருக்கத்திற்கு இட்டுச் செல்கிறது. சுய நலத்திலிருந்து விடுவிக்கிறது. இறைவனின் அன்பு சார்பற்றது. அந்த அன்பு விடுதலை அளிக்கிறது. உயர்வடையச் செய்கின்றது.

## ஒத்துழைப்பு

எப்பணி நல்லதாகவும், இறையச்சத்திற்குரியதாகவும் உள்ளதோ, அதில் எல்லோருடனும் ஒத்துழையுங்கள். ஆனால் எது பாவமானதாகவும், வரம்பு கடந்ததாகவும்உள்ளதோ அதில் எவருடனும் ஒத்துழையாதீர்கள் (குர்ஆன் 5:2)

நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து அல்லாஹ்வின் கயிற்றை இறுகப் பிடித்துக் கொள்ளுங்கள். பிரிந்து விடாதீர்கள் (குர்ஆன் 3:103)

## நன்றியுணர்வு

"மனிதனுக்கு நன்றி செலுத்தாதவன் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தியவனாக மாட்டான்" என நபிகள் நாயகம்(ஸல்) நவின்றுள்ளார்கள்.

## வாக்குறுதியை நிறைவேற்றல்

குர்ஆன் கூறுவதாவது:

> இறை நம்பிக்கை கொண்டவர்களே ! உங்கள் மீதுள்ள கட்டுப்பாடுகளை முழுமையாக நிறைவேற்றுங்கள். (குர்ஆன் 5:1)

## நேர்மை

குர்ஆன் குறிப்பிடுவதாவது:

> "மேலும் நீங்கள் அளந்து கொடுக்கும் போது நிறைவாக அளந்து கொடுங்கள். எடை போடும் போது சரியான தராசு கொண்டு எடை போடுங்கள் (குர்ஆன் 17:35)
>
> இன்னும் பேசும் போது நீதியுடன் பேசுங்கள் ! உங்கள் நெருங்கிய உறவினர் பற்றிய விவகார

*மாயினும் சரியே (குர்ஆன் 6:152)*

## *வாய்மை:*

> *இறை நம்பிக்கையாளர்களே ! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் மேலும் வாய்மையாளர்களுக்குத் துணையாக இருங்கள் (குர்ஆன் 9:119)*
>
> *உண்மையாளர்களுக்கு அவர்களது உண்மையின் காரணமாக அல்லாஹ் பரிசளிப்பான். நாடினால் நயவஞ்சகர்களைத் தண்டிப்பான் அல்லது அவர்களை மன்னிப்பான். (குர்ஆன் 32:24)*

*நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நவின்றுள்ளதாவது: ஆறு விஷயங்கள் பற்றி எனக்கு உறுதியளியுங்கள். நான் உங்களுக்கு சொர்க்கத்திற்கு உறுதி வழங்குகிறேன்.*

*1) பேசும்போது உண்மையே பேசுங்கள்,*

*2)வாக்குறுதியைக் காப்பாற்றுங்கள்,*

*3) நம்பிக்கையைக் காப்பாற்றுங்கள்,*

*4)உங்களது கற்பைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்,*

*5)உங்களது பார்வையைத் தாழ்த்திக் கொள்ளுங்கள்*

*6)அராஜகம் புரிவதினின்றும் உங்கள் கரங்களைத் தடுத்துக் கொள்ளுங்கள்.*

*"உண்மையில் வாய்மை நற்செயல்களுக்கு இட்டுச் செல்கிறது" நற்செயல்கள் சொர்க்கத்திற்கு இட்டுச் செல்கின்றன."*

## இதயத்தின் ஜிகாத்

*நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "இதய ஜிகாத்தே மிகப் பெரிய ஜிகாத் ஆகும். (அது ஒருவன் தனது தன் முனைப்பை எதிர்த்துப் போராடுவது) தீய செயல்கள் பக்கம் செல்ல வேண்டுமென்ற உணர்வை வெல்வதும் ஜிகாத் ஆகும்.*

## நம்பிக்கை

*குர்ஆன் கூறுகின்றது:*

> *நான் உங்களின் நம்பிக்கைக்குரிய தூதராவேன்.*

எனவே நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். எனக்குக் கீழ்ப்படியுங்கள் (குர்ஆன் 26:107, 108)

(முஸ்லிம்களே !) அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடு கின்றான். அமானத் – அடைக்கலப் பொருட்களை அவற்றிற் குரியவர்களிடம் நீங்கள் ஒப்படைத்து விடுங்கள் (குர்ஆன் 4:58)

## நீதி

குர்ஆன் கூறுவதாவது:

திண்ணமாக அல்லாஹ் நீதி செலுத்தும் படியும் நன்மை செய்யும் படியும் உறவினர்களுக்கு ஈந்துதவும் படியும் கட்டளையிடுகின்றான் (குர்ஆன் 16:90)

ஒரு கூட்டத்தார் மீது நீங்கள் கொண்டுள்ள பகைமை உங்களை நீதியிலிருந்து பிறழச் செய்துவிடக் கூடாது. நீங்கள் நீதி செலுத்துங்கள்... (குர்ஆன் 5:8)

## சமுதாய மாற்றம் கொண்டு வருதல்

குர்ஆன் கூறுவதாவது:

எந்த ஒரு சமூகமும் தன் பண்புகளை மாற்றிக் கொள்ளாத வரை உண்மையில் அல்லாஹ்வும் அச் சமூகத்தின் நிலையை மாற்றுவதில்லை (குர்ஆன் 13:11)

## மரியாதை

அல்லாஹ் மரியாதை மிக்கவன். அவன் மரியாதையை விரும்புகின்றான்.

## மென்மையான பேச்சு

மென்மையாகப் பேசுவது இஸ்லாத்தில் ஒரு சமய நற்செயலாகும். கடினமாகப் பேசுவது பாவமாகும். குர்ஆன்

கூறுகின்றது:

மனிதர்களிடம் நல்லவற்றைப் பேசுங்கள் (குர்ஆன் 2:83)

அல்லாஹ்வின் மீதும் இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொண்டவர்கள் நல்லனவற்றையே பேச வேண்டும் அல்லது அமைதியாக இருக்க வேண்டும்" என நபிகள் நாயகம் (ஸல்) நவின்றுள்ளார்கள்.

## வியாபார வழி முறைகள்

வியாபாரம் செய்யுமாறு குர்ஆன் கூறுகின்றது

> உனது எஜமானனிடமிருந்து செல்வத்தைத் தேடிப் பெறுவது பாவமல்ல. பூமியில் பரவிச் செல்லுங்கள். அல்லாஹ்வின் அருளைத் தேடுங்கள். (குர்ஆன் 62:10)

அல்லாஹ்வின் தூதர் கூறியிருப்பதாவது:

பொருளை விற்கும் போதும் வாங்கும் போதும், தான் கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்கும் போதும் அன்பாகவும் எளிய முறையிலும் நடந்து கொள்பவன் மீது அல்லாஹ்வின் அருள் இரங்கட்டுமாக!

## மற்றவர்களுடைய குற்றங்குறைகளை மறைத்தல்

இந்த உலகில் மற்றவர்களுடைய குற்றங்குறைகளை மறைத்தவனின் குற்றங்குறைகளை மீண்டும் உயிர்ப்பிக்கும் நாளில் அல்லாஹ் மறைப்பான்" என நபிகளார் நவின்றுள்ளார்கள்.

ஒருவருடைய வீட்டினுள் நுழையும் முன்னர் அனுமதி பெறுங்கள்:

> இறை நம்பிக்கை கொண்டவர்களே! உங்களது வீடுகளைத் தவிர மற்றவர்களின் வீடுகளில் அந்த வீட்டாரின் இசைவைப் பெறாமலும், அவர்களுக்கு ஸலாம் கூறாத வரையிலும் நுழையாதீர்கள். இந்த வழிமுறை உங்களுக்கு

*மிகச்சிறப்புடையதாகும். நீங்கள் இதனை நினைவில் வைப்பீர்கள் என எதிர்பார்க்கலாம். ஆனால், அங்கு எவரையும் நீங்கள் காணவில்லையென்றால், உங்களுக்கு அனுமதி அளிக்கப்படாத வரையில் அங்கே நுழையாதீர்கள்..." (குர்ஆன். 24:27,28)*

## சுத்தம் நம்பிக்கையில் பாதி

தூய்மை ஈமானின் (நம்பிக்கையின்) பாதியாகும் என நபிகள் நாயகம்(ஸல்) நவின்றுள்ளார்கள். இஸ்லாம் தூய்மையின் அடிப்படையில்தான் உருவாக்கப்பட்டுள்ளது.

நபிகள் நாயகம்(ஸல்) எப்போதும் தங்களது உடலையும் ஆடைகளையும் சுத்தமாக வைத்திருப்பார்கள். காலம் தவறாது குளிப்பார்கள். தமது தோழர்களையும் சுத்தமாக இருக்கும்படி அறிவுறுத்துவார்கள்.

எப்போதும் வீடுகளின் முற்றங்களையும், பொருட்கள் விற்கும் சந்தைகளையும் சுத்தமாக வைத்துக் கொள்ளுபடி நபிகளார் தமது தோழர்களிடம் வலியுறுத்திக் கூறுவார்கள்.

## சகோதரத்துவம்

*நீங்கள் ஒவ்வொருவரும் உங்களது சகோதரரின் கண்ணாடியாகும். நீங்கள் உங்கள் சகோதரரிடம் ஏதேனும் குறை கண்டால் உடனே அதனை அவரிடம் தெரிவித்து அதிலிருந்து விடுபடச் செய்ய வேண்டும். நம்பிக்கையாளர்கள் ஒருவருக்கொருவர் கட்டிடத்தின் பாகங்களைப் போல் இருக்க வேண்டும். ஒவ்வொரு பாகமும் இன்னொன்றை தாங்கி நிற்பதைப்போல் (ஹதீஸ்)*

## ஒடுக்கப்பட்டவர்களின் நண்பனாக இரு

ஒடுக்கு முறைக்கு எதிராகவும், ஒடுக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாகவும் தங்களது குரல்களை உயர்த்துமாறு முஸ்லிம்களை நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். ஒடுக்கப்பட்டவர்களின் நண்பனாக இரு; கொடுங்கோல் அரசர்களுக்கும், அவர்களது தவறான செயல்களுக்கும் எதிராக முறையான வழிகளில்

போராடுங்கள்" என குர்ஆன் கூறுகின்றது. மேலும் குர்ஆன் குறிப்பிடுவதாவது:

> மேலும் பலவீனர்களாக ஆக்கப்பட்ட, அடக்கி ஒடுக்கப்பட்ட ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோருக்காக அல்லாஹ்வின் வழியில் நீங்கள் போர் புரியாமல் இருக்க என்னதான் காரணம்? அவர்களோ எங்கள் இறைவனே! அக்கிரமக்காரர்கள் வாழும் இவ்வூரிலிருந்து எங்களை வெளியேற்றுவாயாக! மேலும் எங்களைப் பாதுகாக்கக் கூடிய ஒருவரை உன்னிடமிருந்து தோற்று விப்பாயாக! எங்களுக்கு உதவி செய்பவரையும் உன்னிடமிருந்து தோற்றுவிப்பாயாக" என்று பிரார்த்தனை செய்கின்றார்கள் (குர்ஆன் 4:75)

## கற்றலும், அறிவும்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்:

பிறந்ததிலிருந்து மரணிக்கும் வரை அறிவைத் தேடிக் கொண்டே இரு. உன்னையே நீ கற்றுக் கொள்ள முயற்சி செய். இறைவன் காரணமில்லாமல் எதையும் படைக்கவில்லை. அல்லது காரணமில்லாமல் எதையும் முழுமையாகவோ அழகாகவோ படைக்கவில்லை.

ஒரு மணி நேரச் சிந்தனை ஓராண்டு வணக்கத்தைக்

காட்டிலும் சிறந்தது. கற்பதற்காக அதிக நேரம் செலவிடுவது, வணக்கத்திற்காக அதிக நேரம் செலவிடுவதை விடச் சிறந்ததாகும். இரவில் ஒரு மணி நேரம் கல்வி அறிவைச் சொல்லிக் கொடுப்பது. இரவு முழுவதும் வணக்க வழிபாட்டில் ஈடுபடுவதை விடச் சிறந்ததாகும்.

# 13

# வாழ்க்கையின் சில முக்கிய அம்சங்கள் உணவும் - பானங்களும்

உணவுப் பொருட்களும், பானங்களும் நமது ஆரோக்கியம். வளர்ச்சி, மனநிலை ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. நாம் உட்கொள்ள வேண்டிய உணவு, அருந்த வேண்டிய பானங்கள் பற்றி இஸ்லாம் சில வரையறைகளை வகுத்துள்ளது. ஒரு ஆரோக்கியமான அற நெறி மிக்க சமுதாயத்தை உருவாக்குவதே இஸ்லாத்தின் நோக்கமாகும். சுத்தமான உணவுப் பொருட்களையும், பானங்களையும் மக்கள் உட்கொள்ள அது அனுமதிக்கின்றது. குர்ஆன் கூறுவதாவது:

*மனிதர்களே! பூமியிலுள்ளவற்றில் தூய்மையான அனுமதிக்கப்பட்ட பொருள்களைப் புசியுங்கள். மேலும், ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள். நிச்சயமாக அவன் உங்களுக்கு வெளிப்படையான பகைவன் ஆவான் (குர்ஆன் 2:168)*

"முஸ்லிம்கள் "பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்" என்று சொன்ன பிறகே உணவு உட்கொள்ள ஆரம்பிக்க வேண்டும். (மிகுந்த கருணையாளனும், இரக்கமுடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்) நாங்கள் உண்பதற்கும், அருந்துவதற்கும் உணவையும் பானங்களையும் வழங்கி எங்களை முஸ்லிம்களாக இருக்கச் செய்த அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும்" என்ற துஆவை உண்டு முடித்த பின்பு ஓத

வேண்டும்.

வலது கையால் உணவை உண்ணுமாறும், உண்பதற்கு முன்பும், உண்ட பிறகும் கைகளை நன்கு கழுவ வேண்டுமென்றும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் முஸ்லிம்களை அறிவுறுத்தியுள்ளார்கள். வயிறுநிரம்ப உண்ணாமல் இருப்பதே மிகவும் சிறந்ததாகும். தண்ணீரையோ அல்லது பிற பானங்களையோ ஒரே மூச்சில் குடிக்க வேண்டாமென்றும் குடிக்கின்ற போது இடைவெளி விடவேண்டுமென்றும், மூன்று இடைவெளிகள் விடுவது நல்லது என்றும் நபிகளார் கூறியுள்ளார்கள்.

தூய்மையற்ற, உடலுக்கு கேடு விளைவிக்கக் கூடிய உணவுப் பொருட்களை இஸ்லாம் தடை செய்துள்ளது. அனுமதிக்கப்பட்ட பொருள்கள் ஹலால் என்றும், தடை செய்யப்பட்ட பொருள்கள் "ஹராம்" என்றும் இஸ்லாமியச் சட்டத்தில் அழைக்கப்படுகின்றன.

கீழ்க்கண்டவற்றின் மாமிசத்தை உண்ணக் கூடாது என இஸ்லாம் தடை விதித்துள்ளது

1. இறந்த விலங்குகளின் இறைச்சி (இயற்கையாக இறந்த விலங்குகள்)

2. அல்லாஹ்வின் பெயரைச் சொல்லாமல் அறுக்கப்பட்ட விலங்குகளின் மாமிசம்

3. கழுத்து திருகப்பட்டு கொல்லப்பட்ட விலங்குகளின் மாமிசம். 4. பன்றி இறைச்சி

5. மாமிச உணவு உட்கொள்ளும் விலங்குகளின் இறைச்சி

6. காட்டு விலங்குகளால் விழுங்கப்பட்ட விலங்குகளின் இறைச்சி.

விலங்குகளின் இரத்தத்தைக் குடிப்பதையும் இஸ்லாம் தடை செய்துள்ளது (குர்ஆன் 2:173, 5:3, 6:145, 16:115) விலங்குகளின் உயிரையும், அவற்றின் நலனையும் மதிக்க வேண்டுமென இஸ்லாம் போதிக்கின்றது. தாவரங்களை உண்ணும் விலங்குகளை நாம் உண்ணுவதற்காகவே இறைவன் படைத்துள்ளான். இது இறைவன் மனித குலத்திற்கு வழங்கியுள்ள மிகப் பெரும் அனுகூலங்களில் ஒன்றாகும்.

இறைவன் விலங்குகளை எந்த முறையில் அறுக்க வேண்டுமென்று கட்டளையிட்டுள்ளானோ அந்த முறையில் தான் அறுக்க வேண்டும். இதுவே இறைவன் விதித்துள்ள ஒரே நிபந்தனையாகும். விலங்குகளை அறுக்கும் போது இறைவனின் பெயரைச் சொல்ல வேண்டும். இந்த முறையில் அறுக்கப்படாத விலங்குகளின் இறைச்சியையும், அதன் பிற பாகங்களையும் உண்பது ஹராமாகும் (தடுக்கப்பட்டது).

## ஆல்கஹால் கலந்த பானங்கள் ஹராமாகும்

போதையைத் தரக்கூடிய ஆல்கஹால் கலந்த பீர், ஒயின் மற்றும் சாராயம் ஆகியவற்றை அருந்துவது ஹராமாகும். ஒரு ஆரோக்கியமான சமுதாயத்திற்கு போதை தரும் மது பானங்கள் எந்த வகையிலும் ஏற்றதல்ல.

குர்ஆன் கூறுவதாவது:

> இறை நம்பிக்கை கொண்டவர்களே ! மது, சூதாட்டம், பலி பீடங்கள், குறிபார்க்கும் அம்புகள் ஆகியவை அருவருக்கத்தக்க ஷைத்தானியச் செயல்களாகும்.அவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அதன் மூலம் நீங்கள் வெற்றி பெறலாம். மது மற்றும் சூதாட்டத்தின் வாயிலாக உங்களுக்கிடையில் பகைமையையும், வெறுப்பையும் ஏற்படுத்தி அல்லாஹ்வை நினைவு கூர்வதிலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்து விடவே ஷைத்தான் விரும்புகிறான். இதற்குப் பிறகாவது நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்வீர்களா? (குர்ஆன் 5:90,91)

மதுபானங்களை அருந்துவதால் சமுாயத்தில் பெரும் பிரச்னைகள் ஏற்படுகின்றன. அது பல தீய செயல்களுக்கும், பாவங்களுக்கும் இட்டுச் செல்கிறது. சமூகம் ஆரோக்கியமாகவும், அமைதியாகவும் இருக்க வேண்டுமென்பதற்காக இஸ்லாம் அனைத்து தீய செயல்களையும் அடியோடு ஒழித்திட விரும்புகின்றது.

இஸ்லாமிய வாழ்க்கை முறையில் பயனுள்ள பல விதிமுறைகள் உள்ளன. நம்மால் முடிந்த அளவிற்கு அவற்றைப் பின்பற்றிட நாம் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். இஸ்லாமியச் சட்டங்களையும் விதிமுறை களையும் தவிர்ப்பதற்காக நாம் சாக்குப் போக்குகளைச் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. மாறாக இறைவனின் கட்டளைகளைப் பின்பற்றி நடக்க நாம் தீவிர முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

## உடை

எல்லாம் வல்ல இறைவன் மனிதனை மிகச் சிறந்த வடிவத்தில் படைத்துள்ளான். தனது சேவகர்கள் நன்றாகவும், நேர்த்தியாகவும் ஆடைகள் அணிய வேண்டுமென அவன் விரும்புகின்றான். படைப்புகளிலே மனிதர்கள் தான் உயர்ந்தவர்கள் என்பதை நாம் நினைவில் இறுத்த வேண்டும். நாம் அணிகின்ற உடைகள் இதனைப் பிரதி பலிக்க வேண்டும். ஒழுங்கான, நேர்த்தியான ஆடைகள் கண்ணியக் குறைவினையும், நெறியற்ற நடத்தையையும் தடுத்து நமது ஆளுமைக்கு அழகு சேர்க்கின்றது. குர்ஆனில் இறைவன் குறிப்பிடுவதாவது:

"ஆதத்தின் மக்களே ! உங்களுடைய வெட்கத் தலங்களை மறைப்பதற்காகவும், உங்கள் உடலுக்குப் பாதுகாப்பாகவும், அலங்காரமாகவும் இருக்கக் கூடிய ஆடைகளை நாம் உங்களுக்கு அருளியிருக்கின்றோம். ஆயினும் இறையச்சம் (தக்வா) என்னும் ஆடையே மிகச் சிறந்த ஆடையாகும்.... (குர்ஆன் 7:26)

இஸ்லாம் எளிமையையும் அடக்கத்தையும் ஊக்குவிக் கின்றது. கர்வத்தையும் பெருமையையும் வெளிப்படுத்தும்

ஆடைகளை வெறுக்கின்றது. உடைக் கலாச்சாரம், தல மட்டத்திலுள்ள பழக்க வழக்கங்கள் மற்றும் தட்ப வெட்ப நிலை ஆகியவற்றைச் சார்ந்தது என்ற போதிலும் இஸ்லாம் வகுத்துத்தந்துள்ள இந்த விதிமுறைகளையும் ஏற்று நடக்க வேண்டும்.

உமர் மகன் அப்துல்லா ஒரு முறை நபிகளாரிடம் "நான் இறைவனின் தூதருக்குப் பணிகின்றேன்" ஓ! இறைவனின் தூதரே! நான் நல்ல நேர்த்தியான ஆடைகளை அணிந்தால் அதன் காரணமாக கர்வமும் அகம்பாவமும் கொண்ட குற்றத்தைச் செய்தவனாகி விடுவேனா" எனக் கேட்டார். அதற்கு நபிகளார்" நேர்த்தியான ஆடைகளை அணிவது மனதிற்குகந்தது. இந்த வகை ஆடைகள் இறைவனை மகிழ்ச்சியடையச் செய்கின்றன" என்று பதிலளித்தார்கள்.

மேலும் நபிகள் நாயகம்(ஸல்), வணக்க வழிபாடுகளில் ஈடுபடும் போது நல்ல ஆடைகளையே உடுத்துங்கள் (முழுமையான உடையணிந்து) வேறு எந்தப் படைப்புகளை விடவும் மனிதன் அல்லாஹ்வுக்குக் கடமைப்பட்டுள்ளான்.

எனவே இறைவன் முன்னால் அவன் மிகச் சிறந்த ஆடை அணிந்து இருக்க வேண்டும்" என்று நவின்றுள்ளார்கள்.

வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், நேர்த்தியான உடை அணிவது அகம்பாவத்தைக் குறிக்காது. மற்றவர்களின் உரிமைகளைப் புறக்கணிப்பதும் அவர்களை அற்பமாகவும், இழிவாகவும் கருதுவதுமே அகம்பாவமாகும்.

# பெருநாட்கள்

இஸ்லாமியப் பண்டிகைகள் இறைவனுக்கு நன்றி கூறுகின்ற, மகிழ்ச்சியையும் குதூகலத்தையும் வெளிப்படுத்துகின்ற சந்தர்ப்பங்களாக அமைந்துள்ளன. இஸ்லாத்தின் மிக முக்கியமான பண்டிகைகள் ஈதுல் பித்ர் மற்றும் ஈதுல் அல்கா ஆகும். இந்தப் பெரு நாட்கள் தங்களின் மகிழ்ச்சிக்காக மட்டுமல்லாது இறைவனின் மகிழ்ச்சியைப் பெறுவதற்காக பக்தி சிரத்தையுடன் முஸ்லிம்களால் கொண்டாடப்படுகின்றன.

## ஈதுல் பித்ர்

இஸ்லாமிய ஆண்டின் பத்தாவது மாதமான ஷவ்வால் முதல் நாள், ரமலான் மாதம் முடிந்த மறுநாள் "ஈதுல் பித்ர்" கொண்டாடப்படுகின்றது. ஒரு மாத காலம் நோன்பு நோற்ற பிறகு இப்பெருநாளன்று முஸ்லிம்கள் பொது இடங்களிலும் பள்ளி வாசல்களிலும் தொழுகையினை நிறை வேற்றி தங்களது மகிழ்ச்சியையும் குதூகலத்தையும் வெளிப்படுத்துகின்றனர். ஒரு மாத காலம் நோன்பு நோற்கும் பாக்கியத்தைத் தங்களுக்கு வழங்கியமைக்காக எல்லாம் வல்ல இறைவனுக்கு முஸ்லிம்கள் நன்றி செலுத்துகின்றனர். இந் நாளில் விசேட

உணவுகள் தயாரிக்கின்றனர். நண்பர்களையும், உறவினர்களையும் சந்திக்கின்றனர். குழந்தைகளுக்கு அன்பளிப்பு வழங்குகின்றனர்.

## ஈதுல் அழ்ஹா (ஹஜ்ஜுப் பெருநாள்)

"ஈதுல் அழ்ஹா" இஸ்லாமிய ஆண்டின் பனிரெண்டாவது மாதமான துல்ஹஜ் 10ம் நாள் கொண்டாடப்படுகின்றது. இறைவனின் கட்டளையை ஏற்று தமது மகன் இஸ்மாயிலை பலி கொடுக்க சித்தமாக இருந்த இப்ராகிம் நபியின் (அலை) தியாகத்தை நினைவு கூரும் வண்ணம் இப்பெருநாள் கொண்டாடப்படுகின்றது. இப்ராகிம் நபியின்(அலை) இறைப்பற்றையும் கீழ்ப்படிதலையும் ஏற்றுக் கொண்ட இறைவன், இஸ்மாயிலுக்குப் பதிலாக ஒரு செம்மறி ஆட்டை பலி கொடுக்குமாறு கூறினான். இந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி ஒவ்வொரு ஆண்டும் ஹஜ் பெருநாளின் போது நினைவு கூரப்பட்டு அன்றைய தினம் கூட்டுத் தொழுகை நடத்தப்படுகின்றது. தொழுகைக்குப் பிறகு, முஸ்லிம்கள் இறைவனின் மகிழ்ச்சியைப் பெறுவதற்காக ஆடு, மாடு

ஒட்டகம் போன்ற விலங்குகளைப் பலி கொடுக்கின்றனர். பலியிடப்பட்ட விலங்குகளின் இறைச்சி உறவினர்கள், அண்டை வீட்டுக் காரர்கள், ஏழைகள் ஆகியோருக்குப் பகிர்ந்தளிக்கப் படுகின்றது. தேவைப்படின், ஒரு முஸ்லிம் அல்லாஹ்வுக்காக தனக்கு மிகவும் பிரியமான ஒன்றைத் தியாகம் செய்யவும் தயங்க மாட்டான் என்ற உள்ளுணர்வை இந்தப் பெருநாள் வெளிப்படுத்துகின்றது. இதுவே இந்த நிகழ்வின் மூலம் நாம் பெறுகின்ற பாடமாகும் (குர்ஆன் 22:37)

## வெள்ளிக்கிழமை தொழுகை (ஸலாத்துல் ஜுமுஆ)

ஸலாத்துல் ஜுமுஆ அல்லது வெள்ளிக்கிழமைத் தொழுகை கூட்டாக நிறைவேற்றப்படுகின்றது. வயதுக்கு வந்த முஸ்லிம் ஆண்கள் அனைவரும் இதில் பங்கு பெற வேண்டும். இத் தொழுகை பெண்களுக்குக் கட்டாயமில்லை. தங்களது வீட்டு வேலைகளுக்குப் பாதிப்பில்லையென்றால் பெண்களும் இத்தொழுகையில் கலந்து கொள்ளலாம்.

மதியத்திற்குப் பிறகு மக்கள் இத் தொழுகையினை நிறைவேற்றக் கூடுகின்றனர். பள்ளிவாசலுக்கோ அல்லது தொழுகை நடைபெறும் இடத்திற்கு வந்தவுடன் முஸ்லிம்கள் நான்கு ரக்ஆத் அல்லது அதற்கு மேற்பட்ட சுன்னத் தொழுகையினை நிறைவேற்றுகின்றனர். அதன் பிறகு இமாம், ஜுமுஆ உரையை நிகழத்துவார். பின்னர், இமாம் இரண்டு ரக்ஆத் தொழுகையை நடத்தி வைப்பார். இதன் பின்னர் ஆறு ரக்ஆத் அல்லது அதற்கு அதிகமான சுன்னத் தொழுயையும் உபரி தொழுகைகளையும் ஒவ்வொருவரும் தனித்தனியே நிறைவேற்றுகின்றனர்.

முஸ்லிம்கள் ஒரு தனித்த சமுதாயத்தினராகும்: ஸலாத்துல்

ஜும்ஆ ஒரு சமுதாயத் தொழுகையாகும். ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமையன்று முஸ்லிம்கள் தங்களது பகுதியிலுள்ள பள்ளி வாசலில் ஒன்று கூடி தொழுகை புரிகின்றனர். இது முஸ்லிம்களைப் பொறுத்த அளவில் ஒரு வாராந்திரப் பெருநாள் ஆகும்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் காலத்தில் பள்ளி வாசல்கள் இஸ்லாமியச் சமயச் செயல்பாடுகளின் மையமாக திகழ்ந்தன. ஆனால் இன்றைக்கு நிலைமை அப்படி இல்லை.

ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள முஸ்லிம்கள் ஒன்று கூடுகின்ற ஒரு சந்தர்ப்பமாக வெள்ளிக்கிழமை தொழுகை அமைந்துள்ளது. இந்த ஒன்று கூடலின் போது முஸ்லிம்கள் சமுதாயப் பிரச்னைகளைப் பேசி, விவாதித்துத் தீர்வு காண்கின்றனர். முஸ்லிம்களிடையே ஒற்றுமையையும், ஒத்துழைப்பையும் புரிந்துணர்வையும் அது ஏற்படுத்துகின்றது.

இஸ்லாமிய நாட்டில், அரசின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர் அல்லது அவரது பிரதிநிதி அல்லது உள்ளூர் தலைவர் ஐந்து நேரத் தொழுகைகளையும் வெள்ளிக்கிழமை

தொழுகையையும் தலைநகரிலுள்ள மத்தியப் பள்ளி வாசலிலோ அல்லது அந்தப் பகுதியிலுள்ள பொது பள்ளி வாசலிலோ தலைமை தாங்கி நடத்துகிறார். இஸ்லாமியப் பேரரசின் முதல் கலீபாவாகப் பொறுப்பேற்றுக் கொண்ட நபிகள் நாயகம்(ஸல்), மதீனாவிலுள்ள மஸ்ஜிதுன் நபவியில் அனைத்துத் தொழுகைகளையும் தலைமை தாங்கி நடத்தினார்கள்.

# முஸ்லிம் உலகம்

## ஜனத் தொகை

முஸ்லிம்கள் எங்கிருந்தாலும் அவர்கள் ஒரே சமுதாயத் தினரே. நம்பிக்கைதான் முஸ்லிம்களை ஒன்று படுத்துகின்றதே தவிர பூகோள அமைப்போ, நிறமோ, இனமோ, மொழியோ அல்ல ஒரு இஸ்லாமிய நாட்டில் மக்களின் குடியுரிமை பூகோள எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப் படலாம். அதில் பிரச்னையில்லை.

பெரும்பான்மை அடிப்படையில் பார்த்தால் தற்போது உலகில் 53 முஸ்லிம் நாடுகள் உள்ளன. உலகில் தற்போதைய முஸ்லிம்களின் ஜனத்தொகை 170 கோடியாகும். இது ஒரு மாபெரும் மனித சக்தியாகும்.

கி.பி. 1940 க்கும் 1950க்கும் இடைப்பட்ட காலத்தில் பல முஸ்லிம் நாடுகள் சுதந்திரம் பெற்றன. தற்போது முஸ்லிம் நாடுகள் உலகின் மத்தியப் பகுதியில் பரவிக்கிடக்கின்றன. செனகல் கடற்கரை மற்றும் மொரோக்கோவிலிருந்து பசிபிக் பெருங்கடல் வரையிலும், இந்தோனிஷியத் தீவுகள், வடக்கிலிருந்து தெற்காக துருக்கியிலிருந்து சோமாலியா வரையுள்ள மத்திய தரைக்கடல் பகுதிகளிலும் இஸ்லாமிய நாடுகள் பரவிக் கிடக்கின்றன. சுயாட்சி பெற்ற 53 முஸ்லிம் நாடுகள் முன்னேற்றப் பதையின் பல்வேறு நிலைகளில் இருக்கின்றன. இஸ்லாமிய நாடுகளில் 60 மொழிகள் பேசப்படுகின்றன. அரபிகள், இந்தியர்கள், துருக்கியர்கள், பதான்கள், சீனர்கள், மலேயர்கள், உஸ்பெக்குகள், ஹொஸா போன்ற பலதரப்பட்ட இன மக்கள் முஸ்லிம் உலகில் வாழுகின்றனர்.

பனிப்போர் முடிவுக்கு வந்ததன் விளைவாக மத்திய ஆசியாவில் உள்ள உஸ்பெக்கிஸ்தான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், துர்க்மேனிஸ்தான், தாஜிகிஸ்தான், அஸர்பைஸான் ஆகிய ஆறு புதிய முஸ்லிம் நாடுகள் விடுதலை பெற்றன. ஐரோப்பாவில் அல்பேனியா தனது ஸ்டாலினியக் கொள்கையைக் கைவிட்டு விட்டது. போஸ்னியா - ஹெக்ஸகோவினா யுகெஸ்லேவியாவிடமிருந்து பிரிந்து சென்று பின்னர் செர்பியர்களால் ஆக்ரமிக்கப்பட்டது.

## முஸ்லிம் சிறுபான்மையினர்

முஸ்லிம் நாடுகளில் மட்டுமல்லாது முஸ்லிமல்லாத நாடுகளிலும் முஸ்லிம்கள் கணிசமான எண்ணிக்கையில் வாழ்கின்றனர். முஸ்லிம் சமுதாயம் (அல்லது உம்மத்) தேசியங்களைக் கடந்து ஒரு பொது சமயக் கலாச்சாரத்தையும், வரலாற்றையும் ஒரே மக்கள் என்ற உணர்வையும் கொண்ட ஒரு சமுதாயமாகும். முஸ்லிமல்லாத நாடுகளில் மொத்த முஸ்லிம்களின் மூன்றில் ஒரு பங்கு முஸ்லிம்கள் வாழ்கின்றனர். இந்தியாவில் முஸ்லிம்களின் மக்கட் தொகை 12 கோடியாகும். இந்திய முஸ்லிம் சமூகம் உலகிலேயே மிகப் பெரிய சிறுபான்மை முஸ்லிம் சமூகமாகும். சீனாவில் 6 கோடி முஸ்லிம்கள் உள்ளனர். பிலிப்பைன்ஸ், பர்மா, தாய்லாந்து, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளில் கணிசமான எண்ணிக்கையில் முஸ்லிம் சிறுபான்மையினர் உள்ளனர்.

## இடப் பெயர்ச்சி

1950 ஆம் ஆண்டிற்குப் பிறகு, பல முஸ்லிம் நாடுகள் சுதந்திரம் அடைந்தன. அதன் பின்னர் பல முஸ்லிம் நாடுகளைச் சார்ந்த முஸ்லிம்கள் மேற்கு நாடுகளைத் நோக்கிச் செல்ல ஆரம்பித்தனர். இந்த இடப் பெயர்ச்சி ஐரோப்பாவில் திட்டமிட்ட முறையில் நடைபெற்றது. தங்களது பழைய காலனி ஆதிக்க நாடுகளை நோக்கி முஸ்லிம்கள் குடும்பம், குடும்பமாகச் சென்று குடியேறினர். இவ்வாறாக, இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சார்ந்த முஸ்லிம்கள் இங்கிலாந்திற்குச் சென்றனர். அல்ஜீரியர்களும், மொரோக்கர்களும், துனிஷியர்களும் பிரான்ஸ் நோக்கிச் சென்றனர். இந்தோனேஷியர்களும், சுரிநேமியர்களும் (சுரிநேம் தென்ஆப்ரிக்காவின் வடக்கிலுள்ள ஒரு நாடாகும்)

ஹாலந்திற்குச் சென்றனர். துருக்கிக்கும், ஜெர்மனிக்கும் போர்களின் போது ஏற்பட்ட உறவின் காரணமாக கணிசமான எண்ணிக்கையிலான துருக்கியர்கள் ஜெர்மெனிக்குச் சென்று குடியேறினர். தற்போது ஐரோப்பிய நாடுகளில் 20 மில்லியன் முஸ்லிம்கள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

## வளங்கள்

உலகிலுள்ள முஸ்லிம் நாடுகள் அனைத்தும் சேர்ந்து மூன்றில் இரண்டு பங்கு எண்ணெய் உற்பத்தி செய்கின்றன. 70 சதவிகித ரப்பரும், 75 சதவிகித சணலும், 67 சதவிகித வாசனை மசாலாப் பொருட்களும் (ஏலக்காய், கிராம்பு, மிளகு போன்ற) மூன்றில் இரண்டு பங்கு பனை எண்ணெய்யும், 50 சதவிகித பாஸ்பேட்டும், 40 சதவிகித டின்னும் இந்நாடுகள் உற்பத்தி செய்கின்றன. மிக அதிக அளவிலான பருத்தி, தேயிலை, காப்பி, உல்லன், யுரேனியம், மெக்னீசியம், நிக்கல் போன்ற வெண்மையான உலோகம் இன்னும் பல பொருட்களும், தாதுக்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. முஸ்லிம் நாடுகளில் மிக அதிக அளவிலான இயற்கை எரிவாயும் உள்ளது.

உலகப் படத்தை நீங்கள் பார்த்தால், முஸ்லிம் நாடுகள் மிகவும் கேந்திரமான பகுதிகளில் அமைந்துள்ளதைக் காணலாம். 60 சதவிகித முஸ்லிம் நாடுகளுக்கு மத்தியதரைக் கடல் எல்லையாக உள்ளது. செங்கடலும் வளைகுடாவும் முழுமையாக முஸ்லிம் பிரதேசத்தில்தான் உள்ளன. காலப் போக்கில் முஸ்லிம்களின் ஒற்றுமை மிகவும் சிதறுண்டு போய் விட்டது. மனித சமூகத்தின் ஒட்டு மொத்த நலனிற்காக அந்த ஒற்றுமை மீண்டும் கட்டப்பட வேண்டும்.

ஒரு கால கட்டத்தில் அறிவியலுக்கும், நாகரீகத்திற்கும் மிகப் பெரும் பங்களிப்புச் செய்த முஸ்லிம்கள், இஸ்லாத்தின் அடிப்படையில் மீண்டும் ஒன்று பட்டால், அத்தகைய பங்களிப்பை மீண்டும் வழங்கிட முடியும். இஸ்லாத்தின் போதனைகளை இதய சுத்தியுடன் கடைப்பிடிப்பதன் மூலமே, உண்மையான முன்னேற்றத்தினை மனித சமூகம் அடைய முடியும் இஸ்லாத்தின் பெருமையை மீண்டும் நிலைநாட்டிட நாம் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அது ஒன்றே தற்போதைய பிரச்னை மிகுந்த உலகிற்கு மகிழ்ச்சியையும்,

# நன்றி

பல்வேறு நபர்களிடமிருந்தும் நேரடியாகப் பெற்ற உதவிக்கும் தகவல்களுக்கும் நான் நன்றி தெரிவித்திடக் கடமைப்பட்டுள்ளேன். குறிப்பாக நான் மேற்கோள் காட்டியுள்ள நூல்களின் ஆசிரியர்களுக்குப் பெரிதும் நன்றிக் கடன்பட்டுள்ளேன்.

எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்களுக்கு அருள் பாலிப்பானாக. அவர்களது முயற்சிகளை ஏற்றுக் கொள்வானாக ஆமீன்.

இந்த நூலை எழுதுவதற்கு எனக்கு எந்தவிதமான வணிக நோக்கமுமில்லை. அதனை நான் எதிர்பார்க்கவுமில்லை.

இந்தப் பணியில் எனக்கு விசுவாசத்துடனும், ஈடுபாட்டுடனும் பணிவுடனும் உதவிகள் செய்த ஜனாப் முஹம்மது நுஃமான்கானுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பணியினை மேற்கொண்டிட எல்லாம் வல்ல அல்லாஹ் எனக்கு தேவையான வாய்ப்புகளையும், ஞானத்தையும், ஆர்வத்தையும், வழங்கினான். அவனது அருள் இல்லை என்றால் இந்தப்பணி நிறைவு பெற்றிருக்காது. பயனுள்ளதாகவும் இருந்திக்காது. சமாதானத்தையும் அன்பையும் மனித சமூகத்திடையே பரப்பிய எனக்கு வழிகாட்டுமாறு எல்லாம் வல்ல இறைவனை நான் இறைஞ்சுகின்றேன்.

ஆகஸ்ட், 2013

ஸையத் ஹமீது மோஹ்ஸின்
தலைவர், ஸலாம் சென்டர்
பெங்களூரு

☆

# Bibliographic References


1. Muhammed (s) Encyclopedia of Seerah - Afzalur Reman.
2. The Emergence of Islam - Dr.Mohammed Hameedullah.
3. Introducing Islam - Ziauddin Sardar
4. Is,am in Focus - Hammudah Abdalati
5. Islam - Ghulam Sarwar.
6. Islam & The Destiny of Man - Gai Eaton
7. La vie de Mahomet - Constantine Virgil Gheorghiu
8. The Future of Islam - Tariq Ramadan
9. This is Islam - Dr. K.K. Usman
10. Follow Me,